Sangathamil

சங்கத்தமிழ்

குரல் – 112 | சர்வதேச மின் செய்தித்தாள் | சனவரி 01 2026

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

Sangathamil

சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

விடுதலைப் போராட்டம் என்பது மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகுசனங்கள் ஒன்று திரண்டு, ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சிகொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான், எமக்கு வெற்றி நிச்சயம்.

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

அன்பின் வடிவமாய்...
கேணல் கிட்டண்ணா

புரட்சிக்காரன் என்றால் உலகம் அவனை கடினமானவனா னகவே எண்ணுகின்றது. ஆனால் அவன் மனிதனுக்குள் மென்மையானவன், சாதுவானவன், அதனால்தான் அவன் சமூகத்தில் நடக்கும் அநீதிகளை தாங்க முடியாதவனாக போராடப் புறப்படுகின்றான். கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலில் வீரகாவியமாகிய பதினான்கு தோழர்களின் நினை வைத் தாங்கிய “விடிவிற்கு முந்திய மரணங்கள்” நாவலுக்கு கிட்டண்ணா எழுதிய முன்னுரையின் தொடக்கவரிகள் இவை.

கிட்டண்ணா தன்னுள் கொண்டுள்ள போர் ஆற்றல் உலகம் அறிந்த ஒன்றே. ஆனால் அதையும் தாண்டி அவர் இதயத்தை அலங்கரித்த ஆன்மீக ஈடுபாடு, எவரையும் அன்பு செய்யும் பண்பு, மக்கள் துயர்கண்டு இரத்தக் கண்ணீர் வடிக்கும் அவரது மனது, இதற்கும் மேலாக வாய்பேசாப் பிராணிகளிடம் அவர் காட்டிய அன்பு எல்லோராலும் புரிந்து கொள்ளமுடியாதது. போராட்டப் பாதையில் தனது இதயத்தின் பாதியை கடினமாக் கிக்கொண்ட போதிலும் மீதியை அவர் ஈரமாக்கியே கொண் டார். இயற்கையாகவே இரக்க சுபாவம் கொண்டவராகவே விளங்கினார்.

1987ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ஆம் திகதி எதிர்பாராத விதமாக நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் தன் ஒரு காலினை இழந்தது அறிந்ததே. இதன் பிற்பாடு இந்தியா சென்று சிகிச் சையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் அவர் இருந்த வீட்டுக்குள் சொறி பிடித்த நாய் நுழைந்து கொண்டது. கிட்டண்ணாவுடன் உதவிக்கு நின்ற போராளிகள் அவர் பேசி விடுவார் என்று நினைத்து அந்த நாயைத் துரத்த முயன்று கொண்டிருந்த வேளையில், அதனை அவர் கண்டுகொண்டார். உடனே அந்த நாயை கூட்டிவரச் சொன்னார். குளிப்பாட்டினார். அதன் உடல் மீது காணப்பட்ட புண்களுக்கு மருந்திட்டு சிகிச்சை அளித்தார். விரைவில் புண்கள் மாறி அது நன்கு குண மடைந்தது. அன்றிலிருந்து அது கிட்டண்ணாவின் உற்ற நண்ப னாகி விட்டது. கிட்டண்ணா உணவருந்தும் போதுதான் அது உணவருந்தும். எவ்வளவு நேரமாக இருந்தாலும் சரி அவருக் காக அது காத்திருக்கும். இவ்வாறாக அவர்களின் உறவுகள் வளர்ந்து கொண்டே சென்றது இருவரும் நல்ல நண்பர்களா யிருந்தனர். காலங்கள் கழிந்தன...!

1988 புரட்டாதி நடுப்பகுதியில் இந்திய காவல்துறையினரால் கிட்டண்ணா கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறைச் சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இப்படியான துரதிஸ்ட மான நிகழ்வினை அது நினைத்துக் கூட பார்த்திருக்காது. அவரின் பிரிவுத் துயரை தாங்க முடியாமல் சோகத்துடன் அங்கு மிங்கும் ஓடித்திரிந்து அவரைத் தேடியது. உணவு உண்ண மறந்தது. அவர் இருக்கும் இடத்தினை மோர்ந்து மோர்ந்து பார்த்து சோகத்துடன் ஒரு மூலையில் ஒதுங்கி அவ்விடத் திலேயே இறந்து போனது. சேதி அறிந்த கிட்டண்ணா மிகவும் வேதனையடைந்தார். பிற்காலத்தில் அவர் மேற்குலகில் வாழ்ந்த காலத்தில் அழகான விதம்விதமான நாய்களை காணும் போதெல்லாம் அந்த நாயின் முகம் அவரின் மனக் கண்ணில் தோன்றி அவரின் இதயத்தை ஈரமாக்கும், இவை மட்டுமல்ல 1983ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இந்திய அரசு வழங்கிய இராணுவப் பயிற்சிக்காக சென்ற போராளிகளுக்கு இரண்டாவது பொறுப்பாளராக கிட்டண்ணா சென்றிருந்தார். அவர் காட்டிய அசாதாரண திறமை அதிகாரியை வியக்க வைத்தது. அதிலிருந்து அந்த அதிகாரி கிட்டண்ணாவை கவர்ந் துவிட்டார். அதிலிருந்து அவர்களின் அன்பு மலரத்தொடங் கியது. பயிற்சியும் நிறைவு பெற்றது. அங்கிருந்த அனைவரும் வெளியேறுவதற்கு தயாராகிக்கொண்டிருந்தனர். எதையும் எதிர்பார்க்காத அன்பினை விதைக்கும் கிட்டண்ணாவின் உள் ளமோ சோகத்தில் மூழ்கிப்போயிருந்தது. பிரிவுத்துயரை தாங்க முடியாமல் தேம்பித் தேம்பி விம்மத் தொடங்கியதையும் அந்த அதிகாரியும் கண்ணீர் மல்கிக்கொண்டு மெல்ல விடை கொடுத் ததையும் அவருடன் கூடச் சென்ற தோழர்கள் நினைவு கூரு வார்கள்.

போராட்ட வாழ்வில் மட்டுமல்ல இயற்கையாகவே தனது மனதை அன்பினால் நிரப்பி தூய்மையை போற்றி வாழந்தவர். ஏழை மக்களின் வாழ்வில் அக்கறை கொண்டிருந்தார். அவர் களின் வாழ்வு வளம்பெறவேண்டும் என்பதற்காக அயராது பணியாற்றினார். பின்னைய காலங்களில் போராட்டப்பணி தமிழீழத்திலிருந்து வெகு தூரத்திற்கு அவரைப் பிரித்திருந் தாலும் சிந்தனைகளில், செயல்களில் ஏன் அவர் வரைந்த ஓவியங்களில் கூட தமிழீழம், மக்கள், அவர்களின் வளமான வாழ்வு என்பதையே காட்டிநின்றது. ஆன்மீகத்தில் அவர் கொண்டிருந்த அதகி ஈடுபாடு புரட்சிக்கும் ஆன்மீகத்துக்கும் உள்ள தொடர்பினையும், ஒற்றுமையையும் தெளிவுபடுத்தக் கூடிய வகையில் அவரை உயர்த்தியிருந்தது. தனது துணை விக்கு எழுதிய கடிதக் குறிப்பொன்றில்...

விறகு கொத்தும் கந்தனும்
கள் வடிக்கும் பூதனும்
கோவணத்துடன் தோட்டம்
கொத்தும் ராமையாவும்
கரைவலை இழுக்கும் கோபுவும்.

தனது வாழ்நாளிலும் சரி வயது போன காலத்திலும் சரி மற்ற வர்களில் தங்கி வாழ்ந்ததையும், பிச்சையெடுத்துச் சேர்த்ததை யும் பார்த்திருக்கிறேன். இதைத் தான் ஆன்மீகமும் சொல்லு கின்றது, புரட்சியும் சொல்லுகின்றது. ஆன்மீகம் போதிக்கின் றது. புரட்சி வழிகாட்டுகின்றது ஆன்மீகமும் புரட்சியும் வேறல்ல. இரண்டும் ஒன்றுதான் என மனதின் வெளிப்பாட்டை அதில் வரைந்திருந்தார்.

மக்கள் படும் துன்பங்களில் பங்கொடுத்து அவர்களுக்கு ஒரு அமைதியை ஏற்படுத்தி வளமான வாழ்வை அனைத்துக் கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு அவரது சமா தானப் பயணம் ஆரம்பமாகியது. அவரின் தற்காலிக பிரிவுத் துயரை இந்தியாவில் பிறந்த இராணுவ அதிகாரியால் மட்டு மல்ல அங்கு பிறந்த அந்த நாயினால் கூட தாங்கிக்கொள்ள முடி யாது போனது. ஆனால், இந்திய வல்லாதிக்கமோ அவரையும் அவரது தோழர்களையும் இவ்வுலகிலிருந்து நிரந்தரமாகவே பிரித்துக்கொண்டது. இந்திய வல்லாதிக்கம் பலி கொண்டது ஒரு புரட்சி வீரரை மட்டுமல்ல, ஒரு ஆன்மீகவாதியை. இதற்கும் மேலாக எல்லாமே உருவாகிய அன்பின் வடிவத்தையுமே பலி கொண்டது. மாற்றானிடம் சரணாகதியடையாமல் தானும் தன் தோழர்களுடனும் கப்பலைத் தகர்த்து வீரகாவியமாகிய இந் நினைவு நாளில் அவர்களின் நினைவுகளுடன் ஆயுதங்களை இறுகப் பற்றிகொள்வோம்.

- அருணா (போராளி)

திருகோணமலை கன்னியாவில் புத்தர் சிலை: தமிழர் வரலாறு முற்றிலும் பறிபோகும் நிலை!

15.01.2025

தற்போது திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுக் கிணறுகள் பகுதியில் புதிதாக புத்தர் சிலை நிறுவப்பட்டிருப்பது தமிழர் வரலாற்றை அழிக்கவும் அதன் அடையாளத்தை நிரந்தரமாக மாற்றவும் நடக்கும் சதிவேலையின் மிகத் தெளிவான ஆதாரமாகும்.

நேற்று வரை நுழைவுச்சீட்டில் மட்டுமே "பௌத்த வளாகம்" எனக் குறிப்பிட்டவர்கள் இன்று ஒரு புத்தர் சிலையையே நிலைநிறுத்தி உள்ளனர்.

திட்டமிட்ட வரலாற்று திரிப்பு.

கன்னியா என்பது இராவணன் மற்றும் தமிழ் மரபுகளுடன் தொடர்புடைய ஒரு தொன்மையான இடமாகும்.

நுழைவுச்சீட்டில் "அநுராதபுர கால பௌத்த வளாகம்" என அச்சிட்டு நிர்வாகரீதியாக உரிமை கோரல்

தற்போது புத்தர் சிலையை நிலைநிறுத்தி இது ஓர் பௌத்த மத வளாகம் என்ற தோற்றத்தை வலுப்படுத்துவதுடன் எதிர் காலத்தில் தமிழர் உரிமை கோரலை சட்டரீதியாக நீக்குவது, விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியம்.

யார் சொன்னது அவர்கள் "மோட்டு சிங்களவர்" என்று? அவர்கள் மிகவும் தெளிவாகத்தான் உள்ளார்கள் எமது நிலம் அடையாளம் வரலாற்றை பறிப்பதில் அவர்கள் உறுதியுடன் இருக்கிறார்கள் ஆனால் நாம் தான் எமது சிந்தனைகளை இலகுவாகச் சிதறவிட்டு வேடிக்கை பார்க்கிறோம்.

எமது பாரம்பரியத் தலங்களில் நிகழும் இத்தகைய மாற்றங்கள் குறித்து நாம் ஒவ்வொருவரும் விழிப்புடன் இருப்பதுடன் உலகறியச் செய்ய வேண்டும்.

எமது மண் எமது வரலாறு ஒரு போதும் விட்டுக் கொடுக்க முடியாது.

கூமடுகண்டலில் தமிழர்களின் நெற்செய்கையை ஊடறுத்து அடாவடியாக யானைவேலி அமைக்கும் மகாவலி நிலைமைகள் தொடர்பில் ரவிகரன் எம்.பி. நேரில் சென்று ஆராய்ந்தார்

16.12.2025

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக மானவாரி விவசாயநிலமான கூமடுகண்டல் பகுதியில் தமிழ்மக்களின் நெற்செய்கை நிலங்களை ஊடறுத்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் அடாவடித்தனமாக யானைவேலி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் கொக்குத்தொடுவாய் பகுதிக்கு 16.12.2025 இன்று நேரடியாகச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடனும், கமநலசேவைநிலைய உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடி நிலமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தமிழர்களது பூர்வீக விவசாயநிலமான கொக்குத்தொடுவாய் - கூமடுகண்டல் பகுதிக்கு அருகில் மகாவலி அதிகாரசபையினால் அபகரிக்கப்பட்டு பெரும்பான்மையினத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகத் தெரிவித்து தமிழ் மக்களால் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்செய்கையை ஊடறுத்து மகாவலி அதிகாரசபையினர் யானைவேலி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதாக கொக்குத்தொடுவாய் விவசாயிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் முறையிடப்பட்டது.

குறிப்பாக தமிழ் மக்களால் நெற்செய்கை பண்ணப்பட்டுள்ள அவர்களது பூர்வீக விவசாயக் காணிகளையும் ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே, இவ்வாறாக மகாவலி அதிகாரசபை அடாவடித்தனமான முறையில் தமது நெற்செய்கையை ஊடறுத்து யானைவேலி அமைத்துவருவதாகவும் கொக்குத்தொடுவாய் விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் விவசாயிகளின் முறைப்பாட்டினைத்தொடர்ந்து கொக்குத்தொடுவாய்ப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகரன், விவசாயிகள் மற்றும் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களிடம் நிலமைகள் தொடர் பில் கேட்டறிந்துகொண்டார்.

அத்தோடு இவ்விடம்தொடர்பில் உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தி மகாவலி அதிகாரசபையின் இத்தகைய அத்துமீறல் செயற்பாட்டுக்கெதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் தம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்தார்.

அதேவேளை கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையப் பிரிவில் 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களுக்குப் பயன்படுத்தப்படும் கோட்டக்கேணி தொடக்கம் எரிஞ்சகாடு வரையான விவசாய பாதை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பாரிய போக்குவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது கடுமையான முயற்சியால் அடுத்த வருடம் குறித்த வீதியைச் சீரமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும் தற்போது செய்கைபண்ணப்பட்டுள்ள பெரும்போக நெற்செய்கை அறுவடையை எடுத்து வருவதற்கு தற்காலிக சீரமைப்பு ஏற்பாட்டைச் செய்துதருமாறு இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அந்தவகையில் குறித்த விடயம் தொடர்பிலும் தம்மால் கவனம் செலுத்தப்படுமென இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

மண்டைதீவு மனிதப் புதைகுழி வழக்கில் பொலிசாருக்கு தட்டச்சு வடிவ அறிக்கைக்கு உத்தரவு

ஊர்காவற்துறை நீதவான் நீதிமறம்

16.12.2025

மண்டைதீவு புதைகுழி வழக்கு அறிக்கை ஊர்காவற்றுறை நீதிமன்றில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரால், செவ்வாய்க்கிழமை (16) சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் குறித்த அறிக்கையை தட்டச்சு வடிவில் பிரதியாக்கம் செய்து புதன் கிழமை (17) சமர்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்பதாக யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார், மண்டைதீவு புதைகுழி வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றுகளை திரட்டி நீதிமன்றில் முன்னிலைபடுத்துவதாக திகதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை (16) அன்று குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி சுபாஸ்கரன் நாளினி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் குறித்த வழக்கு தொடர்பாக அப்பிரதேச மக்கள், கடற்படை மற்றும் படையினரிடம் பெற்ற சாட்சிகள் மற்றும் சுட்டிக்காட்டப்பட்ட கிணறு தொடர்பான கிடைக்க பெற்ற சான்றுகள் உள்ளிட்டவற்றின் அறிக்கையை எழுத்து மூலமாக நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

கையால் எழுதிய குறித்த அறிக்கையையாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி சமர்ப்பித்து, விளக்கத்தை நீதிபதிக்கு சமர்ப்பணம் செய்த நிலையில் குறித்த அறிக்கையை தட்டச்சில் பிரதியாக்கம் செய்து (17.12.2025) அன்று மீண்டும் அறிக்கை சமர்பிக்குமாறு நீதிவான் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

முன்பதாக மண்டைதீவு புதைகுழி தொடர்புடைய உடலங்கள் புதைக்கப்பட்டதாக கூறப்படும் கிணறுகளை அகழ்ந்து, குறித்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படுவதுடன் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியும் பரிகாரமும் வழங்கப்பட வேண்டும் என்று கோரி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கடந்த செப்டம்பர் மாதம் 04 ஆம் திகதியன்று குறித்த சம்பவத்தில் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா என்பவர் மற்றும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினரும் தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரால்,

வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களான அனுசியா ஜெயகாந்த், கருணாகரன் நாவலன் திருநாவுக்கரசு சிவகுமாரன், செந்தமிழ்ச்செல்வன் திருக்கேதீஸ்வரன், மங்களேஸ்வரன் கார்த்தீபன் ஆகியோரின் பிரசன்னத்துடன் இருவேறு முறைப்பாடுகள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

இவ் விடயம் தொடர்பில் விசாரணை நடத்தி அந்தக் கிணறுகளை சட்ட ரீதியாக அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு கடந்த 17.09.2025 புதன் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, ஊர்காவற்றுறை பொலிசாரினால் அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கான வசதிகள் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து இவ் வழக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்பு பிரிவினரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன் மண்டைதீவு மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் யாழ். மாவட்ட குற்ற தடுப்பு பிரிவுக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

ஆனால் பல வருடங்கள் கடந்த விஷயம் என்பதால் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் அறிக்கை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரியமையால் வழக்கு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு டிசம்பர் 16 ஆம் திகதியான இன்று மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் நாளை தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

ஜேவிபி ஆட்சியாளர்கள் Protection of the State from Terrorism Act No. 2026 எனும் புதிய பயங்கரவாதச் சட்டம்!

17.12.2025

ஜேவிபி ஆட்சியாளர்கள் Protection of the State from Terrorism Act No. 2026 என்கின்ற பெயரில் புதிய பயங்கரவாத சட்ட முன் மொழிவொன்றை (Bill) வெளியிட்டு இருக்கின்றார்கள்.

தற்போதைய Prevention of Terrorism Act (PTA) க்கு பதிலீடாக முன்வைக்கப்பட்டுள்ள புதிய முன்மொழிவின் அடிப்படையிலும் பயங்கரவாதம் தொடர்பான தெளிவான வரைவிலக்கணம் (Broad and Vague) வழங்கப்படவில்லை.

குறிப்பாக இறையாண்மையை மீறுதல் (Violate Sovereignty), அச்சுறுத்துதல் (Intimidate the Public), அரசாங்கத்தை கட்டாயப்படுத்தல் (Compel the Government) உட்பட பல்வேறு விடயங்கள் பயங்காரமாக்கப்பட்டுள்ளது.

இதனூடாக PTA போலவே இங்கும் மிக சாதாரண அரசியல் கருத்து வேறுபாடுகளை கூட பயங்கரவாதமாக (Political dissent and Free Speech) சித்தரிக்க கூடிய போதிய இடைவெளிகள் இருக்கின்றது.

இராணுவ அதிகாரிகளுக்கு சந்தேகத்தின் பேரில் (Reasonable Suspicion) பொதுமக்களைத் தடுத்து நிறுத்தி , அவர்களின் உட மைகளை பரிசோதிக்கவும், பறிமுதல் செய்யவும் வெளிப்படை யாக அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கின்றது .

அதே போல புதிய சட்டமூலத்தின் கீழ் கைது செய்யப்படும் சந் தேகநபர் ஒருவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத் தரவை பெற்று ஒரு வருடம் வரை (12 மாதங்கள்) தடுத்து வைப்பதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றது.

பொலிஸ் மா அதிபர் அல்லது பிரதி பொலிஸ் மா அதிபர் மேற்படி தடுத்து வைப்பதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சின் செய லாளரிடமிருந்து பெற்று கொள்ள வேண்டும் என சொல்லப் பட்டுள்ளது.

அதாவது PTA யின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவை பெற்று 18 மாதங்கள் தடுத்து வைத்திருக்க ஏற் பாடுகளிருந்த நிலையில் தற்போது புதிய முன்மொழிவின் கீழ் 12 மாதங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் கீழ் தடுத்து வைக்க ஏற்பாடுகள் உள்ளது

அதே நேரம் புதிய முன்மொழிவின் கீழ் சந்தேகநபர் கைது செய் யப்பட்டு 24 மணித்தியாலய நேரத்தில் பொலிஸ் மா அதிபர் மற் றும் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு தகவல் தர வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் இதுவொரு மிக பலவீனமான ஒரு ஏற்பாடாகவே (Just a Paperwork) இருக்கின்றது .

அதாவது இவ் புதிய ஏற்பாடுகள் ஊடாக எந்தவொரு Judicial Review க்கோ அல்லது தடுத்து வைப்பதை தடுப்பதற்கோ எந்த வாய்ப்புகளும் இல்லை.

அதே நேரம் புதிய சட்ட முன்மொழிவின் கீழ 20 ஆண்டுகள் முதல் ஆயுள் வரை தண்டனை (Harsher Punishments) வரை மிக கடுமையான தண்டனைகள் வழங்கப்பட கூடிய ஏற் பாடுகள் இருக்கின்றது.

விசேடமாக வன்முறைசாராத (Non-Violent Offences) சாதா ரண பிரச்சாரம் (Propaganda) கூட பயங்கரவாதமாக சித் தரிக் கப்பட்டு அது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் 20 ஆண்டுகள் சிறை செல்ல வேண்டியிருக்கும்

பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக நீக்குவதாக அதி காரத்திற்கு வந்துள்ள ஜேவிபி தற்போது முன்வைத்துள்ள புதிய சட்ட முன்மொழிவு PTA யின் Stricter and more Expansive வடிவமாக இருக்கின்றது.

குறிப்பாக எண்ணிக்கையில் சிறிய தேசங்களை சேர்ந்த மக் களை புதிய பெயரில் இலக்கு வைத்து துன்புறுத்த போகின் றார்கள்

-இனமொன்றின் குரல்

யாழ். கோட்டைப் பகுதியில் சிறீலங்கா தொல்லியல் திணைக்களம்

18.12.2025

யாழ்ப்பாணம் கோட்டையை சுற்றிவர உள்ள பகுதியில் தொல் பொருள் சின்னங்கள் புதைந்திருக்கலாம் என்ற வகையில் சிறீலங்கா தொல்பொருள் திணைக்களம் எல்லைக் கல் இடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் முற்றவெளி மைதானத்திற்குள் நுழைய முடியாத வாறு எல்லைக்கல் நாட்டப்படுவதாக யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் ரத்னம் சதீஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லை கல்லின் அளவிற்கு குறித்த எல்லையை இடுமாறு நாங்கள் கோரினோம்.

அதற்கு அவர்கள், அது தங்களுக்குரிய பிரதேசம் என்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாநகர சபை உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் அனுமதி எடுத்த பின்னரே இவ்வாறு எல்லை கல் நாட்டுவதாக கூறினர்.

வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் உள்ள தமிழாராய்ச்சி படுகொலை நினைவேந்தல் தூபியில் நாங்கள் நினைவேந்தல் செய்வது வழமை. அந்த வளாகத்திற்கு உள்ளே சென்று நாங்கள் நினைவேந்தல் செய்ய வேண்டும்.

ஆகையால் அந்த பகுதியை விட்டு எல்லை இடுமாறு கோரி னோம். அதன்படி சிறிய ஒரு வாயில் விட்டு எல்லைக்கல் நாட் டப்படுகிறது.

வாயிலுக்கு கதவு போடுமாறு அவர்கள் கூறினர். இது தொல் பொருள் திணைக்களத்தின் பகுதி, ஆகையால் யாரும் இதனை தடுக்க முடியாது என்று கூறுகின்றனர்.

யாழ். மாநகர சபை இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கிறதா என பார்ப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். தையிட்டி விகாரை: சட்டவிரோதமென அறிவிப்பு

காங்கேசன்துறை வலிகாமம் வடக்கு பிரதேச சபை

19.12.2025

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை கட்டடமானது சட்ட விரோதம் என்பதை அறியப்படுத்த மும்மொழிகளிலும் உள் ளூராட்சி சபையினால் அறிவித்தல் பலகை நாட்டப்படவுள்ளது.

யாழ். தையிட்டி விகாரை தொடர்பில் காங்கேசன்துறை வலி காமம் வடக்கு பிரதேச சபையில் புதிய தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

தையிட்டி தெற்கில் பொதுமக்களின் காணியில் சட்டவிரோதமாக அமைந்துள்ள "திஸ்ஸ விகாரை" எனக் கூறப்படும் கட்டடத்திற்கு எந்த அனுமதியும் பிரதேச சபையில் பெறப்பட்டிருக்காத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் பிரதேச சபையின் சட்ட விதிமுறைகளிற்கேற்ப அக்கட்டடமானது சட்ட விரோதம் என்பதை அறியப்படுத்த மும் மொழிகளிலும் சபையினால் அறிவித்தல் பலகை ஒன்று நாட் டப்பட வேண்டும் பிரேரணை ஒன்று சபையில் கொண்டு வரப்பட்டது.

பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித் ததை அடுத்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்தோடு சட்ட விரோத தையிட்டி விகாரையின் விகாராதி பதியின் பதவி உயர்வுக்காக எதிர்ப்பை அனைத்து தரப்புக்களும் இணைந்து தீர்மானமாக நிறைவேற்றியுள்ளன.

அதேவேளை காங்கேசன்துறையின் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர்களால் தையிட்டியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலங்காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள், சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள், சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக்கண்ணீர், இவை பௌத்த தேசத்தின் காருண்யத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

திருகோணமலை கடற்கரையில் அத்துமீறி வைக்கப்பட்ட புத்தர் சிலை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது

20.12.2025

சில வாரங்களுக்கு முன் திருகோணமலை கடற்கரையில் அத்துமீறி வைக்கப்பட்ட புத்தர் சிலை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட கன்னியா வெந்நீர் ஊற்று பகுதியில் புதிதாக புத்தர் சிலை ஒன்று திறப்பதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தை மாதம் பௌர்ணமி போயா தினத்தில் தையிட்டி சட்ட விரோத திஸ்ஸ விகாரையில் மற்றுமொரு புதிய புத்தர் சிலையொன்று திறக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோவில் சூழலில் மீண்டும் தொல்லியல் திணைக்களம் மூலம் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

அதே போல 1823/73 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் தொல்லியல் இடமாக அறிவிக்கப்பட்ட முத்தையன்கட்டு குளக்கரை சூழலில் புதிய பௌத்த கட்டுமானங்கள் நிறுவ சிந்திக்கின்றார்கள்.

இதற்கிடையில் குடும்பிமலை, தாந்தாமலை ஆலயம், சித்தாண்டி முருகன் ஆலயம் உட்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் பரந்துபட்ட நிலப்பரப்பு எங்கும் பௌத்த மத அடையாளங்கள் இருப்பதாக தொல்லியல் திணைக்கள பலகைகளை நாட்டி அடாவடித்தனங்களில் ஈடுபடுகின்றார்கள்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பிரதேச சபை தலைவர்கள் மட்டுமின்றி பொதுமக்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

குறிப்பாக வெல்லாவெளி காவல் பிரிவுக்குட்பட்ட 35 ஆம் கிராமம் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினால் வழிகாட்டல் பதாகை நடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த 56 பொது மக்கள் மீது வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

இது போதாதென்று சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுவரும் தையிட்டி ஜின்தோட்ட நந்தராம தேரரை அமரபுர ஸ்ரீகல்யாண வம்ச குழுவின் வட இலங்கை துணை தலைமை சங்கநாயகராக பௌத்தசாசன அமைச்சர் திரு ஹினிதும சுனில் செனவி தலைமையில் நாளை அங்கீகரிக்கப்பட இருக்கின்றார்.

சிங்கள பௌத்த அரசியல் பீடம் தனது பேரினவாத அரசியலை பேரிடர் காலப் பகுதியில் நிறுத்தி வைக்கும் என்பது நம்ப முடியாதது என்பதை மற்றுமொரு தடவை ஜேவிபி ஆட்சியாளர்கள் நிருபிக்கின்றார்கள்.

சுதந்திர இலங்கையில் 18 ஆவது தடவையாக IMF யிடம் தஞ்சமடைந்து 3.25% வட்டிக்கு 206 மில்லியன் அமெரிக்கா டொலர்கள் கடன் வாங்கி BoP நெருக்கடிகளை தீர்க்கும் நிலையிலுள்ள ஜேவிபி ஆட்சியாளர்கள் குறைந்த பட்ச நேர்மையுடன் கூட செயற்பட தயாரில்லை.

உற்பத்தித் துறைகளை (Productive Sectors) மீள கட்டமைத்து மூலதன முதலீடுகளை (Capital Investment)ஊக்குவித்து

ஏற்றுமதி சார்ந்த தொழில்களை (Export-Oriented Industries) விரிவாக்கம் செய்ய வேண்டிய அவசர தேவைகளுக்கு மத்தியில் வெறும் வெறும் பொய்களை பேசி பேரினவாத அரசியல் செய்கின்றார்கள். - இனமொன்றின் குரல் முகநூல்

யாழ். தையிட்டிக்கு புகையிரத்தில் வரவுள்ள புதிய புத்தர் சிலை: முப்படைகளின் பாதுகாப்பு கோரி ஜனாதிபதிக்கு கடிதம்

21.12.2025

தையிட்டி சட்டவிரோத விகாரையில் புதிதாக மற்றுமொரு புத்தர் சிலையை நிறுவப்போவதாகவும், அதற்காக முப்படைகள் மற்றும் பொலிசார் பாதுகாப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டு, அதன் பிரதிகள் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 03ஆம் திகதி “துருத்து போயா” தினத்தன்று தையிட்டி விகாரையில், தெற்கில் இருந்து புகையிரதத்தில் எடுத்து வரப்படும் புத்தர் சிலையை, புகையிரத நிலையத்தில் இருந்து சமய அனுஷ்டனங்களுடன், விகாரைக்கு எடுத்து சென்று, அங்கு நிறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் புகையிரத நிலையத்தில் இருந்து , விகாரைக்கு புத்தர் சிலையை எடுத்து செல்லும் போது முப்படையினர் மற்றும் பொலிசார் சமய ஊர்வலத்திற்கு உரிய பாதுகாப்புகளை வழங்க வேண்டும் என எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்

பட்டுள்ளது.

தையிட்டி விகாரை, தனியாரின் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது. குறித்த விகாரைக்காக கையகப்படுத்திய காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு கோரி ஒவ்வொரு பௌர்ணமி தினத்திற்கு விகாரைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஜனவரி 03ஆம் திகதி புத்தர் சிலை நிறுவப்படவுள்ள பௌர்ணமி தினத்தன்றும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, தையிட்டி சட்ட விரோதமானது என்றும், விகாரை அமைந்துள்ள காணிகளில் எதிர்காலத்தில் எவ்வித கட்டுமான பணிகளையும் முன்னெடுக்க வேண்டாம் என வலி. வடக்கு பிரதேச சபையினால் விகாரதிபதிக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் “தையிட்டி விகாரை சட்டவிரோத கட்டுமானம்” என மும்மொழிகளில் விகாரைக்கு முன்பாக அறிவித்தல் பலகை நாட்டுவது என வலி. வடக்கு பிரதேச சபையில் கடந்த 18ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

மதம் என்பதற்கு இரண்டு கருத்துகள் உண்டு

பா. அரியநேத்திரன்

21.12.2025

மதம் என்பதற்கு இரண்டு கருத்துகள் உண்டு:

1. மதம் என்பது சமயம் கடவுள் நம்பிக்கையின் அடிப்படையிலான கோட்பாட்டமைப்புகளை குறிக்கும்.

2. மதம் என்பது கோபம், பிடிவாதம் என்பவற்றையும் குறிக்கும்.

இலங்கையில் பௌத்தம் இதில் உள்ள இரண்டாவது கருத்தை மையப்படுத்தியதாகவே வடகிழக்கில் பல இடங்களில் புத்தர் பகவான் அடையாள வழிபாட்டுச்சின்னங்களாக கருதாமல் ஆக்கிரமிப்பு சின்னங்களாக புத்தரின் சிலைகளை பாவிப்பதை காணமுடிகிறது.

இனவாதம், மதவாதம் இந்த இரண்டும் இலங்கை அரசியல் யாப்பில் எழுதப்படாத விதியாக இலங்கை சுதந்திரம் அடைந்த 1948, பெப்ரவரி 04ஆம் திகதி தொடக்கம் 77, வருடங்களாக யார் பிரதமராக ஆட்சியில் இருந்தார்களோ.

1. டீ.எஷ். சேனநாயக்கா 1947-1952,
2. டட்லி சேனநாயக்கா 1952-1953,
3. சேர் பொன் கொத்தலாவல-1953-1956,
4. ஞுறு பண்டாரநாயகா-1956-1959,
5. வி. தகாநாயக்கா-1959-1960,
6. ட்ட்லி சேனநாயக்கா-1960,
7. ஸ்ரீமாவோ பண்டாரநாயகா-1960-1965,
8. ட்ட்லி சேனநாயக்கா-1960-1970,
9. ஸ்ரீமாவோ பண்டாரநாயகா-1970-1977,
10. ஜே.ஆர்.ஜெயவர்தனா-1977-1978, (1978இல் புதிய அரசியல் யாப்பு திருத்தம் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியானார்)

நிறைவேற்று ஜனாதிபதிகள்:

1. ஜே.ஆர் . ஜெயவர்தனா-1978-1989,
2. ஆர் பிரமதாசா-1989-1993,
3. டீ.வி.விஜயதுங்கா-1993-1994,
4. சந்திரிகா குமாரதுங்க-1994-2005,
5. மகிந்தராஷபக்ஷ-2005-2015,
6. மைத்திரி பால சிறிசேன-2015-2019,
7. கோட்டபாய ராஷபக்ஷ-2019-2022
8. ரணில் விக்கிரமசிங்க-2022-2024,
9. அநுர குமாரதிசநாயக்க-2024-தற்போது,

இதில் குறிப்பிட்ட முதலாவது பிரதமர் டீ.எஷ். சேனநாயக்கா 1948இல் கையில் எடுத்த பௌத்த இனவாத சிந்தனை 1978 இல் ஜே.ஆர். ஜெயவர்தன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற அதிகாரத்தை வைத்து மேலும் பௌத்த மத சிந்தனையையும், இனவாதத்தையும் மேலும் கூர்மைபடுத்தினார் அவருக்கு பின்னர் ஆட்சியில் அமர்ந்த அனைவரும் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்காவரை அதனை அப்படியே கடைப்பிடித்து வருகின்றனர்.

எல்லோரும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தான், அவர்களுடைய பெயர்களும், உடைகளும், தோற்றங்களும் மாறியிருக்கின்றது ஆனால் செயல் சிந்தனை எல்லாமே அப்படியே தொடர்கிறது.

இதில் 2015-2019, வரை நல்லாட்சியி என்ற பெயரில் நரக ஆட்சியமைத்த காலத்தில் ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில், எதிர்கட்சி தலைவர் சம்மந்தன் ஐயா கூட்டு ஆட்சியில் வீடமைப்பு அமைச்சராகவும்

தற்போதைய எதிர்கட்சி தலைவரு மான சஜீத் பிரமதாச வடகிழக்கில் 1000, விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் அமைக்க 500, மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்தபோது தமிழ்தேசியகூட்டமைப்பு 16, பாராளுமன்ற உறுப் பினர்களும் அதனை எதிர்கவில்லை “மௌனம் சம்மதமானது” அன்று நல்லாட்சியில் வாயை பொத்திக்கொண்டு தலையாட்டிய தமிழ்தேசிய கூட்டமைப்பின் தீர்க்க தரிசனம் அற்ற செயலே இன்று திருகோணமலை, தையிட்டி இன்னும் பல இடங்களில் இவ்வாறான புத்தர் சிலைகள் விகாரைகள் நிறுவப்படுவதில் பல காரணங்களில் இதுவும் ஒன்று.

போதக்குறைக்கு கடந்த 2024, ஜனாதிபதி தேர்தலில் அதே சஜீத் பிரமதாசாவை ஆதரித்து வடகிழக்கில் 1000, விகாரை அமைக்க அங்கீராம் வழங்கப்பார்த்தவர்களில் ஒரு அணி தமிழரசுக்கட்சியில் உள்ளனர் என்பதே உண்மை.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நல்லாட்சியில் அரசாங்கம் செய்த அத்தனை செயல்களையும் ஆதரித்தமைக்கான மூல காரணம் புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கே ஆனால் நம்பிக் கெட்டவர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பு நம்பிக்கை துரோகம் செய்தவர்கள் ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் என்பதே உண்மை.

சிறீலங்கா பொலிசாரினால் தள்ளி விழுத்தப்பட்ட சிறீதரன் எம்.பி – வேலன் சுவாமிகள் உட்பட ஐவர் கைது

21.12.2025

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு அருகில் கடும் பதற்றமான சூழல் நிலவி வருகின்றது.

இதன்போது, வேலன் சுவாமிகள், பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட ஐவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக அங்கிருக்கும் மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில், போராட்டக்களத்தில் பொலிசாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் கடும் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன்போது, அங்கிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பொலிசாரால் கீழே தள்ளி விழுத்தப்பட்டதாக அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக அத்துமீறி கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவிக்குமாறும், விகாரையின் விகாராதிபதிக்கு வழங்கப்படும் கௌரவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை விகாரை முன்பாக போராட்டம் முன்னெடுக்கபட்டது.

குறித்த போராட்டத்திற்கு எதிராக நீதிமன்றில் தடையுத்தரவை பெறப்பட்டுள்ளது. இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் , அரசியல்வாதிகள் உள்ளிட்ட 29 பேருக்கு எதிராக பெயர் குறிப்பிட்டு, போராட்டத்தில் அவர்கள் கலந்து கொள்ள தடையுத்தரவை பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் போராட்டம் இன்றைய நாள் முன்னெடுக்கப்பட்ட வேளை, விகாரையை அண்மித்த சூழலில் பெருமளவான பொலிசார் மற்றும் கலகம் அடக்கும் பொலிசார் குவிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதுடன் அப்பகுதியில் கடும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனால், திஸ்ஸ விகாரைக்கு அருகில் அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும், இது ஒரு அமைதிவழி போராட்டம், இங்கு எந்த விதத்திலும் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கப்படவில்லை. விகாரைக்குள் போராட்டக்காரர்கள் செல்லவில்லை. விகாரைக்கு சேதம் விளைவிக்கவில்லை. விகாரைக்கு செல்லும் வீதியில் நீங்கள் எவ்வாறு அத்துமீறி மறித்து வைத்திருப்பீர்கள் என பொலிசாருடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா நிரோஷ், வேலன் சுவாமிகள், வலி. வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதனால் போராட்டக் களத்தில் அமைதியின்மை ஏற்பட்டுள்ள நிலையில், போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

அம்பாறை திருக்கோவில் பகுதியில் சிறீலங்கா பொலிசார் சுட்டத்தில் தமிழ் இளைஞர் படுகாயம்

21.12.2025

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் வைத்து ஜெயசுதாசன் தனுஷன் எனும் 26 வயது இளைஞர் மீது சிறீலங்கா பொலிசாரினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 19.12.2025 பிற்பகல் 5 மணியளவில் நடந்திருந்த போதும் இது தொடர்பில் பொதுவெளியில் எந்த செய்திகளும் வெளிவந்திருக்காத நிலையில் பாதிக்கப்பட்ட இளைஞரின் உறவினர்கள், நண்பர்களூடாக மனித உரிமை செயற்பாட்டாளர் திரு.தாமோதரம் பிரதீவன் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டதன் பின்னர் இச்சம்பவம் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, குறித்த இளைஞன் போதைப்பொருள் பாவனை உடையவர் எனவும், சூதாட்டத்தில் ஈடுபடுகிறவர் எனவும் தமக்கு தகவல் கிடைத்துச் சென்று அவரைக் கைது செய்ய முற்பட்ட போது கைகலப்பு ஏற்பட்டதாகவும் அந்த இடத்தில் தங்களுடைய துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாகவும் பொலிசார் ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கின்றனர்.

இந்நிலையில் காயமடைந்த இளைஞன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இது தொடர்பிலே எது வித கருத்துக்களும் வெளிப்படுத்தப்படாமல் இரகசியமாக காணப்பட்ட நிலையில் இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

26 வயது நிரம்பிய திருமணமான முச்சக்கர வண்டி ஓட்டுனரான குறித்த இளைஞன் பொலிசார் கூறுவது போன்று எவ்வித மான பாவனையும், கெட்ட பழக்கங்களும் அற்றவர் என அவருடைய நண்பர்களும், உறவினர்களும் தெரிவித்திருக்கின்ற நிலையிலே பல கேள்வி வலுத்திருக்கிறது.

குறித்த இளைஞரை எந்த அடிப்படையில், எந்த சட்டத்திற்கு உட்பட்டு கைது செய்ய காவல்துறையினர் சென்றார்கள்? ஏன் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது? அதுவும் உடலில் இரண்டு இடங்களில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது போன்ற பல்வேறு கேள்விகளும் எழும் நிலையில் இந்த விடையம் இப்போது வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இது தொடர்பில் மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் கருத்து தெரிவிக்கையில் நீதிமன்ற அனுமதியோ அல்லது கட்டளையோ இல்லாமல் ஒரு நபரை எந்த அடிப்படையில் கைது செய்யச் சென்றார்கள்? அவ்வாறு செல்லுகிற போது இயங்கு நிலையில் துப்பாக்கியை ஏன் வைத்திருந்தார்கள்? இவ்வாறு இரண்டு துப்பாக்கி குண்டுகள் அவரின் உடலில் பாய்ந்தது? ஏன் இந்த விடயம் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படவில்லை? என்ற பல்வேறு கேள்விகளும் சந்தேகங்களும் இதன் பின்னணியில் இருப்பதாகக் கருதி நாளைய தினம் மனித உரிமை ஆணையகத்திலே முறைப்பாடு ஒன்றை கையளிக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் இது தொடர்பான நீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு

பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதிலே தாங்கள் உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்

யாழ். கைதயிட்டி விகாரைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் கைது செய்யப்பட்ட ஐந்து நபர்கள் சரீர பிணையில்!

21.12.2025

தையிட்டி விகாரைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் கைது செய்யப்பட்ட ஐந்து நபர்கள் மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஜனநாயக வழியில் போராடிய போது மிலேச்சத்தனமாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டோம் - வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - தையிட்டியில் தமிழ்மக்களுக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகளில் பௌத்த சிங்கள பேரினவாத சிங்கள நிகழ்ச்சி நிரலுடன் கட்டப்பட்ட சட்டவிரோத விகாரைக்கு எதிராக, வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்திலே நாங்கள் பங்கெடுத்திருந்த போது எங்களில் ஐவரை தேடித் தேடி கைது செய்தனர்.

அனுர அரசாங்கத்தினால் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கைதாக பொலிசாரின் இந்தக் கைது அமைந்துள்ளது.

குறித்த பௌத்த பன்சலையை நிர்வகிப்பவர்கள் பொதுமக்களுடைய காணிகளை அடாத்தாகக் கைப்பற்றி சட்டவிரோத கட்டிடங்கள் அமைத்து அடாத்தாக இராணுவப்பலத்துடன் தாங்கள் அதனை ஆட்சியுரிமை செய்து முகாமை செய்கின்ற நிலமையிலே நாங்கள் எங்கள் மக்களின் காணிக்காக நீதியுரிமை வேண்டிப் போராடிய நிலையில் கைது செய்யப்பட்டிருகின்றோம்.

கௌரவ நீதிமன்றம் ஏற்கனவே ஒரு தீர்ப்பை வழங்கியதாகவும் சொல்லி இருந்தார்கள். நீதிமன்ற தீர்ப்பை மதிக்கிறோம். நீதிமன்ற தீர்ப்புக்கு பாதகமில்லாமல் ஜனநாயக அகிம்சை வழியிலே நாங்கள் போராடி இருந்தோம்.

இலங்கையிலே பௌத்த சிங்கள பேரினவாதம் தொடர்பில் கடந்தகாலங்களிலே கௌரவ நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளைக் கூட பொலிசார் நடைமுறைப்படுத்தவில்லை. அது அப்பட்டமாகவே எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

குருந்தூர்மலையிலே பொலிசாரை அமுல்படுத்துமாறு நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்தவில்லை. அதேபோன்று வெவ்வேறுபட்ட விடயங்களின் அடிப்படையிலே பௌத்த சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலை மேற்கொள்வதற்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களை குறைந்தபட்சமேனும் நடைமுறைப்படுத்தாத நிலையில் இந்த இடத்தில் அமைதிக்கும் சட்டத்திற்கும் மதிப்பளித்து ஜனநாயக ரீதியில் போராடிய நாங்கள் மிலேச்சத்தனமாக கைது செய்யப்பட்டிருக்கிறோம்.

இந்தக் கைதுகளின் போதான நடவடிக்கைகள் என்பது எங்களின் பாதுகாப்பை, அடிப்படை உரிமைகளை மீறுவதாகவே உள்ளது.

எமது மண்ணிலே பௌத்த சிங்கள பேரினவாதத்தை நிலை நிறுத்த வேண்டும். பௌத்த சிங்கள தேசமாக இதனை மாற்ற வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு பொலிசார் செயல்வடிவம் அளிப்பதாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எம்போதுமே, பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையோ சிறு பான்மையினர் மீது திணத்து வந்திருக்கிறது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

யாழ். தையிட்டியில் சிறீலங்கா பொலிசாரின் அடாவடியைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

22.12.2025

யாழ். தையிட்டியில் சட்டவிரோத விகாரைக்கு எதிராக போராடியவர்கள் மீது சிறீலங்கா பொலிசாரின் வன்முறையில் இறங்கியதுடன் அவர்களைக் கைது செய்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இன்று

22.12.2025 திங்கட்கிழமை போராட்டத்தில் குதித்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் நுழை வாயிலில். ஒன்றுகூடிய மாணவர்கள், குறித்த தையிட்டி வன்முறைக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு கோசம் .எழுப்பினர்.

அங்கு திரண்ட ஊடகங்களுக்கும் தமது போராட்டத்தின் நோக்கம் குறித்த தகவல்களைப் பகிர்ந்துகொண்டனர்.

மாணவர்களின் எழுச்சி என்பது ஓர் இனத்தின் விடுதலைக்கு உன்னதமானது. அதனை சிங்களப் பேரினவாதம் கடந்து வந்த காலங்களில் இராணுவம் மற்றும் காவல்துறை களின் இரும்புக் கரம் கொண்டு அடக்கி ஒடுக்கியமை நினைவில் கொள்ளத் தக்கது.

கருத்துச் சுதந்திரம் ஒடுக்கப்படுவதற்கான கடும் அபாயமா?

யாழ். ஊடக அமையம்

22.12.2025

'அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பதற்கான சட்ட மசோதா' மூலம் கருத்துச் சுதந்திரம் ஒடுக்கப்படுவதற்கான கடும் அபாயமானதென யாழ்.ஊடக அமையம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகள் சவாலுக்கு உட்படுத்தும் அடக்குமுறைச் சட்டங்கள் கொண்டு வரப்படுவதற்கு இணை சமூக ஊடக வெளியீட்டுக்கான கூட்டு (CSMD) கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் (NPP) புதியதாக அறிமுகப்படுத்த முயற்சிக்கும் 'அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பதற்கான சட்ட மசோதா' தொடர்பாக எழுந்துள்ள ஆரம்ப பிரதி செயல்கள் கவனிக்கும்போது, இது குடிமக்களின் அடிப்படை மனித உரிமை ஆகும். கருத்து சுதந்திரம் உட்பட உரிமைகள் கடுமையாக ஒடுக்கப்படும் கருவியாக மாறும் கடும் அபாயம் இருப்பதை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம்.

'பயங்கரவாதம்' என்ற சொல் தெளிவற்ற வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது: சட்ட மசோதாவில் பயங்கரவாதம் என்பதற்கு வழங்கப்பட்ட வரையறை மிகவும் விரிவாகவும் தெளிவற்றதாகவும் உள்ளது.

அரசாங்க நடவடிக்கைகள் மீது விமர்சனம் செய்வது, அமைதியான எதிர்ப்புகளில் ஈடுபடுவது அல்லது ஆட்சி அதிகாரிகளுக்கு விருப்பமற்ற / விரோதமான கருத்துகளை வெளியிடுவதக்கூட "அரசுக்கு எதிராக மக்களை தூண்டுவது" அல்லது "தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகும்" செயல்களாக விளக்கப்பட வாய்ப்பு உள்ளது.

ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் செயல்பாட்டாளர்களை இலக்காக்குதல்: தகவல் அறிக்கை செய்வதிலும், பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதிலும் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஊடக பயனாளர்கள் இந்த சட்டத்தின் கீழ் கடும் அழுத்தத்திற்கு உள்ளாகலாம்.

"பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்தல்" என்ற குறிப்பு கீழ் எந்தவொரு விமர்சனமான செய்தியையும் சட்டத்தின் வலையில் அகற்ற அதிகாரிகளுக்கு வாய்ப்பு இருப்பதால் ஊடகச் சுதந்திரம் ஒடுக்கப்படுவதுடன், "சுய கட்டுப்பாட்டு விளைவு" ஆட்சி செய்யும் காலம் உருவாகும்.

தன்னிச்சையான கைது மற்றும் தடுத்துவைப்பு: ஒரு கருத்தை வெளியிட்டதற்கோ அல்லது அரசுக்கு எதிரான கருத்தை கொண்டதற்கோ நீண்ட காலம் நபர்களை தடுத்துவைக்க முடியும் என்பதன் மூலம் குடிமக்களின் குரல் ஒடுக்கப்படுவதற்கான அடக்குமுறை ஆயுதமாக இது பயன்படுத்தப்படும்.

இது பயத்தை அடிப்படையாகக் கொண்ட குரலற்ற சமூகம் உருவாக்கும் முயற்சியாக நாங்கள் நம்புகிறோம்.

இணையவழி பரப்பல் மற்றும் தனியுரிமை மீறப்படுதல்: இணையம் மற்றும் இணையவழி பரப்பலில் தொடர்பாடலை கடுமையாக கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் சட்டம் வழங்கும் அதிகாரங்களால், தனிநபர்களின் தொடர்பாடல் உரிமை இழக்கப்படுகின்றது.

மேலும் அது சனநாயக உரையாடல் நடைபெறுவதற்கான இடத்தை முற்றிலும் ஒடுக்குகிறது.

யாழ் ஊடக அமையம்
JAFFNA PRESS CLUB
යාපනය මාධ්‍ය සමාජය

எனவே, தேசிய பாதுகாப்பு என்பது கருத்து சுதந்திரம் உட்பட சனநாயக மதிப்பீடுகளை அழிக்க பயன்படுத்தும் "வெற்று காசோலை" ஆக இருக்கக் கூடாது.

எனவே, சர்வதேச மனித உரிமை தரநிலைகள் உட்பட குடிமக்களின் குரலை ஒடுக்கும் இந்த சட்ட மசோதாவை உடனடியாக வாபஸ் பெறுமாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு கடுமையாக முறையிடுகின்றோம்.

கருத்து சுதந்திரத்தை ஒடுக்குவதால் தேசிய பாதுகாப்பு உறுதி செய்ய முடியாது என்றும், அதனால் சமூகம் நிலையற்ற, ஒரே ஆட்சி நிலைமைக்கு வழிவகுக்கும் என்று யாழ்.ஊடக அமையம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சிறீலங்காப் பொலிசாரின் தாக்குதலுக்கு இலக்கான வேலன் சுவாமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

22.12.2025

யாழ். தையிட்டி விகாரைக்கு முன்பாக சிறீலங்கா பொலிசாரின் தாக்குதலுக்கு இலக்கான வேலன் சுவாமி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தையிட்டி விகாரைக்கு அருகில் நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பொலிசார் காட்டு மிராண்டி தனமாக ஈடுபட்டு வேலன் சுவாமி உள்ளிட்ட ஐவர் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை மல்லாகம் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்திய நிலையில் ஐவரையும் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

இந்நிலையில், போராட்ட களத்தில் வைத்து , பொலிசாரினால் தாக்கப்பட்ட வேலன் சுவாமி நேற்றைய தினம் பிணையில் வெளி வந்து தனது ஆதீனத்திற்கு திரும்பிய நிலையில் சுகவீன முற்றுள்ளார்.

அதனை அடுத்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பொலிசார் காட்டு மிராண்டி தனமாக நடந்து கொண்டமை தொடர்பிலும், மத தலைவரான வேலன் சுவாமி மீது மிலேச்சத்தனமாக தாக்குதல் மேற்கொண்டு, அவரை பொலிஸ் வாகனத்தினுள் தூக்கி வீசிய சம்பவத்தை பல்வேறு தரப்பினரும் கண்டித்து வருவதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கோரி வருகின்றனர்

யாழ். தைகயிட்டியில் பொலிசாரின் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் பொலிசாருக்கு எதிராக வழக்கு தொடர வேண்டும்

தமிழ் மக்கள் கூட்டணியின் உப சொயலாளரும் சட்டத்தரணியுமான வி. மணிவண்ணன்

22.12.2025

தையிட்டியில் பொலிசார் நடந்து கொண்ட விதம், நாடு இரண்டாக பிளவு பட்டு உள்ளது என்பதனை பட்டவர்த்தனமாக காட்டி நிற்கிறது என தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் சட்டத்தரணி வி மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் இன்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி விகாரை முன்பாக நடைபெற்ற அமைதி வழி போராட்டத்தின் போது, பொலிசார் இடையூறுகளை ஏற்படுத்தி அங்கு அமைதியின்மையை ஏற்படுத்தி இருந்தனர்.

மதகுருவான வேலன் சுவாமியை மிலேச்சத்தானமாக தாக்கி, அவரை காட்டுமிராண்டி தனமாக இழுத்து சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றியுள்ளனர்.

அதேவேளை மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனையும் தள்ளி விழுத்தியுள்ளனர். அத்துடன், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மூவர் உள்ளிட்ட நால்வரை அடித்து இழுத்து சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றி அராஜகம் செய்துள்ளனர்.

இந்த பொலிசாரின் அராஜகத்தை தமிழ் மக்கள் கூட்டணி மிக வன்மையாக கண்டிக்கிறது.

பொலிசாரின் இந்த செயற்பாடானது நாடு இரண்டாக பிளவு பட்டு உள்ளமையையே காட்டி நிற்கிறது. எத்தனை ஆட்சிகள் மாறினாலும், சிங்கள பௌத்த தீவிரவாத போக்கில் மாற்றம் ஏற்பட போவதில்லை.

திருகோணமலையில் புத்தர் சிலையை வைத்தமை தொடர்பிலான பிரச்சனையின் போது பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸ் அதிகாரியை கன்னத்தில் அறைந்தார். அதற்கு எதிராக பொலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்காது அமைதி காத்தனர்.

ஆனால் வேலன் சுவாமிகளை மிலேச்சத்தானமாக தாக்கி கைது செய்துள்ளனர். வேலன் சுவாமி ஒரு பௌத்த பிக்குவாக இல்லாதமை தான் இதற்கு காரணம். வேலன் சுவாமிகளுடன் நடந்து கொண்டது போன்று , ஒரு பௌத்த பிக்குவுடன் பொலிசாரினால் நடந்து கொள்ள முடியுமா ?

வேலன் சுவாமி, வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் தம் மீது பொலிசார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவத்திற்கு எதிராக வழக்கு தொடர வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

அவர்கள் அவ்வாறு பொலிசாருக்கு எதிராக வழக்கு தொடர விரும்பின் , சட்டத்தரணி என்ற ரீதியில் நாமும் எமது கட்சியும் பக்க பலமாக அவர்களுக்கு நிற்போம் என இவ்விடத்தில் உறுதி கூறுகிறேன்.

அதேவேளை வலி. வடக்கு பிரதேச சபையிடமும் அன்பான கோரிக்கை ஒன்றினை விடுகிறேன், உங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் சாதாரண குடிமகன் ஒரு கட்டடத்தை அமைக்கும் போது, பிரதேச சபையின் அனுமதி பெறாது விடின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கின்றீர்கள் , அதேபோன்று தையிட்டி விகாரையில் நடைபெறும் சட்ட விரோத கட்டடங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று கோருகிறேன் என தெரிவித்தார்.

எமது மண்ணை பௌத்த சிங்கள தேசமாக மாற்ற வேண்டும் என்பதே அரசாங்கதின் கொள்கை

வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

22.12.2025

எமது மண்ணிலே பௌத்த சிங்கள பேரினவாதத்தை நிலை நிறுத்த வேண்டும். பௌத்த சிங்கள தேசமாக இதனை மாற்ற வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு பொலிசார் செயல்வடிவம் கொடுக்கவே எம்மை கைது செய்தனர் என வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரைக்கு முன்பாக நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் தவிசாளர் நிரோஷ் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டு, பின்னர் பதில் நீதவானால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிணையில் வெளியே வந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்மக்களுக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகள் பௌத்த சிங்கள பேரினவாத சிங்கள நிகழ்ச்சி நிரலுடன் கட்டப்பட்ட சட்டவிரோத விகாரைக்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்திலே நாங்கள் பங்கெடுத்திருந்த போது எங்களில் ஐவரை தேடித் தேடி கைது செய்தனர்.

அரசாங்கத்தினால் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கைதாக பொலிசாரின் இந்தக் கைது அமைந்துள்ளது.

குறித்த பௌத்த பன்சலையை நிர்வகிப்பவர்கள் பொதுமக்களுடைய காணிகளை அடாத்தாகக் கைப்பற்றி சட்டவிரோத கட்டிடங்கள் அமைத்து அடாத்தாக இராணுவப்பலத்துடன் தாங்கள் அதனை ஆட்சியுரிமை செய்து முகாமை செய்கின்றனர்.

இதனால், நாங்கள் எங்கள் மக்களின் காணிக்காக நீதியுரிமை வேண்டிப் போராடிய நிலையில் கைது செய்யப்படுகின்றோம்.

இலங்கையிலே பௌத்த சிங்கள பேரினவாதம் தொடர்பில் கடந்தகாலங்களிலே நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளைக் கூட பொலிசார் நடைமுறைப்படுத்தவில்லை. அது ஒரு அப்பட்டமாகவே தெரிந்த விடயம். குருந்தூர்மலையிலே பொலிசாரை அமுல்படுத்துமாறு நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்தவில்லை.

அதேபோன்று வெவ்வேறு பட்ட விடயங்களின் அடிப்படையிலே பௌத்த சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலை மேற்கொள்வதற்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களை குறைந்த பட்சமேனும் நடைமுறைப்படுத்தாத நிலையில் இந்த இடத்தில் அமைதிக்கும் சட்டத்திற்கும் மதிப்பளித்து ஜனநாயக ரீதியில் போராடிய நாங்கள் மிலேச்சத்தனமாக கைது செய்யப்

பட்டிருக்கிறோம்.

இந்தக் கைதுகளின் போதான நடவடிக்கைகள் என்பது எங்களின் பாதுகாப்பு அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது. எமது மண்ணிலே பௌத்த சிங்கள பேரினவாதத்தை நிலைநிறுத்த வேண்டும். பௌத்த சிங்கள தேசமாக இதனை மாற்ற வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு பொலிசார் செயல்வடிவம் அளிப்பதாகவே நாங்கள் பார்க்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

யாழ். தையிட்டி விகாரை விவகாரம்: சர்வதேச தூதுவராலயங்களுக்கு முறையிட்டுள்ளேன் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

23.12.2025

யாழ். தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்ட எம்மை சித்திரவதைக்கு உள்ளாக்கிய பொலிசாருக்கு எதிராக வெளிநாட்டு தூதுவராலயங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் ரீதியிலான பொறிமுறைகளுக்கும் முறையிட்டுள்ளோம் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் ,

இலங்கையில் எமக்கு எதிராக இடம்பெற்ற சித்திரவதைகள், நாம் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பினை எதிர்த்த வேளை இடம்பெற்ற தாக்குதல்கள் என்பதால் இலங்கை அரச கட்டமைபினுள்ளாக ஒருபோதும் நீதி கிட்டாது என்பதை நாம் உணர்கின்றோம்.

அரச கொள்கையும் சட்டங்களும் சட்ட அமுலாக்கமும் பௌத்த சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்பிற்கு வலுச்சேர்ப்பவையாகவே பேணப்படுகின்றன. யாரும் எதிராக அமையக்கூடாது என்பதில் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பே இலங்கையில் நடைமுறையில் உள்ளது.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோதும் மாற்றமின்றி இந்நிலை தொடர்கின்றது. பௌத்த பேரினவாத விஸ்தரிப்புக்கு எதிராக கடந்த காலத்தில் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் கூட இந் நாட்டில் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஏகமனதாக முன்னெடுத்த சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் பகிரங்க அகிம்சை வழி போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அப் போராட்டத்தில் நீதிமன்றின் உத்தரவுகளை மதித்தே நாம் போராடினோம். அவ்வாறாகப் போராடிய போது எம்மீது பொலிசார் பிரயோகித்த சித்திரவதையினையும் மனித குல நாகரிகத்திற்கு ஏற்புடையதல்லாத நடவடிக்கைகள்

இது தொடர்பாக இலங்கையில் உள்ள பிரதான நாடுகளின் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான நிறுவனங்கள், சித்திரவதைக்கு எதிரான சர்வதேச தாபனங்கள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மனித உரிமைகள் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தாபனங்களுக்கும்

இவ்விடயம் பற்றி போதிய ஆதாரங்களுடன் முறையிட்டுள்ளோம்.

இராணுவமயமாக்கத்தின் கீழ் பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளில் அரச அனுசரனையுடன் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தினை பாதிக்கம் வகையில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக்கு எதிராகவே நாங்கள் தொடர்ச்சியாக போராடிவருகின்றோம்.

கொக்கிளாயில் குடியேறியுள்ள சிங்களவர்களுக்கு கொக்குத்தொடுவாயில் காணி வழங்க இடமளிக்க முடியாது

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

23.12.2025

முல்லைத்தீவு - கொக்கிளாய் முகத்துவாரத்தில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமித்து அத்துமீறி குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு கொக்குத்தொடுவாய் பகுதியில் காணி வழங்குவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிக்கு வன்னி மாவட்டாநாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தனது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தப் பாதிப்புத் தொடர்பிலான விசேடகலந்துரையாடல் 22.12.2025 நேற்று இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் கொக்கிளாய் முகத்துவாரத்தில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் வெள்ளப்பாதிப்பை எதிர்கொள்வதால், அவர்களை கொக்குத்தொடுவாயில் மாற்று வாழ்விடம் அமைத்து குடியேற்றுவது தொடர்பில் பேசப்பட்டது.

இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தனது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்கிளாயில் குடியேறியுள்ள குறித்த பெரும்பான்மையின மீனவர்கள் பருவகால மீன்பிடியில் ஈடுபடுவதற்காகவே ஆரம்பத்தில் கொக்கிளாயை நோக்கி வருகைதந்தனர். அங்கு தங்கியிருந்து பருவகால மீன்பிடியில் ஈடுபட்டு பின்னர் பருவகாலம் முடிவுற்றதும் தமது சொந்த இடங்களுக்கே திரும்பிச் செல்வார்கள்.

அந்தவகையில் கொக்கிளாயில் குடியேறி தங்கியுள்ள சிங்களவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானியும் என்னிடம் உள்ளது.

இந்நிலையில் கடந்த 1984ஆம் ஆண்டு கொக்கிளாய் முகத்துவாரத்திலிருந்த தமிழ்மக்கள் இராணுவத்தினரால் வலுக்கட்டாய மாக வெளியேற்றப்பட்ட பிற்பாடு, எமது தமிழ் மக்களின் பூர்வீக வாழிடங்களை ஆக்கிரமித்து பெரும்பான்மையின மீனவர்கள் குடியேறினர்.

எமது தமிழ்மக்களுக்குரிய 20 ஏக்கருக்கும் மேற்பட்ட பூர்வீக தனியார் காணிகள் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டு இவ்வாறு பெரும்பான்மை இனத்தவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அந்த காணிகளுக்குரிய தமிழ் மக்களின் பெயர்ப்பட்டியலும் எம்மிடமுள்ளது.

இவ்வாறு கொக்கிளாய் முகத்துவாரத்தில் அமைந்துள்ள எமது தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமித்து குடியேறியிருக்கின்ற சிங்கள மக்களுக்கு நீர்கொழும்பு, சிலாபம் உள்ளிட்ட அவர்களுடைய சொந்த இடங்களிலும் காணிகள், வீடுகள் காணப்படுகின்றன.

ஒருவருக்கு ஒரு இடத்தில் காணியிருக்கலாம் என்பதே அரச கொள்கையாகும். இவ்வாறு சிலாபம், நீர்கொளும்புப் பகுதிகளில் இந்த பொரும்பான்மை இனத்தவர்களுக்கு காணி இருக்கத்தக்கதாக இங்கும், காணிகளை வழங்கமுடியுமா? என்பதற்கு உரியவர்கள் பதிலளிக்கவேண்டும். இந்த விடயத்தில் நியாயமான முறையில் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறாக எமது தமிழ்மக்களின் காணிகளை அபகரித்து கொக்கிளாய் முகத்துவாரத்தில் தங்கியுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் தற்போது அனர்த்தப்பாதிப்பிற்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவித்து அவர்களுக்கு கொக்குத்தொடுவாயில் காணிகளை வழங்குவதற்கு எடுக்கின்ற முயற்சியை மிகக் கடுமையாக எதிர்க்கின்றேன்.

அத்தோடு புலிபாந்தகல்லில் சுற்றுலாத்தளத்திற்கென ஒதுக்கப்பட்ட காணிகளையும் ஆக்கிரமித்து அங்கு அத்துமீறி கடற்தொழில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பெரும்பான்மை இனத்தவர்கள் எடுக்கின்ற முயற்சியினையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

கடந்தகாலத்தில் தமிழர்களின் பூர்வீக மணலாற்று பகுதிக் காணிகளை முன்னைய அரசாங்கங்கள் அடாவடியாக ஆக்

கிரமிப்புச்செய்து பெரும்பான்மை இனத்தவய்களுக்கு பகிர்ந்தளித்திருந்தனர்.

இந்நிலையில் முன்னைய அரசாங்கங்களைப்போன்று இந்த அரசாங்கமும் அடாவடியாகச் செயற்படாதீர்கள் எனக் கேட்டுக் கொள்ளவிரும்புகின்றேன்.

ஊழலை ஒழிப்போமெனக் கூறிக்கொண்டு ஆட்சிக்குவந்த இந்த அரசின் ஆட்சியில் ஊழல்கள் இடம்பெறக்கூடாது.

கொக்குத்தொடுவாயில் இவ்வாறு எமது தமிழ் மக்களுக்குரியா பூர்வீக காணிகளை அபகரித்து பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிராட்டிகுளம், பண்டாரவன்னி, மன்னாகண்டல் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள மக்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்கி, மாற்று வாழ்விடங்களை அமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்

சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளும்
ஒரு வியாபாரப் பண்டமல்ல; அது
இரத்தம் சிந்தி வெற்றிகொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

யாழ். தையிட்டி விவகாரம்: இன்று நாட்டில் சட்டம் சிலருக்கும் கவசம் மற்றவர்களுக்கும் அடக்குமுறைக்கான ஆயுதம்!

அருட்தந்தை மா. சத்திவேல்

23.12.2025

சட்டம் என்பது அனைவருக்கும் சமமானதாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய இலங்கையில் அந்த சட்டம் சிலருக்கு கவசமாகவும் மற்றவர்களுக்கு அடக்குமுறைக்கான ஆயுதமாகவும் மாறியுள்ளது. தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான விவகாரம் இதற்கு மிகத் தெளிவான உதாரணம் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இன்று (23) அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் அருட்தந்தை மா.சத்திவேல் குறிப்பிட்டுள்ளதாவது,

எமது மிக அண்மைய உதாரணங்களான டித்வா புயல் மற்றும் சுனாமியை விட நாட்டில் நிறுவனமயப்பட்டுள்ள அரச பயங்கர வாதத்தால் பாதுகாக்கப்படும் சிங்கள பௌத்த பேரினவாதம் பயங்கரமானது.

சட்டவிரோத கட்டடமான திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று முன்தினம் (21) நடத்தப்பட்ட போராட்டத்தில் இந்து மத குரு உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டாலும், போராட்டத்தின்போது பொலிசாரின் நடவடிக்கை, போராட்டத்தில் ஈடுபட்டோரை கைது செய்த விதம் சிங்கள பௌத்தத்தின் கோர முகத்தினை மட்டுமல்ல, “இனவாத மதவாதத்தினை இல்லாமல் செய்வோம்” என அடிக்கடி அலங்கார வசனம் பேசும் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவினதும் அவரது தலைமைத்துவத்திலான தேசிய மக்கள் சக்தியினதும் அகோர முகத்தினை வெளிக்காட்டியது. இது வன்மையாக கண்டிக்கப்படவேண்டியதே.

டித்வா புயல், மழை, வெள்ளம் மண்சரிவை தொடர்ந்து சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பான விடயம் பேசுபொருளாகியுள்ளது. சிங்கள பௌத்த பேரினத்தின் அடையாளமாகவும் நல்லிணக்கத்திற்கு எதிரானதுமான சட்டவிரோத விகாரையை ஆட்சியாளர்கள் அகற்றாமல், அதனை பாதுகாப்பதற்கு எடுக்கும் முயற்சிகளை தடுத்து நிறுத்துவதற்கு துணிவில்லாது இருப்பதேன்?

இன்னும் தையிட்டி விகாரை நாட்டின் சட்ட விதிமுறைகளுக்கு எதிரானது. இன அமைதிக்கு எதிரானது மட்டுமல்ல, தமிழர்களுக்கு எதிரான இன்னொரு சுற்று இன அழிப்புப் போருமாகும்.

அன்று முப்படைகள் செய்ததை இன்று அவர்களின் துணையோடு பௌத்த மகா சங்கம் நேரடியாக களத்தில் இறங்கி வெளிப்படையாகவே செய்வதாக தோன்றுகின்றது. தேசிய மக்கள் சக்தியும் அவர்களின் காலடியில் விழுந்து அரசியல் செய்வதாக தமிழ் மக்கள் உணர்கின்றனர்.

இந்நிலையில் தற்போதைய சட்டவிரோத விகாரையின் பிக்குவிற்கு அரச ஆதரவோடு பதவி உயர்வு கொடுப்பது என்பதும் எதிர்வரும் புது வருடத்தில் ஜனவரி மாதம் 3ஆம் திகதி அவ் விகாரை அமைந்திருக்கும் மக்களுக்கு சொந்தமான காணியில் புத்தர் சிலை வைக்க மகா சங்கத்தினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து அதற்கான பாதுகாப்பை கோரியிருப்பது தமிழர்களை போராட்டத்திற்குள் தள்ளி இன்னுமொரு இன வன்முறைக்கு வித்திடும் கொடூர செயலுமாகும்.

டித்வா பேரிடருக்கு முகங்கொடுத்து அவல நிலையில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இன்னும் ஓர் அவலத்தை சந்திப்பதற்கு நாடு தயாராக இல்லை. இதனை ஆட்சியாளர்கள் உணர்ந்து, அதனைத் தடுத்து நிறுத்துமாறும் கேட்கின்றோம்.

சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் என்பது பௌத்த மதத்திற்கு எதிரான போராட்டமோ, அம்மதத்தினை பின்பற்றும் சிங்களவர்களுக்கு எதிரான போராட்டமோ அல்ல. அதேபோன்று இந்துக்களின், தையிட்டி பிரதேசத்தில் அவ் விகாரையினால் காணிகளை இழந்த மக்களின் அல்லது அரசியல்வாதிகளின் போராட்டம் மட்டுமல்ல. அது கட்டமைக்கப்பட்ட இனமத ஆக்கிரமிப்புக்களோடு ஒடுக்குதலைத் தொடரும் அதனை பாதுகாக்கும் பேரினவாத அரச கட்டமைப்புக்கு எதிரானதுமான போராட்டமாகும்.

குறிப்பாக கிறிஸ்தவ சமூகம் இயேசுவின் பிறப்பிற்கு விழா எடுக்கும் காலகட்டம் இது. இயேசுவின் இறை கொள்கையோடு மக்கள் விடுதலை செயற்பாட்டோடு பயணிப்பவர்களாக தம்மை அடையாளப்படுத்துவோர் அடக்குமுறைக்கு எதிரானதும் சிங்கள பௌத்த பெரும் தேசிய வாதத்தின் ஓர் அடையாளமாகவும் திகழும் சட்டவிரோத கட்டடத்திற்கு எதிரான போராட்டத்தினை வலுப்படுத்த வேண்டும்.

இயேசு அன்று கட்டமைக்கபட்டதும் நிறுவனமயமான அரச மற்றும் சமய அமைப்புகளுக்கு எதிராகவும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பெடுத்தும் நீதிக்கான அறப்போராட்ட வாழ்வையே தமதாக்கினார். அது கடவுளின் போராட்டம். இத்தகைய போராட்டத்தோடு இணைவதன் மூலமும் கூட்டாக எதிர்ப்புக் குரலை உயர்த்துவதன் மூலமுமே விழாவை கருத்துள்ளதாக்கலாம்.

இயேசு அருளிய முழு மனித விடுதலையை மக்களின் மக்கள் மயமாக்குவதே விழாவாக அமையும் என்பதையும் கூற விரும்புகின்றோம்.

தமிழர் தாயகம் எங்கும் புத்தர் சிலை வைப்பதற்கு முழு வீச்சோடு தொல்லியல் திணைக்களம் களத்தில் நிற்பதோடு அரச மரக்கன்று விதைகளை தமிழர் நிலமெங்கும் வீசி விதைப்பதற்கு தம் வசம் வைத்துள்ளது. இதற்கு எதிராக தமிழர் தாயக மக்களை திரட்சியாக்கும் பொறுப்பு அனைத்து சமய அமைப்புகளுக்கும், அதன் தலைவர்களுக்கும், அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் உண்டு. இதனை தட்டிக்கழித்துவிட்டு பக்தியில் மக்களை வழிநடத்த முடியாது. அரசியல் ரீதியில் மக்களை கட்டியெழுப்பவும் முடியாது. தமிழர் தாயகம் காக்க நாம் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும் எம் தாய்நிலம் பறிபோகும். எம் இனம் அழியும். அதன் பின் யாருக்காக சமயம்? யாருக்காக அரசியல்? தலைவர்கள் யாருக்காக? அவர்களின் கட்சிகள் யாருக்கு? எனும் கேள்விகளை மக்கள் கேட்கும் முன்னர், கூட்டுச் செயற்பாட்டுக்கு உடனடியாக வழிவகுப்போம்.

இந்த அநீதிக்கு எதிரான போராட்டத்தினை எட்டி நின்று பார்ப்பதும், பாரா முகத்துடன் இருப்பதும், நாட்டின் அமைதிக்கு எதிரான அடிப்படை மனித உரிமைக்கு எதிரானதும், தமிழர் தேசியத்துக்கு எதிரான செயற்பாடு மட்டுமல்ல, மனிதத்துவத்திற்கு எதிரானதும், சமயங்கள் போதிக்கின்ற அற நீதிக்கும் எதிரான செயலாகும் என்பதை வலியுறுத்துகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களுக்கு நீதி வேண்டி ஆர்ப்பாட்டம்

25.12.2025

மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலத்தில் கிறிஸ்மஸ் ஆராதனையின்போது சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 20ஆவது நினைவு தினம் மட்டக்களப்பில் நினைவுகூரப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் இன்று (25.12.2025) மாலை தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் க.சோபனன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு நீதி வேண்டி அமைதியான முறையில் கவன ஈர்ப்பு ஊர்வலமொன்று நடாத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மண்டபத்தில் ஜோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன் இ.சிறிநாத் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் நினைவுப் பேருரையினை கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட சட்டப் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் வழங்கியிருந்தார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நுரைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டம் காடு மண்டிக் காணப்படும் வீடுகளின் அவல நிலை...!

25.12.2025

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நுரைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டம் இன்னும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படாததன் மர்மம் குறித்து பல்வேறு தரப்பினராலும் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது.

கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பெரும் தொகையில் சகல வசதிகளும் கொண்ட கிராமமாக இவ்வீடமைப்புத்திட்டம் சவூதி அரசாங்கத்தின் நிதி உதவியில் அமைக்கப்பட்டபோதிலும் நாளையுடன் (26) 21 வருடங்களாக மக்களுக்கு கையளிக்கப்படாம் இன்று காடு மண்டிக் காணப்படுகின்றது. சவூதி அரேபியாவின் நன்கொடை நிதியத்தின் 552 மில்லியன் ரூபா நிதியுதவியில் சுனாமி வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வீட்டுத்திட்டத்துக்கான ஒப்பந்தம் 2006 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு, வீடுகளை நிர்மாணிக்கும் பொறுப்பு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சிடம் வழங்கப்பட்டது.

சுமார் 40 ஏக்கர் காணியில் 500 வீடுகள் உட்பட பல்தேவை கட்டிடம், சந்தைக் கட்டிடம், ஆண்கள் பாடசாலை, பெண்கள் பாடசாலை, பள்ளிவாயல், வைத்தியசாலை, பஸ்தரிப்பு நிலையம், விளையாட்டு மைதானம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளது. அப்போது வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக பேரியல் அஷ்ரப் பதவி வகித்தார். சுமார் 40 ஏக்கர் காணியில் அமைந்துள்ள இந்த வீட்டுத்திட்டத்தில் 500 வீடுகள் உள்ளன

இவ்வீட்டுத்திட்டமானது இது வரை மக்களுக்கு கையளிக்கப்படாததன் காரணம் நீதி மன்றத் தீர்ப்பு மற்றும் அரசியல் காரணங்கள் என தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு வீடுகள், சந்தைக் கட்டிடம், பாடசாலை, பள்ளிவாசல் மற்றும் விளையாட்டு மைதானம், பாதைகள் போன்ற அனைத்து வசதிகள் இருந்தும் கடந்தகாலம் ஆட்சியாளர்கள் பாதிக்கப்பட்ட மக்களிடம் இவ்வீடுகளை கையளிக்காமல் மரங்களாலும் புற்களாலும் சூழப்பட்ட காடு மண்டி வனமாக தற்போது காட்சி அளிக்கின்றது. தற்போது இம்மீள்குடியேற்ற கிராமம் காடுகளால் சூழப்பட்டு, கொடிய விச ஜந்துக்கள், யானை மற்றும் ஆபத்தான விலங்குகள், பிராணிகளின் உறைவிடமாக மாறியுள்ளதுடன் வீடுகள் யாவும் சேதமாகியுள்ளது. தற்போது இவ்வீடுகளை பகிர்ந்தளித்தாலும் கூட பயனாளிகளால் உடனடியாக குடியேற முடியாத நிலையில் மிகவும் மோசமாக சேதமடைந்த நிலையிலேயே வீடுகள் காடுமண்டிய நிலையில் காணப்படுகின்றன.

எனவே தான் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நுரைச்சோலையில் கட்டப்பட்ட 500 வீடுகளும் விரைவில் மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல காலமான மக்கள் கோரிக்கையாகும்.

தற்போது கூட நாட்டில் ஏற்பட்ட டிக்வா புயல் அனர்த்தம் காரணமாக பல மக்கள் வீடுகளை இழந்திருக்கின்றார்கள். எனவே இவ்வாறு இயற்கை அனர்த்தங்களினால் தங்களது வீடுகளை இழந்தவர்களுக்கு ஏதோ ஒரு வழியில் வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. இதனை எல்லோரும் சாதி மத பேதங்களுக்கு அப்பால் மனிதாபிமான ரீதியில் நோக்க வேண்டும்.

அரசியல் வேறுபாடுகள் இதர காரணங்களினால் இவ்வாறான பெறுமதியான வீடுகள் உரிய காலத்தில் மக்களிற்கு கையளிக்காததன் காரணமாக பெறுமதி இழந்து வருவதுடன் பல மடங்கு செலவுகளையும் மீண்டும் மக்களுக்கு வழங்கப்படும் போது ஏற்படுகின்றது. காரணம் தற்போதுள்ள வீட்டுத்திட்டங்களிலுள்ள கதவுகள் போன்ற பெறுமதியான பொருட்களும் களவாடப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டம் முழுக்க காடு வளர்ந்துள்ளது. வீடுகளில் வெடிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் பாரிய புனரமைப்பு வேலைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளதால் அதற்காக பாரியளவான நிதியினை ஒதுக்க வேண்டிய தேவையுள்ளது.

எனவே சகல தரப்பினரும் இவ்வாறான விடயங்களுக்காக ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப முன்வருவதுடன் மக்களுக்காக ஒருமித்த கருத்துடன் பணியாற்ற வேண்டும். பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்ட நுரைச்சோலை வீட்டுத்திட்டம் இது வரை மக்களிடம் கைளிக்கப்படாமல் காடாகக் காட்சியளிக்கும் நிலைமை குறித்து தற்போதைய அரசாங்க இவ்வீட்டுத்திட்டம் மக்களிடம் கையளிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவம் நிகழ்ந்து 21 வருடங்கள் நிறைவு!

26.12.2025

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி அதிகாலை நடந்த சம்பவம் உலகமே உறைந்து போன ஒரு தினமாக வரலாற்றில் பதிய வைத்துள்ளது.

ஆம் ஆழிப்பேரையின் கோரத் தாண்டவம் ஏற்பட்டு இன்றோடு 21 வருடங்கள் ஆகின்றன.நேற்று நடந்தது போல் கோரத் தாண்டவம் எம் கண்முன்னே இன்னும் நின்று நிழலாடுகின்றது.

இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவுகளில் கடலுக்கடியில் ஏற்பட்ட பாரிய நில அதிர்வைத் தொடர்ந்து உருவாகிய ஆழிப்பேரலையானது இந்து சமுத்திரத்தின் கரையோர நாடுகளைத் தாக்கி அழிவை ஏற்படுத்தியது. இந்த ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தால் இலங்கையில் 30 ஆயிரத்து 196 உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

சுனாமி அனர்த்தத்தில் காவுகொள்ளப்பட்ட மக்களை நினைவு கூரும் வகையில் இன்று (26) வெள்ளிக்கிழமை தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் ஆழிப் பேரலையால் பலியான உறவுகளுக்கான நினைவேந்தல்கள் இடம்பெறுகின்றன.

கிறிஸ்மஸ் நாளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளின் உறவினர்கள் வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்

25.12.2025

கிறிஸ்மஸ் தினமான நேற்று வியாழக்கிழமை (25) வவுனியா வில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனயீர்ப்பு

போராட்டம் ஒன்றினை மேற்கொண்டு இருந்தனர்.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்கள் நேற்று காணாமல் ஆக் கப்பட்டோர் இந்த கிறிஸ்மஸ் தினத்தில் சர்வதேசத்திற்கு ஒரு செய்தியை கூறுவதாக தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவினர்களது சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ் குமார் கருத்து தெரிவிக்கையில்,

இந்தக் கிறிஸ்துமஸ் தினத்தில், அனைத்து தமிழர்களிடமும் ஒரு பணிவான ஆனால் தெளிவான வேண்டுகோளை வைக் கிறோம். எமது மண்ணிலுள்ள எமது உண்மையான வர லாற்றை கற்றுக்கொள்வோம். எமது இளம் தலைமுறைக்கு அதை கற்பிப்போம்.

சிங்கள இன அடையாளம் உருவாக்கப்படுவதற்கு முன்பே, இந்தத் தீவில் தமிழர்கள் வாழ்ந்தனர். இந்தத் தீவு, தமிழ்நாட் டுடன் இணைந்த தமிழகம் என்ற பரந்த நாகரிகப் பரப்பின் ஒரு பகுதியாக இருந்தது. சங்ககாலம் முதல், சைவத் தமிழர்களும் தமிழ் புத்தர்களும் இந்தத் தீவின் நாகரீக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தனர். தமிழ் புத்தமதம் ஒரு இன அடையாளம் அல்ல. அது ஒரு தமிழ் பண்பாட்டு மற்றும் ஆன்மீக மரபு. பின் னர், மத நிறுவனங்களில் ஏற்பட்ட ஒழுக்கச் சீர்கேடுகள் மற்றும் அரசியல் தலையீடுகளால், பல தமிழ் புத்தர்கள் மீண்டும் சைவத்திற்குத் திரும்பினர்.

ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர், வட இந்திய வணிகர்கள், இயக்கர் மற்றும் நாகர் குழுக்கள், மேலும் சில தென்னிந்திய வணிகக் குழுக்கள் இணைந்து, பின்னர் சிங்கள புத்த அடை யாளமும் சிங்கள மொழியும் உருவானது என்பது வரலாற்று

ஆய்வுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இன்று தமிழ் தாயகத்தில் காணப்படும் எந்த புத்தச் சின்னங் களும் சிங்கள புத்தமதத்திலிருந்து தோன்றியவை அல்ல. அவை அனைத்தும் பண்டைய தமிழ் புத்த மரபின் மீதமுள்ள சாட்சிகள். கந்தரோடை சிறிய விகாரை இதற்கான தெளிவான எடுத்துக்காட்டாகும்.

போர்த்துகீசியர்கள் வரும்வரை, இந்தத் தீவின் வடகிழக்கு பகுதி தமிழர் அரசர்களின் ஆட்சியில் இருந்தது. சங்கிலியன் மன் னனின் ஆட்சி இதற்கான வரலாற்றுச் சாட்சி. வரலாற்றிலும் சட்டரீதியாகவும் இந்த நிலம் தமிழர்களுக்குச் சொந்தமானது.

வன்னி பந்தலில் உள்ள தாய்மார்களிடமிருந்து - 3,231 நாட்கள்...

வவுனியா, காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய் மார்கள் மற்றும் குடும்பங்கள், A-9 நெடுஞ்சாலையில் வவு னியா நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள சாலையோர வன்னி பந் தலில் எங்கள் அமைதியான போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறோம். 2025 டிசம்பர் 25, கிறிஸ்துமஸ் தினம் அன்று, எங்கள் போராட்டம் 3,231 நாட்களை எட்டுகிறது. எங்கள் குரல் எங்கள் அன்பான குழந்தைகள் திரும்பி வர வேண்டும் என் பதற்காக மட்டுமல்ல. எதிர்காலத்தில் எந்த தமிழ் குழந்தையும் இதே துயரைக் கண்டுகொள்ளக் கூடாது என்பதற்காகவும். நாங்கள் தினமும் துக்கத்துடன் மட்டுமல்ல, உறுதியுடனும் கூடு கிறோம். நீதி கோருவதற்காகவும், தமிழ் இறையாண்மைக்கு

சர்வதேச ஆதரவை கோருவதற்காகவும், எதிர்கால இன அழிப்பு மற்றும் அழிவுகளிலிருந்து எமது மக்களைப் பாதுகாப் பதற்காகவும் நாங்கள் இங்கு நிற்கிறோம்.

இந்தக் கிறிஸ்துமஸ் தினத்தில், தெளிவாகக் கூறுகிறோம். எங்களுக்கு 13வது திருத்தச் சட்டம் வேண்டாம். எங்களுக்கு கூட்டாட்சித் தீர்வுகள் வேண்டாம். எங்களுக்கு ஒற்றை,அல்லது மேலோட்ட அரசியல் தீர்வுகள் வேண்டாம்

எங்களுக்கு வேண்டியது தமிழ் இறையாண்மையின் மீட்பு.

எமது வரலாற்றை எமது பிள்ளைகளுக்குக் கற்பிப்போம். சட்டப் பூர்வமான மற்றும் நியாயமான வழிகளில் நீதி தேடுவோம். எமது நிலத்தை அதன் உண்மையான உரிமையாளர்களான தமிழர்களிடம் மீண்டும் கொண்டு வருவோம்.

மட்டக்களப்பில் ஆழிப்பேரலையின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல்!

26.12.2025

ஆழிப்பேரலை அழிவின் 21 ஆண்டு நிறைவடைந்துள்ள இன்றைய நாளில் மறைந்த உறவுகளை நினைவில் ஏந்தி இறை பிராத்தனை செய்யும் நிகழ்வுகள் மட்டக்களப்பு நாவலடி கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றது.

மேலும் புதிய கோட்டமுனை விளையாட்டுக் கழகம் இரத்ததான நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து இருந்தது

அந் நிகழ்வுகளில் உயிர் நீத்த உறவுகளுக்கு மலர்தூவி சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டது.

செல்லுங்கள் – வீழ்த்துங்கள் –வெல்லுங்கள்
இதுதான் போரின் உண்மைத் தார்ப்பரியம்.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

யாழ். வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலைப் பேரழிவின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல்

26.12.2025

ஆழிப்பேரலைப் பேரழிவின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், இன்று 26.12.2025 வெள்ளிக்கிழமை யாழ். வடமராட்சி கிழக்கு. உடுத்துறை சுனாமி நினைவாலயம் - அமைந்துள்ள இடத்தில் உணர்வோடு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் அகவணக்கம் இடம்பெற்று, ஆழிப்பேரலையில் காவுகொள்ளப்பட்ட தமது உறவுகளுக்குக் கண்ணீர் மல்க வணக்கம் செலுத்தியதைக் காணமுடிந்தது..

முல்லைத்தீவில் ஆழிப்பேரலைப் பேரழிவின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல்

26.12.2025

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் இன்று இடம் பெற்றது.

அந்த வகையில் உயிரிழந்தவர்களின் உறவுகள் கதறி அழுது கண்ணீர் மல்க, தமது உயிரிழந்த உறவுகளுக்கு மலர் தூவி, தீபமேற்றி, உணவுப்பொருட்களைப் படையலிட்டு உணர்வு பூர்வமாக வணக்கம் செலுத்தினர்.

அதேவேளை உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி மத வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன.

வவுனியா பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கும் தொல்பொருள் திணைக்களம்

27.12.2025

வவுனியா, சமணங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கும் பணியில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக குறித்த பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமான பணிகளை மேற்கொள்ளவிடாது தடுத்து வந்த தொல்பொருள் திணைக்களம் சில ஆண்டுகளுக்கு முன் தொல்பொருள் பிரதேசம் என பெயர் பலகை இட்டிருந்ததோடு, அங்குள்ள பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கி இருந்தது. மேலும், அங்கிருந்த பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமான பணிகளையும் இடை நிறுத்தி இருந்ததோடு, எவ்வித புனரமைப்பு பணிகளையும் மேற்கொள்ளவிடாது தடை விதித்திருந்தது.

எனினும் ஊர் மக்கள் கடும் பிரயத்தனத்தின் மூலம் கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சின் அனுமதியை பெற்று பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமான பணிகளை ஆரம்பித்தனர்.

இந்நிலையை சாதகமாக பயன்படுத்திய தொல்பொருள் திணைக்களம் அங்கிருந்த எண்கோண மண்டபத்தினை தாம் புனரமைத்தால் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள் என்பதனை அறிந்து எண்கோண மண்டபத்தில் விகாரை அமைக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, குறித்த எண்கோண மண்டபம் இருந்த பகுதியில் கடந்த காலத்தில் எண்கோண வடிவிலான சிவலிங்கம் ஒன்று மீட்கப்பட்டு, எல்லப்பமருதன்குளம் குளக்கட்டு பகுதியில் அது கோவில் கொண்டு எழுந்தருளி இருப்பதாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

குறித்த மண்டபம் அமைந்திருந்த பகுதியிலேயே தற்போது விகாரை அமைக்கும் பணியை தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

குறித்த எண்கோண வடிவிலான சிவலிங்கம் கிளிநொச்சி, குரந்தூர்மலை மற்றும் இந்தியாவின் கும்பகோணம் பகுதிகளிலும் ஆய்வுகளின் போது காணப்பட்டதாக தொல்பொருளாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை ஒத்த சிவலிங்கமே சமணங்குளம் பகுதியில் காணப்பட்டதாகவும், அந்த எண்கோண வடிவிலான சிவலிங்கமே குறித்த எண் கோண மண்டபத்தில் வைத்து புராதன காலங்களில் வழிபட்டு இருக்கலாம் என்கின்ற வரலாறுகள் ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையிலேயே குறித்த இடத்தில் விகாரை அமைக்கும் பணியை தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, குறித்த பகுதியில் முழுமையாக தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்கு முறையாலும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

ஒட்டுக்குழு தலைவர் டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட்டு சிறையிலடைப்பு

27.12.2025

சர்வதேச போதை கடத்தல் மன்னன் மாகந்துர மதுஷ்வுடன் ஆயுத பரிமாற்றங்களில் ஈடுபட்ட குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டு இருக்கின்றார். ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியாளர்களால் கொமூல்லப்பட்ட ஜேவிபியின் மூத்த உறுப்பினர் திருமதி மாலினி சமரசிங்கே என்பவரின் மகனான சமரசிங்க ஆராச்சிகே மதுஷ் லக்சித (மாகந்துர மதுஷ்) இலங்கையில் சர்வ வல்லமை பொருந்திய நபராகவிருந்த பாதாள உலக பேர் வழியாவர்.

திரு மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாகவிருந்த போது 2019 ஆம் ஆண்டு பெப்ரவர் மாதம் 4 ஆம் திகதி டுபாயில் நடைபெற்ற அவரின் மகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது கைது செயயப்பட்டு நாடு கடத்தப்பட்டிருந்தார். பின்னர் கோத்தபாயா ராஜபக்சே ஜனாதிபதியாகவிருந்த போது Encounter முறையில் சிறையிலிருந்து அழைத்து செல்லப்பட்டு பொலிஸ் அதிகாரிகளால் சுட்டு கொல்லப்பட்டிருந்தார்.

இலங்கையின் தென்னிலங்கையின் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, மஹிந்த அமரவீர உட்பட 80 ற்கு மேற்பட்ட அரசியல் வாதிகள், வர்த்தகர்கள் உட்பட பலரோடு நெருங்கிய தொடர்புகளை பேணிய மாகந்துர மதுஷ் திரு மைத்திரிபால சிறிசேனா அவர்களை கொமூல்ல முயற்சித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

இந்த கொலை மூலம் மாகந்துர மதுஷ் வசமிருந்த இலங்கையின் பிரபல அரசியல் வாதிகளின் போதை வர்த்தக வலையமைப்பு தொடர்பான பல்வேறு தகவல்கள் மறைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. அந்தவகையில் இராணுவ ஒட்டுக்குழுவாக இயங்கிய டக்ளஸ் தேவானந்தா பாதாள உலகத்தை சேர்ந்த மாகந்துர மதுஷ்வுடன் இணைந்து இயங்கியமை புதிய விடயமல்ல.

தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் முஸ்லிம் ஆயுத ஒட்டுக்குழுக்களையும் பாதாள உலக குழுக்களையும் இணைத்தே இயக்கி வந்தார்கள். குறிப்பாக இறுதி யுத்தத்தின் போது கைப்பற்றப்பட்ட பல்வேறு ஆயுதங்கள் பாதாள உலக குழுக்களுக்கு கைமாற்றப்பட்டு இருக்கின்றது. அதே போல கருணா பிளவின் போது இராணுவம் வசம் வந்த ஆயுதங்களும் பாதாள உலக குழுக்களுக்கு கைமாற்றப்பட்டு இருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் வாழைசேனையில் கருணா பிள்ளையான் குழுக்கள் மூலம் முஸ்லிம் மற்றும் பாதாள உலக குழுக்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டு இருந்தது.

கடந்த காலங்களில் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களில் கூட பாதாள உலக குழுக்களுக்கு ஆயுதங்கள் கடத்தப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக முஸ்லிம் அமைச்சராகவிருந்த தற்போதைய மாநகர சபை முதல்வர் ஒருவரின் வாகனத்தில் கூட பாதாள உலக குழுக்களுக்கு ஆயுதங்கள் கடத்தப்பட்டு இருக்கின்றது. இந்த அட்டூழியங்களை அரச இராணுவ புலனாய்வு கட்டமைப்புகளே ஒருங்கிணைத்தன அதாவது ஆட்சியாளர்களின் ஆசீர்வாதத்தோடு அரச இராணுவ புலனாய்வு கட்டமைப்புகளே இராணுவம் செய்ய முடியாத வேலைகளை செய்வதற்கு இவர்களை பயன்படுத்தினார்கள்.

அதன் அடிப்படையில் தான் மாமனிதர் ரவிராஜ் படுகொலை முதல் மாமனிதர் குமார் பொன்னம்பலம் வரையான பல்வேறு கொலைகளில் இராணுவம், ஒட்டுக்குழுக்கள் மட்டுமின்றி பாதாள உலக குழுக்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஈடுபடுத்தப்பட்டன.

ஆனால் தற்போது தமிழ் முஸ்லிம் ஆயுத ஒட்டுக்குழுக்களின் தேவைகள் பொதுவில் முடிவடைந்த நிலையில் இராணுவத்தால் இயக்கப்பட்ட தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளான டக்ளஸ் தேவானந்தா முதல் பிள்ளையான் வரையான இராணுவ ஒட்டு குழு கூலிகளுக்கு கணக்கு தீர்க்கப்படுகின்றது. ஆனால் இவர்களை இயக்கிய தரப்புகள் தொடர்ந்தும் மிக தெளிவாக பாதுகாப்பக வைக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் புதிய நபர்களை அடையாளம் கண்டு அவர்களை பயன்படுத்தி சமூக நிர்வாக மட்ட குழப்பங்களில் ஏற்படுத்த முயற்சித்து வருகின்றார்கள். - இனமொன்றின் குரல்

முல்லைத்தீவில் வைத்திய சிகிச்சையின் போது உயிரிழந்த சிறுமி வைத்தியசாலையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

29.12.2025

முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியை சேர்ந்த குகநேசன் டினோஜா என்னும் சிறுமி அண்மையில் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் உயிரிழந்த சிறுமியின் மரணத்திற்கு நீதிகோரி இன்றைய நாள் திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை நுழைவாயிலை முற்றுகையிட்டு பெருந்திரளான மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வைத்தியசாலை பணிப்பாளரை குறித்த இடத்திற்கு வரவழைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சிறுமியின் மரணம் தொடர்பில் கேள்வி எழுப்பியதுடன், குறித்த மரணத்திற்கு நீதி கிடைக்கவேண்டுமெனவும் வலியுறுத்தியிருந்தனர்.

தொடர்ந்து குறித்த சிறுமியின் சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதியைப் பெற்றுத்தருமாறும் இதன்போது மக்களால் மகஜர்களும் கைளிக்கப்பட்டன.

அதேநேரம் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரிடமும் மகஜர்களும் கையளிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்து புகழ் பூத்த ஓவியர் ரமணி காலமானர்

29.12.2025

ஈழத்து ஓவியக் கலையின் முகவரி, தன்னிகரற்ற சிற்பி, மாபெரும் ஆசான் வைத்தீஸ்வரன் சிவசுப்பிரமணியம் (ஓவியர் ரமணி) காலமானார்.

அவரது கைவண்ணத்தில் உருவான சிலைகள் வெறும் கற்சிலைகள் அல்ல அவை எமது மண்ணின் வீரத்தையும் வரலாற்றையும் பேசும் சாட்சிகள்.

நெல்லியடி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட கரும்புலி கப்டன் மில்லர் சிலை மற்றும் தீருவிலில் அமைக்கப்பட்ட பன்னிரு போராளிகளின் சிலைகளை அவர் வடித்திருந்தார்.

யாழ் இந்துக்கல்லூரியில் உள்ள ஆறுமுக நாவலர் பெருமான், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலில் உள்ள தங்கம்மா அப்பாக்குட்டி, சேர் பொன் இராமநாதன் மற்றும் எத்தனையோ மாமனிதர்களின் உருவங்களைச் சிலைகளாகச் செதுக்கி அழியாத புகழை ஈழ மண்ணில் நிலைநாட்டியவர்.

ஈழத்து இலக்கிய உலகில் சிறந்த அட்டைப்படங்களை வரைவதில் அவர் ஒரு சகாப்தம். அவரது விளக்கப்படங்களும் அட்டைப்படங்களும் பல நூல்களுக்கு உயிரூட்டின.

முன்னாள் அழகியல் உதவி கல்விப் பணிப்பாளராகவும் இராமநாதன் நுண்கலைப் பீட வருகை விரிவுரையாளராகவும் அவர் ஆற்றிய பணிகள் ஈழத்துக் கலைப்பரப்பில் என்றும் நிலைத்து நிற்கும்.

சிறுமி டினோஜாவின் மரணத்தில் மருத்துவ தவறு இருப்பின் உரியவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

29.12.2025

சிறுமி டினோஜாவின் சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதியான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமெனத் தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மருத்துவர் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர் சிலரின் அசமந்த போக்கு மற்றும் முறையற்ற மருந்து வழங்கல் என்பன சிறுமியின் மரணத்திற்கு காரணமாக இருப்பின் உரியவர்கள் முறைப்படி தண்டிக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

சிறுமி டினோஜாவின் மரணத்திற்கு நீதி கோரி 29.12.2025 இன்று முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு முன்பாக இடம்பெற்ற கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்

ரவிகரன் மேற்ககண்டாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனைகளிலேயே முல்லைத்தீவும் மன்னாரும் தான் மிகவும் பின்தங்கி இருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது மாவட்ட பொது மருத்துவமனையிலாவது சிறந்த மருத்துவ வசதி காணப்பட வேண்டும். ஆனால் முல்லைத்தீவும் மன்னாரும் இன்றுவரை ஏனைய மாவட்ட மருத்துவமனைகளுக்கு நிகராக இல்லை. வளங்களில் இன்னமும் சமத்துவமற்ற நிலையில் உள்ளன.

எங்களின் பிள்ளை டினோஜாவின் மரணம் ஏற்றுக்கொள்ள இயலாதது. மருத்துவமனைக்கு உள்ளும் புறமும் பலராலும் மருத்துவமனை மீதான முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. அதிக அளவாக மருந்து பிள்ளைக்கு வழங்கப்பட்டமையே மரணத்துக்கு காரணம் என பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பிள்ளையின் மரணத்துக்கான நீதியான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். மருத்துவர் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர் சிலரின் அசமந்த போக்கு, முறையற்ற மருந்து வழங்கல் காரணமாக இருந்தால் அவர்கள் முறைப்படி தண்டிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு பிரச்சினை நிகழும் போது அது தொடர்பில் பணிப்பாளரோடு கதைக்க முனைந்தால் அவர் கொழும்பில் இருக்கிறார் என்ற தகவல் வருகிறது. மருத்துவர்கள் தொலைபேசி வழியில் மருந்துகளை பரிந்துரைக்கிறார்கள் என்ற முறைப்பாடு பல சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெறுகின்றது. இறுக்கமற்ற நிருவாக நடைமுறை மேற்படி மருத்துவமனையில் நிலவுவதாக உள்ளிருந்தும் சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. முன்னைய காலங்களில் இருந்த பணிப்பாளர்கள் மிகவும் பற்றுறுதியோடு பணிபுரிந்தனர். ஒரு மரணமேனும் நிகழ்ந்து விடக்கூடாது என இரவுபகலாக உழைத்தனர். இப்போதுள்ள நிருவாகம் அந்த இறுக்கமான நடைமுறைகளில் இருந்து விலகிவிடுகிறதோ என எண்ணத்தோன்றுகிறது.

இங்கு கூடியிருக்கிற அவ்வளவு மக்களும் ஓரிருவர் தூண்டுதலால் வந்து சேர்ந்தவர்கள் அல்ல. ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் அசமந்தப்போக்கோடு மருத்துவ சேவை வழங்கப்படுவதில் அனுபவப்பட்டு இந்தப்பிள்ளையின் மரணத்திலும் அத்தகைய பிழை ஏற்பட்டிருக்கும் என ஆழமாக நம்புகிறார்கள்.

அரசு இதில் உடனடியாகத் தலையிட்டு நீதியான விசாரணை நடைபெற வழிவிடவேண்டும். தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். உணவு ஒவ்வாமையால் ஒரு மரணம் சம்பவிக்கிறது என்பதை எங்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வீட்டில் இருந்தும், விடுதியில் இருந்தும் தொலைபேசி வழியில் மருத்துவம் பார்ப்பது இங்கு அதிகரித்திருப்பதாக மக்கள் முறையிடுகின்றனர்.

தமது நோய் நிலைமைகளைக் குணப்படுத்தவேண்டுமென்ற நோக்குடனேயே வைத்தியசாலைக்கு மக்கள் வருகைதருகின்றார்களேதவிர, உயிரிழப்பதற்கு மக்கள் இங்கு வருகைதருவதில்லை.

ஆனால் இந்த மருத்துவமனையில் தொடர்சியாக இடம்பெற்று வரும் இவ்வாறான சந்தேகத்திற்கிடமான மரணங்களால் மாஞ்சோலை வைத்தியசாலையை மரணச்சோலை என மக்கள் கூறுகின்றனர்.

இந்த சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதிகிடைக்கவேண்டுமென உரியதரப்பினரை வலியுறுத்துவேன். இந்த மரணத்திற்கு நீதிகோரி பாராளுமன்றிலும் எனது குரல் ஒலிக்கும்.

இந்த சந்தேகத்திற்கிடமான மரணத்துடன் தொடர்புடைய மருத்துவரைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளும் இடம்பெற்று வருவதாகவும் பலரும் எம்மிடம் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியசாலையில் இருப்பதில்லை என்ற முறைப்பாடுகளும் கிடைக்கின்றன. தமது வீடுகளில் இருந்துகொண்டு தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்ற வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் இங்கு இருக்கத் தேவையில்லை.

அசமந்தப்போக்கான வைத்தியசாலைச் செயற்பாடுகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும். இந்த சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கும் நீதி கிடைக்கவேண்டும் – என்றார்.

முல்லை. மாஞ்சோலை வைத்தியசாலையில் தொடரும் அசமந்தப்போக்கால் இளைஞனின் கை செயழிப்பு

29.12.2025

முல்லை. மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்ற இளைஞன் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவரது சகோதரி கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

உணவு ஒவ்வாமை காரணமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டம் ஒன்று இன்றையதினம் (29.12.2025) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இளைஞனின் சகோதரி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

27 வயதுடைய எனது சகோதரர் வீதி விபத்தில் சிக்கியிருந்த நிலையில், மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.மூன்று மாதமாக கை முறிந்ததாக கூறி பீ.ஓ.பி போட்டிருந்தார்கள். ஆனால் கை முறியவில்லை கையிலிருந்து வரும் நரம்பு அறுந்திருந்தது. ஆனால் அதனை கண்டுபிடிக்க முடியாமல் முறிவென கூறி பீ.ஓ.பி போட்டிருந்தார்கள். அதனால் சகோதரரின் கை பாரிசவாதமாக வந்துவிட்டது.

வவுனியாவில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று எலும்பு முறிவு வைத்தியரிடம் காட்டிய போது வைத்தியர் பார்த்து விட்டு கூறினார். இது எலும்பு பிரச்சினை இல்லை. நரம்பு பிரச்சினை என. அப்போது இங்குள்ள வைத்தியருக்கு அது தெரியாது. தற்போது தம்பி வலது கையினால் சாப்பிட முடியாமல் ஒரு வாழ்க்கை இல்லாமல் இருக்கின்றார்.

திரும்ப நரம்பு வைத்தியரிடம் கொண்டு சென்று காட்டிய போது நாங்கள் கொண்டுவர தாமதமாகிவிட்டது எனவும் கழுத்திலிருந்து முழங்கை வரை வரும் நரம்பு அழுகிவிட்டது எனவும் கூறினார். அதனால் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற

போது வைத்தியசாலை நிர்வாகம் கூப்பிட்டு கதைத்தது. ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம் என்று.

இந்த பிள்ளைக்கு நீதி கிடைக்க வேண்டும் என கேட்பது போல் எனது தம்பிக்கும் நீதி கேட்டே வந்திருக்கின்றேன். எனக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். இங்கே மாஞ்சோலை வைத்தியசாலைக்கு பிள்ளைகளை கொண்டுவர பயமாக இருக்கிறது என தெரிவித்தார்.

www.sangathamil.ca

தொல்லியல் சட்டம், கொள்கையை மாற்றாது கூட்டங்களில் அரச தரப்பு உபதேசம் செய்வதால் பயனில்லை!

யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

30.12.2025

தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு தொல்லியல் சட்டத்தில் மாற்றத்தினைக் கொண்டு வாருங்கள். அதற்கு உங்கள் அரசாங்கத்திற்கு முழு பலமும் பாராளுமன்றத்தில் காணப்படுகின்றது. அதனை நீங்கள் செய்யாது தொல்லியல் திணைக்கள சாதாரண உத்தி யோகத்தர்களை மாவட்ட அபிவிருத்திக் குழுவில் அழைத்து எச்சரிப்பது தீர்வல்ல. என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கோட்டை பகுதி யில் தொல்லியல் திணைக்களம் கல் தூண்களை நடுவது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் சந்திரசேகரன் உள்ளிட்ட ஆளும் கட்சி எம்.பிக்கள் தொல்லியல் திணைக்களத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்ட உத்தியோகத்தரை கடுமையாக சாடினர்.

இந் நிலையில் கருத்துத் தெரிவித்த பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், தொல்லியல் திணைக்களம் எவருக்கும்

கட்டுப்படாததாக இன முரண்பாடுகளையும் பௌத்த சிங்கள பேரினவாதத்தினை விஸ்தரிக்கும் திணைக்களமாகவே உள்ளது. வரலாற்று ரீதியில் தொல்லியல் திணைக்களத்திற்கு நாட்டில் அளிக்கப்பட்டுள்ள மிகவும் மிலேச்சத்தனமான சட்டங்களின் வாயிலாக திட்டமிட்ட பௌத்த பேரினவாத அணுகு முறை முன்னெடுக்கப்படுகின்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கக் கூடிய அரசாங்கத் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் போல சாதாரணமாக தொல்லியல் உத்தியோகத்தர்களைக் கண்டிக்கின்றீர்கள். இதனை நீங்கள் தமிழ் மக்களிடத்தில் அரசியலுக்காகவோ அல்லது நீங்கள் ஆளும் கட்சி என்பதை மறந்தோ செய்யலாம். இதனால் அடக்கு முறையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு பயன் விளையப் போவதில்லை.

சட்டங்களின் வாயிலாகவும் சுற்றுநிருபங்களின் வாயிலாகவும் அர கொள்கைகளின் வாயிலாகவும் தொல்லியல் திணைக் களத்தின் உத்தியோகத்தர்கள் ஆக்கிரமிப்புக்களைச் செய் வதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்பதே உண்மை.

இதனைத் தடுப்பதற்கு பாராளுமன்றில் மிகப் பெரும்பான்மை உள்ள அரசாங்கம் பொறுப்புடன் இன முரண்பாடுகளை விளை விக்கும் சட்டங்களையும் சுற்றுநிருபங்களையும் அரச கொள் கைகளையும் மாற்றவேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

தையிட்டி விகாரைக்குள் மீண்டுமொரு சட்டவிரோத கட்டுமானம்: 3ஆம் திகதி போராட வருமாறு காணி இழந்தவர்ளகள் கோரிக்கை!

30.12.2025

தையிட்டி விகாரைக்கு முன்பாக போராடும் எம்மிடம் விகாரை காட்டும் போது எங்கே போனீர்கள்? என கேட்பவர்களால், விகாரை கட்டி முடிந்த பின் மேலும் இருந்த காணிகளுக்குள் புதிய கட்டுமானங்களை எம் போராட்டங்களை மீறியும் கட்டும் போது அதனை தடுக்க முடியவில்லை என்பதனை உணர வேண்டும் என விகாரைக்காக காணி இழந்த காணி உரிமை யாளர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்

மேலும் தெரிவிக்கையில்,

எமது காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி, சட்டவிரோத மான முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரைக்கு எதிராக நாங்கள் மூன்று வருடங்களுக்கு மேலாக போராடி வருகின்றன போதிலும், எமக்கான தீர்வுகள் கிடைக்கப்பெறாத நிலையில் மீண்டும் அந்த விகாரைக்குள் புதிய கட்டுமானம் செய்யப்பட்டு, புதிய புத்தர் சிலை ஒன்றினை எதிர்வரும் 03ஆம் திகதி நிறுவ உள்ளனர்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாம் விகாரை முன்பாக போராட்டத் தினை முன்னெடுக்கவுள்ளோம். அதற்கு ஆதரவு தெரிவித்து, அனைத்து தரப்பினரும் எம்முடன் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என கோருகிறோம்.

எங்கள் 18 பேருடைய தனியார் காணிகளை அடாத்தாக அப கரித்தே சட்டவிரோதமான முறையில் விகாரை கட்டப்பட் டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயமாக இந்த பகுதிகள் இருந்த போதே, விகாரை கட்டப்பட்டது. இந்த பகுதிகளில் உள்ள ஏனைய காணிகள் விடுவிக்கப்பட்டதை அடுத்து கடந்த 3 வருடங்களுக்கு மேலாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் நாம் போராட் டங்களில் ஈடுபட்டு வருகிறோம்.

எமது போராட்டத்திற்கு மதிப்பளிக்காது விகாரையை சுற் றியுள்ள காணிகளிலும் தொடர்ந்து சட்டவிரோத கட்டு மானங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

இன்று தையிட்டி மக்களின் காணிகளில் எப்படி விகாரை அமைக்கப்பட்டதோ அவ்வாறே நாளை உங்களுடைய காணி களிலும் விகாரை அமைக்கப்படும் கேட்டால் இது பௌத்த சிங்கள நாடு என கூறுவார்கள்.

தற்போது வவுனியாவில் புதிதாக புத்தர் சிலை முளைக்கிறது அதேபோல் உங்கள் வீடுகளின் பின்புறமும் புத்த விகா ரைகளை அமைப்பார்கள் நாங்கள் கேள்வி கேட்க முடியாத வர்களாக தொடர்ந்து ஆளாக்கப்படுவோம்.

நாங்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்களோ சிங்கள மக்களுக்கு எதிரானவர்களோ அல்ல திட்டமிட்ட ஆக்கிரமிப்பு பௌத்தத் திற்கு எதிரானவர்கள்.

அண்மையில் நயினாதீவு நாக விகாரதிபதியை சந்தித்தபோது அவரே கூறுகிறார் தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோதமாக தனியார் காணிகளில் கட்டப்பட்டுள்ளதோடு புத்த பெருமான் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து தனக்கு விகாரை கட்டுமாறு இந்த இடத்திலும் வலியுறுத்தியது கிடையாது என்றார்.

இந்த விகாரைப் பிரச்சனை தொடர்பில் தன்னை எவரும் அணுகவில்லை அணுகியிருந்தால் தையிட்டியில் விகாரைக் குரிய காணி திஸ்ஸ விகாரை சங்கத்தினருக்கு சொந்தமில்லை என்பதை உறுதி ஆதாரத்துடன் கூறியிருப்பேன் என்றார்.

பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளை நிறுத்துங்கள் வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம்

30.12.2025

வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டியில் ஜனநாயக ரீதியாக போராடியவர்கள் கைதுசெய் யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும், வவுனியா உட்பட வட கிழக்கில் புதிதாக அமைக்கப்படும் விகாரைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இவ் ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

சட்டவிரோதமாக தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராடியவர்கள் மிலேச்சத்தனமாக கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒரு மதகுரு என்று கூட பாராமல் மோசமான முறையில் வேலன் சுவாமி நடாத்தப் பட்டிருந்தார். இது தமிழ் மக்கள் மீதான ஒரு அடக்குமுறை செயற் பாடாகவே உள்ளது.

வடக்கில் குருந்தூர்மலை, வெடுக் குநாறிமலை, தையிட்டி, தற் போது வவுனியா கல்லுமலை என்பன ஆக்கிரமிப்பு செயற் பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

பௌத்த துறவிகளே இப்படியான கலவரங்கள் ஏற்படுவதற்கு தூண் டுகோலாக உள்ளனர். எனவே மறுக்கப்படும் எமது உரி மைகளை அடைவதற்காக நாம் தொடர்ச்சியாக போராட் டங்களை

செய்வோம். என்றனர்.

கனேடிய குடியுரிமை தொடர்பில் கனடா நினைவேற்றியுள்ள புதிய சட்டம்

15.12.2025

வெளிநாடுகளில் பிறந்த கனேடியர்கள், தங்கள் பிள்ளைகளும் வெளிநாட்டில் பிறக்கும் பட்சத்தில், அவர்களுடைய கனேடிய குடியுரிமை அவர்களுடைய பிள்ளைகளைச் சென்றடையாது என்னும் நிலை மாறியுள்ளது.

வெளிநாடுகளில் பிறந்த கனேடியர்கள், தங்கள் பிள்ளைகளும் வெளிநாட்டில் பிறக்கும் பட்சத்தில், அவர்களுடைய கனேடிய குடியுரிமை அவர்களுடைய பிள்ளைகளைச் சென்றடையாது என்னும் நிலை கனடாவில் இருந்தது.

இந்த விதியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், 'Lost Canadians' என்றே அழைக்கப்படுகிறார்கள். 2009இல் அறிமுகமான இந்த விடயம், வெளிநாடுகளில் பிறந்த கனேடியர்கள், தங்கள் பிள்ளைகளும் வெளிநாட்டில் பிறக்கும் பட்சத்தில் அவர்கள் கனேடிய குடிமக்களாக அங்கீகரிக்கப்படுவதற்கு தடையாக இருந்தது.

2023ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், ஒன்ராரியோ உச்சநீதி மன்றம், இந்த சட்டம் அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று கூறி அதை முடிவுக்குக் கொண்டுவந்தது.

கனடா அரசும், இந்த சட்டத்தின் விளைவுகள் ஏற்றுக்கொள்ளப் படத்தக்க இயலாதவைதான் என ஒப்புக்கொண்டு ஒன்ராரியோ உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை.

இந்நிலையில், Bill C-3 என அழைக்கப்படும், 2025ஆம் ஆண்டுக்கான கனேடிய குடியுரிமைச் சட்ட மசோதாவுக்கு, மன்னர் சார்லஸ், சமீபத்தில் ஒப்புதலளித்தார்.

அதைத் தொடர்ந்து, நேற்று, அதாவது, 2025ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 15ஆம் திகதி, 'குடியுரிமைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்' என்னும் அந்த மசோதா, சட்டமாக மாறியுள்ளது.

இந்த சட்டம் நிறைவேறியுள்ளதைத் தொடர்ந்து, வெளிநாட்டில் பிறந்த கனேடிய குடிமக்களுக்கு வெளிநாட்டில் பிறந்த அல்லது

அவர்கள் வெளிநாட்டில் இருக்கும்போது தத்தெடுத்த பிள்ளைகளுக்கும் கனேடிய குடியுரிமை கிடைக்கும் என்பதால், ஆயிரக்கணக்கான மக்கள் தற்போது கனேடிய குடியுரிமை பெறத் தகுதி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் கார்பன் உழிழ்வு அளவு அதிகரிப்பு!

19.12.2025

மத்திய அரசின் 2030 ஆம் ஆண்டுக்கான உமிழ்வு மதிப்பீடு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட அதிகரித்துள்ளதாகக் கூறுகிறது.

கனடாவின் கார்பன் வாயு உமிழ்வு இலக்குகள் குறித்த முன்னேற்ற அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு அறிக்கையின்படி, அனைத்து திட்டமிடப்பட்ட மற்றும் அறிவிக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டால், 2030இல் கனடாவின் உமிழ்வு சுமார் 513 மில்லியன் டன்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 2030இல் கார்பன் விலையை டன்னுக்கு 170 டாலராக உயர்த்தும் திட்டமும் அடங்கும். 2023ஆம் ஆண்டு மதிப்பீட்டில், அனைத்து முன்மொழியப்பட்ட விதிமுறைகளுடன் 2030 இல் உமிழ்வு 467 மில்லியன் டன்களாக இருக்கும் எனக் கூறப்பட்டிருந்தது.

சமீபத்திய மதிப்பீடு, எண்ணெய் மற்றும் எரிவாயு உமிழ்வு உச்சவரம்பை (எமிஷன்ஸ் கேப்) விலக்கியுள்ளது.

இது 2030 இல் உமிழ்வை மேலும் 3 மில்லியன் டன்கள் குறைத்திருக்கும், ஆனால் ஒட்டாவா மற்றும் ஆல்பர்ட்டா இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இது செயல்படுத்தப்படாது.

பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தின் கீழ் கனடாவின் இலக்கு, 2005ஆம் ஆண்டு அளவைவிட 40 முதல் 45 சதவீதம் குறைத்து, 2030 இல் உமிழ்வை 455 மில்லியன் டன்களுக்கு

மேல் அதிகரிக்காமல் வைத்திருப்பதாகும். இந்த அறிக்கை கனடாவின் காலநிலை இலக்குகளை அடைவதில் பின்னடைவை சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

கனடா எம்மண்டன் நகரில் சிசிச்சைக்காக 8 மணிநேரம் காத்திருந்தவர் மரணம்; குடும்பத்தினர் அதிர்ச்சியில்

25.12.2025

கனடாவின் எட்மண்டன் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில், கடுமையான நெஞ்சு வலியுடன் சிகிச்சைக்காக சுமார் 8 மணிநேரத்துக்கும் மேலாக காத்திருந்த இந்தியர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிகிச்சை கிடைக்காத நிலையில் 44 வயதுடைய இந்திய வம்சாவளி நபர், மருத்துவமனையிலேயே உயிரிழந்துள்ளார்.

பிரசாந்த் ஸ்ரீகுமார் என்ற குறித்த நபர் கடந்த 22 ஆம் திகதி பணியில் இருந்தபோது, அவருக்கு கடுமையான நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அவர் எட்மண்டனில் உள்ள "கிரே நன்ஸ்" மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அவருக்கு ஆரம்பக்கட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டு, அவசர சிகிச்சை பிரிவின் காத்திருப்பு அறையில் அமர வைக்கப்பட்டார்.

அவர் தொடர்ந்தும் கடுமையான வலி இருப்பதாக கூறியபோதிலும் அவருக்கு இ.சி.ஜி (ECG) பரிசோதனை செய்த ஊழியர்கள், அதில் ஆபத்தான அறிகுறிகள் ஏதுமில்லை என்று கூறி மீண்டும் காத்திருக்கச் கூறியதாக அவரது குடும்பத்தார் கூறுகின்றனர்.

வலியால் துடித்த பிரசாந்திற்கு "டைலனோல்" (Tylenol) மாத்திரைகள் மட்டுமே வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவரது இரத்த அழுத்தம் மிகக் கடுமையாக உயர்ந்தும், அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை எனவும் குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

சுமார் 8 மணிநேரத்திற்கும் மேலான நீண்ட காத்திருப்புக்குப் பிறகு, பிரசாந்த் சிகிச்சை அறைக்குள் அழைக்கப்பட்டார்.

அங்கு சென்ற 10 வினாடிகளிலேயே அவர் தனது நெஞ்சைப் பிடித்தபடி சரிந்து விழுந்துள்ளார். அவருக்கு முதலுதவி அளித்தும் பலனின்றி அவர் உயிரிழந்தார்.

அவருக்கு ஏற்பட்ட "மாரடைப்பு" (Cardiac Arrest) மரணத்திற்கு

காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. உயிரிழந்த பிரசாந்த் ஸ்ரீகுமாருக்கு 3, 10 மற்றும் 14 வயதுகளில் மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள மருத்துவமனை நிர்வாகம், நோயாளியின் தனிப்பட்ட விபரங்களை வெளியிட முடியாது எனத் தெரிவித்துள்ள போதிலும், உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.(?)

www.sangathamil.ca

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

றோயல் கனடியக் கடற்படையை பயங்கரவாத அமைப்பாக ஈரான் அறிவித்தது

30.12.2025

ஈரான் றோயல் கனடியக் கடற்படையை பயங்கரவாத அமைப் பாக அறிவித்துள்ளது. இது கனேடிய அரசாங்கம் ஈரானின் இஸ்லா மிய புரட்சிகர காவல்படையை (IRGC) பயங்கரவாதக் குழுவாக அறிவிக்க எடுத்த முடிவின் பிரதிபலிப்பாகும்.

ஈரானிய இராணுவத்தின் அதிகாரப்பூர்வ பிரிவான IRGC-ஐ ஜூன் 19, 2024 அன்று கனடா தனது பயங்கரவாத பட்டியலில் சேர்த்தது.

இது சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை மீறுவ தாக ஈரான் கூறுகிறது.

பதிலடி கொடுக்கும் விதமாக, இது கனடாவின் நடவடிக்கைகளுக்கு எதிரான பரஸ்பரக் கொள்கையின் அடிப்படையில் ஒரு பழிவாங்கும் நடவடிக்கை என்று ஈரானிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த முடிவை எடுக்க ஈரான் 2019 இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் 7வது பிரிவைப் பயன்படுத்தியுள்ளது.

அந்தச் சட்டத்தின்படி, IRGC-ஐ அமெரிக்கா கருப்புப் பட்டியலில் சேர்த்ததை ஆதரிக்கும் அல்லது பின்பற்றும் எந்தவொரு நாட்டிற்கும் எதிராக இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க ஈரானுக்கு அதிகாரம் உள்ளது.

IRGC அதன் நாட்டின் அதிகாரப்பூர்வ ஆயுதப் படைகளின் ஒரு பகுதியாக இருப்பதால், அதை பயங்கரவாத அமைப்பு என்று அழைப்பது சட்டவிரோதமானது என்று ஈரானிய அரசாங்கம் வலியுறுத்துகிறது.

01.01. 2026 ஆம் புதிய ஆண்டில் கனடா முழுவதும் கடும் குளிர் எச்சரிக்கை

31.12.2025

புத்தாண்டை வரவேற்கும் நாளில், கனடா முழுவதும் கடும் குளிர் அலை தாக்கம் ஏற்படவுள்ளதாக கனடிய சுற்றாடல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் கடும் பனிப்பொழிவு, பனிப் புயல், உறைபனி மற்றும் அபாயகரமான பயண நிலை நிலவுகிறது.

கரையோரம் உள்ளிட்ட பல பகுதிகளில் நடைபெறும் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு கடுமையான குளிர் காலநிலை சவாலாக மாற்றியுள்ளது. மத்திய கனடாவின் பெரும்பாலான பகுதிகள் இன்னும் குளிர்கால வானிலை எச்சரிக்கைகளின் கீழ் உள்ளன.

ரொரான்ரோவில், புதன்கிழமை (புத்தாண்டு முன்னிரவு) சிறிய பனித்தூறல்கள் மற்றும் பனிப் புயல் அபாயம் காணப்படும். மணிக்கு 40 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும்.

வெப்பநிலை -2°C ஆக இருந்தாலும், காலை நேரத்தில் -13°C போலவும், பிற்பகலில் -8°C போலவும் உணரப்படும். கடுமையான குளிர் காரணமாக, நகரில் ஐந்து வெப்ப மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

Simcoe County, Grey-Bruce, Huron-Perth உள்ளிட்ட மத்திய ஒன்ராரியோ பகுதிகளில் 10 முதல் 30 செ.மீ வரை பனிப் பொழிவு ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஓர்கென்வெல், கிரான்ட் வெலி போன்ற ரொரான்ரோ வடக்கு பெரும்பாக பகுதிகளில் 15-30 செ.மீ பனி, கிட்டத்தட்ட பூஜ்யம் பார்வைத் திறன் நிலவலாம்.

ஒட்டாவாவில், பகல் நேரத்தில் வெயில் காணப்பட்டாலும், அதிகபட்ச வெப்பநிலை -10°C ஆகவும், காற்றின் தாக்கத்தால் -13°C ஆக உணரப்படக்கூடும்.

வடக்கு மற்றும் கிழக்கு க்யூபெக்கின் பெரும் பகுதிகளில் செயலில் உள்ள வானிலை எச்சரிக்கைகள் அமலில் உள்ளன.

புவியில் ரீதியாக தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப்போயுள்ளது எனவே கடற்பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி, எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடலாதிக்கத்தைத் தகர்த்து, எமது கடலில் நாம் பலம் பெறும்போதுதான் விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்ளுவதுடன், தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும் எதிரிப் படையையும் விரட்டியடிக்க முடியும்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

தமிழக செய்திகள்

தமிழீழத் தனியரசுக் கோரிக்கையில் இருந்து பின் வாங்குவது தவறு

தமிழக முதல்வருக்கு பழ. நெடுமாறன் ஐயா கடிதம்

19.12.2025

பெரும் தியாகம் புரிந்துள்ள ஈழத் தமிழர்கள் அனைவரின் விருப்பம் அறிந்து செயலாற்றுக! தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு,

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்:

இலங்கையில், தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் அளிக்கும் கூட்டாட்சி முறையை ஏற்படுத்த அந்நாட்டு அரசுக்கு இந்திய அரசு மூலம் அழுத்தம் அளிக்கவேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் வந்த குழுவினர் வலியுறுத்தியிருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கையில் ஈழத் தமிழர்கள் தந்தை செல்வா தலைமையில் 30 ஆண்டுக் காலத்திற்கு மேலாக மாநில சுயாட்சி கோரிக்கையை வலியுறுத்தி அறப்போராட்டங்கள் நடத்தினர். ஆனால், இலங்கையில் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் எதுவும் அந்த கோரிக்கையைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அதன்பின் 1976ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தலைமையில் கூடிய இலங்கை தமிழரசுக் கட்சியினர் **சுதந்திரத் தமிழீழம் ஒன்றே தீர்வு** என்று முடிவெடுத்தனர். அதற்குப் பின் இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றபோது, வட- கிழக்கு மாநிலங்களில் தமிழீழ கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டு அத்தனை தொகுதிகளிலும் வெற்றி பெற்றனர். ஒருமுறையல்ல தொடர்ந்து நடைபெற்ற ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழீழ கோரிக்கைக்கு ஆதரவாக ஈழத் தமிழர்கள் வாக்களித்துத் தொடர் வெற்றிகளை அளித்துள்ளனர்.

சிங்கள அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட எந்த வேட்பாளரும் தமிழர் பகுதியில் வெற்றிபெற முடியவில்லை. பல முறை இவ்வாறு தங்களின் விருப்பத்தினை ஈழத் தமிழர்கள் தேர்தலின் மூலம் நிரூபித்த போதிலும், சிங்கள அரசுகள் அதைச் சற்றும் மதிக்கவில்லை. மாறாக, இராணுவ அடக்குமுறையை ஏவினர். இதன்விளைவாக ஈழத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டமே இறுதி தீர்வு என முடிவு செய்து, இராணுவ ஒடுக்குமுறையிலிருந்து தங்களின் மக்களைக் காப்பதற்கு ஆயுதம் ஏந்த முடிவு செய்தனர். அவ்விதமே போராடி தமிழர் பகுதியில் பெரும் பகுதியை மீட்டு தனியாட்சி நடத்தினர்.

இந்திய தலைமையமைச்சராக இந்திராகாந்தி இருந்தபோது, தமிழர்களுக்கென்று வடக்கு-கிழக்கு மாநிலம் அமைப்பது என்றும், ஓரளவு அதிகாரங்கள் கொடுப்பது என்பதற்கும் அன்றைய சிங்கள அரசு ஒப்புக்கொண்டது. ஆனால், அதன்படி நடக்காததினால் ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்க இந்திராகாந்தி அவர்கள் முன்வந்தார்.

பின்னர், நார்வே இப்பிரச்சனையில் தலையிட்டுத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. நார்வேயின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட உடன்பாட்டினை சிங்கள பிரதமர் இரணில் விக்ரமசிங்கேயும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொண்டனர். ஆனால், ஏற்றுக்கொண்ட உடன்பாட்டினை அவர் நிறைவேற்ற தவறினார்.

அதன்பின் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் ஒரு திட்டத்திற்கும் விடுதலைப் புலிகள் ஒப்புதல் அளித்தனர். ஆனாலும் அதற்குச் சிங்கள அரசு ஒப்புதல் தரவில்லை. இப்படி தமிழர்கள் தனிநாடு கோரிக்கையிலிருந்து இறங்கிவந்து சமரச திட்டத்திற்கு ஒப்புக்கொண்ட போதிலும், சிங்கள அரசு ஈழத் தமிழர்களை மட்டுமல்ல, உலக நாடுகளையும் ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டது.

பிறகு 20க்கும் மேற்பட்ட நாடுகளின் துணையுடன் ஈழத் தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்கியது. ஈழத் தமிழர்களுக்கு எத்தகைய அதிகாரமும் அளிக்காமல் இரண்டாந்தர குடிமக்களாகவே அவர்களைச் சிங்கள அரசுகள் நடத்தின என்பது கடந்த கால வரலாறாகும். ஈழத் தமிழர்கள் நடத்திய தமிழீழத்திற்கான போராட்டத்தில் 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள். 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் சிங்கள வெறியர்களால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சுமார் 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் சொந்த நாட்டில் வாழ்வதற்கு வழியில்லாமல் உலக நாடுகள் பலவற்றிலும் தஞ்சம் புகுந்து அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். **பெரும் தியாகம் செய்தும் பேரழிவுக்கு ஆளாகியும் இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்களும் உலக நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களும் தமிழீழ தனிநாடு என்பது மட்டுமே தங்களுக்கான தீர்வாக இருக்க முடியும் என உறுதியாக நம்புகிறார்கள்.** அக்கோரிக்கையிலிருந்து தற்போது பின்வாங்குவது என்பது அவர்களின் உணர்வுகளை மதிக்காத போக்காகிவிடும்.

இப்போது இலங்கையில் இருக்கும் அரசு முற்றிலும் ஈழத் தமிழர்களை ஒடுக்கும் திட்டம் கொண்டதாகும். அதுமட்டுமல்ல, இந்திய அரசுக்கும் எதிரானதாகும். கடந்தகால இந்த வரலாற்றினை எண்ணிப்பார்க்கவேண்டும். உலக நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் விருப்பம் அறிந்தும், இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களின் விருப்பம் அறிந்தும் அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமே தவிர, அவர்களின் ஒரு குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க செயல்படுவது பேரழிவை ஏற்படுத்திவிடும். எனவே, ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களின் விருப்பம் அறிந்து அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருமாறு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

அன்புள்ள,

(பழ. நெடுமாறன்) தலைவர்.

உலகத் தமிழர் பேரமைப்பு

World Tamil Confederation

(Registration No. AAATU4567GE2021501)

தலைவர்: பழ. நெடுமாறன்

19.12.2025

பெரும் தியாகம் புரிந்துள்ள ஈழத் தமிழர்கள் அனைவரின் விருப்பம் அறிந்து செயலாற்றுக!

தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்

மூத்த தமிழ் தேசியவாதி ஐயா அருகோ [அரு கோபாலன்] அவர்கள் சாவடைந்தார்

23.12.2025

மூத்த தமிழ்த்தேசியவாதியும் எழுகதிர் இதழின் ஆசிரியருமான பெருமதிப்பிற்குரிய ஐயா அருகோ (அரு கோபாலன்) அவர்கள் இன்று 23.12.2025 செவ்வாய்க்கிழமை காலை உடல்நலக் குறைவால் தாய்த் தமிழகத்தில் சாவடைந்துள்ளார்.

அவருக்கு தமிழ்த் தேசியத்தோடு பயணிக்கும் அனைவரும் தமது கண்ணீர் வணக்கத்தைப் பகிர்ந்து வருகின்றனர்.

தமிழ் இன உரிமைப் போராளி ஐயா அருகோ மறைவு..குறித்து ஓவியர் புகழேந்தி அவர்கள் தெரிவிக்கையில்,

பல்வேறு தமிழ் இன சமூகப் போராட்டம் ஆர்ப்பாட்டங்களில் இணைந்து செயற்பட்டிருக்கிறோம்.

அவர் மறைவிற்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்று தனது இரங்கலைப் பதிவிட்டுள்ளார்.

www.sangathamil.ca

தமிழீழத்துக்கு பொது வாக்கொடுப்பு தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தல்

25.12.2025

இனப்படுகொலைக்கான நீதிவிசாரணையை நடத்தி தமிழீழத்துக்கு ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன், மே-17 இயக்கத்தின் திருமுருகன் காந்தி, முக்குலத்தோர் புலிப்படையின் கருணாஸ் உட்பட மேலும் பல அரசியல் பிரமுகர்கள் இந்த கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணையை ஐக்கிய நாடுகள் சபை நடத்த வேண்டும் என்று வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வரான சி.வி விக்னேஷ்வரன் தீர்மானம் நிறைவேற்றினார்.

அத்துடன், தமிழக சட்டமன்றத்தில், சுதந்திரத் தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், தமிழீழ இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை இந்திய அரசும், உலக நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்று முத்துக்குமார் உள்ளிட்ட 19 தமிழர்கள் தீக்குளித்து மாண்டார்கள்.

இந்தப் பின்னணியை தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களும், இந்திய நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும், உலக நாடுகளும் உணர்ந்து ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கான நீதி விசாரணையை நடத்த முன்வர வேண்டும் என்றும், சுதந்திரத் தமிழீழத்துக்கு ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழர் காணிகளில் குடியேற்றப்பட்டுள்ள அத்துமீறிய குடியேற்றங்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்றும், ஈழத் தமிழர் தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் அதற்கான ஆயத்த வேலைகளைச் செய்ய தமிழகத்தில் உள்ள தமிழர்களும், புலம்பெயர் வாழ் தமிழர்களும் கடமையாற்ற வேண்டும் என்று இந்தக் கூட்டறிக்கையின் வாயிலாக வலியுறுத்தப்பட்டுள்ளது.



ஒற்றையாட்சி ஆட்சி முறையை தமிழகக் கட்சியான பாட்டாளி மக்கள் கட்சி எச்சரிக்கை!

26.12.2025

ஒற்றையாட்சி ஆட்சி முறையைத் திணிக்க இலங்கை அரசு எடுக் கும் எந்தவொரு முயற்சியும் புதுப்பிக்கப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு வழி வகுக்கும் என்று தமிழக கட்சி பாட்டாளி மக்கள் கட்சி எச்சரித்துள்ளது.

எனவே, தமிழர்களுக்கு அர்த்தமுள்ள சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத் தமிழ் அரசியல் கட்சிகளின் சில தலைவர்கள், ஒற்றையாட்சி முறையை வலுப்படுத்தும் நோக்கில் அரசியலமைப்புத் திருத்தங்களைத் திட்டமிட்டு வருகின்றனர். இது, சிங்கள பெரும்பான்மைவாதத்தை மேலும் ஊக்குவிக்கும் எனவும் அன்புமணி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இரண்டு தேசிய இனங்கள் வசிக்கும் நாட்டில் இதுபோன்ற நடவடிக்கைகள் ஆபத்தானவை மற்றும் கண்டிக்கத்தக்கவை என்று அவர் கூறியுள்ளார். 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நினைவு கூர்ந்துள்ள அன்புமணி, இந்த ஒப்பந்தம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பதன் மூலம் தமிழர்களுக்கு சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பைக் கருத்திற் கொண்டது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருப்பினும், இலங்கை இதைத் தொடர்ந்து செயல்படுத்த மறுத்து வருகிறது. 13வது அரசியலமைப்பு திருத்தம், தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்குப் பதிலாக, அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் குறைத்து விட்டது என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இல்லாத நிலையிலும், தமிழர் விடுதலைப் போராட்டத்தின் மூல காரணங்கள் நீடிக்கின்றன. இந்த நிலையில், சுயாட்சியை நிரந்தரமாக மறுக்கும் எந்தவொரு

அரசியலமைப்பு மாற்றமும் ஈழத் தமிழர்களிடையே அடக்கப்பட்ட விடுதலை உணர்வுகளை மீண்டும் தூண்டிவிட்டு இலங்கையின் எதிர்காலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

செயல் ஒன்று மட்டுமே நாம் யார் என்பதை பிறருக்கு அடையாளப்படுத்தும்.

- தமிழ் போராளி சுபா. முத்துக்குமார்

மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்ளவார்கள்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

உலக செய்திகள்

கடுமையான துப்பாக்கிச் சட்டங்களை இயற்றுவது குறித்து பரிசிலனை

அவுஸ்திரேலியா

15.12.2025

அவுஸ்திரேலிய அரசாங்கம் கடுமையான துப்பாக்கிச் சட்டங்களை இயற்றுவது குறித்து பரிசீலித்து வருவதாக அந்நாட்டு பிரதமர் அந்தோணி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெற்ற சிறப்பு செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேவையான எந்த நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் தயாராக உள்ளதெனவும், அதில் கடுமையான துப்பாக்கிச் சட்டங்களும் அடங்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனிநபர்களால் உரிமம் பெறக்கூடிய துப்பாக்கிகளின் எண்ணிக்கையில் வரம்புகள், அதிக சோதனைகள் மற்றும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உரிமங்களை மறுஆய்வு செய்தல் ஆகியவை இதில் அடங்கும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்

“மக்களின் சூழ்நிலைகள் மாறுகின்றன, மக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தீவிரமயமாக்கப்படலாம், உரிமங்கள் நிரந்தரமாக வழங்கப்படக்கூடாது,” என்று பிரதமர் அந்தோணி அல்பானீஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் போண்டி கடற்கரையில் யூத மத கொண்டாட்ட நிகழ்வில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 10 வயது சிறுமி உள்ளிட்ட 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தாக்குதலை 50 வயதான தந்தையும், 24 வயதான மகனும் மேற்கொண்டிருந்தனர். இதில் 50 வயதான தந்தை உயிரிழந்த நிலையில், 24 வயதான மகன் படுகாயமடைந்த

நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாரிஸ் ஜனாதிபதி மக்ரோனின் வீட்டிற்கு முன் விவசாயிகள் போராட்டம்

19.12.2025

மெர்கோசூர் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாவது தாமதமானாலும், ஐரோப்பிய ஒன்றியம் அதைக் கைவிட வேண்டும் என்று கோரி, பிரான்ஸ் விவசாயிகள் லு டௌக்கெட்டில் உள்ள ஜனாதிபதி மக்ரோனின் வீட்டிற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடலோர நகரமான லு டௌக்கெட்டில் உள்ள ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் இரண்டாவது வீட்டிற்கு வெளியே டஜன் கணக்கான விவசாயிகள் கூடினர். அதிகாலையில் இருந்து சுமார் ஐம்பது பேர் தொழிற்சங்க அழைப்பை ஏற்று, காவல்துறையின் கண்காணிப்பின் கீழ் கடற்கரையில் உளவூர்திகளை நிறுத்தினர்.

சில போராட்டக்காரர்கள் முழு டிரெய்லர்களுடன் வந்து, அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு அடையாளச் செயலாக, சொத்துக்கு அருகில் பண்ணை கழிவுகளைக் கொட்டினர்.

ஐரோப்பிய ஒன்றிய மெர்கோசூர் வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிராக பிரஸ்ஸல்ஸில் நடந்த ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து இந்த போராட்டம் நடைபெற்றது.

ஐரோப்பிய ஆணையம் கையெழுத்திடுவதை ஜனவரி வரை தாமதப்படுத்தியிருந்தாலும், இது போதாது என்று தொழிற்சங்கங்கள் கூறி ஒப்பந்தத்தை கைவிட வேண்டும் என்று தொடர்ந்து கோரி வருகின்றன.

ஐரோப்பிய ஒன்றிய பண்ணை மானியங்களில் ஏற்படக்கூடிய வெட்டுக்கள் மற்றும் திட்டமிடப்பட்ட காலநிலை நடவடிக்கைகள் செலவுகளை அதிகரிக்கும் என்று அவர்கள் அஞ்சுவதை விவசாயக் குழுக்களும் எதிர்க்கின்றன.

விவசாயிகளுக்கு இன்னும் தெளிவான உத்தரவாதங்கள்

இல்லை என்று கூறி, லு டௌக்கெட் மேயர் டேனியல் ஃபாஸ்குவெல் பகிரங்கமாக ஆதரவைக் குரல் கொடுத்தார்.

பிரான்ஸ் காலனித்துவத்தை ‘அரச குற்றம்’ என்று அறிவிக்கும் சட்டத்தை அல்ஜீரியா நிறைவேற்றுகிறது

25.12.2025

அல்ஜீரியாவின் பாராளுமன்றம் புதன்கிழமை ஒருமனதாக ஒரு சட்டத்தை நிறைவேற்றியது, பிரான்ஸ் நாட்டை காலனித்துவப் படுத்துவதை ஒரு அரசு குற்றமாக அறிவித்து பிரான்சிடம் இருந்து அதிகாரப்பூர்வ மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோரியது.

அல்ஜீரியாவில் அதன் காலனித்துவ கடந்த காலத்திற்கும் அது ஏற்படுத்திய துயரங்களுக்கும் பிரான்ஸ் சட்டப்பூர்வ பொறுப்பைக் கொண்டுள்ளது என்று கூறும் மசோதாவை அங்கீகரித்தபோது, தேசிய வண்ணங்களில் ஸ்கார்ஃப்களை அணிந்த சட்டமியற்றுபவர்கள் “அல்ஜீரியா நீடூழி வாழ்க” என்று கோஷமிட்டனர்.

27 பிரிவுகளைக் கொண்ட இந்த சட்டம், பிரான்ஸ் காலனித்துவ ஆட்சியை அது குற்றம் சாட்டும் குற்றங்களை பட்டியலிடுகிறது, அவற்றில் அணு ஆயுத சோதனை, நீதிக்குப் புறம்பான மரண தண்டனைகள், உடல் மற்றும் உளவியல் சித்திரவதை மற்றும் வளங்களை முறையாகக் கொள்ளையடித்தல் ஆகியவை அடங்கும்.

பிரான்ஸ் காலனித்துவத்தால் ஏற்படும் அனைத்து பொருள் மற்றும் தார்மீக சேதங்களுக்கும் முழுமையான மற்றும் நியாயமான இழப்பீடு அல்ஜீரிய அரசு மற்றும் மக்களின் பிரிக்க முடியாத உரிமை என்றும் அது கூறுகிறது.

“அல்ஜீரியாவின் தேசிய நினைவகம் அழிக்கப்படவோ அல்லது பேரம் பேசவோ முடியாதது” என்ற தெளிவான செய்தியை இந்த சட்டம் உள்நாட்டிலும் வெளிப்புறத்திலும் அனுப்பியுள்ளது என்று நாடாளுமன்ற சபாநாயகர் இப்ராஹிம் பௌகாலி கூறினார்.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், 2017 ஆம் ஆண்டு முதன்முதலில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டபோது, காலனித்துவத்தை ”மனிதகுலத்திற்கு எதிரான குற்றம்” என்று வர்ணித்திருந்தார், ஆனால் முறையான மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார்.

2023 ஆம் ஆண்டில், “மன்னிப்பு கேட்பது என் வேலை இல்லை” என்று கூறிய அவர், சமரசத்தை நோக்கிச் செயல்படுவதற்கான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

சிறீலங்காவின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிரான தடை விதிப்புக்கள் தொடரும்: பிரித்தானியா

25.12.2025

பிரித்தானிய அரசாங்கம் சிறீலங்காவின் போர்க்குற்றவாளிகளுக்கு கடந்த மார்ச் மாதம் நால்வருக்கு எதிராக தடைகளை விதித்துள்ளது. இவ்விவகாரம் தொடர்பான நடவடிக்கைகள் முன்நோக்கியே நகர்கின்றன. தடை விதிப்புக்கள் தொடருமென வெளிவிவகார செயலாளர் வெற்றே கூப்பர் அறிவித்துள்ளார்.

பிரித்தானியப் பாராளுமன்றத்தின் வெளிவிவகாரக்குழு கூட்டம் கடந்த வாரம் இம்பெற்றிருந்த நிலையில் அங்கு கருத்துரைத்த உமா குமாரன் எம்.பி. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் மற்றும் இலங்கையில் இடம்பெற்ற மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளல் என்பன உள்ளடங்கலாக தமிழ்ச்சமூகத்துக்கான நீதி தொடர்பில் முன்னாள் வெளிவிவகார செயலாளர் டேவிட் லெமியிடம் தான் வலியுறுத்தியிருந்ததாகக் குறிப்பிட்டார்.

‘ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பன உள்ளடங்கலாக போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களில் சிறீலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கக்கூடும் என நம்புவதற்கு ஏதுவான ஆதாரங்கள் கண்டறியப்பட்டன.

இலங்கையில் யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கின்றன. ஆனால் போர்க்குற்றங்களிலும், இனப்படுகொலையிலும் ஈடுபட்டவர்களுக்கு எதிராக எந்தவொரு குற்றவியல் விசாரணைகளோ அல்லது சிறப்பு நீதிமன்ற விசாரணைகளோ மேற்கொள்ளப்படவில்லை’ என அவர் தீவிர கரிசனையை வெளிப்படுத்தினார்.

அதேபோன்று, ‘பாதிக்கப்பட்டோர், அவர்களது குடும்பத்தினர், தப்பிப்பிழைத்தோர் என யாருக்கும் செவிசாய்க்கப்படவில்லை. இந்நிலையில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்கு சிறீலங்கா அரசு தவறியிருப்பதுடன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடிய ரோம சாசனத்தில் கைச்சாத்திடுவதற்கும், இவ்விவகாரம் சார்ந்த அரசியல் தன்முனைப்பை வெளிப்படுத்துவதற்கும் தவறியிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்மக்களுக்குரிய நீதியையும், பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துமாறு பிரித்தானியா சிறீலங்கா அரசாங்கத்தின் மீது தொடர் அழுத்தங்களைப் பிரயோகிக்குமா?’ எனவும் உமா குமாரன் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் வெற்றே கூப்பர், தமிழ்ச்சமூகம் தொடர்பில் நீண்டகாலமாகத் தாம் கொண்டிருக்கும் நியாயபூர்வமான கரிசனைகள் தொடர்பில் பிரஸ்தாபித்தார். அத்தோடு மனித உரிமைகள் சார்ந்து நிலவும் கரிசனைக்குரிய விடயங்களுக்குத் தீர்வுகாணுமாறு தாம் சிறீலங்கா அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருவதாகவும், இருப்பினும் இதுசார்ந்த நிலையான நடவடிக்கைகள் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

‘மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான செயற்திறன்மிக்க, நிலையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நாம் சிறீலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்கியிருக்கின்றோம்.

அதுமாத்திரமன்றி கடந்த மார்ச் மாதம் நால்வருக்கு எதிராக பிரித்தானிய அரசாங்கம் தடைகளை விதித்தமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே இவ்விவகாரம் தொடர்பான நடவடிக்கைகள் முன்நோக்கியே நகர்கின்றன’ என வெளிவிவகார செயலாளர் சுட்டிக்காட்டினார்.

அதனைப் பெரிதும் வரவேற்பதாகத் தெரிவித்த உமா குமாரன், போர்க்குற்றவாளிகளுக்கு எதிரான பிரித்தானிய அரசாங்கத்தின் தடைவிதிப்பு மேலும் பரவலாக்கப்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

இசுரவேலின் புதிய குடியேற்ற நடவடிக்கைக்கு 14 நாடுகள் அதிருப்தி

25.12.2025

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையில் 19 புதிய குடியேற்றங்களை (Settlements) அனுமதித்த இசுரவேலின் முடிவை, பிரித்தானியா, கனடா, டென்மார்க், பிரான்ஸ் உள்ளிட்ட 14 நாடுகள் கடுமையாக கண்டித்துள்ளன.

இந்த நடவடிக்கை சர்வதேச சட்டத்திற்கு முரணானது என்றும், காசாவில் நிலவும் போர் நிறுத்த ஒப்பந்தத்தையும், பிராந்தியத்தின் நீண்டகால அமைதி மற்றும் பாதுகாப்பையும் ஆபத்தில் ஆழ்த்துவதாகவும் அவை எச்சரித்துள்ளன.

பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, ஜப்பான், மால்டா, நெதர்லாந்து, நார்வே, ஸ்பெயின் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில், “மேற்கு கரையில் இசுரவேலின் பாதுகாப்பு அமைச்சரவை 19 புதிய குடியேற்றங்களை அனுமதித்ததை நாங்கள் கண்டிக்கிறோம்” என தெரிவித்துள்ளன.

மேலும், எந்தவிதமான இணைப்பையும் (annexation) மற்றும் குடியேற்ற விரிவாக்கத்தையும் தாங்கள் எதிர்ப்பதாகக் கூறிய நாடுகள், இந்த முடிவை உடனடியாகத் திரும்பப் பெற இசுரவேலை வலியுறுத்தியுள்ளன.

இரு-நாடுகள் தீர்வு அடிப்படையில் முழுமையான, நியாயமான மற்றும் நிலையான அமைதிக்கான தங்களின் உறுதிப்பாட்டையும் அவை மீண்டும் உறுதிப்படுத்தின.

இதற்கு பதிலளித்த இசுரவேல், இந்த விமர்சனங்களை பாகுபாடு எனக் கூறியுள்ளது. “யூதர்கள் இசுரவேல் நிலத்தில் வாழும் உரிமையை வெளிநாட்டு அரசுகள் கட்டுப்படுத்த முடியாது; இப்படிப்பட்ட அழைப்புகள் நெறியியல் ரீதியாக தவறானதும் யூதர்களுக்கு எதிரான பாகுபாடுமாகும்” என வெளிநாட்டுத் துறை அமைச்சர் கிடியோன் சார் தெரிவித்தார்.

இதற்கிடையில், இசுரவேலின் கடுமையான வலதுசாரி நிதியமைச்சர் பெஸலேல் ஸ்மோட்ரிச், இந்த குடியேற்றத் திட்டம் எதிர்கால பாலஸ்தீன நாடு உருவாவதைத் தடுக்கவே என வெளிப்படையாக கூறியுள்ளார்.

2022 இறுதியில் அரசு பொறுப்பேற்றதிலிருந்து 69 புதிய குடியேற்றங்கள் கட்டட அனுமதி பெற்றதாக அல்லது பின்னோக்கி சட்டபூர்வமாக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் இசுரவேல் மேற்கொண்டு வரும் குடியேற்ற விரிவாக்கம் 2017க்கு பிந்தைய மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளதாகவும், இது இசுரவேலிய-பாலஸ்தீன அமைதி ஒப்பந்தத்திற்கு முக்கிய தடையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, இந்த சட்டவிரோத கட்டுமானங்கள் பாலஸ்தீனர்களுக்கான தொடர்ச்சியான நிலப்பரப்பை சுருக்கி, சுயாதீன பாலஸ்தீன நாடு உருவாவதை கடுமையாக பாதிப்பதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.

“சோமாலிலாண்ட்” முதலாவது நாடாக அங்கீகரித்தது இசுரவேல்!

26.12.2025

சோமாலியாவிலிருந்து பிரிந்த சோமாலிடாண்டை சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட நாடாக இசுரவேல் அங்கீ கரித்துள்ளதாக இசுரவேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இன்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சர் சார் மற்றும் சோமாலிலாண்ட் குடியரசின் ஜனாதிபதியுடன் சேர்ந்து, நாங்கள் ஒரு கூட்டு மற்றும் பரஸ்பர பிரகடனத்தில் கையெழுத்திட்டோம் என்று நெதன்யாகு எக்ஸ் தளத்தில் பதிவிட்டார்.

இந்த அறிவிப்பு ஜனாதிபதி டிரம்பின் முன்முயற்சியில் கையெழுத்திடப்பட்ட ஆபிரகாம் ஒப்பந்தங்களின் உணர்வில் உள்ளது என்று அவர் கூறினார்.

இதன் மூலம், பிரிந்து சென்ற பகுதியை அங்கீகரித்த முதல் நாடாக இசுரவேல் ஆனது.

ஆப்பிரிக்கப் பகுதி சோமாலியாவிலிருந்து பிரிந்து மூன்று தசாப்தங்களாகியுள்ளது. அத்துடன் ஆப்பிரிக்காவின் கொம்பில் ஒரு முக்கிய மூலோபாய பிராந்தியத்தில் இந்தநாடு அமைந்துள்ளது.

வேறு எந்த நாடுகளும் இதை முறையாக அங்கீகரிக்கவில்லை என்றாலும், இங்கிலாந்து, எத்தியோப்பியா, துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், டென்மார்க், கென்யா மற்றும் தைவான் உள்ளிட்ட பல நாடுகள் தொடர்பு அலுவலகங்களைப் பராமரித்தன.

மேலும் டிரம்ப் நிர்வாகம் சமீபத்திய மாதங்களில் பிரிந்து செல்லும் பிராந்தியத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளலாம் என்று சமிக்ஞை செய்துள்ளது. இருப்பினும், வெள்ளிக்கிழமை அறிவிப்பு இசுரவேல் சோமாலியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக குற்றம் சாட்டிய பல பிராந்திய சக்திகளிடையே கோபத்தைத் தூண்டியது.

இப்பகுதியில் அமெரிக்கா ஒரு பொய கடற்படைத் தளத்தை அமைக்கும் மூலோபாயப் பகுதியாக இதைப் பயன்படுத்ததிட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவும், இசுரவேலும் ஏமனில் உள்ள ஹவுதிக்கள் மீது தாக்குதல் நடத்தவும் ஈரானிலிருந்து ஹவுதிகளுக்குச் செல்லும் ஆயுத தளபாடங்களை தடுத்து நிறுத்தவும் சோமாலிலாண்ட்

மிகப்பொய மூலோபாய நிலப்பகுதியாக உள்ளது.

சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகின்றது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

2026
தாய் தேசத்தின் நினைவு சுமந்து நடப்போம்!
மண்மீட்பினை தம் இரத்தத்தோடும் கனவோடும் சுமந்து
சரித்திரமாகிய எம் வீரர் பணி தொடருவோம்!
இடரிலும் தளரிலும் சிக்கும் எம் வாழ்வை மீட்டு
நிலவு பொழியும் எம் முற்றத்தில் திளைப்போம்!
இந்தப் புத்தாண்டில்
புது வாழ்வுக்குள் காலடி எடுத்து வைக்க
வாழ்த்துகின்றோம்...!
இனிய
புத்தாண்டு
நல்வாழ்த்துகள்
Happy
New
Year
www.sangathamil.ca

AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used & new Walk in Cooler Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643

AR GROUP
ARASAN RAJADURAI
Real Estate & Developments Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX HALLMARK FIRST GROUP REALTY
1154 Kingston Rd Pickering, ON L1V 1B4 CA

அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல் (Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும், தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203

"தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி, நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர, சிங்கள அரசியல் வாதிகளின் காருணியத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நாம் என்றும் கருதியதில்லை. இதுவே, அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியான இலட்சியமாக இருந்து வருகிறது."

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

அன்றும் சரி, இன்றும் சரி, தமிழரின் உணர்வுகளை, அவர்களது வாழ்நிலை அவலங்களை, அவர்களது தேசிய அபிலாசைகளைச் சிங்களப் பெரும்பான்மை இனம் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ள எத்தனிக்கவுமில்லை. புரிந்து கொள்ளும் ஆற்றலும் அறிவுத் திறனும் ஆன்ம பக்குவமும் அவர்களிடம் இருப்பதாகவும் தெரியவில்லை.

சிங்கள தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

அடிமனதில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப்போன இந்தப் புராணக் கருத்து நிலை யிலிருந்து சிங்கள தேசம் விடுபடப்போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத்தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத்தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கைத் தீவின் வடகிழக்கு மாநிலத்தைத் தாயகத் தேசமாகக் கொண்டு, தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மைமிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவத் தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவராற் புரிந்துகொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை. தமிழரது இருப்பு நிலைபற்றிய உண்மையைக்கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளச் சிங்கள தேசம் மறுத்து வருவதாலேயே தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினை தீர்வின்றி, முடிவின்றிச் சிக்கலடைந்து இழுபட்டு வருகிறது.

சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியற் கருத்துலகில் அடிப்படையான மாற்றம் நிகழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணிந்து போகவில்லை. மாறாக, அது புதிய, புதிய வடிவங்களை எடுத்துப் புத்துயிர்பெற்று வருகிறது.

தென்னிலங்கை அரசியற் களத்தில் அதன் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இப்படியான புறநிலையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர சிங்கள அரசியல்வாதிகளின் காருணியத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நாம் என்றுமே கருதியதில்லை. இதுவே அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியான இலட்சியமாக இருந்து வருகிறது.

2005 ம் ஆண்டு தமிமீழ மாவீரர்நாள் உரையிலிருந்து...


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ 416-993-8001
Professional & License Technician
Airehvac70@gmail.com

K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

நெஞ்சிலே ரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும் – எங்கள் நெங்சினிலே தோழர்களின் தியாகத்திலே

தளபதி கிட்டு நினைவுப் பாடல்

நெஞ்சிலே ரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும் – எங்கள்
நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே
மூத்தமகன் கிட்டு அவன் தோழர் குட்டிசிறி மலரவன் ஜீவா குணசீலன்
றொகானுடன் நாயகன் தூயவன் நல்லவன் அமுதனும்
இந்திய துரோகத்தால் கனலான செய்தியில்
நெஞ்சிலே ரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும் – எங்கள்
நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே
எங்கள் நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே

கடலம்மா...எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
கடலம்மா... எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா

தேசவிடுதலைக்காய் தேசமெல்லாம் திரிந்த எங்கள்
நேசக் குழந்தைகளை நீசர் வழிமறிக்க
தேசவிடுதலைக்காய் தேசமெல்லாம் திரிந்த எங்கள்
நேசக் குழந்தைகளை நீசர் வழிமறிக்க
கடலம்மா...எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
கடலம்மா... எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா

உலக கடற்பரப்பில் இந்தியப் பேயாட்சி
உண்மையைத் தின்னுமா? உலகம் மௌனமாகுமா?
உலக கடற்பரப்பில் இந்தியப் பேயாட்சி
உண்மையைத் தின்னுமா? உலகம் மௌனமாகுமா?
கடலம்மா... எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
கடலம்மா...எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா

தாயகப் பயணத்திலே தம்பி கிட்டு தோழருடன்
தியாக வேள்வியிலே தணலாகப் போகையிலும்
தாயகப் பயணத்திலே தம்பி கிட்டு தோழருடன்
தியாக வேள்வியிலே தணலாகப் போகையிலும்
கடலம்மா...எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
கடலம்மா...எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா

வானும் கடற்பரப்பும் உலகமதும் உள்ளவரை தாயகத் தாகம்
தணிவதில்லை எந்த தடையிலும் பயணம் நிற்பதில்லை
வானும் கடற்பரப்பும் உலகமதும் உள்ளவரை தாயகத் தாகம்
தணிவதில்லை எந்த தடையிலும் பயணம் நிற்பதில்லை
எங்கள் தம்பி கிட்டு தோழர் மீது ஆணையம்மா
எங்கள் தம்பி கிட்டு தோழர் மீது ஆணையம்மா
எங்கள் தம்பி கிட்டு தோழர் தேசம் நாளைம்மா
நெஞ்சிலே ரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும் – எங்கள்
நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே

“ஒருக்குமுறைகள் இனக்கொலை போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதே எனது கொள்கை”

– தளபதி கிட்டு –

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண மாவட்டத் தளபதி. சாமான்ய உயரத்திலும் அசிறி குள்ளமானவர். கண்ணாடி அணிந்துள்ள அவரது தலையின் முன்பக்கத்தில் மயிர்கள் கொட்டியதால் அகன்ற நெற்றியுடையவர். மென்மையும் கவர்ச்சியும் கொண்ட அவரது முகம் எவரையும் கவரக்கூடியது. 26 வயது நிரம்பிய சதாசிவம் கிருஸ்ணகுமார் அல்லது கிட்டு என்று அழைக்கப்படும் இவரே, சிறீலங்கா அரசினால் இன்று வரை தேடப்படும் அதிமுக்கியமான தீவிரவாதத் தலைவர். தமிழீழ நாடு முழுவதையும் (அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்கள்) தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வர முயற்சிக்கும் அதேவேளை, யாழ்ப்பாண மாவட்டம் இப்பொழுதே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலே உள்ளது. சிறீலங்கா முழுவதும் யாரைப் பார்த்தாலும் “கிட்டு”வைப் பற்றியே பேசப்படுகிறது. கிட்டு உரையாடும்போது மிகவும் மென்மையாகவும் மிகவும் மரியா தையுடனும், சிலவேளைகளில் சில கொள்கையை விளக்கிட ஜாடை மாடையுடனும் பேசுவார். அவர் சிரிக்கும் போது அவ ருடைய கண்ணும் சிரிக்கும். ஆனால் இயக்கக் கட்டுப்பாடு நிலைமையை ஒட்டிப் பேசும்போது அவரது குணமே மாறி விடும். யாழ்ப்பாணத்தில் வயதான தமிழர்கள். கிட்டுவைக் “கிட்டர்” (வட இந்தியாவில் “கிட்டர்ஜி” மாதிரி) என்று மரியாதை யோடு அழைப்பார்கள். யாழ்ப்பாணத்து இளம் பிள்ளைகளுக் கெல்லாம் அவர் “கிட்டுமாமா” தான்.

அவருடன் (FRONT LINE) நிருபர் நடத்திய நம்பிக்கை உண்டு. பேட்டி விபரம் வருமாறு:-

கே: உங்களுக்கு “கிட்டு” என்ற பெயர் எப்படிக் கிடைத்தது?

கிட்டு: நான் இயக்கத்தில் சேர்ந்தபோது எனது இயக்கம் வைத்த “வெங்கிட்டு” என்ற பெயர். மேலும் சுருக்கமாக கிட்டுவாக மாறிவிட்டது.

கிட்டு 1978 ஆம் ஆண்டு 18 வயதில் பாடசாலை மாணவனாக இருந்தபோதே இயக்கத்தில் சேர்ந்துவிட்டார்.

”நான் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவன். 1950 தொடக்கம் வல்வெட்டித்துறை மக்கள் அரசின் அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றனர். கள்ளக்கடத்தலையும். கள்ளக்குடியேற்றத் தையும் தடுப்பதாகக் கூறிக்கொண்டு எமது மக்களை துன்புறுத் திவந்துள்ளது. இந்த ஒடுக்கு முறையை நிறுத்த என்ன செய்ய லாம் என்ற எண்ணத்துடனேயே வளர்ந்தேன். இதைத் தொடர்ந்து தமிழீழ மக்கள் அனைவருமே அரச பயங்கர வாதத்தினால் இன்னல்படத் தொடங்கினர். ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடும் உணர்வோடு வளர்ந்த நான், பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தேன். ஒடுக்குமுறைகள் இனக்கொலை, போன்றவற்றை எனது எதிர்த்துப் போராடுவதே எனது கொள்கை. எனவே எல்.ரி.ரி.யுடன் என்னை இணைத்துக் கொண்டேன். பிரபாகர னும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். அப்போது எனக்கு போதியளவு அரசியல் ஞானம் இருக்கவில்லை. ஆனால் நான் ஒரு விடுதலைப் போராளியாக என்னை மாற்றிக் கொண்டபின், தெளிவான அரசியல் ஞானமும், எமது தமிழீழ விடுதலையில் முழுநம்பிக்கையும் ஏற்பட்டது. போராட்டத்தில் இறங்கிய பின் னர் அனுபவ ரீதியாக அரசியல் தத்துவங்கள் எனக்குப் புரிந்தன.

கே: உங்களுக்கெனக் குறிப்பான அரசியல் தத்துவம் அல்லது கொள்கை உண்டா?

கிட்டு: நல்லது, எனக்கென்று அரசியல் கொள்கைகள் உண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கையே எனது கொள்கை. அதையே எனது கொள்கையாகவும் முழுமையாக ஏற்றே இயக் கத்தில் இருக்கிறேன். நான் செயலிலேயே முழுநம்பிக்கை உடையவன். தத்துவங்களை இட்டு பேசுவதையும் விவாதிப்ப தையும் விட அவற்றை நடைமுறையில் பின்பற்றுவதே முக்கியம். என்பதே எனது திடமான கருத்து. போராளியாக மாறியபின்பே எனது அரசியல் சித்தாந்தம் மேலும் வளர்ச்சியடைந்தது. எனக்கென்று சில கொள்கைகள் இருக்கின் றன. அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள் கைகள் தான் அவை. அக்கொள்கைகளையே நான் முழுமை யாக ஏற்று செயல்படுகிறன். நான் நடைமுறைச் சாத்தியங்களை பின்பற்றும் ஒருவன். எனது இலட்சியத்தில் நான் முழுநம் பிக்கை உடையவன். அரசியல் தத்துவங்களையிட்டு வீணே தர்க்க வாதம் புரிவதைவிட செயற்பாட்டையே நான் விரும் புகிறேன். அதுவே முக்கிய மானது. நான் அரசியல் தத்து வங்களையிட்டு பேசுவதில்லை: அவற்றை நான் ஆழமாகப் படித்ததுமில்லை. செய் அல்லது செத்துமடி என்பதிலேயே எனக்கு நனம்பிக்கை உண்டு.”



[கேணல் கிட்டு அவர்கள் யாழ். தளபதியாக இருந்தபோது 1987இல் FRONT LINE பத்திரிகைக்கு அளித்த பேட்டியை இங்கு மறு பிரசுரம் செய்து அவரின் கருத்துக்களை நினைவு கூறுகிறோம்]

நான் கிட்டுவிடம் அவரது செயல்ரீதியான அணுகுமுறை ஒன்றை உதாரணத்துக்கு கூறுமாறு கேட்டேன். அவர் சாதிப் பிரச்சனையை எடுத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் நாளாந்த வாழ்வில் சாதிப்பிரச்சினையே கிடையாது என்று கூறினார். ஆயினும் “பிரபுத்துவ” அம்சம் நிலவும் யாழ்ப் பாணத்து சமூகத்தில் கிட்டுவின் அணுகுமறை வித்தியாச மானது.

“எவ்விடத்திலும் தகுதியுள்ள பின்தள்ளப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தால் அவர்களையே வட்டாரப் பிர திநிதி யாகவோ அல்லது ஒரு முகாமின் பொறுப்பாளராகவோ நியமித்து விடுவேன். இதனால் என்னோடு தொடர்பு கொள்ளும் பெரும்பான்மையான சமூதாயம் தப்பெண்ணங்களை மறந்து விடுகிறது. பல்வேறு சமூதாயங்களிடையேயும் நெருங்கிய புரிந்துணர்வும் உறவுகளும் ஏற்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றன.”

கே: சில பிரிவினர் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ளது என்று கூறு கிறார்களே! (கிட்டுவிடம் கேட்டேன்.)

கிட்டு: ஆம். சிலர் அவ்வாறு கூறுகிறார்கள். சிலர் அதற்கு மேலாகவும் சென்று. எமது இயக்கத்தில் குறிப்பிட்ட சாதியினரே ஆதிக்கம் செலுத்துவதாகக் கூடக் கூறுகிறார்கள். அது பிழை யான அபிப்பிராயம். சிலர் வேண்டுமென்றே தமிழ்ச் சமுதாயம்

முழுவதும் எம்மோடு இணையாமல் தடுக்க இவ்வாறு பொய்ப் பிரச்சாரம் செய்கின்றார்கள். ஆனால் என்ன நடந்தது என்பதை நீங்கள் உணர வேண்டும். திரு. பிரபாகரன் விடுதலைப் புலி கள் இயக்கத்தை ஆரம்பித்தபோது, துவக்கத்தில் அவரோடு இணைந்தவர்கள் யார்? அவரது நண்பர்கள். அவருடன் படித்த பாடசாலை சக மாணவர்கள். அவருடைய உறவினர்கள், அயலவர்கள் - இப்படி அவரது ஊரவர்களே முதலில் சேர்ந் தனர். ஆகவே இயல்பாக வல்வெட்டித்துறையிலேயே இயக்கம்

ஆரம்பமாகியது. நாங்கள் படிப்படியாகவே வளர்ந்தோம். காலம் செல்லச் செல்ல தமிழீழத்தைச் சேர்ந்த பலரும் எம்மோடு இணைந்தனர். எமது இயக்கத்தில் மூத்தோருக்கே முதலிடம் (SENIORITY) என்ற அடிப்படையில் தளபதிகளை, நியமனம் செய்கிறோம். ஆரம்பத்தில் இணைந்த முதல் முகாமைச் சேர்ந்தவர்களையே தலைவர்களாக நாம் நியமிப்பது எனும் கொள்கையை பின்பற்றி வருவதால், முதல் அணியைச் சேர்ந்த வல்வெட்டித்துறை வாலிபர்கள், தலைவர்களாக இருக்கின்றனர். அதே சமயம், ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஏராளமானோர் தலைவர்களாகவும் தளபதிகளாகவும் செயற்படுகின்றனர். விரைவில் சீனியோரிட்டி, தகுதி போன்றவற்றின் அடிப்படையில் இயக்கப் பொறுப்புகளை எம்மிடமிருந்து கையேற்பார்கள். அதன் பின்னர் இந்த V. V. T. மாயை மறைந்து விடும். ஆனால் சாதி அடிப்படையில் எமது இயக்கம் இயங்குவதாகக் கூறப்படுவது கலப்பற்ற சுத்தப் பொய்.

கே: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் தலைமைப் பதவிக்கு போட்டி பூசல்கள் இல்லையா?

கிட்டு: கிடையாது. ஏன் கிடையாது என் பதை உங்களுக்கு நான் சொல்ல வேண்டும். போர்க்களங்களில் விடுதலைப் புலிகளை நீங்கள் பார்த்தீர்களானால் அதில் உயர்மட்டத் தலைவர்களும் இருப்பார்கள். அடிமட்டப் போராளிகளும் இருப்பார்கள். இது எவ்வாறு நிகழ்கின்றதென்றால் போர்க்களத்தில் நாம் தலைமை தாங்கி முன்னின்று போராடுகின்றோமே தவிர. எமது வீரர்களை முன்னே அனுப்பிவிட்டு நாம் கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருப்பவர்கள் அல்லர். எனவே எங்கள் வீரர்களுக்குள் போட்டிகள் ஏதாவது இருந்தால்கூட அது உப்பரிகை வாழ்க்கை வாழ்வதற் கல்ல, தமிழீழ சுதந்திரத்தை விரைவில் அடைவதில்தான்! தமிழீழ மண்ணின் விடுதலைக்காக உயிரைத் தியாகம் செய்வதிலேயே தான் போட்டி! ஆகவே வாழ்வதா? சாவதா? என்கிற ஜீவ மரணப் போராட்டம் எம்முடையது.

இச்சமயத்தில் யாழ்ப்பாண குடிமக்கள் கிட்டுவைப் பற்றிக் கூறிய சில விடயங்களைப் பற்றிக் கேட்டேன். கிட்டு எப்பொழுதுமே அபாயத்தின் மத்தியிலேயே வாழ்கின்றார். ஒருதடவை றக் ஒன்றின் மீது படுத்தபடி கெலிகொப்டரைச் கிட்டு சுட்டு வீழ்த்தினாராம். யாழ்க் கோட்டைக்குள்ளிருந்து எப்பொழுது இராணுவத்தினரால் “செல்” அடிக்கப்பட்டாலும் அந்த இடத்தில் முன்னணியில் நின்று எதிர்த் தாக்குதல் நடத்துபவர் கிட்டுவே தான். தேவையின்றி தன்னை வெளிக் காட்டிக் கொள்வதை தவிர்க்கும்படி கிட் டுவிடம் கூறினேன்.

அவர் உறுதியான குரலில் கூறினார்.

“எப்படியோ இதுவரை அதிட்டவசமாக நான் உயிரோடு இருக்கிறேன். நான் இப்போது கூறப்போவது உங்களுக்கு ஆச்சரியம் அளிக்கும். நான் இஸ்ரேலிய இராணுவத் தளபதி முன்பு ஒரு முறை கூறியதையே போர்க்களத்தில் கடைப்பிடிக்கிறேன். நீண்ட காலத்திற்கு முன்பே நான் குறிப்பிட்ட இஸ்ரேலியத் தளபதி, போர்க்களத்தின் பின்னே நின்று கட்டளையிட்டதில்லை. அவர் எப்பொழுதும் களத்தில் முன்னணி வகித்து, முன்னேறுங்கள். முன்னேறுங்கள் என்னைப் பின் தொடருங்கள் என்று முழுங்கியதாகப் படித்தேன். தான் பின்னால் நின்றுகொண்டு, தனது படைகளை முன்னேறுங்கள் என்று கூறியதே கிடையாது. “





கே: உங்களால், உங்கள் படைகளை எவ்வாறு கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள முடிகிறது?

கிட்டு: ”நல்ல கேள்வி இது: நாங்கள் எவரையும் இயக்கத்தினுள் உடனடியாக எடுப்பதில்லை. நாம், எவரையும் கண்காணித்து முதலில் சிறு சிறு வேலைகளைக் கொடுப்போம். அவர் தனது நம்பிக்கையையும், விசுவாசத்தையும் தனது நடவடிக்கை மூலம் காட்டும் பட்சத்தில், அவருக்கு மேலும் பொறுப்புக்களைக் கொடுப்போம். இறுதியாகவே ஆயத பயிற்சியளிப்போம்.

என்கீழ் செயற்படும் விடுதலைப்புலிகள், கட்டுப்பாடின்றிச் செயற்பட்டால், அத் தவறுக்கு நானே பொறுப்பாளி. நான் கட்டுப்பாடின்றி நடந்தால், என் தலைவர் பிரபாகரன் அவர்களே அதற்குப் பொறுப்பாளி. எமது இயக்கத்தைச் சேர்ந்த எவராவது எம்மோடு இணைந்து வேலை செய்ய முடியாது என்று கருதுவார்களேயானால், அவர் எமது இயக்கத் தைவிட்டு வெளியேறும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அப்படி வெளியேறுபவர். வேறு இயக்கங்களில் சேரவோ அல்லது புதிய குழுவொன்றைத் தொடங்கவோ அவருக்கு அனுமதி கிடையாது.

தமிழீழப் பிரதேசங்களில் செயற்படும் எமது இயக்கத்தின் மாவட்டத் தளபதி களுக்கும். தலைவர் பிரபாகரனுக்குமி டையே நெருக்கமான தொடர்பு எப்போதுமே இருந்து வருகிறது. தேவையானபோது, எமது தலைவரை நேரே கண்டு ஆலோசனை நடாத்துவோம். எமது கருத்துக்களை தலைவர் பிரபாகரன் ஆழமாக பரிசீலிப்பார்.



தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை 10.01.1974

1974ஆம் ஆண்டு சனவரி மூன்றாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரை தமிழ் மக்கள் தமது மொழி, பண்பாடு என்பனவற்றை உள்ளடக்கி நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர மேஜர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது.

இவைகள் எவ்வாறு இருந்தாலும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மன வெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

மாநாட்டுக் குழுத்தலைவர் நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதிவரை யாழ். முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ். நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. அன்றைய தினம் குடாநாடு விழாக் கோலம் பூண்டிருந்தது.

1974ஆம் ஆண்டு சனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள். மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாகத் தமிழகப் பேராசிரியர் "நைனா முகமது" பேசிக் கொண்டிருக்கும் போது யாழ். உதவிக்கு காவற்துறைமா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான காவற்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள். இச் சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். அரங்குகள் சேதமடைந்தன. இம் மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறிமாவோ பண்டார நாயக்கா அவர்களால் காவற்றுறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

4 வது உலகத் தமிழாராச்சி மாநாடு 03-09 தை 1974

நன்றி: 'ஒளியில் எழுதி' அமிர்தலிங்கத்துக்கான இலண்டன் வெளியீட்டிலிருந்து...

10.01.1974 அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 – மாணவன்)
2. பரமசோதி சரவணபவன் (வயது 26)
3. வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32)
4. ஜோன் பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 – ஆசிரியர்)
5. புலேந்திரன் அருளப்பு (வயது 53)
6. இராசதுரை சிவானந்தம் (வயது 21 – மாணவன்)
7. இராஜன் தேவரட்ணம் (வயது 26)
8. சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 – ஆயுள்வேத வைத்தியர்)
9. சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 – மாணவன்)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

10.01.1974

தமிழ்மீது காதல்கொண்டனர்
கொலை வெறிக்காளாகி மாண்டனர்.

சி. கந்தகுமார் | வே. கேசவராசன் | ப. சரவணபவன்
இ. சிவானந்தம் | வ. யோகநாதன் | இ. தேவரட்ணம்
பி. சிக்மாறிலிங்கம் | சி. ஆறுமுகம் | சி. பொன்னுத்துரை

இலங்கையில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று, சிங்கள அரசின் காவற் படையினரின் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியான ஒன்பது தமிழர்கள்.

சுன்னாகம் காவல்துறை நிலையப் படுகொலை 08.01.1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச எல்லைக்குள் சுன்னாகம் அமைந்துள்ளது. யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை செல்லும் கே.கே.எஸ் வீதியில் பத்து கி.மீ தூரத்திலுள்ள சந்திக்குத் தெற்குப் புறமாக இருநூற்றைம்பது மீற்றர் தூரத்தில் சுன்னாகம் காவல்துறை நிலையம் அமைந்திருந்தது.

1984ஆம் ஆண்டு தை மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்ட சுன்னாகப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சுன்னாகக் காவல்துறை நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

1984ம் ஆண்டு தை மாதம் எட்டாம் நாள் காவல்துறை மீது போராளிகளின் எதிர்ப்புக்கள் பரவலடைய சுன்னாகக் காவற்றுறையினர், இளைஞர்களைத் தடுத்து வைத்திருந்த அறையில் நேரக்கணிப்பு குண்டினை பொருத்திவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினார்கள். காவல்துறையினர் பொருத்திய குண்டு வெடித்ததில் காவல்துறை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களை காப்பாற்றச் சென்ற சஞ்சீவன் உட்பட பத்தொன்பது இளைஞர்கள் உயிரிழந்தனர்.

08.01.1984 அன்று சுன்னாகம் காவற்றுறை நிலையப் படு

கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. செல்லர் சிவலிங்கம் (வயது 22 – மாணவன்)
02. வைத்திலிங்கம் நிகேதனன் (வயது 21 – மாணவன்)
03. கந்தையா பாலன் (வயது 25 – கமம்)
05. அப்பையா நாகராசா (வயது 38 – வியாபாரம்)
06. ஆசீர்வாதம் விஜிற்விமலராஜா (வயது 20 – மின்சாரசபை ஊழியர்)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்களின் படுகொலை 06.01.1984



வங்காலைக் கிராமம் மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. புனித அருள் ஆலயம் இங்குள்ள மக்களின் வணக்கத்தலமாக உள்ளது.

1985 ஆம் ஆண்டு தை மாதம் ஆறாம் திகதி பூரணை தினத்தன்று பி.ப. 12:30 மணியளவில் வங்காலைக் கிராமத்தினை இராணுவத்தினர் சுற்றி வளைத்துக்கொண்டனர். நள்ளிரவு தொடக்கம் மறுநாள் காலை 10:00 மணிவரை வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

மேரி பஸ்ரியன் குருவின் வதிவிடத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டு இராணுவத்தினர் சென்றனர். குருவானவர் தனது மேலங்கியையும் அணிந்து கொண்டு செபமாலையுடன் வெளியே வந்து கைகளை மேலுயர்த்தியவாறு ஆங்கிலத்தில் “பிளீஸ” எனக் கெஞ்சும் பொழுது அவரை நோக்கி இராணுவத்தினர் சுட்டனர் பங்குத்தந்தையுடன் நின்ற இரண்டு இளைஞர்களும் உயிரிழந்தார்கள். வெடிச்சத்தத்திற்கு பயந்து ஓடிய சிலரும் பலியாகினர். சிலர் கோயிலின் மேல் மாடியில் ஏறி பதுங்கியிருந்தார்கள. இராணுவத்தினர் பங்குத்தந்தையின் உடலை இழுத்து வந்து கன்னியர்மட வாசலிற் கிடத்திப் புகைப்படங்கள் எடுத்தனர். இவற்றைக் கோயிலின் மேல்மாடியில் ஒளித்திருந்த பொதுமக்கள் பார்த்தார்கள்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த பின் இராணுவத்தினர் ஒரே பாட்டும் கூத்துமாக இருந்தனர். பின்னர் இராணுவத்தினர் இறந்தவர்களை ஏற்றிக்கொண்ட சென்றுவிட்டனர். இதன் பின்னர் மக்கள் திரண்டு சென்று பார்த்தபோது மேரி பஸ்ரியனின் இருப்பிடம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டுது.

இறந்த மேரி பஸ்ரியனின் உடலைத் தரவி மற்ற எட்டுப் பேரின் உடல்களை மன்னார் வைத்தியசாலையிற் கொடுத்துவிட்டு, மேரி பஸ்ரியனின் உடலைத் தள்ளாடி இராணுவ முகாமிற்குக் கொண்ட சென்றுவிட்டனர். அவ்வேளையில் இந்த முகாமிலிருந்து எழும்பிய வழமைக்கு மாறான புகைமண்டலத்திலிருந்து அவரது உடல் எரிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

இச்சம்பவத்தில் மேலும் பல இளைஞர்கள் வெடிபட்ட காயங்களுடன் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டு இரகசியமான முறையில் வைத்தியம் செய்யப்பட்டனர். இறந்தவர்களின் உடல்கள் வங்காலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

06.01.1985 அன்று வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா

மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்கள் படுகொலையில் கொல்லப்பட்டபோர் விபரம்

1. மரியதல்மைடா தாசன் (26)
2. சூசையப்பு மேன்பீரிஸ் (20)
3. ஞானசேகரம் றூபன்குரூய் (24)
4. சவிரியான் அந்தோனி (23)
5. மனியப்பன் நீலமேகம் (28)
6. சந்தியா அலெக்சாண்டர் முறாவிலி (33)
7. வணபிதா மேரி பஸ்ரியன் (-)
8. லூயிசம்மா பிராண்டா (60)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

சிறீலங்காவின் கொலைக் கரங்களால் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமரர் பொன்னம்பலம்

தமிழினத்தின் விடுதலைக்காக சிறீலங்காவின் தலைநகரில் நின்று குரலெழுப்பியவர். சொல்லிலும் செயலிலும் தமிழீழ விடுதகைக்கு கொழும்பிலும் சர்வதேச அரங்கிலும் தளராது உழைத்தவர்.

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதானவேடத்தை ஜெனிவாவிலும் (சுவிஸ்) ஹேய்க் (நெதர்லாந்து) நகரிலும் நடந்த ஐ.நா.வின் மனித உரிமைகள் கூட்டத்தொடர்களில் பல தடவைகள் தோலுரித்துக்காட்டியவர். இறுதியாக இரண்டாவது தடவையாக சந்திரிகா ஜனாதிபதியாக பதவியேற்ற போது கூறிய ஆணவமான தமிழர் விரோத உரைக்கெதிராக பகிரங்கமாக பதிலெழுதியவர்.

தான் என்றோ ஒரு நாள் எதிரியின் துப்பாக்கிக்கு பலியாக நேரிடும் என்று தெரிந்தும். தமிழீழம் ஆயுதப்போராட்டம் மூலமே வென்றெடுக்கப்படவேண்டும் என்று உறுதியாக நம்பினார். அதனை தான் கொல்லப்படுவதற்கு அதாவது ஜனவரி 5ம் திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக “ராவய: பத்திரிகைக்கு வழங்கிய போட்டியில் தனக்கேயுரிய பாணியில் கூறியிருந்தார்.

அப்பாவித் தமிழர்கள் சந்திரிகா அரசினால் வகை தொகை யின்றி கைது செய்யப்படுகின்ற வேலையிலெல்லாம் துணிந்து நின்று பிரதிபலன் பாராது சிறீலங்கா காவல்துறை நீதிமன்றுகள் தோறும் சென்று வாதாடினார். கொக்கட்டிச்சோலைப் படு கொலை, கிருசாந்திப் படுகொலை மற்றும் செம்மணிப் பெரும் புதைகுழி வழக்குகளிலெல்லாம் தமிழர் நியாயத்தை வலியுறுத்

தினார். மொத்தத்தில் தனது புலமை, ஆளுமை அனைத்தை யும் தமிழீழ விடுதலைக்காக செலவிட்டார்.

ஜனவரி 5, 2000 ஆம் ஆண்டு அன்று குமார் பொன்னம்பலம்

என்ற தனிமனிதரை கொல்லும் நோக்கம் மட்டுமல்லாமல் அவர் சார்ந்த கொள்கையை முறியடிக்கலாம் என்ற எண்ணத் துடனேயே படுகொலை செய்தார்கள். ஆனால் அதில் தோற்று விட்டனர் என்றே சொல்லலாம்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழ் புத்திஜீவிகள் சமுதாயத் திற்கு ஒரு விதையை தூவிச்சென்றுள்ளார் (Legacy). அதைத் தொடர்ந்து செல்லவேண்டியது புத்திஜீவிகள் சமுதாயத்தின் கடமையாகும். அவர்களின் தேசத்திற்கான பங்களிப்பு. தனி மனிதர்களை அழிப்பதால் கொள்கை முன்னெடுப்புக்கள் பின் தங்கிவிடாது என்பதை சிங்கள இனவெறியர்களுக்கு புரிய வைக்கும்.

ஜெனீவா ஐ.நா. முன்றலில்
தமிழர் உரிமை முழக்கம்
ஏப்பிரல் 97

தமிழர் பாதுகாப்பு ஊர்வலம்
டென்மார்க் ஏப்பிரல் 99

இறுதிக் கிரியைகளின் போது
துணைவியார் அஞ்சலி
09.01.2000

திருகோணமலை தமிழ் மாணவர்கள் படுகொலை 02.01.2006



இச்சம்பவத்திற் காயமடைந்தவர்கள் விபரம்

1. பரராஜசிங்கம் கோகிலராஜா (21)
2. யோகராஜா பூங்குழலோன் (20)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்குச் அருகாமையாக மாலைப் பொழுதில் தனிமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர். இத்தகைய காட்டு

பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் இந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டு கோட்டைப் பக்கமாகச் சென்றனர்.

கைக்குண்டு வெடித்தில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூஞ்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்க சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் மிராண்டித் தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

02.01.2006 அன்று திருகோணமலையில் கொல்லப்பட்டோர் மாணவர் விபரம்

1. லோகிதராசா றொகான் (20)
2. சண்முகராஜா சஜீந்திரன் (19)
3. மனோகரன் வஜீகர் (21)
4. தங்கத்துரை சிவானந்தன் (20)
5. யோகராஜா கேமச்சந்திரன் (22)

தென்மராட்சியில் பெண் சுட்டு படுகொலை – 11.01.2006

தென்மராட்சியில் புதன்கிழமை நண்பகல் பன்றித் தலைச்சி அம்மன் கோயில் மைதானத்தில் 31 வய துடைய பெண்ணை அடையாளம் தெரியாத துப்பாக்கி தாரிகள் சுட்டுக் கொன்றனர். பாதிக்கப்பட்ட பவளராணி, புதன் கிழமை காலை சாவகச்சேரிக்கு வடக்கே 6 கி.மீ தொலை வில் உள்ள மட்டுவில் கிழக்கில் உள்ள அவரது வீட்டிலி ருந்து துப்பாக்கிதாரிகள் கடத்திச் சென்றதாக பொதுமக்கள் வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறீலங்கா இராணுவத்தின் பழிவாங்கும் துப்பாக்கிச் சூட் டில் பொதுமக்கள் காயமடைந்தனர்.

பாதிக்கப்பட்ட மிஸ் பவளராணி கணபதிப்பிள்ளை, சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் சமுர்த்தி மேம்பாட்டு அதிகாரியாக கடந்த 5 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்த தாக வட்டாரங்கள் தெரிவித்தன.

சமுர்த்தி என்பது இலங்கை அரசாங்கத்தால் நிர்வகிக் கப்படும் வறுமை ஒழிப்புத் திட்டமாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆண் சுட்டு படுகொலை – 11.01.2006

சிறீலங்கா இராணுவ படையினர் யாழ்ப்பாணம் கொக்கு விலில் துப்பாக்கிச் சூடு நடத்தினர், யாழ்ப்பாணம் கே.கே. எஸ் சாலையில் புதன்கிழமை மாலை 7:00 மணியள வில் ஒரு பொதுமக்கள் பயணி கொல்லப்பட்டனர் என்று கொக்குவில் குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். கையெறி குண்டுத் தாக்குதலில் இரண்டு வீரர்கள் காயமடைந்ததை அடுத்து, சிறீலங்கா இராணுவ வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. பாதிக் கப்பட்டவர் இரண்டு குழந்தைகளின் தந்தையான பசுபதி பழனி என மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கையெறி குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர் கொல் லப்பட்டார் என்ற சிறீலங்கா இராணுவத்தின் கூற்றுக்கு மாறாக, துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் மரணத்திற்குக் காரணம் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண நகரத்திலிருந்து 5 கி.மீ வடகிழக்கில் கொக் குவில் அமைந்துள்ளது.

மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் மானிப்பாயில் சுட்டுப் படுகொலை – 11.01.2006

விசுவமடுவில் உள்ள தேராவில் அருகே திருக்கங்காடு என்ற இடத்தில் நேற்று அதிகாலை 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 9 பொதுமக்கள் காயமடைந்தனர்.

சுந்தந்திரபுரத்தின் மையத்தில் உள்ள 100 வீடுகள் கொண்ட திட்டக் குடியிருப்பில் பீரங்கி குண்டுகள் வெடித்தன. ஞாயிற்றுக்கிழமை நண்பகல் காலனியில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 12 பேர் காயமடைந்தனர்.

மீதமுள்ள உயிரிழப்புகளின் விவரம் தெரியவில்லை.

வன்னிப் பகுதியில் "பாதுகாப்பு வலயத்தில்" சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் – 26.01.2009

சிறீலங்கா இராணுவம் திங்கள்கிழமை காலை உடையார்காட்டில் பொதுமக்கள் வசிக்கும் "பாதுகாப்பு வலயத்தில்" மீது மிகவும் மனிதாபிமானமற்ற பீரங்கித் தாக்குதலில் தொடர்ந்து ஈடுபட்டதால், நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் நூற்றுக்கணக்கான காயமடைந்த நோயாளிகள் மருத்துவ உதவி இல்லாமல் உதவியற்றவர்களாக இருந்தனர். உடையார்காட்டில் உள்ள மருத்துவ வட்டாரங்களின் ஆரம்ப அறிக்கைகளின்படி, அனைத்து பொதுமக்களும் 5 மணி நேரத்திற்கும் மேலாக பதுங்கு குழிகளுக்கு அடியில் இருந்தனர். உடையார்காட்டில் உள்ள தற்காலிக மருத்துவமனை 10 நோயாளிகள் கொல்லப்பட்டனர் மற்றும் நான்கு ஆம்புலன்ஸ்கள் சேதமடைந்ததால் முற்றிலும் சீர்குலைந்திருந்தது. மருத்துவர்கள் ICRC-க்கு அழைப்பு விடுத்துள்ளனர், அதுவும் பதுங்கு குழிகளுக்கு அடியில் உதவியற்ற நிலையில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவ அதிகாரிகள் பிராந்தியத்திற்கு வெளியே உள்ள ICRC-ஐத் தொடர்பு கொண்டு, மருத்துவ உதவியை விரைவில் அனுப்பவும், பொதுமக்கள் பாதுகாப்பு மண்டலத்திற்குள் நடக்கும் படுகொலைகளை முடிவுக்குக் கொண்டுவரவும் வலியுறுத்தினர்.

பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட மிகவும் மனிதாபிமானமற்ற இனப்படுகொலைத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான பீரங்கி குண்டுகள் பாதுகாப்பு வலயத்திற்குள் வீசப்பட்டுள்ளன. பொதுமக்களை அவர்களின் உச்சக்கட்ட எல்லைக்குள் கொண்டு வந்து சரணடைய விரும்பும் சிறீலங்கா இராணுவம், இந்தப் படுகொலைக்குக் காரணமாக அமைந்துள்ளது.

மருத்துவ வட்டாரங்களின் ஆரம்ப அறிக்கைகளின்படி, காயமடைந்தவர்களுக்கு உதவயாரும் இல்லை.

கடந்த வியாழக்கிழமை, வவுனியாவுக்குத் திரும்பிய முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், இயல்பு நிலை திரும்பும் வரை இனிமேல் செயல்பட முடியாது என்று கூறினார், மேலும் தனது ஊழியர்களை அந்தப் பகுதியை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தியதாகக் கூறினார்.

வன்னிப் பகுதியில் "பாதுகாப்பு வலயத்தில்" சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல் பொதுமக்கள் படுகொலை 29.01.2009

வியாழக்கிழமை நண்பகல் முதல் "பாதுகாப்பு வலயத்தின்" மையப்பகுதியை நோக்கி சிறீலங்கா இராணுவம் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது, இதில் குறைந்தது 44 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 178 பேர் காயமடைந்தனர் என்று வன்னியிலிருந்து வந்த ஆரம்ப தகவல்கள் தெரிவிக்கின்றன. சுதந்திரபுரம் 100 குடியிருப்புத் திட்டத்தை குறிவைத்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, அங்கு குறைந்தது 7 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. சுதந்திரபுரத்தில் உள்ள புனித அந்தோணி தேவாலயத்திற்கு அருகில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

"பாதுகாப்பு வலயம்" தொடங்கும் இருட்டுமடுவில் குறைந்தது 7 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

வன்னிப் பகுதியில் "பாதுகாப்பு வலயம்" மீது சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல் – பொதுமக்கள் படுகொலை 28.01.2009

சிறீலங்கா இராணுவம் "பாதுகாப்பு வலயத்திற்குள்" இருந்த பொதுமக்கள் மீது மற்றொரு மிருகத்தனமான தாக்குதலை நடத்தியது, இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு (?) உறுதியளித்த பின்னர் புதன் கிழமை நண்பகல் முதல் 12 மணி நேரத்திற்குள் 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பீரங்கித் தாக்குதலில் 121 பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இறந்தவர்களில் பாரதிபுரத்தில் உள்ள ஒரு அனாதை இல்லத்தில் வசிக்கும் ஒரு குழந்தையும், காயமடைந்தவர்களில் ஒருவர் தென்னிந்திய திருச்சபையின் (அமெரிக்க மிஷன்) சுதந்திரபுரம் திருச்சபை பாதிரியாரும் ஆவார்.

சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளான அனாதை இல்லம், டிசம்பர் 2004 சுனாமியின் போது எழுபதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்தனர். இது பெண்கள் மேம்பாடு மற்றும் மறுவாழ்வு மையத்தால் (CWDR) நடத்தப்படுகிறது.

மூங்கிலாறு, ரெட் பர்னா குடியேற்றம், உடையார்கட்டு, சுதந்திரபுரம், தெய்வீபுரம், வள்ளிபுனம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களை குறிவைத்து பீரங்கித் தாக்குதல்

உடையார்கட்டு தற்காலிக மருத்துவமனையின் புகைப் படங்கள் பின்வருமாறு:

வன்னிப் பகுதியில் "பாதுகாப்பு வலயத்தில்" சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல் பொதுமக்கள் படுகொலை 28.01.2009

சிறீலங்கா இராணுவம் நடத்திய "பாதுகாப்பு வலயத்தில்" பீரங்கித் தாக்குதல்களில் காயமடைந்தவர்களில் சிலர் மட்டுமே உயிர் பிழைத்துள்ளனர் என்று உடையார்கட்டு பொதுமக்கள் தன்னார்வலர்கள் தெரிவிக்கின்றனர், அவர்கள் இறந்தவர்களை அடக்கம் செய்ய மக்களுக்கு உதவி வருகின்றனர். சிலர் மட்டுமே உடல்களை மருத்துவமனை பிணவறைக்கு அனுப்பினர்.

300 பொதுமக்களின் இறந்த உடல்களில் 10% மட்டுமே திங்கட்கிழமை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டன. கொல்லப்பட்டவர்களில் 90% பேர் கொல்லப்பட்ட இடத்தில் அடக்கம் செய்யப்பட்டனர்.

செவ்வாய்க்கிழமை மேலும் 21 பொதுமக்கள் கொல்லப்பட்டதை மட்டுமே சரிபார்க்க முடிந்தது என்று மருத்துவ ஊழியர்கள் தெரிவித்தனர். தேவையான மருந்துகளில் பெரும்பாலானவற்றுக்கு காலியாக இருந்த, காயங்களுக்கு கட்டு கட்ட கூட போராடி வந்த தற்காலிக மருத்துவமனையில், செவ்வாய்க்கிழமை காயமடைந்த 20 பேர் மட்டுமே சிகிச்சை பெற்றனர்.

பிராந்திய சுகாதார சேவைகள் இயக்குநர்கள் அலுவலகங்கள் பலமுறை அழைப்பு விடுத்த போதிலும், வெளிப்புற மருத்துவக் குழுக்களின் அறிகுறியோ அல்லது மருத்துவமனைக்கு உதவியோ இல்லை.

"பாதுகாப்பு மண்டலம்" மீதான கண்மூடித்தனமான தாக்குதலைத் தொடர்ந்து ஐ.சி.ஆர்.சி ஊழியர்கள் மட்டுமல்ல, மருத்துவ ஊழியர்களும் தங்கள் பதவிகளை விட்டு வெளியேற வேண்டியிருந்தது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"பாதுகாப்பு மண்டலத்திற்குள்" சுதந்திரபுரம் சந்திப்பிலிருந்து 1 கி.மீ தொலைவில் சிறீலங்கா இராணுவத்தால் வீசப்பட்ட எறிகணைகளால் தாக்கப்பட்ட 4 வாகனங்கள் தீப்பிடித்து எரிந்ததாகவும், உள்ளே இருந்த பொதுமக்கள் தப்பிக்க போராடினார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தீ மற்றும் புகையை சுவாசித்ததால் உயிரிழந்தனர்.

சுதந்திரப் பசியில் உறுதிபூண்ட மக்களை சோற்றுப் பசி தீண்டிவிடப் போவதில்லை.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

இலங்கையில் ஆதி இரும்புக்காலமும் பெருங்கற் பண்பாடும் பகுதி 1

இக்கால விஞ்ஞான அறிவியல் ரீதியான காலக்கணிப்புகளின் படி தமிழ்நாட்டில் சிவகளை போன்ற மையங்களில் கி.மு. 3400 ஆம் ஆண்டளவில் இரும்பின் உபயோகம் ஆரம்பமாகியுள்ளது (ராஜன், கா. 2025). இலங்கையிலும் இரும்பின் உபயோகம் கி.மு. 3380 ஆம் ஆண்டுக்காலத்தில் ஆரம்பமாகியிருக்கிறதாக அறியப்படுகிறது (Deraniyagala, S.U. 2013: 511). இக்காலம் முதல் கல்லாயுதங்களுக்குப் பதிலாக இரும்பினாலான ஆயுதங்களையும், கருவிகளையும் மக்கள் தமது அன்றாட வாழ்வில் பெருமளவு பயன்படுத்தினார்களாகையால் இக்காலம் இரும்புக்காலம் எனப் பெயர் பெற்றது. இக்காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியாகையால் இதை வரலாற்று உதய காலம் என்றும் அழைப்பார்கள்.

ஆதிச்சநல்லூரில் காணப்பட்ட ஈமப்புதையல் தாழி

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஆதி இரும்புக்காலம் பெருங்கற்காலப் பண்பாட்டுக்காலம் எனச் சில ஆய்வாளர்களால் அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் இப்பண்பாட்டைக் கடைப்பிடித்த ஆதி இரும்புக்கால மக்கள் இறந்தோரை அடக்கம் செய்ய ஈமச் சின்னங்களுக்குப் பெரிய கற்களைப் பயன்படுத்தியமை ஆகும். பெருங்கற்களினாலான இச் சமாதிகளுடன் மற்றும் பல வாழ்வியல் அம்சங்கள் பின்னிப்பிணைந்து இருப்பதனால் இது பெருங்கற் பண்பாடு அல்லது பெருங்கற்

தென்னிந்திய-இலங்கை இரும்புக்கால குடியிருப்புகள், கறுப்பு-சிவப்பு மண்பாண்ட பரவல்கள், பெருங்கற் பண்பாட்டு ஈமப் புதையல்கள்

Image Source - Allchins B&R

கலாசாரம் எனப் பெயர் பெற்றது.

இரும்புக்காலம் (Iron Age) என்ற சொற்பதம் உலகம் முழுவதிலும் இரும்பு உபயோகத்திற்கு வந்த ஒரு காலகட்டத்தைக் குறிப்பிடுகிறது. இது உபயோகத்திற்கு வந்த எல்லா நாடுகளிலும்



வட இலங்கையின் சில பெருங்கற் பண்பாட்டு மையங்கள்

Image Source - Dr S. Seneviratne, 1984

பெருங்கற்பண்பாடு நடைமுறையில் இருந்தது எனக் கூற முடியாது. எனவே, பெருங்கற்காலம் என்ற சொற்பதம் இரும்புக் காலத்தின் மாற்றுப்பதமாக இருக்க முடியாது. இது பற்றி பிரித்தானிய தொல்லியலாளர் ஸேர் மோட்டிமர் வீலர் கூறியது இங்கே நினைவுகூரத் தக்கது: “The Megalithic is one of several cultural traits during the Iron Age” (இரும்புக் காலத்தைய பல கலாசார முன்னெடுப்புகளில் பெருங்கற் பண்பாடும் ஒன்றாகும்). தென்னிந்திய - இலங்கையில் காணப்படும் இரும்புக் காலத்தைய பெருங்கற் புதையல்களில் இரும்பு காணப்பட்டாலும், பெருங்கற்களற்ற இரும்புக்கால ஈமப் புதையல்கள் இந்தியாவில் பல இடங்களில் காணப்படுகின்றன. இன்னும், இரும்பு இல்லாத வெண்கலக்கால பெருங்கற்புதையல்களும் சில இடங்களில் காணப்படுகின்றன. மேலும், ஈமப்புதையலற்ற விவசாய, மற்றும் சமுதாய மாற்றப் பண்பாட்டுக் கூட்டுகள் இரும்புக்காலத்தில் பல இடங்களில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழகத்தின் இரும்புக்காலம் நான்கு முக்கியமான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருக்கிறது. அவையாவன: பெருங்கற் படைச் சமாதிகளில் அல்லது ஈமத்தாழிகளில் நீத்தாரை அடக்கம் செய்தல், இரும்பின் உபயோகம், கறுப்புச் - சிவப்பு மட்பாண்ட உபயோகம், நீர்ப்பாசன வேளாண்மை ஆகியனவாகும். இவை நான்கும் ஒரே சமயத்தில் ஒரு பண்பாட்டுப் பொதியாக (Cultural Package) ஆரம்பித்தனவாகத் தெரியவில்லை. அவற்றின் தோற்றமும் வருகையும் வெவ்வேறு காலப்பகுதிகளில் ஆரம்பமான போதிலும் பெரும்பாலான எல்லா மையங்களிலும் ஒரு காலப்பகுதியில் அவை ஒரு பண்பாட்டுத் திரட்டாக நிகழ்ந்திருக்கின்றன.

பெருங்கற் பண்பாடு

இறந்தவர்களை அடக்கஞ் செய்வதற்குப் பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச் சின்னங்களை அமைத்தமையால் இவ்வழக்கம் பெருங்கற் பண்பாடு (Megalithic Culture) எனப் பெயர் பெற்றது. துருக்கியில் நெவாலி கோரி, கொபெக்லிரேபி (Nevali Çori, Göbeklitepe) ஆகிய இடங்களில் காணப்படும் கி.மு. 9,000 - 8400 ஆண்டுகளுக்குரிய ஈமச் சின்னங்களற்ற, வழிபாட்டிற்குரிய கற்காலப் பெருங்கல் நடுகற்கள் மற்றும் கோயில்கள் இப்பண்பாட்டு வகையைச் சேர்ந்தவையல்ல. ‘பெருங்கற் பண்பாடு’ என்ற பதம் மக்களின் வதிவிடங்களுக்கு அப்பால், இடுகாடுகளில் ஈமப் புதையலோடு சம்பந்தப்பட்ட கற்கட்டடங்களை உள்ளடக்கிய பண்பாட்டுத் தொகுதியையே குறிப்பிடுகிறது.

ஆரம்பமும் பரவலும்

இவ்வழக்கம் மத்தியதரை - மேற்கு ஆசிய நாடுகளில் கி.மு. 6,000 - 5,000 ஆண்டுகளில் ஆரம்பமாகி உலகின் பல இடங்களுக்கும் பரவியிருக்கிறது. காலத்திலும் அகன்ற பரப்பிலும் உலகின் பல இடங்களுக்கும் பரவிய பண்பாடுகளில் இதுவும் ஒன்றாகும். மத்தியதரை நாடுகளிலிருந்து மேற்கு ஐரோப்பாவிற்கும், கிரேக்கத்தினூடாக தெற்கு ஐரோப்பாவிற்கும், உலோகங்களைத் தேடிச்சென்ற வர்த்தகர்களால் இது பரப்பப்பட்டிருக்கிறது. அதன் பரவல் குறுக்கும் நெடுக்குமாக ஐரோப்பிய நாடுகளில் பரவியிருக்கிறது. அந்நாடுகளில் இவ்வழக்கம் ஆரம்பமான காலம் வெண்கலக் காலமாகும். அக்காலத்தில் அந்த நாடுகளில் இரும்பு அறிமுகமாகவில்லை.

இந்தியாவில் இப்பண்பாட்டின் பரவலைப் பற்றி பலவகையான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலண்டன் பல்கலைக் கழகத்தின் கீழையுலக ஆபிரிக்க கற்கைக் கூடத்தில் (SOAS) பேராசிரியராகவிருந்த கிறிஸ்தோபர் வொன் பியூரர் ஹெய்மென்டோவ் (Christopher von Fürer-Haimendorf) “இந்தப் பண்பாட்டை இந்தியாவிற்குக் கொண்டு வந்தவர்கள் மேற்கு ஆசியாவிலிருந்து கடல் மார்க்கமாகவோ அல்லது கடற்கரை வழியாகவோ இங்கே புலம்பெயர்ந்து வந்த திராவிட மொழிகளைப் பேசும் மக்களாவர்” எனக் கூறிச் சென்றிருக்கிறார். இச் சின்னங்களைத் தமிழகத்தில் அமைத்தோர் காலத்தில் இரும்பு பாவனைக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அஸ்கோ பார்ப்போலா அவரது ‘The South Indian Megaliths’ என்ற நூலில் இப்பண்பாட்டை ஆரியர்களின் விருத்தியாஸ் (Vratyas) என்றொரு குழுவினருடன் தொடர்புபடுத்துகிறார் (Parpola, A. 1973). இக்கருத்தை ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு இரு காரணங்கள் உள்ளன. நவீன காலக்கணிப்புகள் இப்பண்பாட்டின் ஆரம்ப காலத்தை கி.மு. 1900 - 1500 ஆண்டுகளுக்கு எடுத்துச் செல்கின்றன. இக்காலப்பகுதியில் இந்தோ ஆரியர்கள் தென் ஆசிய மண்ணில் அடியெடுத்து வைக்கவில்லை. இரண்டாவது, வட இந்தியாவில் ஒரு சில மையங்களில் மட்டுமே இப்பண்பாடு காணப்படுகிறது. அது ஆதியில் திராவிட மக்கள் வாழ்ந்த இடங்களாக இருக்கலாம். தென்னந்தியாவிலோ இது மிகப்பரவலாக நாடெங்கும் பரந்து காணப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்க கோர்ணல் பல்கலைக்கழக மானிடவியல் பேராசிரியர் கென்னெத் கென்னடியின் தென்னாசிய பெருங்கற் பண்பாட்டின் ஆய்வு முடிவுகளைப் பதிவு செய்வது முக்கியமாகிறது:

"The focus of this culture lies south of the Vindhyan range, particularly in the watersheds of Godavari and Krishna and along the Eastern and Western Ghats. The island of Sri Lanka is the southernmost extension of this culture. The analysis of the archaeological and the anthropological data from the excavations shows that it was the Neolithic people of Peninsular India, who were associated with the present-day language speakers of the states of Tamil Nadu, Kerala, Andhra and Karnataka who developed this culture" (Kennedy, K.A.R. 1975: 60).

"இப்பண்பாட்டின் குவிமையம் விந்திய மலைக்குத் தெற்கே, முக்கியமாக கோதாவரி - கிருஷ்ணா நதிகளின் ஆற்றுப்படுகை நிலங்களிலும், கிழக்கு - மேற்கு கரையோர மலைத் தொடர்களிலும் அமைந்திருக்கிறது. இந்தப் பண்பாட்டின் தென்திசைப் பரவலின் இறுதி நீட்சி இலங்கை ஆகும். தொல்லியல் ஆய்வுத் தரவுகளினதும், மானிடவியல் ஆய்வுத் தரவுகளினதும் பகுப்பாய்வு காட்டுவது - இந்தியத் தீபகற்பத்தின் புதிய கற்கால மக்கள், அதாவது தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் வாழும் இன்றைய மொழிகளைப் பேசும் மக்களே இப்பண்பாட்டை உருவாக்கியவர்களாவர்."

அட்டவணை 4: தமிழ்நாட்டில் தொடக்ககால இரும்புக் காலத் தொல்லியல் தளங்கள் (AMS¹⁴C மற்றும் OSL காலக்கணிப்புகளின் ஒப்பீடு)

வ. எண்	தளம்	நிறுவனம்	மாதிரி எண்	சூழல்	கதிரியக்கக் காலக்கணிப்பு (in BP; BP for OSL is 2020 CE)	நியம விலகல் ± காலம்	வரையறுக்கப்பட்ட (calibrated) கதிரியக்கக் காலம் (கி.மு.)	முறை
1	வல்லம்	தமிழ்ப் பல்கலைக் கழகம்	PRL- 1109	வாழ்விடப் பகுதி - கரிமம்	2980 BP	30	கி.மு.1030	AMS¹⁴C
2	ஆதிச்ச நல்லூர்	இந்தியத் தொல்லியல் துறை	IUACD# 23C5693	பகுதி-B; தாழி. 13 நெல்	2840 BP	54	கி.மு. 1052	AMS¹⁴C
3	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 600726	குழி-A2-தாழி-3	2950 BP	30	கி.மு. 1155	AMS¹⁴C
4	ஆதிச்ச நல்லூர்	இந்தியத் தொல்லியல் துறை	IUACD# 23C5692	பகுதி-C; தாழி. 38 நெல்	2947 BP	46	கி.மு.1257	AMS¹⁴C
5	மாங்காடு	பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்	AA 104114	ஈமக்குழி-இரும்பு	3213 BP	34	கி.மு.1263	AMS¹⁴C
6	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	A2-தாழி-3 பானை	3304 BP	561	கி.மு. 1284	OSL
7	ஆதிச்ச நல்லூர்	இந்தியத் தொல்லியல் துறை	IUACD# 23C5689	பகுதி-C; தாழி. 7 தானியம்	3155 BP	40	கி.மு. 1384	AMS¹⁴C
8	மயிலாடும் பாறை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 620258	வாழ்விடம்-கரிமம்	3310 BP	30	கி.மு. 1569	AMS¹⁴C
9	கீழ்நமண்டி	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 666752	ஈமச்சின்னம்-3 கரிமம்	3400 BP	30	கி.மு. 1692	AMS¹⁴C
10	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	L13-தாழி-5	3856 BP	363	கி.மு. 1836	OSL
11	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	L13-தாழி-2	3929 BP	334	கி.மு. 1909	OSL
12	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	L13-தாழி-8	4008 BP	411	கி.மு. 1988	OSL
13	மயிலாடும் பாறை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 620259	வாழ்விடப்பகுதி கரிமம்	3310 BP	30	கி.மு.2172	AMS¹⁴C
14	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	PRL	A2-தாழி-1	4447 BP	402	கி.மு. 2427	OSL
15	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	PRL	L13-தாழி-5	4470 BP	308	கி.மு.2450	OSL
16	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	A2-தாழி-1	4479 BP	358	கி.மு.2459	OSL
17	ஆதிச்ச நல்லூர்	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta - 709374	வாழ்விடம், மண்ணடுக்கு -4, 220 cm, கரிமம்	4010 BP	30	கி.மு.2522	AMS¹⁴C
18	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 583594	C3/1-தாழி	4300 BP	30	கி.மு. 2953	AMS¹⁴C
19	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 583592	A2-தாழி-1	4540 BP	30	கி.மு. 3259	AMS¹⁴C
20	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 583593	B3-தாழி	4670 BP	30	கி.மு. 3345	AMS¹⁴C

கதிரியக்கக் காலக்கணிப்புகள் காட்டும் தமிழ்நாட்டின் ஆதி இரும்புக்கால மையங்கள்

Image Source - தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

காலக்கணிப்பு

தென்னிந்தியாவில் இப்பண்பாடு ஆரம்பித்த காலம் பற்றி காலத்திற்குக் காலம் வேறுவேறான திகதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கர்நாடகத்தில் பிரம்மகிரியில் அகழாய்வுகளை மேற்கொண்ட சேர் மோட்டிமர் வீலர் இப்பண்பாட்டிற்கு ஒரு தொல்லியல் பின்னணி அமைப்பைக் (Archaeological Setting) கொடுத்திருந்தார். இப்புதையல்களுக்கு கதிரியக்கக் கரிமத் திகதிகள் இல்லாத அக்காலத்தில் இதற்கு கி.மு. 300க்கும் கி.பி 100க்கும் இடைப்பட்ட கால வரையறையைக் கொடுத்திருந்தார் (Wheeler, R.E.M. 1947).

இப்புதையல்களுக்கு முதன்முதலாக கதிரியக்கத் திகதிகளைப் (Radiometric Dates) பெற்றுக்கொண்டபோது இதன் ஆரம்ப காலம் இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன்னர் பின்நோக்கிச் சென்றது. வட கர்நாடகத்தில் அகழாய்வுகளை மேற்கொண்ட சுந்தரா இதற்குரிய காலத்தை கி.மு. 1200 ஆகப் பெற்றுக்கொண்டார் (Sundara, A. 1985). பின்னர் இப்பண்பாடு ஆரம்பித்த கர்நாடகத்தின் குமரனகல்லி, தடகனகல்லி ஆகிய மையங்களில் கதிரியக்கத் திகதிகள் கணிக்கப்பட்டபோது இப்பெருங்கற் சின்னங்கள் கி.மு. 1900 - 1500 ஆண்டுகளில் ஆரம்பித்திருப்பதாகவும், அங்கே இரும்பின் உபயோகம் பொ.யு.மு. 1200 - 1000 ஆம் ஆண்டுகளில்தான் நடைமுறைக்கு வந்ததாகவும் அறியப்பட்டது (Moorti, U.S. 1994: 123; Possehl, G. 1994).

பண்பாட்டின் சிறப்பியல்புகளும் தென்னிந்தியப் பரவலும்

இன்றைய கதிரியக்கக்கரிமத் (Radiocarbon) தேதிகள் தரும் காலப்படி இப்பண்பாடு கர்நாடகத்தில் கி.மு. 1900 - 1500 ஆண்டுக்காலத்தில் ஆரம்பித்து தென்னிந்தியாவிற்கும், சில வட இந்திய மையங்களுக்கும் பரவியிருக்கிறது. தென்னிந்தியாவிலிருந்தே இப்பண்பாடு இலங்கைக்குப் பரவியதாகையால், அதன் தென்னிந்தியப் பரவலையும் சிறப்பியல்களையும் பார்ப்பது இன்றியமையாதது.

தமிழகத்தில் பழைய, புதிய கற்காலத்திலிருந்து ஏற்கனவே பழக்கத்திலிருந்து வந்த இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் இரும்புக் காலத்திலும் தொடர்ந்தது. ஆனால் சாதாரண மண் குழிப் புதையலுக்குப் பதிலாக பெரிய கற்பலகைகளைப் பயன்படுத்தி வட்ட வடிவம், குத்துக்கல், கற்பதுக்கை, நீள்சதுரக்கல்லறை எனப் பலவகையான கல்லறைகளை உருவாக்குதல் பெருங்கற் பண்பாட்டுக் கூறாக அறியப்படுகிறது. இத்தகைய பெருங்கற்காலச் சின்னங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன.

இதுபோன்ற மற்றொரு ஈமப் புதையல் முறை இறந்தவர்களை முதுமக்கள் தாழிகளில் இட்டுப் புதைப்பதாகும். இப்புதையல்களில் கற்கள் பயன்படுத்தப்பட்டிராத போதிலும் இத்தாழிகள் பெருங்கற் பண்பாட்டிற்கு உரியவை என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில் இப்புதையல்களில் காணப்படும் ஈமப் பொருட்களான (Grave Goods) மட்பாண்டங்கள், மணிக்கற்கள், இரும்புப் பொருட்கள் என்பன பெருங்கல் கல்லறைகளில் காணப்படும் அதே பொருட்கள் போன்றே உள்ளன. தமிழகத்தில் பெருங்கற் பண்பாட்டு ஈம நடைமுறைகள் கி.மு. 1200 ஆண்டு முதலாக கி.பி. இரண்டாம் - மூன்றாம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்ததாகக் கணிப்பிடப்படுகிறது. பெருங்கற் பண்பாட்டு ஈமப்புதையல் மரபு சில இடங்களில் பிந்திய நூற்றாண்டுகளிலும் தொடர்ந்திருப்பதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன.

பெருங்கற் பண்பாட்டு ஈமச் சின்னங்கள் பற்றிய ஆய்வில் அக்காலத்தைய மனிதன் வாழ்ந்த குடியிருப்புகள் பற்றிய ஆய்வுகளும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றன. இப்பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக ஈமச் சின்னங்கள், மக்கள் குடியிருந்த பகுதிகள் மட்டுமன்றி குளங்களும், வயல்களும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இதனால் முன்னைய காலத்தைப் போலன்றி நீர்ப்பாசனம் மூலம் விவசாயம் செய்தல் இக்காலத்தில் பரவலாகக் காணப்பட்டது. நீரைத் தேக்கிவைத்து மழை இல்லாத காலத்தில் பயிர்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்குக் குளங்களும் இக்காலத்தில் அமைக்கப்பட்டன. கி.மு. 1200 ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து நீரில் சிறப்பாக வளரும் நெல் ஒரு பிரதான தானியமாகப் பயிரிடப்பட்டது (சிற்றம்பலம், சி.க. 1999: 90).

இவ்வாறு உணவு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி மக்கள் வாழ்விலும் செழிப்பை உண்டு பண்ணியது. இத்தகைய செழிப்பை இக்காலக் குடியிருப்புகளில் கிடைத்துள்ள பல்வகை உலோகப் பொருட்கள், அரிய மணிகள், சங்குகள் என்பன எடுத்துக்காட்டுகின்றன. பல குழுக்களாக மக்கள் வாழ்க்கைமுறை அமைந்ததால் இக் குழுக்களுக்கிடையிலான சண்டைகள் (Tribal Warfare) ஒரு பொது நிகழ்ச்சியாக இக்காலத்தில் காணப்பட்டது. தமிழகத்தில் இவ்வாறு குழுக்களாக வளர்ச்சி பெற்ற சமுதாயம் காலப்போக்கில் பிராந்திய அரசுகளின் தோற்றத்திற்கு வழி வகுத்தது. இப்பிராந்திய அரசுகள் தோன்றுவதற்கான சூழல் தென்னகம் முழுவதும் காணப்பட்டாலும், தமிழகத்திலேயே இவை முதலில் தோன்றியது குறிப்பிடத்தக்கது. இதற்குப் பல விசேட காரணிகள் இருந்தன. இத்தமிழக அரசுகள் பற்றிய குறிப்பு அசோகச் சக்கரவர்த்தியின் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. கல்வெட்டுகளில் இவைகள் சேர, சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரளபுத்திர அரசுகள் என அழைக்கப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின் பிராந்திய அரசுகளின் எழுச்சிக்கும், வரலாற்றுக் காலத்திலே தமிழகம் துரித வளர்ச்சி காண்பதற்கும் ஆதாரமாய் அமைந்தது இப் பெருங்கற்காலமே. இதனால் இவ்வாறு வரலாற்றுக்கால வளர்ச்சிக்கு - வரலாறு மலருவதற்கு - வழிசமைத்துக் கொடுத்த இக்காலத்தை தொல்லியலாளர் வரலாற்றுதய காலம் (Protohistoric Period) என அழைப்பர். தமிழகத்தில் இது நிலவிய காலத்தை இன்றைய ஆய்வுகளின்படி கி.மு. 1200 ஆம் ஆண்டு தொடக்கம் ஏறக்குறைய கி.மு. 600 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி எனலாம் (சிற்றம்பலம், சி.க. 1999: 90-91).

தமிழகத்தைப் பொறுத்த வரையில் வடக்குத் தமிழகத்தில் இரும்புக்காலம் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வருகிறது. ஆனால் தென் தமிழகத்திலும், இலங்கையிலும் இரும்புக் காலம் நுண்கற்காலத்தைத் தொடர்ந்து வந்திருக்கிறது. தெளிவான தேதிக்கணிப்புகள் கிடைக்காத சென்ற நூற்றாண்டில் இரும்புப் பொருட்கள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், பெருங்கற்படைச் சின்னங்கள் அனைத்தையும் எல்லா மையங்களிலும் ஒருமித்துக் கண்ட ஆய்வாளர்கள் தமிழகத்தில் 'இரும்புக் காலம்' என்பதும் 'பெருங்கற்காலம்' என்பதும் ஒன்றுதான் எனக் கூறினார்கள். இக்கருத்துக்கு இன்றைய சில ஆய்வாளர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்: 'பெருங்கற் பண்பாட்டுக் காலம்' என்பது ஒரு தவறான சொற்பிரயோகம் (Misnomer) என்பது மட்டுமல்லாது பலவகையான, வித்தியாசமான, பண்பாட்டுச் சூழல்களிலும், பாரம்பரியங்களிலும் வழக்கிலிருக்கும் இரும்பின் வேறுபட்ட உபயோகங்கள் அனைத்தையும் 'பெருங்கற் பண்பாட்டுக் காலம்' என்ற கட்டத்திற்குள் அடக்க முடியாதென்றும், அப்படி அடக்குவது அபத்தம் என்றும் வாதாடினார்கள். மேலும், 'தாழிப் புதையல்களை', 'பெருங்கற் புதையல்கள்' என அழைக்க முடியாது என்பதும் சிலரது வாதம்.

தமிழ்நாட்டில் கொடுமணலில் காணப்படும் வட்ட வடிவான பெருங் குத்துக்கல்களின் நடுவே அமைந்துள்ள பெருங்கற் கல்லறை.

Image Source - கா. ராஜன்

இலங்கையில் இபன்கட்டுவவில் காணப்படும் பெருங்கற்களினாலான ஈமப்புதையல் கல்லறைகள்

Image Source - Algemeine und Vergleichende Archaeogie (German Archaeological Team) 1990

இபன்கட்டுவவில் காணப்படும் கல்லறைகள்

கேகாலையில் பதவிகம்பொலவில் காணப்படும் கற்பதுக்கை (Dolmen)

நாம் ஏற்கனவே கூறியது போல, இந்த வாதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் சென்ற நூற்றாண்டில் சேர் மோட்டிமர் வீலர் கூறிச் சென்றது பொருத்தமாக இருக்கும்: "இரும்புக்காலத்தின் பலவகையான பண்பாட்டுக் கூறுகளில் பெருங்கல் பண்பாடும் ஒன்று" (The Megalithic is one of several cultural traits of the Iron Age) என்பது அவரது கருத்து. 'இரும்புக்காலம்' புதிய

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

செட்டிகுளத்தில் கண்ட கல்வட்டம்

Image Source - கலாநிதி ப. புஷ்பரட்ணம்

மேற்காணப்படும் பெருங்கற் புதைகுழி போன்ற ஒரு கல்லறையினுள்ளே 1972ஆம் ஆண்டில் வல்லிபுரத்தில் முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டது

கற்காலத்தைத் தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதி (Time Period). ‘பெருங்கற் பண்பாடு’ அக்காலப்பகுதியில் தென்னகத்திலும் இலங்கையிலும் இடம்பெற்ற ஒரு ‘பண்பாட்டுத் தொகுதி’ எனக் கொள்வதில் தவறேதும் இல்லை. இன்றைய ஆய்வுகளின்படி தமிழகத்தின் பல மையங்களில் ‘பெருங்கற் பாண்பாட்டின்’ ஆரம்ப காலத்திற்கு முன்னரே இரும்புக்காலம் ஆரம்பமாகி விட்டது.

தென்னகத்திலும் இலங்கையிலும் இப்புதையல் பண்பாட்டோடு வேறு சில அம்சங்களும் அவசியமான கூட்டாக இணைந்து ஒரு பெருங்கற்காலக் கலாசாரமாக உருவானது. இக்கலாசாரத்தின் சிறப்பியல்புகளாக பின்வரும் ஆறு அம்சங்களும் அமைகின்றன: 1. நீர்ப்பாசனக் குளம் 2. நெல் வயல்கள் 3. குடியிருப்புகள் 4. இறந்தோரை அடக்கம் செய்த பெருங்கற் கல்லறைகள் அல்லது தாழிகள் 5. இரும்பு உபயோகம் 6. மட்கலன்கள் வனையும் சில்லு 7. கறுப்பு - சிவப்பு மட்பாண்ட உபயோகம் 8. மட்கலன்களில் வரையும் எழுத்துக் குறியீடுகள் என்பன. கல்லறைகள் போன்று தாழிப்புதையல்களும் இப்பண்பாட்டின் ஒரு கூட்டு அம்சமாக விளங்குவதனால் அவற்றையும் ‘பெருங்கற் பண்பாடு’ என்ற குடைக்குள் உள்ளடக்குவதில் தவறேதும் இல்லை என்பது பல ஆய்வாளர்களின் கருத்து.

இவ்வகையான ஈமப்புதையல் முறை இறந்தவர்களைப் பெரிய தாழிகளில் இட்டுப் புதைப்பதாகும். இப்புதையல்களில் கற்கள் பயன்படுத்தப்பட்டிராத போதிலும் இத்தாழிகள் பெருங்கற் பண்பாட்டிற்கு உரியவை என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில் இப்புதையல்களில் காணப்படும் ஈமப்பொருட்களான (Grave Goods) மட்பாண்டங்கள், மணிக்கற்கள், இரும்புப் பொருட்கள் என்பன பெருங்கல் கல்லறைகளில் காணப்படும் அதே பொருட்கள் போன்றே உள்ளன. தமிழகத்தில் பெருங்கற் கால ஈம நடைமுறைகள் கி.மு. 1200 ஆண்டு முதலாக கி.பி. இரண்டாம் - மூன்றாம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்ததாக மதிப்பிடப்படுகிறது. பெருங்கற்கால மரபு சில இடங்களில் பிந்திய நூற்றாண்டுகளிலும் தொடர்ந்திருப்பதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன.

“மூன்றடி ஒன்பது அங்குல உயரமும், மூன்றடி ஆறு அங்குல விட்டமும் கொண்ட பெரிய தாழிகளில் (பானை) உட்கார்ந்த நிலையில் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன” என்கிறார் ஆதிச்சநல்லூரில் தாமிரபரணி ஆற்றங்கரை மேடுகளில் இத்தாழிகளை அகழ்வாய்வு செய்த தொல்லியலாளர் அலெக்ஸாந்தர் ரியா (Alexander Rea, 1915).

பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சான்றுகள் தென்னாசியாவிலே பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அது திராவிட மொழிகள் பேசும் தென்னிந்தியாவிலேதான் செறிந்து காணப்படுவதோடு, சில தனித்துவமான அம்சங்களையும் கொண்டு விளங்குகிறது. இப்பண்பாட்டுக்குரிய ஈமச்சின்னங்களின் வகையாக முதுமக்கள் தாழிகள் (Urn Burials), கல்லறைகள் (Cist Burials), கற்கிடைகள் (Rock-cut Burials) என்பன விளங்குகின்றன. தென் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சங்க காலத்தில் புதைகுழியும், தாழி அடக்கமுறையுமே பெருமளவு பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது (சிற்றம்பலம். சி.க. 1999: 50-51).

தென்னிந்தியாவில் இரும்பின் அறிமுகம், நீர்ப்பாசனத்துடன் கூடிய பயிர்ச்செய்கை, கறுப்பு - சிவப்பு மட்பாண்ட உபயோகம், கட்டமைப்புடைய சமூகத்தோற்றம், அரச அமைப்பு என்பன இப்பண்பாட்டுடன் தோற்றம் பெறுகின்றன. சங்ககாலத்தில் சிறப்புற்றிருந்த சேர, சோழ, பாண்டிய அரசுகள் இப்பண்பாட்டின் பின்னணியிலே தோன்றியவையாகும். இத்தகைய ஒரு பண்பாடே கிறிஸ்துவிற்கு முற்பட்ட ஆயிரத்தாண்டு காலப்பகுதியில் இலங்கையிலும் பரவி நீர்ப்பாசன நாகரிகத்தை மையமாகக் கொண்ட நகரங்களும், அரசுகளும் தோற்றம் பெறக் காரணமாக இருந்தன என்பதை இந்நாட்டின் முக்கிய பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இப்பண்பாட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

உணவு உற்பத்திக்காக இரும்புப் பொருட்கள் ஆற்றிய பணி அளப்பரியது. காடுகளை அழித்து நிலத்தை வயல்கள் ஆக்குவதற்கும், வயல்களுக்கு அருகாமையில் குளங்கள் வெட்டுவதற்கும், ஏர் முனைகளை இரும்பு முனைகளாக ஆக்குவதற்கும், அரிவாட்கள், சத்தகங்கள், கத்திகள் போன்ற கருவிகளைச் செய்வதற்கும் எஃகு இன்றியமையாத சாதனமாக ஆனது.

இலங்கையின் பெருநிலப்பகுதியில் இப்பண்பாடு நிலவியதற்கான சான்றுகள் அநுராதபுரம், கதிரவெளி, பொம்பரிப்பு, வவுனியா, திசமஹாரகம, மாந்தை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப் பண்பாட்டோடு கூடிய கறுப்பு - சிவப்பு மட்பாண்டம் இலங்கை முழுவதுமே பரந்து காணப்படுகிறது. தென்னிந்தியாவில் கி.மு. 1500 ஆம் ஆண்டளவில் தோற்றம் பெற்ற இப்பண்பாடு எவ்வாறு தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு எனப் பல்வேறு பண்பாடுகளைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்ததோ, அதே போல இலங்கையிலும் தமிழ், சிங்களப் பண்பாடுகள் தோன்றுவதற்கு இப்பெருங்கற் பண்பாடே காரணமாக இருந்தது என்ற கருத்தை பேராசிரியர் சிற்றம்பலம் முன்வைத்திருக்கிறார் (Sittampalam>.S.K. 1980: 384).

பெருங்கற் பண்பாட்டின் பரவல்

ஆதி இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடு தென் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டுக்கும் கேரளத்திற்கும் பரவியது. தென் கர்நாடகத்தில் பெங்களூர் மற்றும் கோலார் மாவட்டங்களில் பெருந்தொகையான ஆதி இரும்புக்கால சவ அடக்கங்கள் உள்ளன. அவை வெளிப்படுத்தும் பண்பாட்டின் பரம்பலாகவே கிழக்கே தமிழ் நாட்டின் வடபகுதியில் தர்மபுரி மாவட்டத்திலும், வட ஆற்காட்டிலும் உள்ள சவ அடக்கங்களைக் கருத வேண்டும். இவை பொன்னையாறு, பாலாறு, காவேரி நதிகளின் கரையை அடுத்துக் காணப்படுகின்றன. இந்த நதிகள் தென் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டை நோக்கிப் பாய்கின்றன. ஆகவே, இந்நதிகள் வழியாகத் தென் கர்நாடகத்திலிருந்து இப்பண்பாடு தமிழ் நாட்டிற்குள் பரவிய முறையை இலகுவில் புரிந்து கொள்ளலாம். வட தமிழ்நாட்டின் வளம் மிகுந்த நிலப்பகுதியிலிருந்து புதிய பண்பாடு நதிகளின் கரை வழியாக தென் தமிழ் நாட்டுக்கும் பரவியது (இந்திரபாலா, கா. 2006: 93).

சுருங்கக்கூறின், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாயும் பெரு நதிகள் வழியே புதிய பண்பாடு கர்நாடகத்தின் தென்பகுதியிலிருந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது. தமிழ்நாட்டின் பெருநதிகளான காவேரி, பாலாறு, பொன்னையாறு, தாமிரபரணி ஆறு ஆகியவை வளம்படுத்தும் நிலப்பகுதிகளில் இப்புதிய பண்பாடு வேரூன்றியது. இந்நதிகள் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டை வந்தடைகிற உயர் நிலங்களை அடுத்த இடங்களில் இப்புதிய பண்பாட்டுக்குரிய தொல்லியல் சான்றுகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள தாழ் நிலங்களில் இப்புதிய பண்பாட்டுக்குரிய சான்றுகள் வளம் நிறைந்த நதிக் கரைகளில் அல்லது நீர்ப்பாசனக் குளங்களுக்கு அருகில் காணப்படுவது கவனிக்கத்தக்கது. தாழி அடக்கங்கள் (Urns) மற்றும் கல்வட்ட அடக்கங்கள் (Stone Circles) ஆகியவை பொதுவாக நெற்பயிர்ச் செய்கைக்கு உகந்த நிலப்பகுதிகளின் அருகாமையில் காணப்படுவதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர் (Seneviratne, S. 1985: 26-27; இந்திரபாலா, கா. 2006: 93).

ஆதி இரும்புக்கால (பெருங்கல்) பண்பாடு இலங்கைக்குத் தென் தமிழ் நாட்டிலிருந்து வந்தது என்பதில் ஐயமில்லை. மேற்குத் தொடர் மலைப்பகுதியிலிருந்து இப்பண்பாடு வைப்பாறு, வைகை, சிற்றாறு, தாமிரபரணி ஆகிய நதிகளின் ஓரமாக தமிழ் நாட்டின் தென்கிழக்குக் கரையை வந்தடைந்தது. வாசுதேவ நல்லூர் மற்றும் ஆதிச்சநல்லூர், வைகை நதிச் சமவெளி ஆகிய இடங்களை வந்தடைந்ததும், தொடர்ந்து இலங்கையை நோக்கி இப்பண்பாடு பரவுவது திண்ணமாகியது (இந்திரபாலா, கா. 2006: 93).

ஆதி இரும்புக்காலப் (பெருங்கல்) பண்பாடு தமிழ்நாட்டின் கிழக்குக் கரையை, சிறப்பாக தாமிரபரணி, காவேரி, வைகை ஆகிய நதிகளின் கழிமுகங்களை அடைந்ததும் அப்பால் இலங்கைக்

கேரளத்தில் திரிசூர் மாவட்டத்தில் சேரமான்காத் கிராமத்தில் காணப்படும் குடைக்கல் பரம்பு

Image Source - DTPC Thrissur

இலங்கையில் பொம்பரிப்பிலிருந்து பெற்றுக்கோண்ட ஈமத்தாழிகள், மட்கலன்கள்

Image Source - Colombo Museum

குப் பரவுவதற்கான சூழ்நிலை உருவாகியது. தமிழ்நாட்டிற்கும், இலங்கைக்கும் இடையில் உள்ள கடல் ஒருபோதும் இரண்டையும் பிரிக்கும் கடலாக அமையவில்லை - அது இரு நாடுகளையும் இணைக்கும் கடலாகவே இயங்கியது. தமிழ்நாடும் இலங்கையும் ஒரு பொதுப் பண்பாட்டு வலயம் என்பது இக்காலகட்டத்தில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையைப் பேராசிரியர் செனவிரத்ன நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்: “புவியியல் அமைப்பை நோக்குமிடத்து இரு நிலப்பகுதிகளும் அருகருகே உள்ளமை, இரு பகுதிகளின் சுற்றாடலில் காணப்படும் பொதுப்பண்புகள், இரு பகுதிகளிலும் கிடைத்துள்ள பொதுப்பண்புள்ள சவ அடக்கமுறைகள், பாத்திரங்கள் அமைக்கும் முறைகள், சவ அடக்கங்களில் காணப்படும் ஈமப்படையல் பொருட்கள், எலும்புக் கூறுகள் ஆகியவை தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டுச் சமூகத்திற்கும் இலங்கையின் பெருங்கற் பண்பாட்டுச் சமூகத்திற்கும் இடையில் இருந்த பண்பாட்டு ஒருமைப்பாட்டைக் காட்டுகின்றன. அதுமட்டுமன்றி, கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு மிகவும் முற்பட்ட ஒரு கட்டத்தில் தென்னிந்தியாவிலிருந்து, குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து, இலங்கைக்கு மக்கள் புலப்பெயர்ச்சி நடைபெற்றமை, புதிய தொழில்நுட்ப-பண்பாட்டுக் கூறுகள் (இரும்பு, மட்பாண்டத் தொழில்முறை, நீர்ப்பாசனம்) அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் நெற்பயிர்ச் செய்கையை அடித்தளமாகக் கொண்ட ஒரு வாழ்க்கைமுறை ஆரம்பிக்கப்பட்டமை ஆகியவற்றை இச்சான்றுகள் வெளிப்படுத்துகின்றன” (இந்திரபாலா, கா. 2006: 97).



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை அகழ்வுகளில் கண்ட புதையுண்டிருக்கும் ஈமத்தாழி

Image Source - கலாநிதி பொ. இரகுபதி

இலங்கையில் இபன்கட்டுவவில் காணப்படும் பெருங்கற்களினாலான ஈமப்புதையல் கல்லறைகள். இப்படியான 21 கல்லறைகள் இந்த ஈமக்காட்டில் காணப்படுகின்றன. Image Source: Allgemeine und Vergleichende Archäologie (German Archaeological Team) 1990.

இலங்கையில் பெருங்கற் பண்பாடு

தொல்லியல் ஆய்வுகள் அதிகம் வளர்ச்சிபெறாத நிலையில் இலங்கையில் நாகரிகம் தோன்றிய காலத்தையும், அதற்கான காரணங்களையும் ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் அதற்குப் பாளி இலக்கியங்களில் வரும் பூர்விகக் குடியேற்றங்கள் பற்றிய கதைகளை அடிப்படை மூலாதாரமாகப் பயன்படுத்தினர். இவ்விலக்கியங்கள் கி.மு. 500 ஆம் ஆண்டளவில் வட இந்தியாவிலிருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறிய மக்களுடனேயே இலங்கையில் மனித வரலாறும், நாகரிக வரலாறும் ஆரம்பமானதாகக் கூறுகின்றன. இப்பாளி இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு இலங்கையின் வரலாற்றை எழுதிய பிரித்தானிய மற்றும் இலங்கையின் ஆரம்பகால வரலாற்றாசிரியர்கள் இலங்கையின் நிலையான குடியேற்றங்கள், குள நீர்ப்பாசன விவசாயம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன விஜயனின் வருகையுடனே ஏற்பட்டதாக அவர்களது வரலாற்றாய்வு நூல்களில் பதிவு செய்திருக்கிறார்கள்.

மேலும் இக்குடியேற்றம் பற்றிய கதையை வட இந்தியாவிலிருந்து ஏற்பட்ட ஆரியரின் குடியேற்றம் (Indo-Aryan Colonizers and Settlers) என எடுத்துக்கொண்ட பிரித்தானிய கொட்றிங்ரன், இலங்கையின் பரணவிதான மற்றும் கே.எம். டிசில்வா போன்ற வரலாற்றாசிரியர்கள் அம்மக்களின் வழிவந்த பிற்காலச் சந்ததியினரே சிங்கள மக்கள் எனவும் விளக்கமளித்துள்ளனர் (Codrington, H.W. 1929; Paranavitana, S. 1961; K.M. de Silva 2005). பாளி இலக்கியங்கள் கூறும் விஜயன் கதையை பண்டைய காலத்தில் வட இந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையே இருந்து வந்த வர்த்தக உறவுகள் பற்றிய சான்றுகளாக எடுத்துக் கொள்ள இடமுண்டு. ஆயினும் அக்கதையை இலங்கையில் வட இந்தியக் குடியேற்றம் ஏற்பட்டதற்குரிய கதையாக எடுத்துக் கொள்வதற்கு நம்பகரமான தொல்பொருள் சான்றுகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. அதற்கு மாறாக விஜயன் வருகை நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மிகப் பெரிய அளவில் தென்னிந்தியாவின் தென்பகுதியிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் புலம்பெயர்ந்து வந்து குடியேறியதற்கான நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் இலங்கையின் பல்வேறு வட்டாரங்களில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

கி.மு. 1200 ஆம் காலப்பகுதியிலிருந்து திராவிட மொழிகளைப் பேசும ·

தென்னிந்திய மாநிலங்களிலும், இலங்கையிலும் இப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்களில், குறிப்பாக இம்மக்கள் பயன்படுத்திய கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Black and Red Ware), தாழிகள், இரும்புக் கருவிகள், சுடுமண் உருவங்கள் காட்டும் சமய நம்பிக்கைகள் என்பவற்றில் பொதுவான ஒற்றுமைத்தன்மை காணப்படுவதால் இப்பண்பாடு இப்பிராந்தியங்களுக்குரிய தனித்துவமான அம்சமாக நோக்கப்படுகிறது. ஈமச்சின்னங்களை அமைக்கப் பெரிய கற்களைப் பயன்படுத்தியதால் பெருங்கற் பண்பாடு என்ற பெயர் ஏற்பட்டிருந்தாலும், பெருங்கற்கள் இடம்பெறாத இடங்களில், குறிப்பாக தென்னிந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இப்பண்பாட்டிற்குரிய கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், இரும்புச் சின்னங்கள் காணப்பட்ட இடங்களை பெருங்கற்கால ஊரிருக்கைப் பகுதி எனவும், இச்சின்னங்களுடன் தாழியடக்கம் (Urn Burial), நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் (Extended Burial) போன்ற ஈமச்சின்னங்கள் காணப்பட்ட இடங்களை ‘பெருங்கற்கால ஈமச்சின்னங்கள்’ எனவும் அழைக்கும் மரபு காணப்படுகிறது (புஷ்பரட்ணம், ப. 2017: 12).

இன்று தென்னாசியா, தென்கிழக்காசியா, கிழக்காசிய நாடுகள் பலவற்றின் தொடக்ககாலப் பண்பாடு பற்றிய ஆய்வில் தொல்லியலாய்வாளர்கள் பலரினது கவனத்தை ஈர்த்த அம்சமாகப் பெருங்கற் பண்பாடு திகழ்கிறது. இவ்வாய்வு இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் பற்றிய ஆய்வாக மட்டும் அமையாது, கூடவே அக்காலத்தில் வாழ்ந்த மக்களது பலதரப்பட்ட பண்பாட்டுப் பரிமாணங்கள் பற்றிய ஆய்வாகவும் விளங்குகிறது. இலங்கையிலும், தென்னிந்தியாவின் சில வட்டாரங்களிலும் வரலாற்றுக்காலம் தொடங்குவதற்கு முன்னோடியான நிலையான குடியிருப்புகள், நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் பயன்பாடு, மந்தை வளர்ப்பு, சிறு தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற அம்சங்கள் இப்பண்பாட்டுடன் தோன்றி வளர்ந்ததால் இது இந்நாடுகளின் வரலாற்று உதய காலமாகவும் (Proto-Historic Period), உருவாக்க காலமாகவும் (Formative Period) பார்க்கப்படுகிறது. தென்னிந்தியாவின் பண்டைய நாகரிகம், சமூக உருவாக்கம், அரச தோற்றம், நகரமயமாக்கம் பற்றிய ஆய்வுகளின் தொடக்கப் புள்ளியாகப் பெருங்கற்காலப் பண்பாடு நோக்கப்படுகிறது (Sitrampalam, S.K. 1980; Rajan, K. 1994). இதனால் இலங்கையில் ஏற்பட்ட இப்பண்பாட்டு அம்சங்களின் தோற்றத்தையும், பண்பாட்டு மாற்றங்களையும் தென்னிந்தியப் பெருங்கற் பண்பாடு தோன்றி வளர்ந்ததன் பின்னணியில் நோக்குவது பொருத்தமாகும் (புஷ்பரட்ணம், ப. 2017: 12).

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்

குழியடக்கம்

Image Source - கலாநிதி பொ. இரகுபதி

ஆனைக்கோட்டையில் அகழ்ந்து கண்ட நீளக்கிடத்திய அடக்கம்

Image Source - கலாநிதி பொ. இரகுபதி

அகண்ட வங்கதேச உருவாக்கத் தலைவர்: ஹாடி கொலையும் இந்துக்கள் மீது வன்முறையும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

20.12.2025

இந்தியாவுக்கு எதிராக தீவிர நிலைப்பாடு கொண்டவரும், இந்தியப் பகுதிகளை உள்ளடக்கி 'அகண்ட வங்க தேசம்' உருவாக்கப்பட வேண்டும் என்று முழங்கி வந்த மாணவர் போராட்டங்களின் தலைவரான உஸ்மான் ஹாடி மர்ம நபர்களால் அண்மையில் கொல்லப்பட்டார். இந்திய விரோத நிலைப்பாடு கொண்ட ஷெரீப் உஸ்மான் ஹாடி, கொலையின் பின்னணியில் யார் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது.

போராட்ட குழு தலைவர் கொலை:

கடந்த ஆண்டு வங்க தேசத்தில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சியை மாணவர்கள் தலைமையிலான எழுச்சி குழு கவிழ்த்தது. இந்த போராட்டத்திற்கு தலைமை தாங்கியவரே 32 வயதான ஷெரிப் உஸ்மான் ஹாடி. இதன் பிறகு அவர் வங்க தேசத்தில் முக்கிய தலைவராக உருவானார். ஹசீனா வீழ்ச்சியின் காரணமாக, தொடர்ந்து நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு நாட்டை நிர்வகித்து வருகிறது.

வங்க தேசத்தில் எதிர் வரும் பிப்ரவரி மாதத்தில் பொது தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் இன்கிலாப் மஞ்ச் என்ற அமைப்பு ஷெரிப் உஸ்மான் ஹாடி போட்டியிட முடிவு செய்து தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக போராட்டத்தை தூண்டிய எதிர்கட்சி தலைவராக இருந்தவரே உயிரிழந்தார்.

இதைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் குதித்ததால் பதட்டமான சூழல் நிலவி வருகிறது. அதேவேளை வங்கதேசத்தில் இந்துக்களை குறிவைத்து வன்முறை வெடித்துள்ளது. மாணவர் சங்கத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் பதற்றம் தொடர்ந்து நிலவுகிறது. பல இந்து இளைஞர்கள் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்திய தூதரகம் மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மீண்டும் வங்கதேசத்தில் பாரிய வன்முறை வெடித்துள்ளது.

வங்கதேசத்தில் முக்கிய மாணவர் இயக்கத் தலைவரான ஷெரீப் உஸ்மான் ஹாடி சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து, அங்கு இந்தியாவுக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்துள்ளது. இதன் பின்னர் இந்து இளைஞர் ஒருவர் கும்பலால் அடித்துக் கொலை செய்யப்பட்டார். இந்துக்களை குறிவைத்து கலவரம் பரவுவதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

வங்க தேசத்தில் இந்துக்கள் :

வங்கதேசத்தின் 170 மில்லியன் மக்களில் சுமார் 8 சதவீதம் இந்துக்கள் உள்ளனர். முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா வெளியேற்றப்பட்டதில் இருந்து, முகமது யூனுஸ் தலைமையிலான புதிய இராணுவ ஆதரவு இடைக்கால அரசாங்கம் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையை கட்டுப்படுத்த தவறியதற்காக விமர்சனங்களை தற்போது பாரியளவில் எதிர்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மையினருக்கு ஆதரவாக இந்து சமூகத்தினர் நடத்திய போராட்டங்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டதாக, சம்மிலிதா சனாதானி ஜோட் என்ற இந்து அமைப்பின் தலைவரான ஸ்ரீசின் மோய் கிருஷ்ண தாஸ் 2024 டிசம்பரில் வங்கதேச அரசால் கைது செய்யப்பட்டார்.

அவர் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதற்கு இந்திய அரசு கண்டனம் தெரிவித்திருந்தது. அதேநேரத்தில், இந்து மதத் தலைவர் கைது தொடர்பாகவும் இதற்கு நீதி கேட்டும் வங்கதேசத்தில் ஆங்காங்கே வன்முறை வெடித்தது.

இதுதொடர்பாக நடைபெற்ற வன்முறையில், சைபுல் என்ற உதவி அரசு வழக்கறிஞர் வெட்டிக் கொல்லப்பட்டார். இதையடுத்து நாடு முழுவதும் பாதுகாப்புப் பணியில் போலீஸார் ஈடுபட்டனர். இந்த நிலையில், சட்டோகிராமில் உள்ள இந்துக் கோயிலை மர்மக் கும்பல் தாக்கியது.

யார் இந்த ஹாடி ?

தற்போது வங்கதேச மாணவர் தலைவர் ஷெரீப் உஸ்மான் ஹாடி, உயிரிழந்த தகவல் வெளியானதை அடுத்து, டாக்காவில் உள்ள 'புரோதோம் அலோ' நாளிதழ் அலுவலகத்தை கலவரக்காரர்கள் தீவைத்துக் கொளுத்தினர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

வங்கதேச அரசுக்கு எதிராக மாணவர் அமைப்புகள் கடந்த ஆண்டு நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதையடுத்து, பிரதமர் பதவியில் இருந்து விலகிய ஷேக் ஹசீனா, நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். இதை தொடர்ந்து, பொருளாதார நிபுணரான முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

வங்கதேசத்தில் 2026 பிப்ரவரி 12ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், டாக்கா-8 தொகுதி வேட்பாளராக ஷெரீப் உஸ்மான் ஹாடி 32 வயதான மாணவர் தலைவர் களமிறங்கினார். 'இன்கிலாப் மஞ்சா' என்ற மாணவர் போராட்டக் குழுவின் மூத்த தலைவரான இவர், கடந்த ஆண்டு மாணவர் போராட்டத்தை வழிநடத்திய முக்கிய தலைவர்களில் ஒருவர்.

இந்நிலையில், டாக்காவில் கடந்த 12ஆம் தேதி பிரச்சாரத்தை தொடங்கிய இவரை, முகமூடி அணிந்த மர்ம நபர்கள், தலையில் சுட்டனர். இதில் படுகாயம் அடைந்த அவருக்கு டாக்காவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் முன்னேற்றம் இல்லாததால் கடந்த 13ஆம் தேதி விமானம் மூலம் சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டு, அங்கு உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி ஷெரீப் உஸ்மான் ஹாடி உயிரிழந்தார்.

இந்த தகவல் வெளியானதை அடுத்து, கொலையாளிகளைக் கைது செய்யக் கோரி டாக்கா உட்பட பல்வேறுபகுதிகளிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். பல பகுதிகளில் மாணவர்கள்வன்முறையில் ஈடுபட்டனர். 'புரொதோம் அலோ', 'டெய்லி ஸ்டார்' ஆகிய நாளிதழ் அலுவலகங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. சட்டேகிராம் பகுதியில் உள்ள இந்திய துணைத் தூதரக அலுவலகம் மற்றும் இந்திய துணை தூதரின் வீடு மீது சிலர் கல்வீசி தாக்கினர்.

இந்தியாவுக்கு எதிராக :

டாக்காவில் இந்தியாவுக்கு எதிராகவும், அவாமி லீக் மற்றும் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராகவும் மக்கள் கோஷம் எழுப்பினர். மேலும் இந்துக்களை குறிவைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், இந்து இளைஞர் ஒருவர் எரித்துக் கொலை செய்யப்பட்டார். மைமன் சிங் மாவட்டம் பலுகா பகுதியை சேர்ந்தவர் தீபு சந்திர தாஸ், இவர் தங்களது மதத்தை அவமதித்ததாக கூறி 18ஆம் தேதி இரவு அவரை ஒரு கும்பல் அடித்துக் கொலை செய்து, உடலை தீ



இந்தியாவில் அடைக்கலம் புகுந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிரான மாணவர் போராட்டங்களின் தலைவரான உருவான உஸ்மான் ஹாடி மர்ம நபர்களால் கொல்லப் பட்டார். இதன்பின் வங்கதேசம் மீண்டும் எரிகிறது. ஷேக் ஹசினாவுக்கு வங்கதேச நீதிமன்றம் மரண தண்டனையை பிறப்பித்த பின்னர் இந்த மாணவர் தலைவர் கொல்லப்பட் டுள்ளார். இந்த கொலையின் பின்னணியில் யார் என்பது தெரியவில்லை?

வைத்து எரித்தது.

இது சிறுபான்மை இந்துக்கள் மத்தியில் பதற்றத்தை அதிகரித் துள்ளது. இந்து இளைஞர் கொலை செய்யப்பட்டதற்கு முகமது யூனுஸ் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. வங்கதேசத்தில் வன்முறைக்கு இடமில்லை என்று கூறினார்.

இந்த கொடூரமான குற்றத்துக்கு பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும், சட்டத்தின் முன்பு நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படு வார்கள் என்று வங்க அரசு உறுதி அளித்துள்ளது. ஹாடி உயிரிழப்பு காரணமாக, வங்கதேசத்தில் இன்று தேசிய துக்க நாளாக அனுசரிக்கப்படுகிறது.

வங்கதேச தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அகண்ட வங்கதேச கனவு:

இதேவேளை ஹாடி மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களை வங்கதேச காவல் துறை தீவிரமாக தேடி வருகிறது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை கைது செய்ய இந்தியாவின் உதவியை யும் அந்நாட்டு அரசு நாடியுள்ளது. கலவரக்காரர்களை கண்ட தும் சுடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வங்கதேசத்தின் ஜலோகதி மாவட்டம் நல்சிட்டி பகுதியில் கடந்த 1994இல் பிறந்த ஷெரீப் உஸ்மான் ஹாடி, இந்தியாவுக்கு எதி ராக தீவிர நிலைப்பாடு கொண்டவராக இருந்தார். இந்தியப் பகுதிகளை உள்ளடக்கி 'அகண்ட வங்க தேசம்' உருவாக்கப்பட வேண்டும் என்று முழங்கி வந்தார். இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் அவரது அரசியல் பிரச்சாரங்கள் இருந்தன.

அத்துடன் அகண்ட வங்க தேசம் உருவாக்கப்பட வேண்டும் தொடர்பான வரைபடங்களையும் பிரச்சாரத்தில் பரப்பினார் என் பது குறிப்பிடத்தக்கது. வங்கேதசத்தில் இந்தியாவுக்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ள நிலையில், டெல்லியில் உள்ள வங்கதேச தூதரகத்துக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

2024 மாணவர் எழுச்சி:

இன்கிலாப் மஞ்ச் சமூக ஊடகங்களில் ஹாடியின் மரணத்தை அறிவித்ததை அடுத்து ஒரு நாள் அரசு துக்கத்தை வங்கதேச அரசு அறிவித்துள்ளது.

ஹாடி மீது துப்பாக்கிச்சூடு தாக்குதலை நடத்தியவர்களை பிடிக்க வங்கதேச போலீசார் தீவிர தேடுதல் வேட்டையைத் துவங்கி உள்ளனர்.கொலையாளிகளை கைது செய்ய தகவல் தருபவர் களுக்கு ஐந்து மில்லியன் டாக்கா வெகுமதியையும் அறிவித் துள்ளனர்.

போராட்டக்காரர்கள் அமைதி காக்கும்படி, வங்கதேச இடைக் கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் கோரிக்கை விடுத் துள்ளார்.

ஆனாலும் அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் குதித்ததால் பதட்டமான சூழல் நிலவி வருகிறது. அதேவேளை வங்கதேசத் தில் இந்துக்களை குறிவைத்து வன்முறை வெடித்துள்ளது. மாணவர் சங்கத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் பதற்றம் தொடர்ந்து நிலவுகிறது. பல இந்து இளைஞர்கள் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்திய தூதரகம் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மீண்டும் வங்கதேசத்தில் பாரிய வன்முறை வெடித்துள்ளது. உஸ்மான் ஹாடியின் மரணத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு உறுதியளித் தாலும், கொலையின் பின்னணியில் யார் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது.

www.sangathamil.ca

சங்கத்தமிழ்

சாவித்திரி அத்துவிதானந்தன்

இரவு பத்துமணிக்கு மேல் கேட் வழமை பரபரப்பு கத தொடங்கிய குண்டுச் சத்தங்களும் வெடிச்சத்தங்களும் விடிந்த பிறகும் ஓய்ந்தபாடில்லை. வழமையான காலை நேரத்துப் எதுவுமின்றிப் பத்தமேனிப் பிரதேசம் அன்று ஓய்ந்து போய்க்கிடக்கிறது. வெடிச்சத்தங்கள் கேட்டவுடன் இர வோடிரவாக சனங்கள் வெளியேறி அயல் ஊர்களுக்குப் போய்விட்டிருந்தார்கள். இப்படி இடம் பெயர்வது இப்போதெல்லாம் வழமையாகிப் போன விசயம். மீண்டும் இரண்டொரு நாட்களில் அத்தனை பேரும் சொந்த இடத்துக்குத் திரும்பிப் போய்விடுவார்கள்.

முகாம்களில் முடங்கிக் கிடக்கும் சிங்கள இராணுவம் அவ்வப்போது நர வேட்டையாடப் புறப்படும் நாட்களில், மக்களின் இந்த இடப்பெயர்வும், தொடர்ந்துவரும் நாட்களில் மீண்டும் திரும்புதலும் நிகழும்.

இந்த இடம்பெயர்தலுக்கும், மீண்டும் திரும்புதல் நடவடிக்கைக்கும் செல்லம் என்றுமே விதிவிலக்கு.

அவள் ஒரு தனிக்கட்டை. அதுதான் காரணமோ?

“எல்லோருமே இடம்பெயர்ந்து போய் விட்டால் இன அழிப்புக்குப் புறப்படும் இராணுவத்தை மீண்டும் முகாமினுள் முடக்குவதற்காக – இரவு பகலாய்க் காத்து நிற்கும் “பிள்ளை” – களுக்கு – சண்டைபிடித்துக் களைத்துப் போன நிலையில் – குறைந்தபட்சம் தேநீரையாவது கொடுப்பதற்கு அங்கே யார் இருப்பார்கள்?“ என்று செல்லம் நினைப்பதும் இதற்கு ஒரு காரணம்.

சண்டை ஓய்ந்த பிறகு – சூடான தேனீரை எதிர்பார்த்துப் பிள்ளைகள்” இந்த அம்மாவிடம் வருவது வழமையான விசயமாகிவிட்டது. அவர்கள் சண்டையைப் பற்றி அம்மாவுக்குச் சொல்லுவார்கள். அம்மா ஆவலுடன் கேட்பாள். அவளிடம் சாப்பிட்டவர்கள், பழகியவர்கள் சண்டையில் காயம்பட்டதையும், சாவடைந்ததையும் அவர்கள் சொல்லும் போது உடைந்து போவாள்; விம்முவாள். தன்னுடைய பிள்ளைகளுக்கு இப்படி வேதனையா? அவ்வளவு பாசம் கொந்தளிக்கும். எதிரிகளைச் சபிப்பாள், திட்டுவாள். கோபத்தின் சுவாலை மூண்டெரியும்.

இன்னமும் சத்தங்கள் ஓய்ந்தபா டில்லை.

இன்று செல்லத்தின் கணவருடைய திதி.

87 - ஆண்டு பிரம்படியில் இந்திய இராணுவ டாங்கிகளின் கீழ் நசியுண்ட உயிர்களில் செல்லத்தின் கணவருடையதும் ஒன்று.

அன்றிலிருந்து இவள் தனிக்கட்டை, பிள்ளைகள் இல்லை. கணவருடைய ஓய்வூதியத்தில் வாழ்க்கை.

கடந்த ஐந்து வருடங்களாகக் கணவருடைய திதி வரும் தினத் தன்று. அருகிலுள்ள சிவன் கோவிலில்...

அரிசி, தேங்காய், இன்னும்... சமையலுக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் ஐயரிடம் கொடுத்து, சிவனுக்கு அர்ச்சனை செய்து பிரசாதமும் பெற்றுக்கொண்டு வந்துதான், வீட்டில் சமையல் செய்து அவள் சாப்பிடுவது வழக்க மாகியிருந்தது.

போராளிகளை அன்றைய தினத்தில் வரவழைத்து, அவர் களையும் தன்னோடு சேர்ந்து சாப்பிடவைப்பாள்.

கணவனுக்குச் செய்ய வேண்டிய மிகப்பெரிய கடமையை இந்தத் திதியின் அன்றுதான் செய்வதாக நினைத்துச் செல்லம் திருப்தி கொள்வாள்.

நேற்று மாலை உண்டியல் உடைத் பொருட்களை வாங்கி வைத்து...

சிவன் கோவில் ஐயரிடமும் சொல்லி வைத்திருந்தாள் நாளை கணவனுடைய திதி என்று.

சற்று ஓய்ந்திருந்த வெடிச்சத்தங்கள், இப்போது மீண்டும் இடைவிடாமல் கேட்கத் தொடங்கின.

இரண்டு உலங்கு வானூர்திகள் தாழப்பறந்து வட்டமிட்டுக் கொண்டிருக்க, குண்டுவீச்சு விமானங்கள் மாறிமாறிக் குத்தி எழுந்து குண்டுகளை வீசின.

“இண்டைக்குப் பாத்து இப்பிடி நடக்குதே...” என்று அடிக்கடி மனதுள் கவலைகொண்டாள்.

”பிதிர்க்கடன் செய்யாமல்விட்டா, பிதிர்கள் சாபம் போடுமாம்” என்று தனது தாய் முன்னர் அடிக்கடி சொல்வது இப்போது ஞாபகம் வருகிறது.

இதென்ன சோதனை?

வாகனங்களின் இரைச்சல் அடிக்கடி கேட்பதும், பின்னர் தேய்வதுமாக இருக்கிறது.

“காயப்பட்ட பொடியளைக் கொண்டு போகினம் போலை...! எத்தினை பிள்ளையள் காயம்பட்டுதோ.. எத்தினை பிள்ளையள் உயிர் விட் டுதோ... சிவ சிவா...”

செல்லத்தின் மனம் ஒரு நிலையில் இல்லை. ஒருவேளை இடம்பெயர்ந்த சனங்களோடு சிவன்கோவில் ஐயரும் போயிருப்பாரோ?

போயிருந்தால் இன்று திதி செய்ய முடியாமல் போய்விடும்.. பிதிர்க் கடன் செய்யாமல்விட்டா பிதிர்கள் சாபம் போடுமாம்...

நேரம் 10.00 மணி.

“கணீர் கணீர் எனச் சிவன் கோவில் மணி ஒலிக்கிறது. “அப்பாடா...”

செல்லத்தின் மனதில் பெரியதொரு நிம்மதி பிறக்கிறது.

ஐயர் எங்கும் போகவில்லை...

அடுத்ததுபகல் 12.00 மணிப்பூசை.

அந்த நேரத்துக்குத்தானே வருவதாகச் செல்லம் ஐயரிடம் சொல்லியிருந்தாள்.

பன்னிரண்டு மணிக்கு ஆரம்பித்தால் பூசை புனஸ்காரம் எல்லால் முடியக் குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகும்...

முழுகிக் குளித்துக் கோவிலுக்குப் போகும் ஆயத்தத்துடன் செல்லம் வந்தபோது நேரம் 11. 30 ஆகியிருந் தது...

‘இப்ப வெளிக்கிட்டால் பன்னிரண்டு மணிப்பூசைக்குச் சரியாயிருக்கும்...”

உரப்பையினுள் கட்டிவைத்திருந்த பொருட்கள், அர்ச்சனைப் பொருட்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்படுகிறாள்.

சண்டை ஓய்ந்துவிட்டதன் அறிகுறியாய் இப்போது சத்தங்கள் முற்றாக ஓய்ந்திருந்தன.

உலங்குவானூர்தி - விமானங்கள எதுவும் இல்லை.

‘இப்ப வெளிக்கிட்டால் பன்னிரண்டு மணிப்பூசைக்குச் சரியாயிருக்கும்...“

உரப்பையினுள் கட்டிவைத்திருந்த பொருட்கள், அர்ச்சனைப் பொருட் கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்படுகி றாள்.

சண்டை ஓய்ந்துவிட்டதன் அறிகுறி யாய் இப்போது சத்தங்கள் முற்றாக ஓய்ந்திருந்தன.

உலங்குவானூர்தி எதுவும் இல்லை. விமானங்கள்

வெளிப்படலையைத் திறந்த செல்லம் - மேலே ஒரு அடிகூட வைக்காமல் அப்படியே நின்று விடுகிறாள். முகத்தில் ஏதேதோ சிந்தனையின் சாயல்கள்...

“சண்டை ஒஞ்சிட்டுது... இன்னும் கொஞ்ச நேரத்திலை பிள்ளையள் ஆரும் என்னைத்தேடி வருங்கள்...”

“ராத்திரித் துவக்கும் அடிபட் டுக்களைச்சு இப்ப ஒரு தேத்தண்ணி குடிக்க என்னைத் தேடி வரேக்கை நான் இல்லாட்டி அதுகள் என்ன செய்யும்?”

குற்றம் செய்வது போன்றதொரு உணர்வில் அவள் பரிதவித்துப் போகிறாள்.

“பிதிர்க்கடன் செய்யாமல் விட்டா பிதிர்கள் சாபம் போடுமாம்...”

“சிவ சிவா... நான் என்ன செய்ய?” வாய்விட்டுக்கூறிய செல்லத்தின் மனதில் மாறிமாறிப் போராட்டம் நடக்கிறது.

போவதா? நிற்பதா?

ஒரு சில நிமிடங்கள் தான் –

அவளுள்ளே ஒரு தீர்மானம் பிறக்கிறது. திரும்பி உள்ளே வருகிறாள்.

87 – ஆம் ஆண்டு திலீபனுடைய இறுதி யாத்திரையில் கலந்துவிட்டு வந்த பிறகு, தொடர்ந்து சில நாட்கள் அந்தச் சோகத்திலிருந்து மீள முடியாமல் தனது கணவர் தவித்த தவிப்பையும், போராளிகளின் மீதும், போராட்டத்தின் மீதும் அவர் வைத்திருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்திய அவரது நடவடிக்கைகளையும் செல்லம் இப்போது நினைத்துப் பார்க்கிறாள்...

பன்னிரண்டு போராளிகள் ஒரே சிதையில் எரிந்த போது அந்தத் தீயில் தானும் விழுந்துவிட்டது போலப் புழுவாகத் துடித்த தன் கணவருடைய மனப்பாங்கு... இப்போது அவள் நினைவில் மூட்டங் கொண்டன.

எந்த நேரம் என்றில்லாமல், யாரென்றில்லாமல் ஊருக்குள் திரியும் எந்தப் போராளியைக் கண்டாலும், வீட்டுக்குக் கூட்டி வந்து சாப்பிடச் செய்த பின்பே, அனுப்பி வைக்கும் தன் கணவருடைய பாச உணர்வு... மீண்டும் மீண்டும் வருகின்றது.

பெரும்பாலான நாட்களில், போராளிகள் இவர்களின் வீட்டுக்கு வந்து போன பிறகு, “போராட்டத்துக்கு அனுப்பி வைக்கிறதுக்கு எங்களுக்கொரு பிள்ளை இல்லாமல் போட்டுதடி செல்லம்...” என்று கூறி ஆதங்கப்படும் உணர்வுள்ள அந்த மனிதரின் பரித விப்பு மாறாமல் அவளுள் துளிர்க்கிறது.

“தமிழனை அழிப்பதற்காகப் பல்கலைக்கழக வளவினுள் இறக்கப்பட்ட இந்திய இராணுவத்தினர் இருபத்தொன்பது பேரையும், இறக்கப்பட்ட கையோடு வெற்றிகரமாக எதிர்த்தடித்துவிட்டனர் எங்களுடைய போராளிகள்” என்ற செய்தி கேள்விப் பட்டதும், அந்தக் காட்சியை நேரில் காண்பதற்கென அச்சுவேலியிருந்து மதிவண்டியில் திருநெல்வேலிக்குப் போய்த் திரும்பி வராமலே உயிர் பிரிந்த தனது கணவனை... இப்போது நெகிழ்ச்சியோடு நினைவு கூர்கிறாள் செல்லம்.

இப்படிப்பட்ட தன் கணவர், சண்டைபிடித்துக் களைத்தப்போய் வரப் போகின்ற பிள்ளைகளைப் பற்றி எண்ணிப்பாராமல், திதி செய்வதற்காக கோவிலுக்குப் போகும் தன் செயலை, நிச்சயம் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதை அவள் மனம் உணர்கிறது.

இன்று - தன் கணவர் உயிருடன் இருந்திருந்தால், இந்தச் சமயத்தில் என்ன செய்திருப்பார்...? அல்லது செல்லம் எதைச் செய்ய வேண்டும்? என எதிர்பார்த்திருப்பார் என்பதும் மனதில் கேள்விகளாக முகங்காட்டுகின்றன.

பிதிர்க்கடன் என்பது வெறுமனே ஒரு சம்பிரதாயமல்ல... ஒரு சடங்குமல்ல...

“பிதிர்கள்” என்று சொல்லப்படுகின்ற, எம்மைப் பிரிந்துபோன ஜீவன்கள், தாங்கள் எதைச் செய்தால் ஆத்மதிருப்தி அடையுமோ, அதுதான் உண்மையான - அர்த்தமுள்ள - பிதிர்க் கடன்.

செல்லத்தின் மனதில் தெளிவு பிறக்கிறது.

“உங்கடை திதியை இந்த வருசம்தான் உண் மையான அர்த்தத் தோடை செய்யப் போறன்...” என்று நினைத்தவளாய், வணவருடைய படத்துக்கு முன்னால் ஒரு நிமிடம் கைகூப்பி நின்ற செல்லம், சமையலறைக்குப் போய் அவசரம் அவசரமாக அடுப்பைப் பற்ற வைக் கிறாள்.

உரப்பையைப் பிரித்துச் சமையல் பொருட்களை வெளியே எடுக்கிறாள்.

இன்னும் சிறிது நேரத்தில் அவளைத்தேடி வரப்போகும் பிள்ளைகளுக்கு ருசியான திதிச்சாப்பாடு தயாராகிக் கொண்டிருக்கிறது.

சிவன் கோவிலில் உச்சிக்காலப் பூசைக்கான ஆயத்தமணி “கணீர் கணீர்” என ஒலிக்கிறது.

கணவனோடு, ஒவ்வொரு போராளிகளினதும் எண்ணங்கள் அவளில் நினைவாகப் பிறக்கின்றன. தன்கையால் சோறுதின்ற பிள்ளைகள், இன்றைக்கு...

மணியொலி கேட்சு, அந்த வீரர்களின் நினைவுகள் நெஞ்சிலெழுகின்றன. அவளின் விழிகளில் அவர்கள் நிறைந்து போயிருக்கிறார்கள்.

- களத்தில் 14.01.1994

ஆவுஸ்திரேலியா கடும் ஆயுதக் கட்டுப்பாடு!

குடியேற்ற கொள்கை மாறுமா?

பொண்டி கடற்கரை படுகொலை எதிரொலி:

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

18.12.2025

ஆயுத கலாச்சார விளைவால் அவுஸ்திரேலிய மண்ணில் 1984 முதல் 1996 வரை, பல படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. ஆனாலும் நீண்ட காலமாக பாரிய அளவிலான துப்பாக்கி படுகொலைகள் இல்லாமல் இருந்த அவுஸ்திரேலிய மண்ணில் கடந்த வார இறுதியில் சிட்னி பொண்டி (Bondi) கடற்கரை படுகொலையில் பலர் கொல்லப்பட்டது முழு நாட்டையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி பாரிய கவலையைத் தூண்டியுள்ளது. இதனால் அவுஸ்திரேலியா முழுவதும் துப்பாக்கிச் சட்டங்களை கணிசமாக கடுமையாக்கப் பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு போர்ட் ஆர்தர் (Port Artur) படுகொலை நடந்தது. 29 வயதான துப்பாக்கிதாரி மார்ட்டின் பிரையன்ட் இரண்டு தானியங்கி துப்பாக்கிகளால் கடை உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதால் 35 பேர் கொல்லப்பட்டனர் மேலும் 23 பேர் காயமடைந்தனர்.

இந்த படுகொலை அவுஸ்திரேலிய அரசாங்கத்தை திகிலடையச் செய்தது. இதன் விளைவாக அவுஸ்திரேலியாவில் துப்பாக்கி கட்டுப்பாட்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. அன்றைய பிரதம மந்திரி ஜான் ஹோவர்ட் 1988 ஆம் ஆண்டு வன்முறைக்கான தேசிய குழுவின் அறிக்கையில் செய்யப்பட்ட துப்பாக்கிச் சட்டத் திட்டங்களை தேசிய துப்பாக்கி ஒப்பந்தமாக ஏற்றுக்கொள்ள மாநிலங்களுக்கு அழுத்தம் கொடுத்தார்.

மேலும் நாடாளவிய தேசிய துப்பாக்கி பதிவேட்டை நிறுவியது. துப்பாக்கி வாங்குதலுக்காக 28 நாள் காத்திருப்பு காலத்தை அறிமுகப்படுத்தியது. மேலும் அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டு, துப்பாக்கிகளை பறிமுதல் செய்யும் திட்டத்தை தொடங்கியது. இதனால் 640,000 க்கும் மேற்பட்ட துப்பாக்கிகளை புழக்கத்தில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டது.

குடியேற்றக் கொள்கை மாறுமா?

அவுஸ்திரேலியாவில் குடியேற்றக் கொள்கையை மாற்றினால், விரும்பத்தகாதவர்கள் இந்த நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்கும் என்பது உண்மையே. ஆனால் அவர்கள் மாற்று வழிகளில் இங்கு வந்த பிறகும் தீவிரவாத நடவடிக்கைகள் எத்தகைய வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்பதை ஊகிக்க வேண்டியுள்ளது.

மத்திய கிழக்கிலிருந்தும், ஏன் உலகில் எங்கிருந்தும் சாத்தியமான தீவிரவாதிகளைத் தடுப்பது மிகவும் பயனுள்ள குடியேற்றக் கொள்கையாக இருக்கும் என்று கருதப்படுகிறது. அத்துடன் இன்னும் சிறப்பாக, ஒவ்வொரு குடிப்பெயர்வு விண்ணப்பதாரரின் கடந்த காலத்தையும் அவர்களின் சமூக ஊடகப் பதிவுகள் மூலம் விசாரிப்பது அவசியம் என்று அவுஸ்திரேலிய அரசு தற்போது கருதுகிறது.

மேலும் ஏற்கனவே நாட்டில் உள்ள அனைவருக்கும் இது போன்ற ஆய்வைப் பயன்படுத்தி, இதன் மூலம் பொண்டி துப்பாக்கிதாரிகளைப் போன்றவர்களை மட்டுமல்ல, மார்ச் 2019 இல் நியூசிலாந்து கிறைஸ்ட்சர்ச் (Christchurch) துப்பாக்கிச் சூடு நடத்தியவர் போன்ற தீவிர வலதுசாரி தீவிரவாதிகளையும் கண்டறியலாம் என்று அவுஸ்திரேலிய அரசு நம்புகிறது.

பொது மக்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் என்ற பெயரில் இதுபோன்ற செயல்களைச் செய்ய வேண்டும் என்று அவுஸ்திரேலிய பாதுகாப்பு வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதன் விளைவாக படிப்படியாக ஒரு நிரந்தர கண்காணிப்பு உள்ள நாடாக மாற்றலாம் என்று கருதப்படுகிறது.

தற்போது அமெரிக்காவில் சிறிய வழிகளில் இந்த சோதனை கண்காணிப்பு நடக்கிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உளவு நிறுவனங்கள் சிறப்பாக வெகுஜன கண்காணிப்பை நடத்துகின்றன. பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களால் அரசுடன் இணைந்து மிகவும் வலுவான நிலையில் இந்த வேலையை திறம்பட செயல்படுத்தி வருகின்றன என்று கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் குடியேற்றக் கொள்கை மறுக்கப்பட்டால் சிரியாவிலிருந்து 'பொண்டி ஹீரோ' போன்ற திறமிகு மக்கள் நாட்டிற்குள் நுழைவதைத் தடுத்திருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. கடந்த 2024 ஆண்டு ஏப்ரல் மாதம் பொண்டி வணிக வளாகத்தில் கத்தியால் தாக்கியவர் வன்முறையில் ஈடுபட்ட போது தலையிட்ட புலம்பெயர்ந்த நபரின் பணி விசா காலாவதியான ஒருவராகவே இருந்தார்.

ஆனாலும் வெறுப்பு, பயம் மற்றும் சந்தேகம் உலகம் முழுவதும் எப்போதும் இல்லாத அளவுக்கு வேகமாகப் தற்போதய சூழ்நிலையில் பரவி வருகிறது. இது பல நாடுகளில் முன்பு காணப்படாத ஒரு முக்கிய பிரச்சனைக்கு தற்போது வழிவகுக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் சமூக ஊடகங்களில் இதுபோன்ற தீவிரவாத உள்ளடக்கத்தை விநியோகித்து விளம்பரப்படுத்துபவர்கள் மக்கள் அல்ல. பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களின் ஊடக வழிமுறைகள் தான் தங்கள் தளங்களில் ஈடுபாட்டை அதிகப்படுத்த இதையெல்லாம் செய்கின்றன என்ற குற்றச்சாட்டையும் மறுக்க முடியாது.

www.sangathamil.ca

பொது மக்களுக்கு எதிராக, வெறுக்கத்தக்க உள்ளடக்கத்தை இணையங்களில் உருவாக்குவதற்கும் இடுகையிடுவதற்கும் சில மக்களே பொறுப்பாக இருந்தாலும், சமூக ஊடக தளங்களின் கீழ் உள்ள செயலி இயந்திரங்கள்தான் இதுபோன்ற உள்ளடக்கத்தை பரிந்துரைக்கின்றன.

உண்மையில் சமூக ஊடகங்கள் வடிவமைப்பால் உருவாகியுள்ளதே இத்தகைய அசாதாரண நிலையாகும். பொது மக்கள் இணையங்களை ஏற்றுக் கொள்வதில் பெரும்பாலான வழிமுறையானது, சமூக ஊடகங்களால் விளம்பரப்படுத்தப்படும் காரணிகளே அமைகின்றன.

பிலிப்பைன்ஸில் இராணுவ பயிற்சி:

அவுஸ்திரேலியாவிற்குள் தீவிரவாதம் நுழைவதைத் தடுக்க பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் மக்களின் சமூக ஊடக ஊட்டங்களில் அவர்கள் பரிந்துரைப்பதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிட்னியில் நடந்த தாக்குதலில் ஈடுபட்ட இருவரும் பிலிப்பைன்ஸ், மிண்டானாவோவின் தெற்குப் பகுதி மற்றும் சுலு தீவுக்கூட்டம், ISIS உடன் தொடர்புடைய பயிற்சி முகாம்களில் இராணுவ பயிற்சி பெற்றனர் என்பதை உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெற்கு பிலிப்பைன்ஸில் உள்ள பல்வேறு உள்ளூர் போராளிக் குழுக்கள், அபு சயாஃப் குழு (ASG) மற்றும் பாங்சமோரோ இஸ்லாமிய சுதந்திர போராளிகள் (BIFF) போன்றவை இஸ்லாமிய அரசுக்கு விசுவாசமாக இருப்பதாக உறுதியளித்து பயிற்சி மற்றும் ஆட்சேர்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய துப்பாக்கி கட்டுப்பாட்டு சட்டம்:

பொண்டி கடற்கரை துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய தற்போதைய துப்பாக்கி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மீண்டும் ஒருமுறை தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. துப்பாக்கிச் சட்டங்களைத் திருத்துவது குறித்து மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளதாக பிரதமர் அறிவித்துள்ளார்.

ஒரு உரிமத்தின் கீழ் வைத்திருக்கக் கூடிய துப்பாக்கிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த சீர்திருத்தங்கள் செய்யப்படும் என்றும், உரிமதாரர்கள் குறித்த கடுமையான மதிப்பாய்வுகள் செய்யப்படும் என்றும், சட்ட அமலாக்க நிறுவனங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மேலும் கட்டாய துப்பாக்கி பாதுகாப்பு பாடநெறியையும் முடிக்க

வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. 1996 சட்டங்களின் கீழ், துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கிகள் நான்கு முக்கிய வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

முதற் பிரிவில் குறைந்த சக்தி கொண்ட ஒற்றை-ஷாட் துப்பாக்கிகள் மற்றும் ஷாட்கன்கள் அடங்கும். இரண்டாம் பிரிவில் ஐந்து தோட்டாக்களை வைத்திருக்கக்கூடிய உயர் சக்தி கொண்ட துப்பாக்கிகள் மற்றும் நெம்புகோல்-செயல் துப்பாக்கிகள் அடங்கும்.

மூன்றாவது பிரிவில் அதிக கட்டுப்பாடுகள் உள்ளன, மேலும் அரை தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் பம்ப்-ஆக்ஷன் ஷாட்கன்கள் போன்ற ஆயுதங்களும் அடங்கும். நான்காவதை பிரிவில் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன, மேலும் அதிக திறன் கொண்ட அரை-தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் ஷாட்கன்கள் அடங்கும்.

இந்த படுகொலை சம்பவத்திற்குப் பிறகு, துப்பாக்கி கட்டுப்பாட்டு ஆதரவாளர்கள், பொதுப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து சட்டங்களை வலுப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். தீவிரமயமாக்கலைத் தடுப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், தேசிய துப்பாக்கி ஒப்பந்தத்தில் செய்யப்படும் எந்த மாற்றங்களும் நியாயமானதாகவும் சமமானதாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆளும் அரசுக்கு நெருக்கடி:

இந்த படுகொலைகளின் காரணமாக அவுஸ்திரேலிய பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் கொள்கைகளிலும் முக்கிய மாற்றங்கள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக ஆளும் லேபர் அரசு இந்த ஆயுத கலாசாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காவிடில், எதிர்காலத்தில் மிகப்பெரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

அண்மைக்காலத்தில் அதிகரித்திருக்கும் ஆயுத வன்முறை, பெரும்பாலும் போதைசார்ந்து இருந்தாலும் கூட, அதனைத் தொடர்ந்து பொது இடங்களில் - பொது மக்களின் மீதான சூட்டுச் சம்பவங்களும் அதிகரித்திருக்கின்றன. குறிப்பாக பெரும்பாலான போதை - ஆயுத கலாசாரத்தின் பின்னணியில் மத்திய கிழக்கினை பின்னணியாக கொண்டோர் இருப்பதாக கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் துப்பாக்கிகள் வைத்திருப்போர் கட்டாயம் பதிவு செய்திருக்கவேண்டும். கடுமையான சட்டங்கள் இருந்தாலும் கூட, இந்த வருடம் ஏராளமான பதிவில்லா ஆயுதங்கள் பல்வேறு பொலீஸ் நடவடிக்கைகளில் கைப்பற்றப்பட்டிருந்தன. இவ்வருடம் அதிகரித்த சூட்டுச் சம்பவங்களும் அதற்குச் சாட்சியாக உள்ளது.

மறுக்கமுடியாத சுயநிர்ணய உரிமையைக் களைய முனையும் கூட்டாச்சிக் கோரிக்கை

18.12.2025

ஈழத்தமிழர் தேசம் மீது நீட்சியான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு (Protracted Structural Genocide) நுட்பமான வழிகளில் தொடரப்படாமல் இருப்பது உறுதி செய்யப்படுவது மட்டுமல்ல, குரூரமான சரீர இன அழிப்பு மீளவும் நிகழாது தடுக்கப்படுவதும் (Nonrecurrence of Physical Genocide) ஈழத்தமிழர் தேசத்தின் களையவொண்ணா சுயநிர்ணய உரிமை (Inalienable Right of Self-Determination) ஒத்துக்கொள்ளப்பட்ட அரசியற் தீர்வு மூலம் மட்டுமே இயலுமாகும். ஆனால், தாயகம், தேசியம், இறைமை, சுயநிர்ணயம் போன்ற சொற்களை வெற்றுக் கூப்பாடுகளாகக் கையாளுவதில் தேர்ச்சி பெற்றுள்ள தேர்தல் அரசியற் கட்சிகள் ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமையைக் கூட்டாட்சிக் (Federation) கோரிக்கை மூலம் களைந்துவிடும் 'அரசியல் முள்ளிவாய்க்காலை' அரங்கேற்றிவருகின்றன. ஒரு புறம் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற குழிபறிப்பும் மறுபுறம் 'கூட்டாட்சி' என்ற கூப்பாடும் ஈழத் தமிழ்த் தேசிய விடுதலைக்கான பயணத்தைத் தடுமாறவைத்துத் துண்டாட எத்தனிக்கின்றன.

போதாக்குறைக்கு ஈழத்தமிழர் அரசியல் விடுதலைக்குத் தமிழ்நாட்டில் நீறுபூத்த நெருப்பாக நீடிக்கும் 'பொதுவாக்கெடுப்பு' என்ற கோரிக்கையைக் 'கூட்டாட்சி' (சமஷ்டி) என்பதாகப் படிநிலை இறக்கம் செய்யும் பெருந்தவறுக்கு அடித்தளமிடும் அறிகுறியும் தென்படுகிறது.

•••

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கும் அதன் வழியில் தற்போதைய கோரிக்கை வடிவமாயுள்ள பொதுவாக்கெடுப்பு என்பதற்கும் முரண்படாமல் கூட்டாட்சிக் கோரிக்கையை தமிழர் தரப்பு முன்வைக்க இயலுமா என்றால், இயலாது என்ற பதிலே கிடைக்கிறது.

இதை விளங்கிக்கொள்வதற்கு வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கும் திம்புக் கோட்பாடுகளுக்கும் இடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை விளங்கிக்கொண்டிருத்தல் வேண்டும்.

ஈழத்தமிழர் தேசத்தின் களையவொண்ணா (Inalienable) சுயநிர்ணய உரிமையின் மரபு என்ன என்பதை விளங்கிக்கொண்டாலே இதை மட்டுமல்ல வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் விளங்கிக் கொள்ள இயலும்.

•••

'சுயநிர்ணயம்' என்ற பதம் வடசொல்லாக அமைந்திருப்பதால் அதைத் தூயதமிழில் எழுதவேண்டும் என்ற ஆர்வத்தில் தன்னாட்சி என்ற சொல்லை அதற்கு ஈடாகப் பயன்படுத்துவது தவறாகும்.

தன்னாட்சி (Self-Rule) வேறு, சுயநிர்ணயம் (Self-Determination) வேறு.

•••

1985 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்ட இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணைந்து முன்வைத்த திம்புக் கோட்பாடுகள் நான்கு அடிப்படைகளை இந்திய அரசுக்கு ஈழத் தமிழர் விடுதலை அரசியலின் "நெகிழ்ச்சித்தன்மையின்" எல்லைகளைச் சுட்டிக்காட்டுவனவாக அமைந்திருந்தன.

அவையாவன:

1. இலங்கையில் தமிழர்கள் தனித்துவமான தேசிய இனம் என்பதை அங்கீகரிக்கவேண்டும். (Recognition of the Tamils of Sri Lanka as a distinct nationality)

2. இலங்கையில் ஓர் அடையாளப்படுத்தப்பட்ட தமிழ்த் தாயகம் இருக்கிறதென்பதை அங்கீகரித்து, அதன் ஆட்சிப்புல ஒருமைப்பாட்டுக்கு உத்தரவாதமளிக்கவேண்டும் (Recognition of an identified Tamil homeland and the guarantee of its territorial integrity)

3. மேலே கூறப்பட்டதன் அடிப்படையில், தமிழ்த் தேசத்தின் களையவொண்ணா சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும் (Based on the above. recognition of the inalienable right of self-determination of the Tamil nation)

4. இலங்கைத் தீவைத் தமது நாடாகக் கருதும் அனைத்து தமிழர்களது முழுமையான பிரஜாவுரிமையையும் ஏனைய அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும் (Recognition of the right to full citizenship and other fundamental democrtic rights of all Tamils, who look upon the island as their country).

மேற்குறித்த கோட்பாடுகளில் முதலாவதில் பொருட்பிழை தரும் ஒரு சொற்பிழை இருக்கிறது.

இந்தக் கோட்பாட்டை வாசித்த இலங்கை அரசின் தலைமைப் பிரதிநிதி ஹெக்டர் ஜெயவர்த்தனா அந்தச் சொற்பிழையைத் தனது வாதத்துக்குச் சார்பாக எடுத்து வாதிட்டார்.

அப்போது தமிழர் தரப்பு அதன் உண்மையான அர்த்தத்தை கூட்டத்தொடரில் தெளிவுபடுத்தவேண்டியிருந்தது.

அதாவது, Nation என்பது வேறு Nationality என்பது வேறு அர்த்தமுடையது என்பதே அந்தச் சொற்சிக்கல்.

முன்னையதன் பொருளிலேயே பின்னைய சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற தெளிவை அங்கு தமிழர் தரப்பினர் தமது உரைகளில் சுட்டிக்காட்டவேண்டிய இக்கட்டான சூழல் ஏற்பட்டது. தவிரவும் மூன்றாம் கோட்பாட்டில் குறித்த சொல் சரியாகக் கையாளப்பட்டிருந்தது.

முதலாம் அமர்வில் (தமிழ்த் தரப்பு சட்ட ஆலோசகர் நடேசன் சத்தியேந்திரா கலந்துகொள்ள முன்னர்) திம்புக்கோட்பாடுகள் எழுதப்பட்டபோது அங்கே தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்தரணிகள் இருந்த போதும் குறித்த சொல்லை முதலாம் கோட்பாட்டில் தவறவிட்டிருந்தனர்.

திம்புக் கோட்பாடுகளில் நான்காவது மட்டும் (மலையக மக்களுக்கான பிரஜாவுரிமை) 1995 ஆம் ஆண்டளவில் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

மூன்றாந் தரப்பு அல்லது இலங்கை அரச தரப்பு ஒரு தீர்வை முன்வைக்க முன்வருகிறதென்றால், அது எந்த அடிப்படைகளை நிவர்த்தி செய்தால், வட்டுக்கோட்டை நிலைப்பாட்டை மறுதலிக்காமல் அதைத் தமிழர் தரப்பு பரிசீலிக்க இயலுமா இல்லையா என்பதைச் சுட்டுவதற்கானவையே திம்புக் கோட்பாடுகள்.

இதனாற் தான் திம்புக் கோட்பாடுகளை நெகிழ்ச்சித் தன்மைக்குரிய கோட்பாடுகளாகத் தெரிந்து, தேவைப்படும் போது பேச்சுவார்த்தை மேசையில் மட்டுப்படுத்திக் கையாளுவது தமிழ்த் தரப்பின் வழக்கமாயிருந்தது.

திம்புக் கோட்பாடுகள் எங்களுக்கானவை அல்ல. வெளிச்சக்திகளுக்கானவை அல்லது சிங்கள தேசத்துக்கானவை. காப்பரணுக்கான கோட்பாடுகள் அவை.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தம் 1985 திம்புக் கோட்பாடுகளை மறுதலித்த ஒன்று.

வரலாற்றுத் தாயகத்தையோ பாரம்பரியத் தாயகத்தையோ ஒப்புக்கொள்ளாமல், தமிழர் தாயகத்தின் ஆட்சிப்புல ஒருமைப்பாட்டை நிராகரித்து (கிழக்கில் மட்டும் பொதுவாக்கெடுப்பு, தற்காலிக இணைப்பு), வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள்(கள்) ஏனைய மக்களோடு வரலாற்று வாழிடமாகப் (Areas of Historical Habitation) பயன்படுத்திய ஒரு பகுதி என்பதை மட்டுமே தெரிவிக்கின்றது. (உடன்படிக்கையை எழுதியது காமினி திசநாயகாவும் டிக்சிற்றும்.)

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட 13 ஆம் திருத்தம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நோக்கை விட குறுகியதாக அமைந்தது. அது இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரைகளில் சில தாக்கங்களை ஏற்படுத்தினாலும் நடைமுறையில் எதையும் பெரிதாகச் சாதிக்கவில்லை.

அதையும் நிராகரிக்கும் போக்கில் இலங்கை அரசு இருப்பதானது உள்ளார்ந்த சுயநிர்ணயத்தை அது நிராகரிப்பதற்கான இன்னும் ஓர் எடுத்துக்காட்டு.

•••

அரசியல் விடுதலைக்கான நிலைப்பாடுகளை முன்வைக்கும் போது, குறைந்த பட்சக் கோரிக்கைகள் என்றும் உயர்ந்த பட்சக் கோரிக்கைகள் என்றும் அவற்றை முன்வைப்பது தவறு.

நெகிழ்ச்சிக்கான எல்லைகள் எவை என்பதைக் குறிப்பிட திம்புக் கோட்பாடுகளும், அதேவேளை எமது நிலைப்பாடும் கோட்பாடும் எது என்பதைக் குறிப்பிட வட்டுக்கோட்டைத் தீர்மானமும் அது சார்ந்த மக்களாணைக்குரிய விஞ்ஞாபனமும் விளங்குகின்றன. முள்ளிவாய்க்காலில் கோட்பாட்டைச் சரணாகதியாக்காத போராட்ட மரபும் இத்தோடு இணைத்துப் பார்க்கப்படவேண்டியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபை முன்வைத்தபோது அதிலே திம்புக் கோட்பாடுகளை எடுத்தாளாமாற் தவிர்த்து, வட்டுக்கோட்டையை மட்டுமே குறிப்பிட்டிருந்தார்கள் என்பதும் இங்கே குறிப்பாக நோக்கவேண்டியது.

வட்டுக்கோட்டை நிலைப்பாட்டில் இருந்து வழுவிச் செல்வோர் களையவொண்ணா என்ற பதமற்ற 'வெறும்' சுயநிர்ணய உரிமை என்பதைக் கூட்டாட்சி என்பதோடு சேர்த்துக் குழப்புவது மட்டுமல்ல, ஏதோ ஐ.நா. மன்றத்தின் சாசனங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டுச் சிக்கித் தவிக்கும் சுயநிர்ணய உரிமையைத் தான் தாம் கோருவதாகவும் காட்டிக்கொள்வார்கள்.

கேள்வி கேட்டால், 'அது' தான் 'இது' என்றும், 'இது' தான் 'அது' என்றும் விதண்டாவாதம் பேசி மக்களைக் குழப்புவார்கள்.

•••

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழக சட்டசபையில் மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 08 ஜூன் 2011, 27 மார்ச் 2013, 24 ஒக்டோபர் 2013, 16 செப்டம்பர் 2015 ஆகிய நான்கு தடவைகள் கொண்டுவந்து, சட்டசபை அமர்விற் பங்கேற்ற அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு ஏகமனதாக நிறைவேற்றிய நான்கு தீர்மானங்களின் மூன்று வலுவான கோரிக்கைகளாகப் பின்வருபவற்றைப் பார்க்கலாம்:

1. இன அழிப்புத் தொடர்பான பன்னாட்டு புலன்விசாரணையும் ஏனைய சர்வதேசக் குற்றங்களோடு தவறாது மேற்கொள்ளப்படவேண்டும்;

2. இலங்கை அரசு தமிழர்களுக்கெதிரான அடக்குமுறையைக் கைவிடும் வரை அதற்குப் பொருளாதார உதவிகளை மேற்கொள்ளக்கூடாது, இந்திய அரசு அதை நட்பு நாடு என்று அழைக்கக்கூடாது;

3. தனி ஈழத்திற்கான பொதுவாக்கெடுப்பு ஐ.நா. மேற்பார்வையில் தாயகத்திலும் ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் மேற்கொள்ளப்படவேண்டும்.

சுருங்கக்கூறினால், தமிழ்நாடு தெரிந்திருக்கவேண்டிய ஈழத்தமிழர் நிலைப்பாடு தொடர்பான சமன்பாடு பின்வருமாறு:

1. ஈழத்தமிழர் தேசத்தின் களையவொண்ணாச் சுயநிர்ணய உரிமை மரபு +
2. 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் +
3. 1977 தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம் +
4. திம்புக்கோட்பாடுகளில் முதல் மூன்று +
5. தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்ட வரைபு +
6. தமிழக சட்டசபையின் தலையாய மூன்று கோரிக்கைகள்.

இவற்றைத் தவிர ஈழத்தில் இருந்தோ, புலம்பெயர் சூழலில் இருந்தோ எவரும் எதுவும் தமிழ்நாட்டுக்குப் புதிதாகச் சொல்லவேண்டியதில்லை.

•••

களையவொண்ணா சுயநிர்ணய உரிமை என்பதற்கும் வெறு

மனே சுயநிர்ணய உரிமை என்பதற்கும் அடிப்படையில் வேறுபாடு உள்ளது.

சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அமையும் ஆட்சிமுறைத் தீர்வுகளாக மூன்று வெவ்வேறு வகைப் பாதைகள் உள்ளன:

1. ‘உள்ளார்ந்த சுயநிர்ணய’ பாதை என்ற மொழி, பண்பாட்டு அல்லது பிரதேச சுயாட்சி (ஆம், பதின்மூன்றாவது என்று பேசி முரண்பட்டுக்கொள்கிறார்களே, அதுவும் இதற்குள் தான், வெறும் சுயநிர்ணய கூட்டாட்சியும் இதற்குள் தான்)

2. படிநிலைப் பாதை என்ற பொதுவாக்கெடுப்பை உள்ளடக்கிய பாதை

3. இறைமையும் சுதந்திரமும் கொண்ட தனிநாடு அமைக்கும் பாதை.

கூட்டாட்சி பொதுவாக முதலாவது பாதையைப் பற்றியதாகவே அமையும். மிக அருமையான விதிவிலக்காக மட்டுமே அது இரண்டாவது பாதையைச் சகித்துக் கொள்ளும்.

இரண்டாவதும் மூன்றாவதும் களையவொண்ணாச் சுயநிர்ணய உரிமைக்குரிய பாதைகள்.

மூன்றாவதான பிரிவினையைக் கூட்டாட்சி அங்கீகரிக்காது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, மேற்குறித்த மூன்று பாதைகளில் மூன்றாவது பாதை தடைப்பட்டுவிட்டதாகவும் அதனால் முதலாவது அல்லது இரண்டாவது பாதைகள் பற்றியே இனிமேல் சிந்திக்கலாம் என்றும் பலர் நினைக்கிறார்கள்.

இதனாற் கூட்டாட்சி பற்றி அதிகமாகப் பேசிக்கொள்கிறார்கள். அப்படிப் பேசும்போது இரண்டாவது படிநிலைப் பாதையைக் கைவிட்டுவிட்டு முதலாவது பாதைத் தெரிவுக்குள் திசை தெரியாது திரும்பிவிடுகிறார்கள்.

இவ்வாறு தடங்காமல் பயணிப்பதற்கு கூட்டாட்சி என்ற பொதுவான சொல்லாடலுக்குப் பதிலாக இணைப்பாட்சி என்ற ஆட்சி வடிவத்தைத் தெளிவாக முன்வைக்கும் பதத்தைப் பயன்படுத்தியிருந்தால் இந்தச் சிக்கல் எழுந்திருக்காது.

இரண்டாம் பாதைக்குரிய நுழைவுச்சீட்டை ஐயந்திரிபற உறுதி செய்துகொள்வது இணைப்பாட்சி (Confederation) என்ற வழிமுறை மட்டுமே என்பதைப் பலர் அறியாதவர்களாக உள்ளார்கள்.

கூட்டாட்சி என்று கூவிக்கொண்டு இணைப்பாட்சிக்குக் கிட்டச் செல்லமுடியும் என்று வாதிடுவோருக்கு, “செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க செய்யாமையானுங் கெடும்” என்ற திருக்குறளையே நினைவுபடுத்தவேண்டும்.

• • •

இணைப்பாட்சியாக அரசியல் தீர்வு அமையாது கூட்டாட்சியாக அமையுமெனின், கூட்டாட்சியிலிருந்து விலகுவதற்கான படிமுறையைக் குறிப்பிடும் சிறப்பான உறுப்புரை அரசியலமைப்பு உறுப்புரைகளில் முற்கூட்டியே தெளிவாக வகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இல்லையென்றால், சட்டவாக்கம் ஒன்றைச் சிறப்பாக உருவாக்கும் வாய்ப்பு இருக்கவேண்டும்.

இவ்வாறான உறுப்புரையோ சட்டவாக்கமோ இலங்கையில் ஒருபோதும் சாத்தியமற்றவை என்பது கண்கூடு.

ஆதலால், கூட்டாட்சி என்று கதைப்பதே தவறு.

இணைப்பாட்சி என்பது ஓர் ஆட்சி முறை மட்டுமல்ல, அது ஒரு பயணம் அல்லது வாகனம் போன்றது.

பல ஆண்டுகள் இணைந்திருந்த பின் அது தனிநாட்டை நோக்கியோ அல்லது சாதாரண கூட்டாட்சியை நோக்கியோ நடைமுறையில் பயணித்துவிடலாம்.

இணைப்பாட்சியாக ஆரம்பித்து கூட்டாட்சியாகக் காலப்போக்கில் மாறிவிட்டதற்கான எடுத்துக்காட்டுகளாக சுவிற்சர்லாந்து நாட்டையும் ஜேர்மனியையும் குறிப்பிடலாம்.

காலனித்துவம் முற்றுப்பெறாத நிலையிலுள்ள அல்லது உள்ளார்ந்த சுயநிர்ணயப் பாதை பலகாலமாக மறுக்கப்பட்ட, அன்றேல் பெருங்கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ள சூழலில் இணைப்பாட்சியானது, பரீட்சார்த்தமாகத் தற்காலிகமாக இணைந்து வாழ்ந்து, ஒருவருக்கொருவர் கெடுதல் இன்றி வாழ்வதற்கான ஒரு பரிசோதனையை மேற்கொண்டு, காலப்போக்கில் அடுத்த படிநிலையை அடைய இடமளிக்கிறது.

இந்த நியாயத்தின் படி இரண்டாம் வகையான சுயநிர்ணயப் பாதையை வலியுறுத்துவது பொருத்தமானது. இணைப்பாட்சி என்று இலங்கையில் இருக்கும் கட்சிகள் அரசியற் தீர்வைக் கோருமானால் களையவொண்ணா சுயநிர்ணயத்தையோ, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையோ திம்புக் கோட்பாடுகளையோ அது நிராகரிக்காத போக்காக அமையும்.

மாறாக, கூட்டாட்சி என்று பேச ஆரம்பித்த உடனேயே பொதுவாக்கெடுப்பு என்பதை நிராகரிக்கும் ஒவ்வாமைப் போக்கு ஏற்பட்டுவிடும்.

• • •

ஈழத்தமிழர் தேசிய இனம் காலனித்துவம் முற்றுப்பெறாத நிலையில் இருந்தவாறு ஒரு போராட்டத்தை நடாத்தும் தேசிய இனம் (தேசம்) என்பதை வட்டுக்கோட்டைத் தீர்மானம் தெளிவுபடுத்தியிருந்தது.

காலனித்துவ நீக்கத்துக்குரிய சூழமைவுக்குள் (Decolonisation Context) வைத்துக் கையாளப்படவேண்டியது ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை என்பதால் அது களையவொண்ணா சுயநிர்ணய உரிமை (Inalienable Right of Self-Determination) என்ற நியாயப்பாட்டைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இதனால், ஐ.நா.வின் வரைபுகளுக்கு முற்பட்ட சுயநிர்ணய உரிமை வரைவிலக்கணத்துக்கு உரியதாகவும் அது திகழ்கிறது.

ஆகவே ஈழத்தமிழர் தேசத்தின் களையவொண்ணா சுயநிர்ணய உரிமையின் மரபை ஈழத் தமிழ்த் தேசிய விடுதலை அரசியலில் ஈடுபடுவோர் தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

இலங்கையின் தவறான சுதந்திரத்துக்கு ஒத்துழைத்துவிட்டுத் தனது வரலாற்றுத் தவறை உணர்ந்து திருத்திக்கொண்டது மட்டுமன்றி தமிழீழக் கோரிக்கையை முதன் முதல் முன்வைத்தவர் ‘அடங்காத் தமிழன்’ செ. சுந்தரலிங்கம் ஆவார்.

சுந்தரலிங்கம் தனது கொள்கையைத் தந்தை செல்வாவுக்கும் நெடுங்காலம் முன்னரே மிகத் தெளிவாக வரையறுத்து முன்வைத்திருந்தார்.

தாயகக் கோட்பாட்டையும் ஈழத் தமிழர்கள் சிறுபான்மை அல்ல என்பதையும் அவர் வரையறுத்தார்.

தந்தை செல்வா கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்துவந்த காலத்திலேயே அது தவறு என்று சுந்தரலிங்கம் அதை மறுதலித்துவந்தார்.

1950களின் இறுதியிலே தமிழீழத்தின் வரைபடத்தை முன்வைத்த அவர் அதையொட்டி தமிழீழத்தின் முதலாவது தேசிய கீதத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் யாத்திருந்தார்.

இருந்தபோதும், சுந்தரலிங்கம் சாதியத்தை நியாயப்படுத்திய கோளாற்றால் பீடிக்கப்பட்டிருந்தமையால் அவர் தமிழீழக் கோட்பாட்டின் தந்தையாகப் பொதுவெளியில் அங்கீகரிக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டது.

இருப்பினும், அவரே தமிழீழக் கோட்பாட்டின் மூலம் என்பது ஈழத்தமிழர் தேச விடுதலைக்கான அரசறிவியலில் வரலாற்று மாணவர்கள் அறிந்திருக்கும் மறுக்கவியலாத உண்மை.

கூட்டாட்சிக் கூத்தாடிகளால் இன்றும் தேடிப் படிக்கப்படவேண்டியவர் சுந்தரலிங்கம்.

தமிழீழக் கோட்பாடு முன்வைக்கப்பட்டுப் பத்து ஆண்டுகளின் பின்னர், தந்தை செல்வா கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்துவந்திருந்த காலப்பகுதியான 1968 ஆம் ஆண்டில், தமிழரசுக் கட்சியின் மூளை என்று அறியப்பட்ட வ. நவரத்தினம் தனித்துவமான இறைமைக் கோட்பாட்டை வலியுறுத்தியதால் கூட்டாட்சிக் கட்சி (Federal Party) என்று ஆங்கிலத்தில் அப்போது அறியப்பட்டிருந்த தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறி சுயாட்சிக் கழகம் அமைக்கவேண்டிய ஒவ்வாநிலை ஏற்பட்டது.

இவரே தேசியத் தலைவர் பிரபாகரனின் இளவயதில் அவருக்கு அரசியல் வழிகாட்டியான வேணுகோபால் ஆசிரியரின் தலைவர் ஆவார்.

இவ்வாறானோரால் வரையறுக்கப்பட்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலும் 1977 மக்களாணை பெற்ற தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தெளிவுபடுத்தப்பட்டதே களையவொண்ணா சுயநிர்ணய உரிமை.

1947 இல் சோல்பரி அரசியலமைப்பு தமிழர் விருப்புக்கு மாறாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து ‘ஐம்பதுக்கைம்பது’ கோரிக்கையை முன்வைத்து, பின்னர் அந்த அரசியலமைப்பு நிறைவேற்றப்பட முன்னரே சுயநிர்ணய உரிமைக்கான நியாயப்பாடு உண்டென்பதை பிரித்தானிய மகாராணியாருக்கு நினைவுபடுத்தித் தந்தி அனுப்பிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் - செல்வா தமிழ் காங்கிரசில் இருந்து பிரிவதற்கு முன்னான காலத்தில் - அதாவது இலங்கைச் ‘சுதந்திரத்துக்கு’ முன்பே, ‘சுயநிர்ணய உரிமை’ பற்றிய நியாயப்பாட்டைக் குறிப்பிட்டிருந்தார் என்பதையும் இங்கே பார்க்கவேண்டும்.

ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்கும் முன்பே சேர் பொன் அருணாச்சலம் தமிழ் அரசியல் அடையாளத்தையும் மக்கள் தனித்துவத்தையும் அரசியலமைப்புச் சமத்துவத்தையும் கோரியிருந்தாலும் தமிழீழம் என்பதற்கோ சுயநிர்ணய உரிமைக் கருத்தியலுக்கோ அடித்தளம் இட்டிருக்கவில்லை.

ஆக, களையவொண்ணாச் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைத் தெளிவாகச் செதுக்கிய சுந்தரலிங்கம், நவரத்தினம் ஆகிய இருவரின் அடித்தளக் கொள்கைகளே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் அதன் தொடர்ச்சியான பொதுவாக்கெடுப்புக் கோரிக்கையையும் கோட்பாட்டு ரீதியாகத் தீர்மானித்தன.

நடைமுறையில் அக்காலத்து இளந்தலைமுறையின் ஆயுதப் போராட்ட முனைப்பு வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கான அழுத்தத்தைத் தாராளமாக ஏற்படுத்தியிருந்தது. கோட்பாடும் நடைமுறையும் இணையாமல் போராட்டம் இல்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

சுந்தரலிங்கம், நவரத்தினம் ஆகியோரின் ஆங்கில மூல எழுத்துக்களை அடியொற்றியே பின்வந்த தத்துவாசிரியர்கள் ஆயினும் எழுத்தாளர்கள் ஆயினும் தமது ஆங்கிலப் புலமையைப் படியெடுத்துப் பயன்படுத்தினார்கள். படியெடுக்கையில் அறிந்தோ அறியாமலோ தவறுகளை இழைத்தார்கள். இழைத்த தவறுகளில் இருந்து அவர்கள் தம்மைத் தாமே மீட்டுக்கொள்ள களையவொண்ணா சுயநிர்ணய மரபில் வந்த நேர்த்தியான தேசியத்தலைவர் காரணமாயினார்.

ஆதலால், ஆங்கிலப் பிரதிகளை விட ஆங்கில மூலங்களைப் படிப்பது அரசியற் தீர்வு குறித்த எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு இன்றியமையாதது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து அளப்பரிய அர்ப்பணிப்புகளோடு அடுத்த கட்ட இளந்தலைமுறையால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் அடிப்படையான களையவொண்ணா சுயநிர்ணய உரிமை என்பதை முள்ளிவாய்க்கால் வரை சாவு வரினும் இறைமையைச் சரணாகதியடைதலுக்கு உள்ளாக்கமாட்டோம் என்று போரிட்ட வரலாறு ஒப்பாரும் மிக்

காருமற்ற ஓர் ஆயுதப் போராட்டத் தலைமுறையால் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது.

•••

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போல கூட்டாட்சி என்ற சொற்பதம் ஈழத்தமிழர் நாவில் ஏற்றப்பட்ட கொடுமை எவ்வாறு நிகழ்ந்தது?

சிங்கள தேரவாத பௌத்தப் பேரினவாதம் கூட்டாட்சி என்ற சொல்லைப் பிரிவினைக்கு ஈடானதாகப் பார்த்துவருவது இன்று நேற்றல்ல. அதற்கு நீண்ட நெடிய வரலாற்று மரபே உள்ளது!

ஆகவே, அவர்களை நோக்கிக் கூட்டாட்சிக் கதைகளை அளந்து கொண்டிருப்பதற்குப் பதிலாக நேரடியாகவே விடயத்துக்கு வருவது தான் நல்லது.

அதாவது களையவொண்ணா சுயநிர்ணய உரிமை என்றால் என்பதை அவர்களுக்கு விளக்குவதில் முயற்சியையும் நேரத்தையும் செலவிடுவது கூட்டாட்சி என்ற நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்றைப் பற்றிப் பிதற்றுவதை விட மேலானது.

இதை அறியாதவர்கள் அல்ல தேர்தல் தமிழ் அரசியல்வாதிகள்!

இலங்கையின் ஆறாம் சட்டத்திருத்தத்தைப் பார்த்து அதீதமாகப் பயப்படுவோர் 'மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல கூட்டாட்சி என்று கூப்பாடுகள் செய்கின்றனர்.

13 ஆம் சட்டத்திருத்தத்தை சவப்பெட்டியாக எரித்துப் போராட்டம் செய்யத் தயார் நிலையில் இருக்கும் இவர்கள் ஆறாம் சட்டத் திருத்தத்தைக் கண்டு பேயைப் பார்த்தது போல் பயந்து ஒடுங்கி விடுவர்.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் எவ்வாறு கட்சி மாறினாரோ அதைப் போல அவரின் பேரன் ஆறாம் சட்டத்திருத்தப் பேயைக் கண்டு அதீதமாக அஞ்சுவதற்கு அவரது குடும்பத்திடம் தென்னிலங்கையில் இருக்கும் சொத்துக்கள் காரணமாக இருந்தால், சொத்துரிமையில் இருந்து அவர் விடுபட்டு அரசியல் செய்யவேண்டும். அவரது குடும்பச் சொத்துச் சிக்கலை தமிழ் மக்களின் சிக்கலாக மாற்றும் அரசியலுக்குள் இழுத்துச் செல்வது தேசத்துக்கு நல்லதல்ல என்பது அவருக்குத் தெளிவாகப் புரியவைக்கப்படவேண்டும்.

இவர்கள் பேசும் கூட்டாட்சி, சுவிற்சர்லாந்தில் இருந்தும் பெல்ஜியத்தில் இருந்தும் தவறான சிட்டைகளில் ஏற்றுமதி செய்யப்படுபவை.

இலங்கைத் தீவின் அரசியலமைப்புக் கட்டுரைப்பைத் திரிபுபடுத்துவதற்காகக் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள முகவர்கள் ஊடாக, குறிப்பாக மேற்கத்தைய பல்கலைக்கழக, சிந்தனைக்குழாத்து, இலவசச் சட்ட உதவி, சர்வதேசத் தன்னார்வ, தூதரக சலுகை அரசியலுக்கூடாக ஆற்றுப்படுத்தப்படும் 'கட்டுப்படுத்தல் மூலோபாயத்தின்' உத்திகளே இந்தச் சிட்டைகள்.

இந்தச் சிட்டைகளுக்குப் பின்னால் சாதாரண கண்களுக்குப் புலப்படாமல் சிங்கப்பூர் தீர்மானங்கள் என்றும் இமாலயப் பிரகடனம் என்று எழுதாமல் எழுதப்பட்டிருக்கும்.

இவற்றை இந்தியாவுக்குள்ளும் ஏற்றுமதி செய்ய தமிழ்நாட்டுக்குள் கூட்டாட்சிக் கோரிக்கையைக் கொண்டு செல்லவேண்டும்.

அதற்கான கூலிவேலைக்கு அவ்வப்போது ஏற்ற முகவர்கள் கிடைப்பது ஒன்றும் புதிதல்ல.

ஆகவே, முகவர்களையும் முகவர்களுக்குப் பின்னாலுள்ள அனைத்துலக முகவர்களையும் நொந்துகொள்வதிலும் பார்க்க, தவறான சிட்டைகள் எவை என்பதை மக்களுக்கு விளக்குவதே கூடுதற் பொருத்தமானது.

களையவொண்ணா சுயநிர்ணய உரிமை எந்தெந்தச் சூழல்களுக்குப் பொருத்தமானது என்று சர்வதேச நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள் என்பதை நோக்கும் போது, குறிப்பாக

1. காலனித்துவ ஆதிக்கம்,
2. வேற்று ஆக்கிரமிப்பு,
3. நிறவாத, பேரினவாத ஆட்சிகளின் கடுந்தாக்கம் (இன அழிப்பு)
4. உள்ளார்ந்த சுயநிர்ணயம் திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்ட அரசியலமைப்புவரலாறு

என்ற காரணிகள் புலப்படும்.

2009 ஆம் ஆண்டின் பின்னான 16 ஆண்டுகாலத்தின் பின்னரும் மேற்குறித்த நான்கும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாக ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை மறுப்பில் தொடருவது தெளிவாகத் தெரிகிறது.

ஆனால், 'வெறும்' சுயநிர்ணய உரிமை பேசப்படும் சூழல்களாக:

1. அரசியலமைப்புச் சீர்திருத்தம்
2. கூட்டாட்சி
3. ஒப்பீட்டு நியாயத்தன்மை
4. சர்வதேச வற்புறுத்தல்

போன்ற சூழல்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

எமது சூழலைச் சரியாகத் தகவமைத்துக் காட்டி எமக்கான கட்டுரைப்பை முன்வைக்கத் தெரியாதவர்கள் பலன் எதுவுமற்ற சிட்டைகளைத் தெரிந்துகொண்டே பெற்றுக்கொண்டு, அவற்றைத் தமிழ்நாட்டுக்கும் சில புலம்பெயர் அமைப்புகளுக்கும் அழகாகப் பொதிபண்ணி விற்க முனைகிறார்கள்.

இதற்காக, ஊடகங்களை உருவாக்கவும் கருத்துருவாக்கம் பண்ணவும் பல கோடி ரூபா நிதியை சில மேற்கு நாடுகள் ஒதுக்கி, ஒவ்வொன்றாகப் பணமுடிச்சுக்களை அவிழ்த்து வருகின்றன. நல்லிணக்கப் பொதி மூட்டை முழந்து இப்போது கூட்டாட்சிப் பொதி மூட்டை அவிழ்க்கப்படுகிறது!

இதிலே முதலாமிடத்தைத் தட்டிச் செல்வது சுவிற்சர்லாந்துச் சிட்டை.

சுவிற்சர்லாந்து இணைப்பாட்சியாக இருந்து கூட்டாட்சியாக எப்போதோ மாறிவிட்டது. பெயரில் மட்டும் இணைப்பாட்சி என்பது உள்ளது. அங்கிருக்கும் எந்த ஒரு மக்களுக்கும் தனித்துவமான சுயநிர்ணய உரிமை இருப்பதாக அது அங்கீகரிக்கவில்லை. இன்றிருக்கும் கூட்டாட்சியில் கன்ரோன்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமை கிடையாது.

இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொள்கிறது பெல்ஜிய புளரிநாச (னல்)ச் (Plurinational) சிட்டை.

பெல்ஜியம் ஒற்றையாட்சியாய் இருந்து கூட்டாட்சியாக மாறியது. தாயகக் கோட்பாடு கிடையாது. ஆனால், பன்மைத்துவ மக்களுக்கான அங்கீகாரம் இருக்கிறது. அதனால், பெல்ஜியத்தை ஆராயவேண்டுமாம். அதிலே தான் தீர்வு உள்ளதாம். இதை எழுதவேண்டுமாம். தமிழர்களுக்கு கூட்டாட்சி பற்றி அறிவு போதாது என்பதால் அதைக் கற்பிக்கவேண்டுமாம்.

தாயகக் கோட்பாடு இனிமேற் சாத்தியமில்லை என்று நம்பும் கூலிக்கு மாரடிப்பவர்கள் பணமுள்ளவரை பெல்ஜிய மாடலைப் பற்றி எழுதுவார்கள்.

மூன்றாமிடத்திலுள்ள கனடா கொஞ்சம் வித்தியாசமான சிட்டை. ஒரு வகையில் நியாயமான சிட்டையும் கூட.

இது இணைப்பாட்சியாக இருந்து கூட்டாட்சியாக மாறியது. இதை மறந்து போயிருந்த ஒரு மாநிலம் பிரிய முற்பட்டபோது உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஏகமனதாகப் பிரியும் உரிமை கனடியக் கூட்டாட்சியில் கிடையாது என்றது அந்த 1998 ஆம் ஆண்டுத் தீர்ப்பு.

இதற்கென்ற சிறப்புச் சட்டவாக்கத்தை கனடா உருவாக்கிய பின்னரே அந்தப் பொதுவாக்கெடுப்புப் படிமுறை உரிமை உறுதியாக்கப்பட்டது.

அதாவது, கூட்டாட்சி என்பதால் சுயநிர்ணய உரிமை இயல்பாக உறுதிப்படுத்தப்படாது என்பதை விளங்கிக் கொள்ள கனடாச் சிட்டை பயன்படும்.

ஈழத்தமிழ்க் கூட்டாட்சிக் கூப்பாடுகள் முதலில் கனடாவின் இந்த 2000 ஆம் ஆண்டுச் சட்டவாக்கத்தைப் படிக்கவேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் கனடாவில் நடந்தேறிய சட்டவாக்கம் கனடிய சமுதாயத்தின் முதிர்ச்சியின் பெறுபேறு. அந்த முதிர்ச்சியைக் காணும் தன்மை இலங்கைக்கு இல்லை.

ஒரு காலத்தில் ஆதிக்குடிகள் மீது இன அழிப்புப் புரிந்த கிறீத்தவ மரபில் வந்து பிற்காலத்தில் தாராளவாத மக்களாட்சி அரசியலில் ஈடுபடும் கனடா போன்ற நாடல்ல இலங்கை. தேரவாத பௌத்த முன்னுரிமைவாத மரபில் வந்து குரூரமான இன அழிப்பை தற்காலத்தில் மேற்கொண்ட ஓர் ஒற்றையாட்சி அரசு. இதே வரலாறு மியான்மாரில் நடந்தேறி உலக நீதிமன்றத்தில் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்படுள்ளது.

ஆகவே, கனடா போன்ற படிமுறைக் கூட்டாட்சிக்கான அடிப்படை இலங்கையில் சாத்தியமாகும் என்ற கற்பனைகளைத் தேவையில்லாமல் வளர்த்துக்கொள்ளக்கூடாது.

பிரித்தானியா எனும் எழுதப்பட்ட அரசியலமைப்பைக் கொண்டிராத ஒற்றையாட்சியோ, கனடாவின் கூட்டாட்சிக்குத் தானும் இணையானது என்றும், ஒற்றையாட்சி, கூட்டாட்சி என்ற சிட்டைகளில் எல்லாம் அர்த்தமில்லை; அதிகாரங்களை வரையறுக்கும் அரசியலமைப்பின் உள்ளடக்கத்தில் தான் அர்த்தமுள்ளது என்றும் சொல்லுகின்ற விநோதமான சிட்டை. இந்த விநோதமும் இலங்கைக்குப் பொருத்தமற்ற ஏட்டுச்சுரைக்காய்.

பெரிய வெள்ளி ஒப்பந்தம் எடின்பரா ஒப்பந்தம் போன்றவற்றை இலங்கையில் சாதிக்கவியலுமா என்ற கேள்வியை பிரித்தானிய அரசியல் தரப்புகளுக்கு எடுத்து விளக்கும் ஆற்றலோடு மட்டுமல்ல இலங்கையின் தவறான அரசியலமைப்புக் கட்டுரைப்பில் பிரித்தானியாவின் பொறுப்பையும் உரிய முறையில் சுட்டிக்காட்டவேண்டும்.

களையவொண்ணா சுயநிர்ணய உரிமை என்பதை விளங்கிக் கொள்வதே இதற்கான திறவுகோல்.

இந்தியச் சிட்டை வேறுவிதமானது.

'அடுக்குக் கேக்' போல ஓரளவுக்கேனும் அதிகாரங்கள் வரையறுத்துப் பிரிக்கப்பட்டு நடைமுறையில் இன்றிருக்கும் மாநில, மத்திய அதிகாரங்களைக் கூட ஒன்றுக்குள் ஒன்று கலந்து 'மார்பிள் கேக்' போன்ற கூட்டாட்சிக் கலவையாக மாற்றிவிட எத்தனித்து ஒற்றையாட்சி போலச் செயற்பட வைக்கும் போக்கில் இந்தியாவின் கூட்டாட்சியை வட இந்தியா நகர்த்திக்கொண்டிருக்கிறது.

இந்தப் போக்குக்குக் 'கூட்டுறவுக் கூட்டாட்சி' (Cooperative Federalism) என்று 'நாமம்' சூட்டப்பட்டுள்ளது. இது 'இந்தியன் மாடல்' கூட்டாட்சி! இதை எதிர்த்து நிற்பது திராவிட மாடல் மாநில ஆட்சி!

இதற்குள் தமிழ்த் தேசியம் எப்படியிருக்கவேண்டும் என்பதை வகுத்துக்கொள்வது தமிழ்நாட்டினரின் சுயநிர்ணய உரிமையின் பாற்பட்டது.

இப்படியான இடங்களிற் சென்று ஈழத்தமிழர்களுக்குக் கூட்டாட்சி வேண்டும் என்று கதைப்பது விந்தையானது.

மறைந்துபோன சுந்தரலிங்கம், நவரத்தினம் ஆகியோருடன் செல்வநாயகம் மட்டுமல்ல தம்பியிரை ஈந்த பல்லாயிரக்கணக்கான மாவீரர்களதும் மக்களதும் வரலாற்றை இடறுவதற்கு ஒப்பானது.

பிரபாகரன் சிந்தனைப்பள்ளியில் தேறியவர்கள் இனியாவது தேர்தல் அரசியற் கட்சிகளிடமிருந்து ஈழத் தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

நன்றி: Tamilnet.com



வரலாற்றில் மறைக்கப்பட்ட இந்தோனேசியப் படுகொலை: கம்யூனிச களையெடுப்புக்கு இரு மில்லியன் மக்கள் பலி!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

21.12.2025

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், டச்சு ஆதிக்கம் இந்தோனேசிய எல்லைகளுக்கும் விரிவடைந்தது. இரண்டாம் உலகப் போரின் போது 1942-1945 ஆம் ஆண்டு ஜப்பானிய படையெடுப்பின் விளைவாக டச்சு ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

இதன் விளைவாக அடுக்கப்பட்ட இந்தோனேசிய சுதந்திர இயக்கம் தீவிரமாக தொடங்கியது. ஆகஸ்ட் 1945 இல் ஜப்பான் சரணடைந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு, தேசியவாத தலைவர் சுகர்னோ சுதந்திரத்தை இந்தோனேசியாவில் அறிவித்து ஜனாதிபதியானார்.

இந்தோனேசிய படுகொலைகள்:

Scenes of killinds and First People's National Assembly of the D. S. R. of Indonesia, in 1966

இரண்டாம் உலக போரின் பின்னரும், நெதர்லாந்து அதன் ஆட்சியை மீண்டும் நிலை நிறுவ முயன்றது. ஆனால் கசப்பான ஆயுதம் மற்றும் இராஜதந்திர போராட்டம் 1949 டிசம்பரில் முடிவுக்கு வந்தது. சர்வதேச அழுத்தத்தை எதிர்கொண்டு டச்சுக்காரர்கள் இந்தோனேசிய சுதந்திரத்தை முறையாக அங்கீகரித்தனர்.

ஆனாலும், இந்தோனேசியாவில் அடக்குமுறையை எதிர்கொண்ட மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். PKI என்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் மக்கள் போராட்டம் தொடங்கியது. 1965ல் நடந்த ஒரு சதிப்புரட்சியின் விளைவாக இந்தோனேசிய இராணுவம் தலைமையிலான புதிய தலைமை நாட்டை கைப்பற்றியது.

இதன் விளைவாக கம்யூனிச எதிர்ப்பு சுத்திகரிப்புக்கு வழிவகுத்தது. இதில் அரை மில்லியனுக்கும் அதிகமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

அப்போதய இராணுவ ஜெனரல் சுகார்டோ அரசியல் ரீதியாக ஜனாதிபதி சுகர்னோவை எதிர்த்து மேலோங்கினார். மார்ச் 1968 இல் ஜனாதிபதியானார். அவரது புதிய ஒழுங்கு நிர்வாகம் மேற்குநாடுகளின் ஆதரவைப் பெற்றது.

நீண்ட கால ஆட்சியால் இந்தோனேசியாவில் அவரது முதலீடு மூன்று தசாப்தங்களாக கணிசமான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக இருந்தது.

இருப்பினும், 1990களின் பிற்பகுதியில், கிழக்கு ஆசிய நிதி நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்ட நாடாக இந்தோனேசியா இருந்தது. இது மக்கள் எதிர்ப்புக்களுக்கு வழிவகுத்தது மற்றும் 1998 மே 21 அன்று சுஹார்டோவின் இராஜினாமாவுக்கு வழிவகுத்தது.

சுஹார்டோவின் இராஜினாமாவைத் தொடர்ந்து சீர்திருத்த சகாப்தம், ஜனநாயக செயல்முறைகளை வலுப்படுத்த வழிவகுத்தது. ஒரு பிராந்திய சுயாட்சி திட்டம், கிழக்கு திமோரின் விடுதலை மற்றும் 2004 இல் முதல் நேரடி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அரசியல் மற்றும் பொருளாதார உறுதியற்ற தன்மை, சமூக அமைதியின்மை, ஊழல், இயற்கை பேரழிவுகள் மற்றும் பயங்கரவாதம் ஆகியவை முன்னேற்றத்தை மெதுவாக்கியுள்ளன.

இந்தோனேசிய கொலைக் களம்:

சுஹார்டோவின் கீழ் இந்தோனேசிய இராணுவத்தால் 1965 முதல் 1966 வரை இந்தோனேசியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் (PKI) உறுப்பினர்களை குறிவைத்து பெரிய அளவிலான கொலைகள் மற்றும் உள்நாட்டு அமைதியின்மை ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மற்ற குழுக்களில் கம்யூனிஸ்ட் அனுதாபிகள், கெர்வானி பெண்கள், சீன இன மக்கள், நாத்திகர்கள், இடதுசாரிகள் எனக்கூறப்பட்டவர்கள் அடங்குவர்.

அக்டோபர் 1965 முதல் மார்ச் 1966 வரையிலான வன்முறையின் முக்கிய காலகட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சுஹார்டோவின் கீழ் இந்தோனேசிய இராணுவத்தால் அட்டூழியங்கள் தூண்டப்பட்டன. இந்தோனேசிய அதிகாரிகள் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளின் ஆதரவைப் பெற்றனர் என்பதை ஆவணங்கள் நிரூபிக்கின்றன.

செப்டம்பர் 30 இயக்கத்தின் ஒரு சர்ச்சைக்குரிய சதிமுயற்சியைத் தொடர்ந்து இது கம்யூனிச எதிர்ப்பு சுத்திகரிப்பு ஒன்று தொடங்கியது. மிகவும் பரவலாக வெளியிடப்பட்ட மதிப்பீடுகளின் படி, குறைந்தது 500,000 முதல் 1.2 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சில மதிப்பீடுகள் இரண்டு முதல் மூன்று மில்லியன் வரை இருக்கும் என்றும் கூறப்படுகிறது. புதிய ஒழுங்குக்கு மாறுதல் மற்றும் PKIஐ ஒரு அரசியல் சக்தியாக நீக்குதல், உலகளாவிய பனிப்போரில் தாக்கங்களை ஏற்படுத்தியதில் இந்த தூய்மைப் படுத்தல் ஒருமுக்கிய நிகழ்வாக இருந்தது.



1965இன் இறுதியில் மக்கள் எழுச்சிகள் ஜனாதிபதி சுகர்னோவின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. மேலும் இதுவே சுஹார்டோவின் மூன்று தசாப்த கால சர்வாதிகார ஜனாதிபதி பதவிக்கு வழிவகுத்தது. கைவிடப்பட்ட சதி முயற்சி இந்தோனேசியாவில் அடக்கி வைக்கப்பட்ட வகுப்புவாத வெறுப்பை வெளியிட்டது. இவை இந்தோனேசிய இராணுவத்தால் தூண்டப்பட்டன. இது PKI மீது விரைவாக் குற்றம் சாட்டியது. கூடுதலாக, அமெரிக்கா, ஆங்கிலேய, அவுஸ்திரேலியாவின் புலனாய்வு அமைப்புகள் இந்தோனேசிய கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக கடும் பிரச்சாரத்தில் ஈடுபட்டன.

பனிப் போரில் இந்தோனேசியா:

பனிப்போரின் போது, அமெரிக்கா, மேற்கத்திய கூட்டாளி நாடுகள் கம்யூனிசத்தின் பரவலைத் தடுத்து, ஆசிய நாடுகளை தங்கள் செல்வாக்கின் எல்லைக்குள் கொண்டு வருவதை இலக்காகக் கொண்டிருந்தனர். ஏனெனில் சுகர்னோவை அகற்றுவதற்கு பிரிட்டன் கூடுதல் காரணங்களைக் கொண்டிருந்தது. ஏனெனில் அவரது அரசாங்கம் முன்னாள் பிரிட்டிஷ் காலனிகளின் காமன்வெல்த் கூட்டமைப்பான அண்டை நாடான மலாயா கூட்டமைப்புடன் அறிவிக்கப்படாத போரில் ஈடுபட்டது.

இதன் விளைவாக கம்யூனிஸ்டுகள் அரசியல், சமூக மற்றும் இராணுவ வாழ்க்கையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மேலும் PKI தானே கலைக்கப்பட்டு தடைசெய்யப்பட்டது. ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு அடுத்த சில வாரங்களில், அக்டோபர் 1965 இல் வெகுஜனக் கொலைகள் பெருமளவில் தொடங்கின. 1966 இல் தலைநகர் ஜகார்த்தாவில் தொடங்கி மத்திய மற்றும் கிழக்கு ஜாவா வரை கொலைகள் பரவியது.

மத்திய ஜாவா, கிழக்கு ஜாவா, பாலி மற்றும் வடக்கு சுமத்ராவின் PKI கம்யூனிஸ்டுகளின் கோட்டைகளில் மிகவும் தீவிரமான கொலைகள் நாடு முழுவதும் நிகழ்ந்தன. மார்ச் 1967 இல், இந்தோனேசியாவின் தற்காலிக பாராளுமன்றத்தால் சுகர்னோ தனது எஞ்சியிருந்த அதிகாரத்தை பறித்தார். மேலும் சுஹார்டோ செயல் தலைவராக மட்டுமே நியமிக்கப்பட்டார்.

சுஹார்டோ ஜனாதிபதியாக:

மார்ச் 1968 இல், சுஹார்டோ முறையாக ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்டார்.

1962 ஆம் ஆண்டு சிஐஏ குறிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள படி, கம்யூனிச எதிர்ப்பு இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே விரி வான தொடர்புகள் இருப்பது போல, சுகர்னோவை கலைக்க வேண்டும் என்று அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் அரசாங்கங்களின் உயர் மட்டத்தில் ஒருமித்த கருத்து இருந்தது.

ஆனால் அமெரிக்க இராணுவம் இந்தோனேசிய 1,200 அதி காரிகளுக்குப் பயிற்சி அளித்தல், மூத்த இராணுவப் பிரமுகர்கள் உட்பட ஆயுதங்கள் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி, CIA இந்தோனேசியாவில் கொலைகளில் தீவிர ஈடு பாட்டை மறுத்தது.

வரலாற்றில் மறைக்கப்பட்ட 20 ஆம் நூற்றாண்டின் மிக மோசமான இந்தோனேசியாவில் 1965–66 வெகுஜன படுகொலை கருதப்படுகிறது. தென்னாசிய நாடுகளில் கம்யூனிசத்தின் பரவலைத் தடுத்து, ஆசிய நாடுகளை தங்கள் செல்வாக்கின் எல்லைக்குள் கொண்டு வருவதை இலக்காகக் கொண்டிருந்த மேற்கத்திய உலகும், அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏ இணைந்தே இந்தோனேசியாவில் பாரிய கம்யூனிச களையெடுப்பு நடத்தியது

2017 இல் வெளியிடப்பட்ட அமெரிக்க ஆவணங்கள், அமெரிக்க அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே வெகுஜனக் கொலைகள் பற்றிய விரிவான அறிவைக் கொண்டிருந்தது. இந்தோனேசிய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தது என்பதை வெளிப்படுத்தியது. இந்தோனேசிய கொலைக் குழுக்களுக்கு PKI அதிகாரிகளின் விரிவான பட்டியலை வழங்குவது உட்பட கொலைகளில் சிஐஏ உடந்தையாக இருந்தது. வரலாற்றாசிரியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களால் இவை நிரூபிக்கப்பட்டது.

20 ஆம் நூற்றாண்டின் மிக மோசமான வெகுஜன படுகொலைகளில் ஒன்றாக இந்தோனேசியவை வரிசைப் படுத்தப்படுத்தி, 1968 ஆம் ஆண்டு இரகசிய சிஐஏ அறிக்கை தற்போது வெளியாகியுள்ளது.

உடைத்தெறியப்பட்ட பேனாக்களின் வரலாறே ‘ஈழப் போரில் எழுத்தாயுதம்’

– கந்தர்மடம் அ. அஜந்தன் –

ஈழப்போரை உலக அரங்கிற்கு எடுத்துச்சென்ற பல துணிச்சலான ஊடகவியலாளர்கள் பலர் இன்று இந்த மண்ணில் இல்லை. “ஈழப் போரில் எழுத்தாயுதம்” என்ற நூல் ஒரு இருண்ட யுகத்தின் உடைத்தெறியப்பட்ட பேனாக்களைப் பற்றிப் பேசுகின்றது.

ஆனாலும் அவர்களது துணிச்சலான சாதனைகளும் அவர்கள் விட்டுச் சென்ற அவர்களது எழுத்தென்ற ஆதாரங்களும் இன்றும் உயிர்ப்புடன் உள்ளன. மானுடத்தின் மத்தியில் நீதியை நிலைநாட்ட அவர்களது பேனாக்கள் மட்டும் குருதி சிந்த வில்லை அதனை ஏந்திய கரங்களும் குருதி சிந்தின. அவற்றின் விளைவே இன்றும் உலக நாடுகளில் ஊடகச் சுதந்திரத்தில் இலங்கை 165ஆது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

நீதியின் காவலர்களாகப் பார்க்கப்பட வேண்டிய ஊடகவியலாளர்களை துப்பாக்கிகள் துரத்தியபோதும் நிமலராஜன், நடேசன், சிவராம், சத்தியமூர்த்தி, புதுவை இரத்தினதுரை, தவபாலன், கோபாலரத்தினம், காணமயில்நாதன், மாணிக்கவாசகம், மு.பொ, பாரதி ஆகிய எழுத்தாயுதம் ஏந்திய ஆளுமைகள் நம் தேசத்திற்கு ஆற்றிய பங்கினை இக் கட்டுரைகள் முக்கியத்துவப்படுத்துகின்றன.

அவர்களின் புலனாய்வுத் திறனும், அர்ப்பணிப்பும், துணிச்சலும் பல போலி முகங்களை தோலுரித்துக் காட்டின, திரைமறை நாடகங்களை வெளியரங்கில் கொண்டுவந்தன, நீதிக்கான குரலாக முன்நின்று ஒலித்தன. இறுதியில் அதுவே அவர்களின் உயிரையும் குடித்தது. இருப்பினும் பேனா தூக்கி எழுதுபவனுக்கு இறப்பில்லை. அவன் விட்டுச்சென்ற செய்தியில் வாழ்ந்துகொண்டே இருப்பான்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நூலாசிரியரால் எழுதப்பட்ட பதிவுகளின் தொகுப்பாக இந்த நூல் அமைந்துள்ளது. இங்கு அவர்கள் கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் அதற்கான காரணிகளும் கடந்த காலத்தின் கறைபடிந்த கனத்த நாட்களை நினைவுபடுத்துகின்றது. ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தில் குரலாக இருப்பவர்களின் குரல்வளைகள் நொருக்கப்படுவது ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் மரணமாகவே கருதப்படும்.

இருப்பினும் உண்மைகள் உறங்குவதில்லை என்பதை காலம் நிரூபித்து நிற்கும். சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள், போர் வரையறைகள், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவை மறுக்கப்பட்ட ஒரு தேசத்தின் சமாதிமீது வைக்கப்படும் மலராக இந்த நூல் அமைய வேண்டும்.



இங்கு பதிவு செய்யப்பட்ட ஊடகப் போராளிகளின் ஊடகப் பணிகளும் அதற்கு வழிவகுத்த ஊடகங்களான வானொலிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சிகள் என்று அவற்றின் வரலாறுகளும் தொட்டுச் செல்லப்படுகின்றன. கொலை வெறியில் இன வேற்றுமை காட்டிய பேரினவாதம் சமத்துவத்தைப் பேணியதும் ஊடகவியலாளர் கொலைகளில் தான். அவர்களையும் இந்த நூல் நினைவு கூருகின்றது. அது மட்டுமன்றி இரு தரப்பினருக்குமான நீதி மறுக்கப்பட்டதையும் அதற்கான போராட்டங்களையும் இங்கு பதிவு செய்துள்ளார். இப்பொழுது புற்றிலிருந்து முளைத்த பல ஊடகவியலாளர்களுக்கு முன்னோடிகளாக திகழ்ந்தவர்கள் இவர்கள். எனவே தான் இந்த நூல் ஒரு முக்கிய ஆவணப்படுத்தலாக அமையும் என்று நம்புகின்றேன்.

புரட்சியில் பூத்த மலராய் புதுவை இரத்தினதுரை பற்றிய கட்டுரை மிக நீண்ட கட்டுரையாக அமைந்துள்ளது. அவரது கவியுலக ஆறாய் ஓடிய வரிகள் பின் எரிமலையாய் வெடித்த கதை இங்கு பதிவிடப்பட்டுள்ளது. போராட்ட காலத்தின் பங்களிப்பில் இளம் சமூகத்தை எழுச்சி கொள்ள வைத்த பாரிய வெற்றி இவரையே சாரும். இவரது புகழ் பூத்த புரட்சிப் பாடல்களையும், கவிதைகளையும் இந்து நூல் தன்னகப்படுத்தியுள்ளது.

மூத்த பத்திரிகையாளர்களின் பங்கு ஒரு சமூகம் நிமிர்ந்து நடப்பதற்கு அதன் முள்ளந் தண்டைப் பலப்படுத்துவதாகும். இங்கு குறிப்பிடப்பட்ட மூத்த பத்திரிகையாளர்களின் எழுத்தின் காத்திரத் தன்மை அது காலத்தின் அடையாளம். எமது இனத்தையும் எமது மொழியையும் மங்காமல் மிளிர வைத்த பெருமை அவர்களையே சாரும். அவர்கள் அமைத்த அடித்தளத்திலேயே நீதிக்கான அழைப்பு மணிக்கோபுரம் கட்டியமைக்கப்பட்டுள்து. உலகெங்கும் ஒலிக்கும் எமக்கான ஆதரவுக் குரல்களும், சமாதானச் சமிக்கைகளும் அவற்றின் எதிரொலிகளே.

எமது எதிர்காலச் சந்ததியினருக்கு போரின் வலி புரியப் போவதில்லை, இவர்களின் அர்ப்பணிப்பு விளங்கப்போவதில்லை. வரலாறுகள் மறைக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகத்தின் குழந்தைகளாகவே அவர்களை வாழ அனுமதிப்பது ஒரு இனத்தின் தவறு. ஊடகவியலாளர்கள் ஒருபோதும் அந்தத் தவறைச் செய்துவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை துளிர்க்கின்றது. வெற்றுப் பேனாக்களின் வீர வரலாறுகள் வெறும் தாள்களில் எழுதப்படுபவையல்ல, மாறாக அவை ஒவ்வொன்றும் மனித மனங்களில் எழுதப்பட வேண்டியவை. ஐங்கரன் விக்கினேஸ்வராவின் இந்த முயற்சியும் அதனையே எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இந்தச் சிறு குறிப்புக் கட்டுரைகள் கால எல்லைகளின் ஒழுங்கில் அமையுமிடத்து ஒரு எழுந்து நின்ற பேனாக்கள் வீழ்த்தப்பட்ட வரலாறு காலம் காலமாக கடத்தப்படும். இன்னும் பல கரங்களில் போனாக்களைச் சேர்க்கும். எமது வரலாற்றை நாமே எழுதிச்செல்லும் செல்நெறி பிறக்கும்.

2025: அனுர அலையில் தொடக்கி மனிதாபிமான அலையில் முடிந்த ஆண்டு

27.12, 2025

இந்த ஆண்டு பிறந்த போது நாட்டில் "அனுர அலை" வீசியது. இந்த ஆண்டு முடியும் போது புயலுக்கு பின்னரான ஒரு மனிதாபிமான அலை நிலவுகிறது. இரண்டுமே அலைகள்தான். இரண்டுமே அரசாங்கத்தைப் பலப்படுத்தும் அலைகள்தான்.

அனுர அலை என்பது தமிழ் நோக்கு நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளை பின்னுக்குத் தள்ளியது.அது நாடாளுமன்றத் தேர்தலில் நிரூபிக்கப்பட்டது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த அதீயளவு ஆசனங்கள்தான் அரசாங்கத்துக்கும் கிடைத்தன. யாருக்கு வாக்களிக்கிறோம் என்பது தெரியாமலேயே தமிழ்மக்கள் வாக்களித்திருந்தார்கள். இப்படிப் பார்த்தால் இந்த ஆண்டு தொடங்கும் பொழுது அது தமிழ்த்தேசிய அரசியலுக்குப் பதகமான ஓர் ஆண்டாகத்தான் தொடங்கியது.

அந்தத் தோல்விக்கான காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றைச் சரி செய்யும் விடயத்தில் தமிழ்த்தேசிய அரசியல் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது? உள்ளூராட்சி சபைகளில் பெற்ற வெற்றிகள் சற்று ஆறுதல் தரக்கூடும். ஆனால் கடந்த வாரம் கரைத்துறைப் பற்று பிரதேச சபையில் என்ன நடந்தது? வடக்கில் அரசாங்கம் முதலாவது உள்ளூராட்சி சபையை கைப்பற்றியிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? சந்தேகத்துக்கிடமின்றி தமிழ் கட்சிகளுக்கு இடையிலான ஐக்கியமின்மைதான் முதலாவது காரணம். அந்த ஐக்கியமின்மையை சரிசெய்யத் தேவையான தலைமைத்துவம் தமிழரசுக் கட்சியிடம் இல்லை என்பதுதான் இரண்டாவது காரணம்.

சிதறிக் கிடக்கும் தமிழ்த்தேசிய கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு கடந்த ஓராண்டுக்கு மேலான காலப்பகுதியில் அதாவது ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் மூன்று முயற்சிகள் எடுக்கப்பட்டன. முதலாவது, தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றாக்கும் முயற்சி. தமிழரசுக் கட்சி அதைத் தோற்கடித்தது.இரண்டாவது, தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரில் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சி. அதுவும் இப்பொழுது ஏறக்குறைய தோற்கும் நிலைக்கு வந்துவிட்டது. மூன்றாவது அண்மையில் தமிழரசுக் கட்சியும் ரெலோவையும் சந்தித்து மாகாண சபைத் தேர்தல்களை ஒன்றாக எதிர்கொள்வைத்தற்கான பேச்சுவார்த்தை. ஆனால் அந்த ஒற்றுமை முயற்சிகள் எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பதற்கு கரத் துறைப் பற்று பிரதேச சபை ஓர் ஆகப் பிந்திய உதாரணமாக அமையுமா? தேர்தலை நோக்கி உருவாக்கப்படும் கூட்டுக்கள் நிலைத்திருக்காது என்பதைத்தான் கடந்த 16 ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

எனவே தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் ஆண்டு தொடங்கும் போது இருந்த அதே கட்சி நிலைமைகள் தான் ஆண்டு முடியும் போதும் காணப்படுகின்றன. மே 18ஐ நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் கிராமம் அமைந்திருக்கும் கரத்துறைப் பற்று பிரதேச சபையைத் தக்கவைக்க முடியாத தமிழ் கட்சிகள் இனிமேல் மாகாண சபைத் தேர்தல் ஒன்று நடந்தால், அதில் ஒன்றாக நின்று அரசாங்கத்தை எதிர்கொள்ளும் என்று எப்படி நம்புவது?

இந்த ஆண்டு பிறந்த போது ஒருபுறம் அனுர அலையின் விளைவுகளால் தமிழ் தேசிய அரசியல் சேதத்துக்கு உள்ளாகியிருந்தது. அதேசமயம் இன்னொருபுறம் யாரும் எதிர்பாராமல் திறக்கப்பட்ட செம்மணிப் மனித புதை குழியானது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு புதிய அனைத்துலக வாய்ப்புகளைத் திறந்துவிட்டது. மனிதப் புதைகுழி என்பது உணர்வு பூர்வமானது. அது உள்ளூரில் மக்களைத் திரட்ட உதவும். இன்னொரு புறம் பொறுப்புக் கூறும் விடயத்தில் உலக சமூகத்துக்கு எடுத்துக் காட்டத்தக்க ஆகப்பிந்திய உதாரணமாகவும் அது அமைந்தது. அதன் காரணமாகத்தான் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வர வேண்டியிருந்தது. ஆனால் ஐநா செம்மணிக்கூடாக பொறுப்புக்கூறலை அணுகவில்லை என்பதைத்தான் கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானம் உணர்த்துகின்றது. அதாவது தமிழ் மக்கள் ஐநாவில் பலமாக இல்லை என்பதைத்தான் அது உணர்த்தியது.

உள்நாட்டிலும் தமிழ் மக்கள் பலமாக இல்லை அனைத்துலக அளவிலும் தமிழ் மக்கள் பலமாக இல்லை. ஆண்டு பிறந்த போதும் பலமாக இல்லை. ஆண்டு முடியும்போதும் பலமாக இல்லை. இந்த ஆண்டின் ஆகப்பிந்திய தோல்வி கரைத்துரைப் பற்று பிரதேச சபை. ஒரு புயலுக்கு பின்னரான அரசியலில், தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஆதீனத் தலைவரும் உட்பட பல போராட்டக்காரர்கள் மீது பலப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட நாளுக்கு அடுத்த நாள் அதிலும் குறிப்பாக, இந்திய வெளியுறவு அமைச்சர் கொழும்புக்கு வருகை தந்த அதே நாளில்,வடக்கில் முதலாவது பிரதேச சபையை தமிழ் தேசியத் தரப்பு அரசாங்கத்திடம் இழந்திருக்கிறது.

அரசாங்கம் புயலுக்கு பின் முன்னரைவிடப் பலமாகக் காணப்படும் ஓர் அரசியல் சூழலில் தமிழ்த் தேசியத் தரப்புக்கு ஏற்பட்ட தோல்வி இது. ஆண்டின் முடிவில் நாட்டைத் தாக்கிய புயலின் விளைவாக ஒரு மனிதாபிமானச் சூழல் உருவாகியது. அந்த மனிதாபிமானச் சூழலை ஜேவிபி உள்நாட்டில் கிராமங்கள் தோறும் நிவாரண அரசியலாக, தொண்டு அரசியலாக திட்டமிட்டுக் கட்டமைத்தது. அதன்மூலம் எதிர்க்கட்சிகளை பெருமளவுக்கு பலவீனப்படுத்தியது. ஆண்டு தொடங்கும்போது பலவீனமாக இருந்த எதிர்க்கட்சிகள் இடையில் நுகேகொட பேரணி மூலம் தலையெடுக்க முயற்சித்தன. ஆனால் புயல் வந்து அரசாங்கத்தை மீண்டும் பலப்படுத்தி விட்டது.

அண்மையில் உலகளாவிய 120 நிபுணர்கள் அடங்கிய குழு வெளியிட்ட அறிக்கை அதைக் காட்டுகிறது. கடனை மீளக்கட்டமைக்கும் விடயத்தில் அரசாங்கத்துக்குச் சாதகமாக முடிவெடுக்குமாறு அந்த அறிக்கை கேட்டிருக்கிறது. அதாவது புயலுக்கு பின்னரான மனிதாபிமான அலை என்பது உள்நாட்டில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை கடந்து போவதற்கு அரசாங்கத்துக்கு உதவுகிறது. அனைத்துலக அளவில் கடனை மீள கட்டமைக்கும் நெருக்கடியிலிருந்து விடுபட உதவியிருக்கிறது.

புயலின் பின்னரான மனிதாபிமானச் சூழலுக்குள் முதலில் இறங்கியது இந்தியா. அதிகமாக உதவியதும் இந்தியா. இயற்கை அழிவு ஒன்றுக்குப் பின்னரான இலங்கைத் தீவின் அரசியலில் இந்தியா தன்னுடைய பிடியை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தது அனுர அலை, அது மூன்றில் இரண்டு பெரும்பான்மை. இந்த ஆண்டின் முடிவில் இருப்பது மனிதாபிமான அலை. அது இலங்கை அரசாங்கத்தைப் பலப்படுத்தும் அலை. எதிர்க்கட்சிகளை மேலும் வாயடைக்கச் செய்யும் அலை. இந்த இரண்டு அலைகளுமே எதிர்கட்சிகளை மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கட்சிகளையும் பலவீனப்படுத்தியிருக்கின்றன.

புயலுக்குப் பின்னரான மனிதாபிமான அலையின் பின்னணியில், தமிழ்த் தேசியப் பேரவை தமிழகத்தை நோக்கிச் சென்றது. தமிழரசுக் கட்சியும் ரெலோ ஏயும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தை நோக்கிச் சென்றன. ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியாவை நோக்கிச் சென்ற அதே காலகட்டத்தில், இந்தியா கொழும்பை நோக்கி அதன் வெளிவிவகார அமைச்சரை அனுப்பியது. தமிழ்க் கட்சிகள் இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோது ஒருமித்த நிலைப்பாட்டோடு இருக்கவில்லை என்பதைத்தான் பின்னர் வெளிவந்த அறிக்கைகள் காட்டுகின்றன.

அதிலும் குறிப்பாக இந்திய வெளிவகார அமைச்சர் கொழும்புக்கு வந்த அதே நாளில்தான் கரைத்துறைப்பற்று பிரதேச சபையை தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திடம் பறி கொடுத்தன. எனவே இந்த ஆண்டு முடியும்போது தமிழ் மக்களின் உடனடி பிரச்சினைகளுக்கும் இந்த அரசாங்கம் தீர்வைத் தரவில்லை. உதாரணமாக, அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை அதற்குப் பதிலாக புதிய சட்டம் வருகிறது. சிங்கள பௌத்தமயமாக்கல், நிலப்பறிப்பு போன்ற பெரும்பாலான உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. திருமலையில் அண்மையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை வைக்கப்பட்ட இடத்திலேயே இருக்கிறது. அதாவது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கவில்லை. நிரந்தரப் பிரச்சனைக்கும் பேச்சுவார்த்தைகள் தொடங்கவில்லை.

அதேசமயம் ஆண்டின் இறுதியில் வீசிய புயல் அரசாங்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறது. அது எதிர்கொள்ளக் கடினமான பிரச்சினைகளையும் வாக்குறுதிகளையும் ஒத்திவைப்பதற்கு

வேண்டிய அவகாசத்தை அரசாங்கத்திற்கு வழங்கியிருக்கிறது.

கடந்த மூன்று தசாப்த காலத்துக்குள் ஏற்பட்ட இரண்டாவது இயற்கைப் பேரிடர் ஒன்றுக்குப் பின்னரான மனிதாபிமான அலை இது. இந்த மனிதாபிமான அலையை, ஜேவிபியின் கிராமமட்ட வலையமைப்பு திட்டமிட்டு எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவும் அரசாங்கத்தை பலப்படுத்தும் நோக்கத்தோடும் கட்டமைத்து வருகிறது. ஜேவிபியின் கிராமமட்ட வலைப்பின்னலுக்கூடாக உள்ளூர் தொண்டர்களும் தன்னார்வலர்களும் இந்த மனிதாபிமான அலையைக் கட்டியெழுப்பினார்கள். இலங்கைக்கான ஐநாவின் வதிவிடப் பிரதிநிதி கூறுவதுபோல, இது ஓர் அசாதாரணமான சகோதரத்துவநிலைதான்.

ஆனால் இதே போன்றதொரு மனிதாபிமான அலை 2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரழிவின் பின்னரும் தோன்றியது. அப்பொழுது யுத்த நிறுத்தம் நிலவியது. எனவே அது நாடு முழுவதுமான ஒரு மனிதாபிமான அலையாகக் காணப்பட்டது.அந்த மனிதாபிமானச் சூழலை அரசியல் தீர்வு ஒன்றுக்கான சாதகமான நிலைமைகளைக் கனியவைப்பதற்கான ஒரு சூழலாக மாற்றலாமா என்று பரிசோதிப்பதற்கு அப்பொழுது சமாதானத்தை முன்னெடுத்த மேற்கு நாடுகள் முயற்சித்தன. அதன் விளைவாக உருவாக்கப்பட்ட மனிதாபிமானக் கட்டமைப்புத்தான் சுனாமிக்கு பின்னரான பொதுக் கட்டமைப்பாகும். அந்தக் கட்டமைப்பு வெற்றிகரமாக இயங்கி இருந்திருந்தால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு பரிசோதனைக் கட்டமைப்பாக அது அமைந்திருக்கக்கூடும். ஒரு மனிதாபிமானச் சூழலை அவ்வாறு அரசியல் உள்நோக்கத்தோடு பயன்படுத்த மேற்கு நாடுகள் முயற்சித்தன. முதற்கட்டமாக அதில் வெற்றியும் அடைந்தன. அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இயக்கமும் சுனாமி பொதுக் கட்டமைப்புக்கு இணங்கின.

ஆனால் அந்த மனிதாபிமானச் சூழலுக்குள் இனவாத அலையைத் தூண்டியா ஜேவிபி அதைத் தோற்கடித்தது. சுனாமிக்குப் பின்னரான ஒரு மனிதாபிமானச் சூழலை இனவாதத்தின் மூலம் தோற்கடித்த அதே இயக்கத்தை அடித்தளமாகக் கொண்ட இப்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலை தன்னைப் பலப்படுத்துவதற்கும் எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்துவதற்கும் கெட்டித்தனமாகப் பயன்படுத்துகின்றது. ஆனால் இந்த அசாதாரண மனிதாபிமானச் சூழலை அரசாங்கம் இனவாதத்துக்கு எதிராக கட்டமைக்கவில்லை. அவ்வாறு கட்டமைக்கும் என்று நம்பத்தக்கதாக தேசிய மக்கள் சக்தியின் கடந்த ஓராண்டு காலம் அமையவில்லை.

நன்றி: நிலாந்தன்

தையிட்டியில் தமிழ் குடியியல் சமூகம் மீதான் தாக்குதல்கள், நில அபகரிப்பு மற்றும் மதச் சுதந்திரம் தொடர்பான அவசர வேண்டுகோள்

– திரு. வோல்கர் டர்க் – ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் அனையளருக்கு நாடுகடந்த அரசங்கம் எழுதிய கடிதம் –

டிசம்பர் 24, 2025

திரு. வோல்கர் டர்க்
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர்
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்
ஆணையர்அலுவலகம்
ஜெனீவா, சுவிட்சர்லாந்து

பொருள்: தையிட்டியில் தமிழ் குடியியல் சமூகம் மீதான தாக்குதல்கள், நில அபகரிப்பு

மற்றும் மதச் சுதந்திரம் தொடர்பான அவசர வேண்டுகோள்
மதிப்பிற்குரிய உயர் ஆணையர் டர்க் அவர்களுக்கு,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள தையிட்டியில் தமிழ் குடியியல் சமூகத் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதியான போராட்டத்தின் மீது அண்மையில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை அடக்குமுறை குறித்து எமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்த, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் (TGTE) சார்பில் நான் எழுதுகிறேன். இந்தச் சம்பவம், தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறை, நில அபகரிப்புமற்றும் கலாச்சார உள்வாங்கலின் ஒரு தீவிரமான அதிகரிப்பைக் குறிக்கிறது. மேலும், தங்களுக்கு முந்தைய அரசாங்கங்களை விட முற்போக்கானது என்று கூறப்படும் ஒரு புதிய நிர்வாகத்தின் கீழும் கூட, தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அரசியல் வெளி தொடர்ந்து இல்லை என்பதை இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

டிசம்பர் 21 அன்று, தமிழ் நில உரிமையாளர்கள், உள்ளூர் வாசிகள், குடியியல் சமூக ஆர்வலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், தையிட்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட மற்றும் மிகவும் சர்ச்சைக்குரிய திஸ்ஸ விகார பௌத்த கோவிலுக்கு வெளியே அமைதியான முறையில் கூடினர். இந்த ஆர்ப்பாட்டம், ஒவ்வொரு பௌர்ணமி அன்றும், பௌத்த பிக்குகளும் சிங்களப் பக்தர்களும் பலத்த இராணுவப் பாதுகாப்புடன் வந்து மதச் சடங்குகளை நடத்தும் வேளையில், தொடர்ச்சியாக நடத்தப்படும் போராட்டங்களின் ஒரு பகுதியாகும். இந்த ஆர்ப்பாட்டம், அரசால் அபகரிக்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான தமிழ்நிலங்களை விடுவிக்கக் கோரியதுடன், அந்த இடத்துடன் தொடர்புடைய ஒரு மூத்த பிக்குவுக்குப் பதவி உயர்வு வழங்கப்படுவதாகக் கூறப்படும் நடவடிக்கையையும் எதிர்த்தது. மேலும், சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கோவிலில் ஜனவரி 3, 2026 அன்று ஒரு மேலதிக புத்தர் சிலையை நிறுவுவதற்கு அனுமதி கோரியும், அதற்கு சிறீலங்கா இராணுவம் மற்றும் காவல்துறையினரால் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரியும் சிறீலங்கா ஜனாதிபதிக்கு ஒரு எழுத்துப்பூர்வ கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வரும் செய்திகளுக்கு மத்தியில் இந்தப் போராட்டமும் நடைபெறுகிறது.

போராட்டம் வன்முறையற்றதாக இருந்தபோதிலும், சிறீலங்கா காவல்துறை பெருமளவில் குவிக்கப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள்உட்பட 29 நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கத் தடை விதிக்கும் நீதிமன்ற உத்தரவை வழங்கியது. இந்த முன்கூட்டியே விதிக்கப்பட்ட தடை, மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் மற்றும் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகிய உரிமைகளின் ஒரு கொடூரமான மீறலாகும்.

போராட்டக்காரர்கள் சாலையை மறிப்பதாகக் காவல்துறை குற்றம் சாட்டியபோது பதற்றம் அதிகரித்தது, இது மோதல்களுக்கும் ஐந்து தமிழ் பிரதிநிதிகள் கைதுசெய்யப்படுவதற்கும் வழி வகுத்தது. கைதுசெய்யப்பட்டவர்களில், மதிக்கப்படும் இந்து மதத் தலைவரான தவத்திரு வேலன் சுவாமிகளும், வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தலைவர் திரு. தியாகராஜா நிரோஷும் அடங்குவர். இருவரும் பொலிஸ் வாகனத்தில் தள்ளப்பட்ட போது, பொலிஸ் அதிகாரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மேலதிக மூன்று உறுப்பினர்களும் தடுத்து வைக்கப்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் சிறிதரன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பதிலிருந்து தடுக்கப்பட்டார் என்றும் அறிக்கைகள் மேலும் குறிப்பிடுகின்றன. கைது செய்யப்பட்ட நபர்கள் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு ஜனவரி 26 ஆம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தவத்திரு வேலன் சுவாமிகள் மீது மேற்கொள்ளப்பட்ட உடல்ரீதியான தாக்குதல் குறிப்பாக அதிர்ச்சியளிக்கிறது. ஒரு இந்து மதத் தலைவரை அரச பாதுகாப்புப் படைகள் கையாண்ட விதம், சிறீலங்காவில் உள்ள இந்து சமூகத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியாவிலும் உலகெங்கிலும் உள்ள இந்துக்களுக்கும் இழைக்கப்பட்ட ஒரு அவமானமாகும். பரந்த அளவில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் மற்றும் குடியியல் சமூகத்தலைவர்களின் கைது மற்றும் தாக்குதல் என்பது ஜனநாயகப் பங்கேற்பின் மீதே தொடுக்கப்பட்ட நேரடித் தாக்குதலாகும். இந்தச் செயல்கள், தமது நிலங்கள் மீது அரசு மேற்கொள்ளும் அத்துமீறல்களுக்கு எதிராக அமைதியான முறையில் போராடுவதற்கான அடிப்படை உரிமை கூட தமிழர்களுக்கு மறுக்கப்படுகிறது என்பதை நிரூபிக்கின்றன.

இந்தச் சம்பவம் ஒரு பரந்த மற்றும் மிகவும் கவலைக்குரிய பின்னணியில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். தையிட்டி பௌத்த விகாரை, தமிழ் நில உரிமையாளர்களின் சம்மதமின்றி மற்றும் நிறுவப்பட்ட சட்ட மற்றும் நிர்வாக நடைமுறைகளை மீறி கட்டப்பட்டு பின்னர் விரிவாக்கப்பட்டது. உள்ளூர் மக்களும் குடியியல் சமூகக் குழுக்களும் இந்த அத்துமீறலுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருகின்றனர், குறிப்பாக பௌர்ணமி தினங்களில், பிக்குகளும் சிங்களப் பார்வையாளர்களும் பலத்த இராணுவப் பாதுகாப்புடன் வரும் போது இந்தப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. மேலதிக புத்தர் சிலையை நிறுவுவதற்கான சமீபத்திய கோரிக்கை போன்ற நிகழ்வுகள், சிறீலங்கா அரசு களத்தில் மாற்றமுடியாத யதார்த்தங்களை உருவாக்க முயற்சிக்கிறது என்ற கருத்தை வலுப்படுத்துகின்றன. பிப்ரவரி 11, 2025 அன்று நாங்கள் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் வலியுறுத்தியது போல, தையிட்டி கோயில் சம்பவம் ஒரு தனிப்பட்ட நிகழ்வு அல்ல. இது, 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்னர் தீவிரமாக முன்னெடுக்கப்படும், அரசால் இயக்கப்படும் ஒரு பரந்த சிங்கள மயமாக்கல் மற்றும் கலாச்சார இனப்படுகொலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். குருந்தூர் மலை, குச்சவெளி, கீரிமலை, காங்கேசன்துறை மற்றும் பிற இடங்களில் உள்ள இந்து கோயில்கள் அழிக்கப்படுவதும், சிங்களக் குடிமக்கள் எவரும் வசிக்காத பகுதிகளில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதும், தமிழர்களின் மக்கள் தொகை மாற்றியமைப்பின் சின்னங்களாகப் பரவலாகக் கருதப்படுகின்றன. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சர்வதேச மத சுதந்திர அறிக்கைகளும், மனித உரிமைகள் கண்காணிப்பகமும், இராணுவமயமாக்கல் மற்றும் அடக்குமுறைகள் பாதுகாப்புச் சட்டங்களின் ஆதரவுடன் எவ்வாறு கட்டாயப்படுத்தும் கருவிகளாகச் செயல்படுகின்றன என்பதை ஆவணப்படுத்தியுள்ளன.

சிறீலங்கா இராணுவத்தால் தனிநபர்களுக்குச் சொந்தமான தமிழ் நிலங்கள் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்படுவது, உள்நாட்டுச் சொத்துரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகிய இரண்டையும் மீறுகிறது. நான்காவது ஜெனிவா உடன்படிக்கையின் கீழ், பொதுமக்களின் நிலங்களை இராணுவ ரீதியாக ஆக்கிரமிப்பது, தீவிரமான போரில் கண்டிப்பாகத் தேவைப்படும்போது மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அத்தகைய நிலைமைகள் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலவவில்லை. உங்கள் அலுவலகம் இதற்கு முன்னர் வடகிழக்கில் நில மீட்பு மற்றும் இராணுவமயமாக்கல் குறித்துக் கவலைகளை எழுப்பியுள்ளது, இருப்பினும் இந்த மீறல்கள் தடையின்றித் தொடர்கின்றன.

தையிட்டியில் நடந்த நிகழ்வுகள் சிறீலங்காவில் அரசியல்மாற்றத்தின் தன்மை குறித்தும் கடுமையான கேள்விகளை எழுப்புகின்றன. ஜனாதிபதி மாற்றம் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்த கூற்றுக்கள் இருந்தபோதிலும், அமைதியான தமிழ் எதிர்ப்பிற்கு வழங்கப்படும் பதில், சிங்கள-பௌத்த மேலாதிக்கமும் கட்டமைப்பு இனவாதமும் ஆழமாக வேரூன்றியுள்ளன என்பதையே வெளிப்படுத்துகிறது.

மத சுதந்திரம், ஜனநாயக ஆட்சி மற்றும் மனித உரிமைகளுக்கான அதன் தெளிவான தாக்கங்கள் இருந்தபோதிலும், இன்று வரை சிறீலங்காவில் உள்ள எந்தவொரு வெளிநாட்டுத் தூதரகமோ அல்லது இராஜதந்திரப்பணியகமோ இந்தச் சம்பவத்தை பகிரங்கமாகக் கண்டிக்கவில்லை என்பது குறித்தும் நாங்கள் கவலை அடைந்துள்ளோம்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், நாங்கள் உங்களை பின்வருமாறு கேட்டுக்கொள்கிறோம்:

- தையிட்டியில் அமைதியான போராட்டக்காரர்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட வன்முறையை பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டும்;
- நில ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத்துமாறும், தனிநபர்களுக்குச் சொந்தமான தமிழ் நிலங்களை விடுவிக்குமாறும் கோரிக்கை விடுக்க வேண்டும்;
- ஆக்கிரமிப்பின் கருவிகளாகச் செயல்படும் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட மதத் தளங்களை அகற்றுமாறு சிறீலங்கா அரசை வலியுறுத்த வேண்டும்;
- வடகிழக்கில் உள்ள தமிழர்களின் பேச்சுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம் மற்றும் மத சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இவ் விடயங்களை. அமெரிக்காவின் சர்வதேசமத சுதந்திர அலுவலகத்திற்கும் தெரிவித்துள்ளது. தமிழர்களின் உரிமைகள் மேலும் சிதைக்கப்படுவதைத் தடுப்பதற்கும், இத்தகைய மீறல்கள் இயல்பாக்கப்படுவதை தடை செய்வதற்கும், தொடர்ச்சியான சர்வதேசக்கண்காணிப்பு அவசியம் என்பதில் நாங்கள் உறுதியாகஇருக்கிறோம்.

உங்கள் தொடர்ச்சியான கவனத்திற்கும், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் மீதான உங்கள் கொள்கை நிலைப்பாட்டிற்கும் நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். தண்டனையின்மையில் இருந்து தப்பிக்கும் நிலைவலுப்படுவதைத் தடுக்கும் எஞ்சிய சில பாதுகாப்புகளில் ஒன்றாகத் தமிழ் மக்கள் உங்கள் அலுவலகத்தைப் பார்க்கிறார்கள்.

உண்மையுள்ள,
விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

05.01.2008 அன்று மன்னார் மாவட்டம் பள்ளமடுப்பகுதியில் சிறீலங்கா படைகளின் ஆழஊடுருவும் படைப்பிரிவு நடாத்திய கிளைமோர்த் தாக்குதலில், படைய புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் கேணல் சாள்ஸ் லெப்டினன்ட் சுகந்தன் லெப்டினன்ட் காவலன் லெப்டினன்ட் வீரமாறன் ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

41ஆம் ஆண்டு வீரவணக்கம்

கப்டன் பண்டிதர்
சின்னத்துரை ரவீந்திரன்
கம்பர்மலை, வல்வெட்டித்துறை
(25.12.1959-09.01.1985)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கப்டன் பண்டிதர் 1985ஆம் ஆண்டு தை 09ஆம் திகதி அச்சுவேலியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை சிங்களப்படைகள் முற்றுகையிட்ட போது இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்தார்.

பண்டிதர் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்தார். அதுமாத்திரமன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதப் பராமரிப்புக்கும் நிதிவளங்களுக்கும் பொறுப்பாளராக இருந்தார். வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலையை பிறப்பிடமாக கொண்டவர். அவர் வீரச்சாவடைகின்றபோது வயது இருபத்தி நான்கேயாகும்.

1977ஆம் ஆண்டு அமைப்பில் இணைந்து விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப் பற்று ஆகிய சீரிய பண்புகள் நிறைந்த கப்டன் பண்டிதர் சகபோராளிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழத் தேசியத் தலைவரின் நேசம்மிக்க தளபதியாக விளங்கிய பண்டிதர் விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகப் பொறுப்புக்களை சுமந்ததோடு மட்டுமல்லாது பல வெற்றிகரமான தாக்குதல்களிலும் கலந்துகொண்டார்.

தமிழீழ விடுதலைக்காய் இன்னுயிரை நீத்த இவ் வீரவேங்கையுடன் வீரச்சாவு அடைந்த எனைய போராளிகளின் நினைவோடு எம் பணி தொடர்வோம்.

சிரியா அசாத் ஆட்சி வீழ்ந்த பின் ஓராண்டு! புதிய தலைமையும் அமெரிக்க அரச உறவும்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

17.12.2025

ஒரு வருடம் முன்பு, சிரியாவில் உள்ள பெரும்பாலான ஆயுத மேந்திய கிளர்ச்சியாளர்களைப் போலவே, டமாஸ்கஸின் புதிய தலைமையும் அசாத் அரசை வீழ்த்தியது.

அவர்களின் தலைவரான ஷாரா, ஈராக்கில் அல்-கொய்தாவுக் காகப் போராடிய நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்தார். மேலும் அவர் அமெரிக்கர்களால் சிறையில் அடைக்கப்பட்ட வராவார். பின்னர் இஸ்லாமிய அரசாக மாறிய குழுவில் மூத்த தளபதியாக இருந்தார்.

பின்னர், சிரியாவில் தனது அதிகாரத் தளத்தை உருவாக்கிய போது, அவர் ஐஎஸ் மற்றும் அல்-கொய்தா இரண்டிலிருந்தும் பிரிந்து போராடினார். இப்போது அவர் சிரியாவின் இடைக்கால ஜனாதிபதியாக உள்ளார்.

யார் இந்த ஹுசைன் அல்-ஷரா?

சிரியாவின் புதிய தலைவர் முன்பு 10 மில்லியனுக்கு அமெரிக் காவால் தேடப்பட்டவர் ஆவார். அமெரிக்க அரசால் 2013 இல் உலகளாவிய பயங்கரவாதி என்று பட்டியலிட்டு, அவரைப் பிடிக்க 10 மில்லியன் வெகுமதியை அறிவித்தது.

சிரியாவில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதன் பின்னர் 2024 டிசம்பரில், அல்-ஷாராவை அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் பார்பரா ஏ. லீஃப் தலைமையிலான குழு சந்தித்தது அதிர்ச்சிமிக்க திருப்புமுனையாகும்.

அமெரிக்க அரசால் 2013 இல் உலகளாவிய பயங்கரவாதி என்று பட்டியலிட்டு, அவரைப் பிடிக்க 10 மில்லியன் வெகு மதியை அறிவித்தது. அவர் யாருமல்ல, தற்போதைய சிரிய நாட்டின் கிளர்ச்சிப் படைகளின் தலைவராக இருந்து, இடைக் கால அதிபராக விளங்கும் ஹுசைன் அல்-ஷாரா தான்.

அஹ்மத் ஹுசைன் அல்-ஷாரா (Ahmed Hussein al-Sharaa) அவரது இன்னோர் பெயரான அபு முகமது அல்-ஜுலானியாக வும் (Abu Mohammad al-Julani) அறியப்படுகிறார். சிரிய அரச எதிர்ப்பு போராளியும் தற்போதைய அரசின் தலைவரும் ஆவார்.

அசாத் எதிர்ப்பு படைகளோடு இணைந்து HTS எனப்படும் ஆயுத இயக்கத்திற்கு 2017 முதல் தலைவராக இருந்தவர். உறுதி யான இறுதியான எதிர்ப்பில் முக்கிய பங்கு வகித்து அசாத் ஆட் சியை வீழ்த்தி சிரிய இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதற் கும் அவரே வழிவகுத்தார்.

2003 இல் ஈராக் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வந்தது. அமெரிக்காவை எதிர்க்கும் விதமாக ஈராக்கில் அல்-கொய்தாவில் அபு முகமது அல்-ஜோலானி சேர்ந் தார். 2003 ஈராக் படையெடுப்பிற்கு பின்பு, அவர் ஈராக்கில் அல்-கொய்தாவில் சேர்ந்து ஈராக் கிளர்ச்சியில் மூன்று ஆண்டுகள் போராடினார். 2006 முதல் 2011 வரை அமெரிக்கப் படைகள் அவரைக் கைப்பற்றி சிறையில் அடைத்தனர். ஆனால் சிரிய உள்நாட்டு போரின் போது அவர் விடுதலை செய்யப் பட்டார்.

மேலும் சிரிய உள்நாட்டுப் போரில் பங்கேற்க அல்-கொய்தா வின் ஆதரவுடன் 2012 இல் அல்-நுஸ்ரா முன்னணியை உருவாக்கினார்.

அல்-நுஸ்ரா முன்னணியின் தலைவர் என்ற முறையில், அல்-ஷாரா வடமேற்கு இட்லிப் பகுதியில் ஒரு பெரிய கிளர்ச்சி யாளர்கள் தளத்தை உருவாக்கினார்.

அப்போதிருந்து அல்-ஷாரா சிரியாவின் எதிர் கால தலைவராக பரவலாகக் கருதப்பட்டார். ஆனாலும் அல்-நுஸ்ராவை இஸ்லா மிய அரசில் ஒருங்கிணைக்கும் அபு பக்கர் அல்-பாக்தாதியின் முயற்சிகளை எதிர்த்தார்.

2016 இல், அல்-ஷாரா அல்-கொய்தாவுடனான அல்-நுஸ்ரா வின் உறவுகளைத் துண்டித்து, அதை மற்ற அமைப்புகளுடன் இணைத்து அடுத்த ஆண்டு ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாமை உருவாக்கினார்.

அல்-கொய்தாவுடன் உறவை முறித்துக் கொண்டதில் இருந்து, சிரியாவின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் சர்வதேச சட்டப்பூர்வத்தை நாடினார். அத்துடன் எச்டிஎஸ் தனது கட்டு பாட்டில் உள்ள பிரதேசத்தில் ஒரு அதிகார நிர்வாகத்தை நிறுவி வரிகளை வசூலித்தல், பொது சேவைகளை வழங்குதல் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டது.

மேலும் சமீபத்திய ஆண்டுகளில், அவர் மிகவும் வெளிப்படை யாக மிதவாத பார்வையை முன்வைத்துள்ளார். மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக போர் தொடுக்க எந்த உத்வேகமும் இல்லை என்றும் கூறியுள்ளார். மேலும் சிறுபான்மையினரை பாதுகாப்பதாக சபதம் செய்தார்.

டமாஸ்கஸை நோக்கி படையெடுப்பு:

2024 டிசம்பரில் துருக்கி எல்லையில் உள்ள சிரிய மாகாண மான இட்லிப்பில் இருந்து ஒரு கிளர்ச்சிப் படை வெளியேறி டமாஸ்கஸை நோக்கிப் படையெடுத்து வந்தது. ஜோலானி 1967 இல் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட சிரியாவின் தெற்கு மலைப் பகுதிகளான கோலன் மலைகளின் தனது குடும்ப வேர்களைப் பிரதிபலிக்கிறார். அவரது உண்மையான பெயர் அகமது அல்-ஷாரா. ஒரு வருடம் கழித்தும், அவர் இடைக்கால ஜனாதிபதி யாக பதவி வகிக்கிறார்.

ஆட்சிக்கு வந்த பிறகு ஷாராவுக்கு, வீட்டில் இருப்பதை விட வெளிநாடு செல்வது எளிதாகிவிட்டது. சிரியாவின் நிலையான எதிர்காலத்திற்கான சிறந்த வாய்ப்பு தான் என்று சவுதி அரேபியா மற்றும் மேற்கு நாடுகளுடனான உறவை வலுப்படுத்தும் நோக் கில் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

எதிரிகளால் அவருக்கு என்ன செய்ய முடியும் என்பது குறித்த பெரும் நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் அவர் ஆட்சியைப் பிடித்தார். இன்னும் உறை நிலையில் இருக்கும் இஸ்லாமிய அரசின் ஜிஹாதி தீவிரவாதிகள் அவரைக் கொல்ல முயற்சி செய் யலாம் அல்லது டமாஸ்கஸில் பெரும் உயிரிழப்பு தாக்குதல்க ளால் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்ற இருண்ட அச்சங்கள் அவற்றில் அடங்கும்.

தற்போதைய ஷாராவின் அமெரிக்க உறவால் ஜிஹாதிகள் ஆத்திரமடைந்து உள்ளனர். இஸ்லாமிய அரசுக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான கூட்டணியில் சேர அவர் ஒப்புக் கொண்ட பிறகு, அவரை ஒரு விசுவாச துரோகி, தனது சொந்த மதத்திற்கு எதிராகத் திரும்பிய ஒரு முஸ்லிம் என்று முத்திரை குத்தினர்.

உண்மை என்னவென்றால், சிரியாவில் ஐ.எஸ் பலவீனமாக உள்ளது. இந்த ஆண்டு அதன் தாக்குதல்கள் பெரும்பாலும் வட கிழக்கில் குர்திஷ் தலைமையிலான படைகளுக்கு எதிராகவே மட்டுமே உள்ளன.

சிரியாவின் புதிய தலைவர் முன்பு 10 மில்லியனுக்கு அமெரிக்காவால் தேடப்பட்டவர் ஆவார். அமெரிக்க அரசால் 2013 இல் உலகளாவிய பயங்கரவாதி என்று பட்டியலிட்டு, அவரைப் பிடிக்க 10 மில்லியன் வெகுமதியை அறிவித்தது.

சிரியாவில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதன் பின்னர் 2024 டிசம்பரில், அல்-ஷாராவை அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் பார்பரா ஏ. லீ:ப் தலைமையிலான குழு சந்தித்தது மற்றொரு அதிர்ச்-சிமிக்க திருப்புமுனையாகும்.

சவுதி அரேபிய நெருக்கம்:

2025 மே மாதம், சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் ஷாராவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பிற்கும் இடையே ஒரு சுருக்கமான சந்திப்பு நடைபெற்றது. அதன் பின் னர் டிரம்ப் அவரை இளம் கவர்ச்சிகரமான, ஆனால் கடினமான மனிதர் என்று அழைத்தார்.

சிரியர்கள் அவரது பலவீனங்களையும் சிரியா எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் வெளிநாட்டினரை விட நன்கு அறி வார்கள். ஷாராவுக்கு ஆதரவு குர்துகள் கட்டுப்பாட்டில் உள்ள வடகிழக்கிலோ அல்லது மற்றொரு சிறுபான்மை பிரிவான சிரிய ட்ரூஸ் பகுதியில் இல்லை என்பது உண்மையே. இஸ்ரேலிய அரசால் ஆதரிக்கப்படும் தனியான பகுதிகளை விரும்பும் தெற் கின் சில பகுதிகளில் அவர் செல்ல முடியாது என்பதும் உண்மையே.

இருப்பினும் சிரியாவில் வாழும் அலவைட்டுகள், அசாத்தின் இனச் சிறுபான்மையினர் மார்ச் மாதத்தில் அவர்கள் அனுப வித்த படுகொலைகள் மீண்டும் நிகழும் என்று அஞ்சுகின்றனர்.

ஷாரா என்ன செய்ய முடியும்?

டிரம்ப் – மேற்குலக உறவு:

மேற்கத்திய நாடுகளுடான உறவு ஷராவின் முயற்சிகளால் குறிப்பிடத்தக்க வகையில் வெற்றிகரமாக உள்ளன. சிரியாவில் கடந்த வருடம் ஆட்சிக்கு வந்த இரண்டு வாரங்களுக்குள், அவர் மூத்த அமெரிக்க இராஜதந்திரிகளின் உதவியுடன் நெருக்க மான உறவை பெற்றார்.

உடனடியாக, அமெரிக்கர்கள் அவரது கைதுக்கு வழங்கிய $10 மில்லியன் பரிசுத் தொகையை ரத்து செய்தனர்.

அன்றிலிருந்து, அசாத்தின் சிரியா மீது விதிக்கப்பட்ட தடைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளன. மேலும் புதிய ஆண்டில் அமெரிக்க காங்கிரஸால் மேலதிக உதவிகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்ட காலத்தின் பின்னர், இந்த ஆண்டு நவம்பரில் வெள்ளை மாளிகைக்குச் சென்ற முதல் சிரிய ஜனாதிபதியாக ஷாரா, சிரிய வரலாற்றில் முக்கிய நிகழ்வாக அமைந்தது. மோசமாகவே இருக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

CARED

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்

வடக்கு கிழக்கு மாகாணங்கள்

Association for Relatives of the Enforced Disappearances

North & East Provinces

தவத்திரு வேலன் சுவாமி அவர்களின் அடாவடித்தனமான கைதைக் கண்டிக்கின்றோம்

29.12.2025

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில், உரிய காணி உரிமையாளர்களின் அனுமதியின்றி தனியார் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அமைதியான கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்ற தவத்திரு. வேலன் சுவாமிகள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் அடாத்தாக கைது செய்யப்பட்டமைக்கு எதிராக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் சங்கம் தனது கடும் கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

இச்சம்பவம் தனித்தனி நிகழ்வாக அல்ல் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் அடக்குமுறை நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே இது அமைகிறது. இந்நடவடிக்கை, தேசிய சட்டங்களையும், இலங்கை அரசின் சர்வதேச சட்டப் பொறுப்புகளையும் தீவிரமாக மீறுகிறது.

தையிட்டியில் நடைபெற்ற இந்தப் போராட்டம், சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், காணி உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், முழுமையாக அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை மற்றும் அவமதிப்பு நிறைந்த கைது நடவடிக்கைகள், இலங்கை அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்ட கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம், அமைதியான கூடுகை உரிமை, மதச் சுதந்திரம், மற்றும் சட்டத்தின் முன் சமத்துவம் ஆகிய அடிப்படை உரிமைகளின் வெளிப்படை மீறலாகும்.

மேலும், இலங்கை ஒப்புக்கொண்டுள்ள சர்வதேச குடிமக்கள் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் (ICCPR) இன் 18, 19, 21 மற்றும் 26ஆம் கட்டுரைகளின் கீழ் பாதுகாக்கப்படும் உரிமைகளையும் இந்நடவடிக்கைகள் மீறுகின்றன.

மிகவும் கவலைக்குரிய விடயம், தவத்திரு. வேலன் சுவாமிகளின் கழுத்தில் அணிந்திருந்த சைவ மதச் சின்னமான உருத்திராக்கம் அறுக்கப்பட்டு அவமதிக்கப்பட்டமை ஆகும். இது ஒரு மத நம்பிக்கையின் மீது மேற்கொள்ளப்பட்ட நேரடியான தாக்குதல் மட்டுமல்ல் அது ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தையும் தனிமனிதக் கௌரவத்தையும் பாதிப்புக்குள்ளாக்கிய தீவிரமான மனித உரிமை மீறலாகும்.

மத அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான பாகுபாடும் அவமதிப்பும், மனிதாபிமானமற்ற, இழிவான நடத்தை என சர்வதேச சட்டங்களின் கீழ் முற்றிலும் தடைசெய்யப்பட்ட செயல்களாகும். இவை ICCPR இன் 7ஆம் கட்டுரையின் கீழ் தடை செய்யப்பட்ட நடத்தைகளாகவும், சிறுபான்மை சமூகங்களின் மத மற்றும் பண்பாட்டு அடையாளங்களை பாதுகாக்கும் ஐக்கிய நாடுகள் அறிவிப்புகளுக்கும் முற்றிலும் முரணானவையாகவும் உள்ளன.

இச்சம்பவம், இலங்கையில் நிலவும் இரட்டைத் தரநிலை கொண்ட சட்ட அமலாக்கத்தின் தொடர்ச்சியான வெளிப்பாடாகவும் பார்க்கப்பட வேண்டும். சமீப காலங்களில், அம்பிட்டிய சுமன தேரர் உட்பட பல பௌத்த தேரர்கள் இலங்கை காவல்துறையினரை உடலுறுப்பாகத் தாக்கிய சம்பவங்கள் பொது வெளியில் பதிவாகியிருந்த போதிலும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் காவல்துறை அமைதியாக இருந்து, குற்றவாளிகளுக்கு எதிராக எந்தவிதமான கடுமையான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதற்கு மாறாக, அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட ஏனைய மதத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் மீது காவல்துறை தாக்குதல் நடத்துவதும், அடாத்தாக கைது செய்வதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இது சட்டத்தின் முன் சமத்துவம் இலங்கையில் நடைமுறையில் இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இன்றைய சூழலில், அரசாங்கம் மட்டுமல்லாது, இலங்கை காவல்துறை, இராணுவம், மகாவலி திணைக்களம், வன வளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் போன்ற முக்கிய அரச நிறுவனங்கள் அனைத்தும் சிங்கள – பௌத்த பெரும்பான்மைவாத சிந்தனையின் தாக்கத்திற்குள் செயல்படுகின்றன என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவ உண்மை ஆகம்.

காணி அபகரிப்புகள், சிறுபான்மை மத அடையாளங்களின் அழிப்பு, வரலாற்று இடங்களின் கைப்பற்றல், மற்றும் அமைதியான எதிர்ப்புகளின் அடக்குமுறை ஆகியவை இதன் நேரடி விளைவுகளாக தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. இவ்வாறான நடைமுறைகள், இனவாதப் பாகுபாட்டை ஒழிக்கும் சர்வதேச ஒப்பந்தம் (ICERD) உட்பட இலங்கையின் சர்வதேச சட்டப் பொறுப்புகளுக்கு முற்றிலும் முரணானவையாகும்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் (International Humanitarian Law - IHL) ஆயுத மோதல் சூழல்களில் நேரடி யாகப் பயன்படுத்தப்படுகின்றன என்றாலும், அவற்றின் அடிப்படை கொள்கைகள் – மனிதத்துவம், மனித மரியாதை, பாகுபாடற்ற தன்மை, சமநிலை – எல்லாச் சூழல்களிலும் அரசுகள் கடைபிடிக்க வேண்டிய உலகளாவிய நெறிகளாகும்.

ஆயுதமற்ற பொதுமக்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், அவர்களை வன்முறையுடன் கைது செய்து அவமதித்தமை, போரில் ஈடுபடாத பொதுமக்களின் மரியாதையைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனிதாபிமான அடிப்படை கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானதாகும். மேலும், சர்வதேச மரபுச் சட்டத்தின் கீழ், மனித மரியாதையை மதிப்பது அனைத்து அரசுகளின் தொடர்ச்சியான கடமையாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கான வழக்குகள், காணி அபகரிப்புகள் மற்றும் பிற தீவிரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில், இலங்கையின் உள்ளக நீதிப்பொறிமுறைகள் கடந்த பல தசாப்தங்களாகத் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்துள்ளன.

நீதிமன்றங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் விசாரணைகள் பல மேற்கொள்ளப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உண்மை, நீதி அல்லது பொறுப்புக்கூறல் எதுவும் வழங்கப்படவில்லை. இது ICCPR இன் 2(3)ஆம் கட்டுரையின் கீழ் உறுதி செய்யப்பட்ட “பயனுள்ள நிவாரணத்திற்கான உரிமை” மறுக்கப்பட்டுள்ளதற்குச் சமமாகும்.

மேலும், இவ்வாறான தொடர்ச்சியான அடக்குமுறை, பாகுபாடு மற்றும் தண்டனை இன்றிய நிலை, பொதுமக்கள் மீது திட்டமிட்ட மற்றும் பரவலான தாக்குதலாக இடம்பெறும் போது, அது மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் கருதப்படக்கூடிய நிலையை உருவாக்குகிறது. உள்ளக நீதிப்பொறிமுறைகளின் தோல்வி, சர்வதேச பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச கண்காணிப்பு அவசியத்தை மேலும் வலியுறுத்துகிறது.

இதன் அடிப்படையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் சங்கம்:

- இச்சம்பவம் தொடர்பான இலங்கையின் உள்ளக விசாரணைகள் மற்றும் நீதிப்பொறிமுறைகளைத் தெளிவாக நிராகரிக்கிறது;
- சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களின் அடிப்படையிலான, சுயாதீனமும் பாகுபாடற்றதுமான சர்வதேச நீதிப் பொறிமுறைகளை கோருகிறது;
- ஐக்கிய நாடுகள் அமைப்புகள், ஒப்பந்தக் குழுக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தினரை, இச்சம்பவத்தையும் வடக்கு – கிழக்கில் தொடரும் மனித உரிமை மீறல்களையும் தீவிரமாகக் கண்காணிக்குமாறு வலியுறுத்துகிறது.

எமது கோரிக்கைகள்:

1. தவத்திரு. வேலன் சுவாமிகள் உள்ளிட்ட அனைவருக்கும் எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளும் உடனடியாக கைவிடப்பட வேண்டும்;.
2. அடாத்தான கைது, வன்முறை, அவமதிப்பு மற்றும் மதச் சின்னங்களின் சேதம் தொடர்பாக சர்வதேச தரநிலைகளுக்கு அமைவான, சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும்;
3. தனியார் காணிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட அனைத்து கட்டமைப்புகளும் அகற்றப்பட்டு, சட்டம் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்;
4. அமைதியான போராட்டங்களை குற்றமாக்கும் நடைமுறைகள் மற்றும் மதத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரை இலக்காக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அமைதியான போராட்டம் ஒரு குற்றமல்ல. மனித மரியாதை எந்நேரமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

உள்ளக நீதிப்பொறிமுறைகள் தொடர்ந்து தோல்வியடையும் இடங்களில், சர்வதேச நீதியை நாடுவது பாதிக்கப்பட்ட மக்களின் உரிமை மட்டுமல்ல் அது அவர்களின் கடமையுமாகும்.

நீதி, உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படும் வரை, சர்வதேச சட்டப் பொறிமுறைகள் வழியாக எமது போராட்டம் தொடரும் என்பதை இவ்வறிக்கை மூலம் உறுதியாக அறிவிக்கின்றோம்.

கொலைவெறி தலைக்கேறிய நிலையில் - தமிழர்களைப் படுகொலை செய்யும் போது - இனவெறிக் கோசம் எழுப்புவது சிங்களக் காடைத்தனத்தின் ஒருபண்பு.

”எல்லாத் தமிழர்களையும் கொல்லுங்கள்” இது 1983 கறுப்பு யூலையில் ஈடுபட்ட பிக்குகளின் கோசம்.

“இந்தக் கண்களா தமிழீழத்தைப் பார்க்கப் போகின்றன” இது வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் போது குட்டிமணியின் கண்களைத் தோண்டி எடுத்த சிங்களக் காடையர்களின் ஏளன வெறிக்கோசம்.

இதுபோல 12.12.1997 அன்று களுத்துறைச் சிறையில் வைக்கப் பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது கொலைத் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது. “ஜயசிக்குறுயில் எங்களது இராணுவம் அழிகின்றது. உங்களுக்கு நாங்கள் உணவு தரவேண்டுமா” என்று வெறிக் கூச்சலிட்டபடி சிங்கள தீங்கியல் (கிறிமினல்) கைதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதுபோன்ற இனக்கொலைத் தாக்குதல்கள் சிங்களக் காடையர்களின் தன்னிச்சையான செயற்பாடுகள் அல்ல. மாறாக, இவை அதிகார பீடத்தில் திட்டமிடப்பட்ட கொலைத்தாக்குதல்களே ஆகும்.

சிங்கள அரசின் அனுசரணையுடனும் பேரினவாத அரசியல் வாதிகளின் தூண்டுதலின் பேரிலும் அதிகார பீடத்தின் ஏவதலுடனும் இப் படுகொலைகள் நடைபெறுகின்றன என்பது ஏற்கனவே நிரூபணமான உண்மை.

களுத்துறைச் சிறையிலும் அதுவே அரங்கேறியுள்ளது.

உரிமைக்காகப் போராடுவது சிங்களப் பேரினவாதத்தால் சகிக் முடியாத ஒரு “குற்றம்”. போராட்டத்தை ஒடுக்க படுகொலையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது அதன் உளுத்துப்போன ஒரு தந்திரோபாயம். போராடினால் சாவு, சும்மா இருந்தால் அடிமை வாழ்வு என்பதுதான் தமிழினத்திற்குப் பேரினவாதம் கூற விரும்பும் பாடம்.

களுத்துறைச் சிறைப்படுகொலைக்குப் பின்னாலும் ஒரு சிறைப் போராட்டம் பின்னாலும் ஒரு சிறைப்போராட்டம் இருந்துள்ளது. போராட்டத்திற்கான காரணி வழமையானதுதான். ”விசாரணை செய் அல்லது விடுதலை செய்” 15 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக தமிழ் அரசியல் கைதிகளால் முன் வைக்கப்பட்டு நடாத்தப்படும் ஒரு சிறைக்கோரிக்கை இது. தமிழ் மக்களுக்கு எதிரான பயங்கரவாத தடைச்சட்டம் அமுலுக்கு வந்த நாளில் இருந்து, அந்த சட்ட விதிகளுக்கு அமைய, தமிழ் இளைஞர் - யுவதிகளை சிங்கள அரசு சிறையில் அடைத்து வருகின்றது. எந்தவித குற்றங்களுமிழைக்காமல் சிறைக்குள் வாடியபடி இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் முன்வைக்கும் நீதியான - சட்டபூர்வமான - ஒரு மனிதாபிமானக் கோரிக்கை தான் அது. பெரும்பாலும் உண்ணாவிரதம் அல்லது சிறை நடை முறைகளுக்கு ஒத்துழை யாமை என்பன போராட்ட வழிகளாக இருக்கும். இவை தட்டிக்கழிக்கப் படுமிடத்து கூரை மீதேறி சத்தியாக்கிரகம் செய்வது ஒரு உச்ச வழி. ஆனால், சட்டபூர்வ வழியில், இவ் விதம், சிறைப்போராட்டங்கள் நடைபெறும் போது, அதை சிறை உடைப்பு அல்லது தப்பி ஓடும் முயற்சிக்கான சூழ்ச்சித் தந்திரம் என்று காரணங்கூறி தமிழ் அரசியல் கைதிகளை அடித்து - நொருக்கி சிறைப்போராட்டங்களை ஒடுக்க முயல்வது சிறை நிர்வாகத்தின் நடைமுறை.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமது கோரிக்கைகளை வலியுறுத்த - மீதேறிப் போராட்டம் நடாத்திய தமிழ் கூரை இளைஞர்களை தாக்கி கீழே வீழ்த்திவிட்டு களுத்துறைச் சிறைக்குத் தண்டனை இடமாற்றம் செய்தனர். சிறைப்போராட்டத்தை முறியடித்தல் - அரசியல் கைதிகளை மிரட்டல் செய்திகளை இருட்டடிப்புச் செய்தல் என்பன தண்டனை இடமாற்றத்தின் நோக்கங்கள் எனினும், களுத்துறைச் சிறையிலும் தமிழ் இளைஞர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இனக் கொலைத் தாக்குதலுக்கான சந்தர்ப்பமாக சிங்கள வெறியர்கள் அதைக் கருதினர். சிறைக்காவலர்கள் மற்றும்

இராணுவத்தின் ஆதரவுடன் நிராயுத பாணிகளாக நின்ற தமிழ் அரசியல் கைதிகள் மீது, கத்தி, கோடாரி போன்ற ஆயுதங்கள் கொண்டு தாக்கினர். மூன்று தமிழர்கள் பலியாகினர். 20 பேர் படுகாயமடைந்தனர். இந்தக் கொலைத் தாக்குதலுக்குப் பின்னரும் சிறைப் போராட்டத்தை தமிழக் கைதிகள்-தொடர்ந்து நடாத்தினர் என்பது குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிறப்பம்சம் ஆகும்.

சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடந்த இந்த சிறைப் படுகொலையை “உணவு பரிமாறல் தொடர்பாக கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட சண்டை” என்று சிறீலங்கா நீதித்துறை செய்தித்திரிபு செய்தது.

கொலைஞர் - கொள்ளையர் - பாலியல் குற்றம் புரிந்தோர் - மோசடிப்பேர்வழிகள் என்போரைத் தீங்கியல் குற்றவாளிகள் என்ற வகைக்குள் அடக்கி, அவர்களை அதிகளவு கட்டுப்பாட்டுடன் அடைத்த வைப்பதும் - அதீத கண்காணிப்புடன் நடாத்துவதும் சிறைவழமை. ஆனால், சிறைப் படுகொலைகள் நடைபெறும் வேளைகளில், இவர்கள் ஆயுதப்படையினர் போல சுதந்திரமாக நடமாடி; ஆயுதம் தரித்து தாக்குதலில் ஈடுபடும் அதிசயத்தை சிறீலங்காச் சிறைகளில் காணலாம்.

கோடாரி, கத்தி, மண்வெட்டி போன்ற வேலை ஆயுதங்கள் வைக்கப்படும் ஆயுதக் களஞ்சிய அறை மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டடிருக்கும். அதன் சாவிகள் பொறுப்பானவர்களின் கைகளிலேயே இருக்கும். வருடத்தின் முழுநாட்களும் சிறை அலுவலர்களிடம் இருக்கும் ஆயுத அறைச்சாவி, சிறைப்படுகொலை நாட்களில் மட்டும் சிங்களத் தீங்கியல் கைதிகளிடம் கைமாறும் அதிசயம் பற்றி - சிறீலங்கா நீதித்துறை - கவலைப்படுவதில்லை.

”தாக்குதல் நடக்க சற்றுமுன்னர் சிறைக்காவலர் பயன்படுத்தும் ஊதுகுழல் சத்தம் கேட்டது” என்றும். “அது தாக்குதலுக்கான சைகை” என்றும் தாக்குதலில் காயமடைந்த தமிழ்க் கைதிகள் தெரிவித்திருந்தனர். ஊதுகுழல் ஒலித்ததும் சுமார் 400 சிங்களத் தீங்கியல் கைதிகள் தமது இருப்பிடம் நோக்கி ஓடி வந்து - வெளிக்கதவை உடைத்து - தம்மைத் தாக்கியதாகவும், பாதுகாப்பு தருமாறு சிறைக் காவலரிடமும் - இராணுவத்திடமும் மன்றாடியும் அவர்கள் பார்த்துக் கொண்டு நின்றனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். வெளிக்கதவை திறக்கவிடாது சுமார் அரைமணி நேரம் தாம் போராடியதாகவும், அவ்வளவு கால அவகாசம் இருந்தும் சிறை நிர்வாகம் எதுவும் செய்யவில்லை என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இது சிறை நிர்வாகத்தின் அனுசரணையுடன் நடந்த ஒரு தாக்குதல் நடவடிக்கை என்பதை நிரூபிக்க மேலும் ஆதாரங்கள் தேவையில்லை.

ஆனால், வழமைபோலவே, சிறீலங்கா நீதித்துறை, தாக்குதலின் இனவெறிப் பரிமாணத்தை மறைப்பதற்காக சில தீர்மானங்களை அறிவித்தது. இம்முறை அது பெரும் மனிதன் போல் நடிக்கும் நீதி அமைச்சர் பீரிஸ் தலைமையில் கூடியது. “இனிமேல் சிறைக் கலவரம் ஏற்படாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். கலவரத்தில் கொல்லப்பட்ட வர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். அரச செலவில் ஈமக்கிரியைகள் செய்யப்படும்” என்று அறிவித்தது.

“விசாரணை செய் அல்லது விடுதலைசெய் என்று திருவாளர் பீரிசின் சட்ட நேர்மைக்கு பெரும் மனிதத் தன்மைக்கு சவால் விடுத்த தமிழ் இளைஞர்களை சாவரக்கனிடம் ஒப்புக் கொடுத்து விட்டு, பிணங்களை எரித்து உதவுகிறோம் - காசு கொடுத்து உதவுகிறோம் என்று அவர் சாதாரணமாக அறிக்கை விடுத்து, கொலைகளை மறைமுகமாக நியாயப்படுத்தியுள்ளார்.

உலக ஒப்புக்காக, ஆட்சியில் இருப்போர் சிலவேளை, இந்தப் படுகொலையைக் கண்டிக்கலாம். சம்பந்தப்பட்ட சிறை அதிகாரிகளுக்கு ‘இடமாற்றம்’ என்ற தண்டனை வழங்கலாம். தமிழர்களது கொலைகளுக்கு காரணமாக இருக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சிறீலங்காவில் கொடுக்கப்படும் உயர்ந்தபட்ச தண்டனை ‘இடமாற்றம்’ தான். அம்பாறை ‘சென்றல் காம்ப்’ கிராமப் படுகொலையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிக்கும் இடமாற்றம் தான் தண்டனை. சிலவேளைகளில், கொலைக்கான சூத்திரதாரிகளுக்கு பதவி உயர்வும் புகழாரமும் கொடுக்கப்படலாம். இலங்கை வரலாற்றில் இது புதிதல்ல. வெலிக்கடைப் படுகொலைகளுக்கு தலைமை தாங்கியவர்களுள் ஒருவரான சேபால ஏகநாயக்கா என்ற குற்றவாளிக்கு சன்மானமாகத் தண்டனைக் குறைப்பு செய்யப்பட்டதைப் போல, களுத்துறைச் சிறைப்படு கொலைக்கு தலைமை தாங்கிய சிங்கள தீங்கியல் கைதிகளுக்கு சிலவேளை தண்டனைக் குறைப்பு என்ற ஊக்குவிப்பு வழங்கப்படலாம். எனவேதான், இத்தகைய படுகொலைகளைச் சிங்களக் கைதிகளின் வெறிச் செயல் என்ற மட்டத்துடன் மட்டும் வைத்துப் பார்க்கக் கூடாது. இது அதிகார பீடத்தின் ஏவுதலின் பேரில் தீங்கியல் கைதிகள் நடாத்திய இனவெறிச் செயலாகும். ஆட்சியாளர்களும், மறை முகமாக இவற்றை அங்கீகரிக்கின்றனர் என்பதே உண்மையாகும்.

சிங்களப் பத்திரிகை உலகமும் களுத்துறை சிறைப்படுகொலையை இருட்டடிப்புச் செய்துள்ளது. சிங்கள மக்கள் எங்காவது கொல்லப்பட்டால் பக்கம் பக்கமாக படங்களுடன் கட்டுரை வெளியிடும் அவைகள், இந்த விடயத்தில் திட்டமிட்டு மௌனம் சாதிக்கின்றன.

தமிழர்கள், கொழும்பில் கொல்லப்பட்டு, வாவிகளில் வீசப்பட்டுக் கிடந்த போதும் அவை மௌனம் சாதித்தன. சிறைகளில் தமிழர்கள் கொல்லப்படும் போது பேசாதிருக்கின்றன. தமிழர் கொல்லப்பட்டால் சம்பவம். சிங்களவர் கொல்லப்பட்டால் சரித்திரம் என்பதுதான் அவற்றின் பத்திரிகாதர்மம்.

இத்தகைய தமிழர் படுகொலைகள் ஒரு விடயத்தையே தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகின்றன. அதாவது, சிங்களத்தின் ஆட்சிபீடம் - அதிகார அலகுகள் - தொடர்புசாதன உலகம் அனைத்துமே தமிழின விரோத உணர்வால் ஆட்பட்டுக் கிடக்கின்றன. இதில் எவற்றிடமிருந்தும், தமிழர் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதுதான். அதற்கு களுத்துறைச் சிறைப்படுகொலை ஆகப்பிந்திய உதாரணம்.

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் ஆவி பேசுகிறது…!

இன்று 20ஆவது ஆண்டு நினைவு நாள் - 25.12.2025

அன்பார்ந்த ஈழத்தமிழ் உறவுகளே!

கடந்த இருபது வருடங்களுக்குமுன் ஜேசுபாலன் பிறப்பு தினமான நத்தார் நன்நாளில் 2005, டிசம்பர் 25இல் மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் ஆராதனையில் கலந்துகொணடிருந்தபோது என்னை அந்த கொலையாளிகள் சுட்டுகொன்றனர்.

என்னை துப்பாக்கியால் சுட்டவர்கள் அதற்கு பின்னணியில் இருந்தவர்கள் எல்லோரும் இன்று பதவிகளும், சலுகைகளும் பெற்று ஆடம்பரமாக வாழ்கின்றனர்…

20 வருடங்கள் கடந்தும் அவர்களுக்கு தண்டனை கிடைக்கவில்லை…!

நான் தமிழ்த்தேசிய கொள்கையுடன் உறுதியாக சோரம் போகாமல் தந்தை செல்வாவால் ஆரம்பித்த இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி, தமிழர் விடுதலைகூட்டணி, பின்னர் தமிழ்தேசியக் கூட்டமைப்பு எல்லா அரசியல் கட்சிகளுடனும் கொள்கை மாறாமல் அந்தந்தக்காலக்கட்டங்களில் எனது அரசியல் பணியை அற்பணிப்புடன் உறுதியுடனும் உண்மையுடனும் பயனித்தமையால் எதிரியால் சுடப்படவில்லை தமினின துரொகிகளால் சுடப்பட்டேன்.

என்னை கொலைசெய்தமையால் தமிழ்தேசிய கொள்கை கொலை செய்யப்படவில்லை என்பதை அந்த கொலைகாறர்களும் அதனை தூண்டியவர்களும் இப்போது உணர்ந்திருப்பார்கள்.

என்னை இனப்படுகொலைசெய்யும்போது மகிந்தராஷபக்ச ஜனாதிபதியாக இருந்தார் அதற்கு பின்னர் மைத்திரி, கோட்டபாய, ரணில் ஆகிய நால்வர் ஜனாதிபதிகளாக ஆட்சியில் இருந்தனர் எனது கொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படவில்லை இப்போது 2024 தொடக்கம் 2025 இல் எனது நினைவு தினம் நடக்கும் வேளையில் அநுரகுமார திசநாயக்கா ஜனாதிபதியாக உள்ளார் அவரால் கூட என்னை கொலை செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்களா என்ற ஏக்கம் எனக்கு உள்ளது.

ஊழல்வாதிகளுக்கும், போதைவஷ்துக்காறர்களுக்கும் தூண்டில் போடும் அவர் தமிழினப்படுகொலைக்கு நீதியை பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

யார் ஆட்சியில் இருந்தாலும் இலங்கையில் தமிழின்துக்கு நீதி கிடையாது என்பதால்தான் சர்வதேச நீதியை வேண்டி தமிழர்கள் கோரிக்கை விடுகின்றனர் சர்வதேசமும் கடந்த 16 வருடங்களாக தமிழினத்தின் வேண்டுதலை செவிசாய்க்கவில்லை இருந்தபோதும் அவர்கள் மிது நம்பிக்கை வைத்து ஈழத்தமிழர்கள் செயல்படுகிறார்கள்.

என்னைப்போல் தமிழ்த்தேசியக்கொள்கையில் உறுதியாக ஈழ மண்ணில் செயலாற்றியவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள். ஊடகவியலாளர்கள், மாவீரர்கள், உதவி செய்தவர்கள், பொது மக்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள் கொலை செய்யப்பட்ட அனைத்து தமிழர்களுடைய ஆவிகள் என்னொடு இணைந்து மேல்லோகத்தில் இருந்து ஈழமண்ணை பார்துக்கொண்டு எப்போ விடியும் என்ற ஏக்கத்துடன் உள்ளோம்.

ஒருநாள் விடிவு வரும் சுதந்திரம் அங்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் என்னைப்போன்று தமிழினப்பற்றுள்ளவர்களின் ஆவிகள் எதிர்பார்து ஏக்கத்துடன் காத்திருக்கிறோம்.

ஆனால் ஈழத்தில் இப்போது பல பெயர்களில் தமிழ்த்தேசிய கட்சிகள் முளைத்துள்ளன, பலபேர் தலைவர்கள் என கூறுகின்றனர் ஒரு முடிவை ஒருமித்து ஒற்றுமையாக எடுக்கமுடியாம் தமிழர்கள் திண்டாடுவதை பார்த்து கவலையாய் உள்ளது…

பதவிக்கும், தேர்தலுக்கும், மட்டும் ஆர்வமாக செயல்படும் தமிழ்த்தேசிய கட்சிகள் தமிழ்மக்களை தேசமாக திரட்ட முடியாமல் திண்டாடுவதை பார்த்து வேதனை படுகிறேன்.

பல கட்சிகள் இருப்பதை நான் குறை கூறவில்லை எல்லாக்கட்சிகளும் இணைந்து ஒருமித்து தமிழினத்திற்கான தீர்வு இதுதான் என ஒரு குரலில் வலியுறுத்துவதற்காக இணக்கப்பாட்டை காணுங்கள் என்றுதான் கூறுகிறேன்

புலம்பெயர் உறவுகளும் ஒற்றுமையாக தமிழ்தேசிய கட்சிகள் ஒன்றுபட்டு செயல்பட அழுத்தங்களை கொடுக்க வேண்டும். எமது இலட்சியம் வெல்லும் வரை வடகிழக்கு தமிழர்களை தேசமாக திரண்டு அறவழியில் செயல்படுமாறு இன்றைய நத்தார் நாளில் உங்களை வேண்டுகிறேன்.

இங்ஙனம் நான்
மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்களின் ஆவியின் குரல்.

பதிவு: பா.அரியநேத்திரன்- 25.12.2025

ஆழப்பாயும் சீன நீர்மூழ்கி ஏவுகணைகள்! உலக கடல் வல்லரசாக சீனா முயற்சி!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

16.12.2025

சீனாவின் நீர்மூழ்கிகளின் நடவடிக்கை தீவிரமடைந்து வருவது, தென்னாசிய பிராந்தியத்தில் மிகப்பெரும் இராணுவ சவாலக மாறிவருகின்றது. சீனாவின் நீர்மூழ்கிகளின் எண்ணிக்கையும் திறனும் அதிகரித்து வருகிறது. அத்துடன் அணுவாயுத திறனை மாத்திரம் அதிகரிக்கவில்லை, தனது பிராந்தியங்கள் என சீனா கருதுபவற்றை பாதுகாக்க கூடிய அதன் திறனையும் அதிகரிக்கின்றது.

சீனா பூமர் எனும் நீர்முழ்கியை கடலுக்குள் அனுப்பியுள்ளது. இந்த நீர்மூழ்கி அணு ஏவுகணைகளை கொண்டிருக்கும் என அமெரிக்காவின் கடற்படை புலனாய்வு தெரிவித்துள்ளது.

மீண்டும் பனிப்போரா ?

பனிப்போர் காலத்தில் அமெரிக்க - சோவியத் நீர்மூழ்கிகள் மத்தியில் இடம்பெற்ற போட்டி போன்ற ஒன்றை ஆசியாவில் சீனாவின் நீர்மூழ்கிகள் ஆரம்பித்து வைக்கலாம் என்பது கடற்படை நிபுணர்களின் கணிப்பாக உள்ளது. அக்காலப்பகுதியில் இரு நாடுகளும் தமது நீர்மூழ்கிகளை ஏனைய நாட்டை நோக்கி தாக்குவதற்க்கு ஏதுவாக கடலுக்கு அடியில் அனுப்புவது வழமையாக காணப்பட்டது. அதேபோன்று ஏனைய நாடுகளின் நீர்மூழ்கிகளை இனம்கண்டு அழிப்பதற்காக நீர் மூழ்கிகளையும் அனுப்பின.

சோவியத்தின் வீழ்ச்சி அந்த போட்டியை முடிவிற்க்கு கொண்டு வந்தது. ஆனால் இன்று சீனா தனது கடலுக்கடியிலான பலத்தை அதிகரிக்க தொடங்கியுள்ளதையடுத்து, அமெரிக்காவின் ஆசிய சகாக்கள் அதனை எதிர்கொள்ள தமது நீர்மூழ்கிகளின் பலத்தை அதிகரிக்க தொடங்கியுள்ளன.

சீனாவோ அல்லது அமெரிக்காவோ பனிப்போர் காலம் திரும்புவதை விரும்பவில்லை. அவர்களது பொருளதாரங்கள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. சந்தையை மையமாக வைத்து சிந்திக்கும் இன்றைய சீனா சர்வதேச புரட்சி குறித்த சிறிதளவும் சிந்திக்கவில்லை. தங்களது நீர்மூழ்கிகள் ஏயைநாடுகளை அச்சுறுத்தவில்லை என தெரிவிக்கும் சீன அதிகாரிகள் தங்களுடைய பிரதேசத்தை பாதுகாப்பதற்க்கும், சர்வதேச நலன்களை விஸ்தரிப்பதற்க்குமே அவை என்கின்றனர்.

இந்து சமுத்திரத்தில் சீன நீர்மூழ்கி:

இந்து சமுத்திரம் மற்றும் பசுபிக்கில் தமது நீர்மூழ்கிகள் சர்வதேச சட்டங்களை பின்பற்றுகின்றன என தெரிவிக்கும சீனாவின் பாதுகாப்பு அதிகாரிகள், சகல தரப்புகளுடனும் சிறந்த தொடர்பாடல்களை பேணுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

சீனா தனது பாதுகாப்பு கொள்கைகளை மாற்றாமல் தனது சர்வதேச கடமைகளை நிறைவேற்ற நீர்மூழ்கிகள் உதவுகின்றன என்கிறார் சீன நாட்டின் பாதுகாப்பு பேச்சாளர்.

எனினும் ஆசியாவில் தனது இராஜதந்திர மற்றும் இராணு வவளங்களை குவிக்கும் தனது தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக அமெரிக்கா தனது நீர்மூழ்கிகளை முன்னணிக்கு நகர்த்தியுள்ளது.

அமெரிக்காவின் கடலுக்கடியிலான பலத்தின் 60 வீதம் பசுபிக்கிலேயே காணப்படுகின்றது. அமெரிக்கா தனது தாக்குதல் நீர்மூழ்கியை குவாமில் நிறுத்தியுள்ளது.

ஜப்பானில் ஒகினாவாவில் அமெரிக்கா ஆறு நீர்மூழ்கிகளை நிறுத்தியுள்ளது. அத்துடன் ரஷ்யாவின் நீர்மூழ்கிகளை கண்டறிவதற்கான திறனை அதிகரித்துள்ள அமெரிக்கா, சீனாவின் நீர்மூழ்கிகளை கண்டுபிடிப்பதற்காக கடலுக்கடியில் இயங்கும் ஆளில்லா கலங்கள் போன்ற தொழிநுட்பங்களை பரிசோதனை செய்துவருகின்றது.

வேறு பல ஆசிய நாடுகளும் தமது நீர்மூழ்கி பலத்தை அதிகரிக்க திட்டமிட்டுள்ளன. பனிப்போர் காலத்தை விட தற்போது அப்பகுதியில் அதிகளவு நீர்மூழ்கிகள் காணப்படுகின்றது.

இவற்றின் பாதுகாப்பே மிகப்பெரும் பிரச்சனையாகும். ஒரே கடற்பரப்பில் பல நீர்மூழ்கிகளை விடும்போது அவை மோதிக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது.

சீனாவிடம் மிக வலுவான தாக்குதல் நீர்மூழ்கி:

சீனாவிடம் தற்போது மிக வலுவான தாக்குதல் நீர்மூழ்கி தொகுதியொன்று காணப்படுகின்றது. அவற்றில் 5 அணுவாயுத மாதிரிகள், பூமர்களும் காணப்படுகின்றன. சீனா நீர்மூழ்கிகளின் வரலாறு நீர்மூழ்கிகளை உருவாக்குவதற்கான சீனாவின் ஆர்வம் 1960 களிலேயே ஆரம்பமாகிவிட்டது 1000 வருடங்கள் ஆனாலும் அணுவாயுத நீர்மூழ்கியொன்றை உருவாக்குவோம் என்றார் மா வோ-சேதுங்.

1950 களிலிருந்து சீனா டீசல் நீர்மூழ்கிகளை பயன்படுத்தி வந்துள்ளது. ஆனால் அவை நீரிற்கு மேலாக அடிக்கடி வர வேண்டிய தேவை காணப்பட்டதால் அவற்றை இனம் காண்பது சுலபமாக காணப்பட்டது. அணுசக்தி நீர்மூழ்கிகள் வேகமானவை நீண்ட காலம் கடலுக்குள் இருக்க கூடியவை.

1970 ஆம் ஆண்டு மாவோவின் பிறந்த நாளின் போது சீனா தனது முதலாவது அணுசக்தி நீர்மூழ்கியை வெள்ளோட்டம் விட்டது. 1988 இல் தனது கடலுக்கடியிலான ஏவுகணை பரிசோதனையை மேற்கொண்டது.

உலக கடல்வல்லரசாக சீனா:

தென் ஜப்பானிலிருந்து பிலிப்பைன்ஸ் வரையும், வட ஜப்பானிலிருந்து இந்தோனேசியா வரையும் உள்ள அமெரிக்க படைகளால் சீனா நெருக்கடியை எதிர்கொள்வதாக சீனா கருதுகிறது. சீனா தனது கடல் ஆதிக்கத்தை 2050 ற்க்குள் உலக கடல் வல்லரசாக வேண்டும் என முனைகிறது.

எனினும் இதுவரை சீனாவின் நீர்மூழ்கிகளின் திறன் அமெரிக்காவை நெருங்க முடியாதவையாக உள்ளன. அமெரிக்காவிடம் 14 பூமர்களும், 55 அணு தாக்குதல் நீர்மூழ்கிகளும் உள்ளன. எனினும் அமெரிக்காவின் கவலை இந்த நிலையை எவ்வாறு தொடர்ந்து காப்பாற்றுவது என்பதுதான்.

நிதி நெருக்கடி காரணமாக 2028 இல் அது தனது நீர்மூழ்கிகளின் எண்ணிக்கையை குறைக்க எண்ணியுள்ளது. பனிப்போர் சோவியத்தின் பொருளாதாரத்தை வீழ்த்திய விதத்தை நன்கு அறிந்துள்ள சீனா அமெரிக்காவிற்க்கு சமமாக மாறுவதற்க்கு நினைக்கவில்லை.

ஹவாய் –அலாஸ்காவை தாக்கும் வல்லமை:

சீனாவின் இந்த பூமர்களில் காணப்படும் ஏவுகணைகள் கிழக்கு ஆசியாவிலிருந்து ஹவாய் மற்றும் அலாஸ்காவை தாக்க கூடியவை. பசுபிக்கின் நடுப்பகுதியிலிருந்து அமெரிக்காவின் சில பகுதிகளை இலக்குவைக்க கூடியவை என்பதை அமெரிக்க அதிகாரிகளே ஏற்றுக் கொள்கின்றனர்.

ஏனைய நாடுகளின் கடற்படைத் தளபதிகளுக்கு இந்து சமுத்திரப் பகுதியில் தடையற்ற பயணத்தை சீனா நீர்மூழ்கி மேற்கொண்டது என்பது மிக முக்கியமான விடயம். ஹவாயிலுள்ள அமெரிக்க கடற்படையின் பசுபிக் கடற்படை பிரிவு வரை தன்னால் சென்றுவர முடியும் என சீனா நிரூபித்துள்ளது. இது அமெரிக்காவை அதிர்ச்சியிலாழ்த்தியுள்ளது.

கடந்த வருடங்களில் உலக நாடுகளின் கவனம் சீனாவின் அதிகரித்து வரும் இராணுவத் தளபாடங்கள் குறித்து திரும்பியுள்ளது. விமானங்தாங்கி கப்பல்கள், அதிநவீன தாக்குதல் விமானங்கள், என அது தன்னை பலப்படுத்தியுள்ளது.

நீர்மூழ்கிகள் ஏன் முக்கியம் ?

சீனாவிற்கு நீர்மூழ்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதமாகும். ஒரு நீர்மூழ்கியே சீனாவின் வல்லமையை பறைசாற்றவும், தன்னுடைய வெறும் பிரசன்னம் மூலமாக ஏனைய நாடுகளை தடுத்து நிறுத்தவும் போதுமானது.

தாய்வான், அல்லது ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுடனான மோதலில் அமெரிக்கா தலையிடுவதை தடுப்பதற்கான தந்திரோபாயத்தின் ஒரு பகுதியே இந்த நீர்மூழ்கிகள் என அமெரிக்கா கருதுகின்றது.

அமெரிக்காவின் சகாக்களான ஜப்பானும், பிலிப்பைன்சும் சீனாவுடன் நிலப்பகுதிக்கான தகராறில் இன்னமும் சிக்கியுள்ளன.

அமெரிக்கா தலையீடை தடுக்கும் தந்திரோபாயம் :

சீனாவின் பூமர் நீர்மூழ்கிகளே , அமெரிக்காவை கடலிலிருந்து மேற்கொள்ளப்பட கூடிய ஏவுகணை தாக்குதல் குறித்து சிந்திக்க தூண்டியுள்ளது. அதனை எதிர்கொள்வது குறித்து அமெரிக்கா திட்டமிட்டுவருகின்றது.

அமெரிக்காவின் நீர்மூழ்கிகளையும், சர்வதேச அளவில் பயணம் செய்ய கூடிய அதன் திறமையையும், உலகின் பல பகுதிகளில் அமெரிக்காவால் செல்வாக்கு செலுத்தக்கூடியதாக உள்ளதையும் சீனா பல வருடங்களா அவதானித்திருக்க வேண்டும்.

சீனாவின் நீர்மூழ்கிகள் உலகில் கடல் ஆகாயம் மற்றும் தரையிலிருந்து அணுவாயுத தாக்குதல்களை மேற்கொள்ள கூடிய மூன்று நாடுகளில் ஒன்றாக சீனாவை மாற்றியுள்ளது.

அமெரிக்காவும், ரஷ்யாவும் மற்றயை நாடுகளாகும்.

சீனா நீர்மூழ்கி ஏவுகணை – ஆழமான ஆபத்து:

ஆழமான கடற் பகுதியூடாக பயணம் செய்யக்கூடிய அணுவாயுத நீர்மூழ்கியை கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் இணைய வேண்டுமென்ற சீனாவின் நீண்ட நாள் கனவு சாத்தியமாகி விட்டது.

தமிழ் நாட்டை நோக்கிச் சென்ற தமிழ்த் தேசியப் பேரவை

20.12.2025

“சென்னையில் திறவுகோல்” என்ற தலைப்பில் மு.திருநாவுக்கரசு, யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையில் 2006ஆம் ஆண்டு ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக்கட்டுரையில் அவர் இந்தியாவின் வெளியுறவு முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது என்றால் தமிழகம் பெருமெடுப்பில் கொந்தளிக்க வேண்டும் என்று எழுதியிருந்தார். அதாவது டெல்லியைக் கையாள்வதற்கான திறவுகோல் தமிழகத்தில்தான் உண்டு என்ற பொருள்பட கட்டுரையின் சாராம்சம் அமைந்திருந்தது. தமிழக வெகு சனங்கள் ஈழத் தமிழர்களுக்காகக் கொந்தளித்து எழுந்தால் இந்திய மத்திய அரசாங்கத்தின் முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று கட்டுரை கூறுகிறது. இது எழுதப்பட்டது 18.11.2006 இல்.அதாவது 2009 மே மாதத்துக்கு முன்.

இறுதிக்கட்டப் போரில் தமிழகம் நொதிக்கத் தொடங்கியது. எனினும் அதனை அப்போது இருந்த திமுக அரசாங்கம் மடைமாற்றியது என்றும், அதனால்தான் இறுதிக்கட்டப் போரில் இலங்கை அரசாங்கம் வெற்றி பெற முடிந்தது என்றும் ஒரு குற்றச்சாட்டு ஈழத்தமிழர்கள் மத்தியில் உண்டு. இக்குற்றச்சாட்டு காரணமாக கலைஞர் கருணாநிதியை இப்பொழுதும் விமர்சிக்கும் ஈழத் தமிழர்கள் உண்டு.

இவ்வாறான குற்றச்சாட்டுகளின் பின்னணியில்,கடந்த 16 ஆண்டுகளாக தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையிலான உறவு பெருமளவுக்கு பலவீனமடைந்திருக்கிறது.கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாடு ஈழத் தமிழர்களுக்காக நொதிக்கவில்லை; கொந்தளிக்கவில்லை.

தமிழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் உருவாக்கப்பட்டமை, ஜெயலலிதாவின் தலைமையிலான அதிமுக ஆட்சியின் போது இன அழிப்புக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை போன்ற இரண்டு குறிப்பிடத்தக்க விடயங்களைத்தவிர கடந்த 16 ஆண்டுகளாக தமிழகம் ஈழத் தமிழர்களுக்காக நொதிக்கவில்லை.

கடந்த 16 ஆண்டு கால ஈழத்தமிழர்களின் ஐநாமைய அரசியலில், ஐநா கூட்டத்தொடர்களின்போது இந்திய மத்திய அரசாங்கம் 13ஆவது திருத்தத்தைத்தான் ஒரு தீர்வாக தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறது. கடந்த ஐநா தீர்மானத்தின் போதும் அதுதான் நிலைமை.கடந்த 16 ஆண்டுகளிலும் இந்தியா ஐநாவில் ஒரு முறை மட்டும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

கடந்த பதினாறு ஆண்டுகளிலும் இந்தியாவை அதிக காலம் ஆட்சி செய்து வருகின்ற பாரதிய ஜனதாக் கட்சி அரசாங்கத்தின் கீழ், ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் வெளியுறவு நிலைப்பாடுகளில் திருப்பகரமான மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. ஐநாவில் இனப்பிரச்சனை தொடர்பாக இந்தியாவின் மாறாத நிலைப்பாடு அதைத்தான் உணர்த்துகின்றது. அவ்வாறு இந்திய மத்திய அரசின் நிலைப்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தத் தக்க விதத்திலோ அல்லது ஈழத் தமிழர்களோடு தனது சகோதரத்துவத்தை நிரூபிக்கும் விதத்திலோ தமிழ்நாடு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு கொதிக்கவில்லை; கொந்தளிக்கவில்லை.

2009க்குப் பின் திமுகவுக்கு எதிராகவும் ஏனைய திராவிடக் கட்சிகளுக்கு எதிராகவும் “தமிழ் எதிர் திராவிடம்” என்ற துருவநிலை அரசியலை முன்னெடுக்கும் சீமான்,தன்னை ஈழப் போரின் ஆகப் பிந்திய வாரிசாகக் காட்டிக்கொள்கிறார். ஆனால் அவரால் சில பேரணிகளை ஒழுங்குபடுத்தியதற்

குமப்பால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முழுத் தமிழகத்தையும் ஸ்தம்பிக்க வைக்கும் விதத்தில் பேரெழுச்சிகளையோ ஆர்ப்பாட்டங்களையோ ஒருங்கிணைக்க முடியவில்லை.

எனினும் ஈழத் தமிழர்கள் விவகாரம் தமிழகத்தில் தொடர்ந்தும் ஒரு பேசு பொருளாக அல்லது பேசப்பட வேண்டிய ஒரு விவகாரமாக இருந்து வருகிறது என்பதைத்தான் நடிகர் விஜய் அண்மையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தெரிவித்த கருத்துக்கள் காட்டுகின்றன. அதாவது தமிழகத்தில் ஈழத் தமிழர்களைப் பற்றிப் பேச வேண்டிய அரசியல் சூழல் இப்பொழுதும் உண்டு. ஆனால் அது ஓர் உள்ளுறையும் சக்திதான். அதனை மகத்தான ஒரு மக்கள் சக்தியாக,எழுச்சியாக,கொந்தளிப்பாக மாற்ற சீமானால் முடியவில்லை. திராவிட இயக்கக் கட்சிகளும் அதில் ஆர்வம் காட்டவில்லை.

தமிழ்நாட்டில் இறுதிக்கட்டப் போர் வரையிலும் 19க்கும் குறையாத தமிழர்கள் தீக்குளித்திருக்கிறார்கள். உலகில் வேறு எந்த ஒரு தமிழ்ச் சமூகமும் அவ்வாறு ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளிக்கவில்லை. ஒரு நீரிணையால் பிரிக்கப்படுகின்ற தமது சகோதர மக்களுக்காக அவ்வாறு அதிக தொகையினர் தீக்குளித்தமை என்பது தமிழகத்தில் மட்டுமே நடந்திருக்கிறது.நவீன அரசியலில் ஒப்புவமை இல்லாத போற்றுதலுக்குரிய தியாகம் இது.

முதலாவது முள்ளிவாய்க்கால் நினைவாலயம் தமிழகத்தில் தஞ்சாவூர் ஜெயலலிதாவுக்கு நெருக்கமான சசிகலாவின் கணவருடைய காணியில் கட்டப்பட்டது. தமிழ் இன அழிப்புக்கு எதிராக உலகின் முதலாவது தீர்மானம் ஜெயலலிதாவின் தலைமையில் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. எனவே ஈழத் தமிழர்களுக்காக பல விடயங்களை முதலில் செய்தது தமிழகம்தான்தீக்குளித்தது தமிழகம்தான். அப்படிப்பட்ட தமிழகம் கடந்த 16 ஆண்டுகளாக அமைதியாக இருக்கிறது.

இப்படிப்பட்டதோர் பிராந்திய அரசியல் சூழலில்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையானது கடந்த வாரம் தமிழ்நாட்டுக்கு உத்தியோகபூர்வமாக ஒரு விஜயத்தை மேற்கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியப் பேரவையில் பங்காளிகளாக இருக்கும் ஏனைய கட்சித் தலைவர்களும் தமிழகம் செல்வதற்குத் தயாராக இருந்ததாகத் தெரிய வருகிறது.ஆனால் ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், தவராசா ஆகிய மூவரும் மருத்துவக் காரணங்களுக்காகப் பயணம் செய்யமுடியாத ஒரு நிலைமை தோன்றியதால் ஐங்கரநேசன் மட்டும் அந்தத் தூதுக்குழுவில் இணைந்தார்.

இத் தூதுக் குழுவானது தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஸ்டாலினும் உட்பட ஏனைய கட்சித் தலைவர்களையும் மூத்த ஈழ உணர்வாளர்களும் சந்தித்திருப்பதாகத் தெரிய வருகிறது. 2009க்குப் பின்னர் தமிழ்நாட்டை நோக்கிச் சென்ற ஒப்பீட்டளவில் பெரிய தமிழ்த் தேசிய அரசியல் தூதுக்குழு இதுவெனலாம். ஏற்கனவே தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தனித்தனியாக பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தை நோக்கித் தமிழ் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாகத் திரண்ட ஒரு சந்தர்ப்பம் சில ஆண்டுகளுக்கு முன் அரசியல் கைதியாகிய சாந்தனின் விடயத்தில் இடம்பெற்றது.சாந்தனை விடுவிக்கக் கோரி அப்போது இருந்த தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்டு ஒரு கடிதத்தை தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அதன்பின் இப்பொழுது ஒரு தூதுக்குழு தமிழ்நாட்டுக்குச் சென்றிருக்கிறது. இத்தூதுக்குழு தமிழ் நாட்டுக்குச் சென்றிருக்கும் அதே காலப்பகுதியில் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவரைச் சந்திக்கவிருப்பதாகச் செய்திகள் வெளி வந்திருக்கின்றன. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் இவ்வாறு ஒரே சமயத்தில் பிராந்திய அரசியலைக் கையாள முற்படுவது வரவேற்கத்தக்கது.

அரசியல் என்பது சாத்யக்கூறுகளின் கலை.பிராந்தியத்திலும் அனைத்துலக அளவிலும் காணப்படும் வாய்ப்புக்களை கெட்டித்தனமாகக் கையாளாமல் ஈழத் தமிழர்கள் அடுத்த கட்டத்துக்கு நகர முடியாது.

கடந்த வாரம்,யாழ்ப்பாணத்தில் நடந்த மீனவர்களின் ஆர்ப்பாட்டத்தில் பேசிய, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடல் தொழில் அமைச்சரின் இணைப்பாளர், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை அகற்ற வேண்டும், இங்கு சீனத் தூதரகத்தை கொண்டு வர வேண்டும் என்று கேட்டிருக்கும் ஒரு காலச்சூழலில், கிழக்கைரோப்பாவில், உக்ரைன் நாடு நேட்டோவில் இணைவதில்லை என்ற முடிவை அறிவித்திருக்கும் ஒரு காலச் சூழலில், தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழ்நாட்டுக்குச் சென்றிருக்கிறார்கள்.

நன்றி: நிலாந்தன்

அல்ஜீரியாவால் விரட்டப்பட்ட கார்க்கிகள்: பிரான்ஸ் அரசால் கைவிடப்பட்டதும் ஏன்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

25.12.2025

பிரான்சில் தற்போதும் 'கார்க்கி' என்று ஒரு அல்ஜீரிய இன மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் பிரான்சு அரசுடன் சேர்ந்து சொந்த இனத்திற்குத் துரோகம் செய்ததால் அல்ஜீரிய அரசு கை விட்டது மட்டுமல்ல பிரான்சு அரசே அவர்களைக் கைவிட்டு, பிரான்ஸ் வீதிகளில் பிச்சை எடுக்கிறார்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது.

அல்ஜீரிய விடுதலைப் போர்:

நீண்ட காலமாக பிரான்சின் 130 ஆண்டு கால காலனித்துவ ஆட்சிக்கு எதிராக, அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி (FLN) 1954 முதல் 1962 வரை நடத்திய சுதந்திரப் போர் ஆகும்.

இரண்டாம் உலகப் போர் நடந்து முடிந்த பிறகு இது ஒரு கடுமை யான காலனித்துவப் போராகும். இதில் பிரெஞ்சு படைகள் மற் றும் அல்ஜீரிய போராளிகள் இடையே வன்முறை மோதல்கள், சித்திரவதைகள் மற்றும் படுகொலைகள் நடந்தன. இறுதியில் 1962இல் அல்ஜீரியா சுதந்திரம் பெற்றது.

இந்த விடுதலைப் போராட்டம் 1954 முதல் 1962 வரை தீவிர மாக நடைபெற்றது. பிரான்ஸ் அரசின் இராணுவத்துடன், அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி (FLN) காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற ஆயுதமேந்திய போராட் டங்களை நடத்தியது.

ஆனால் இந்த கிளர்ச்சி தொடங்கியதில் இருந்தே பிரான்ஸ் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டது. இறுதியில் 1962இல் அல்ஜீரியா சுதந்திரம் அடைந்தது. முக்கிய நிகழ்வுக ளாக 1954இல் தேசிய விடுதலை முன்னணி (FLN) தொடங் கப்பட்ட விடுதலைப் போரை எதிர்த்து கொடுமையான வன் முறை மூலம் பிரெஞ்சுப் படைகள் அழிக்க முயன்றன.

யார் இந்த கார்க்கிகள் ?

இரண்டாம் உலகப்போரின் இறுதியில் அல்ஜீரியாவை ஆக்கிர மித்திருந்த பிரெஞ்சு அரசுக்கு எதிராக அல்ஜீரிய தேசம் போர்க் கோலம் பூண்டிருந்த காலம் அது. சுதந்திரம் இல்லையேல் வீர மரணம் என்பதே அப்போதைய ஒவ்வொரு அல்ஜீரியக் குடி மகனதும் உச்சரிப்பாக இருந்தது.

பிரித்தாளும் தந்திரோபோய அடிப்படையில் பிரெஞ்சு அரசும் அல்ஜீரியர்களில் ஒரு தொகுதியினரைப் பிரித்து எடுத்து ஆயு தங்கள் கொடுத்து ஒட்டுக் குழுக்களாக மாற்றி சொந்த மக்கள் மீதே போரிட திருப்பி விட்டார்கள்.

இந்த நிலை பல்வேறு நாடுகளிலும் தேசிய இனப்போராட் டங்களை மழுங்கடிக்க ஆட்சியில் உள்ள அரசுகள் செய்யும் முயற்சி ஆகும். சொந்த இனத்திற்குத் துரோகம் செய்யப் புகுந் தவர்களும் இதை வரலாற்றிலிருந்து அறியவில்லை. அல்ஜீரி யாவில் கார்க்கி பற்றித் தெரிந்த ஒருவன் கனவில் கூட சொந்த இனத்திற்குத் துரோகம் இழைக்க மாட்டான்.

அல்ஜீரியப் போராட்டத்தில் போராளிகளுக்கும் மக்களுக்கும் எதிராகப் போரிட்ட இவர்கள் பெரும் அழிவை ஏற்படுத்தியுதுடன், அவர்களால் அலஜீரியாவின் விடுதலை நோக்கிய பயணம் பெரும் பின்னடைவை சந்தித்தது.

பிரான்சில் கார்க்கிகள் எனப்படும் இனக்குழுமம் [Harki] அல்ஜீரிய சுதந்திரப் போரின் போது பிரெஞ்சுப் படைகளுடன் போரிட்ட பூர்வீக அல்ஜீரிய முஸ்லிம் துணைப் படையினரைக் குறிக்கும் சொல்லாகும். 'கார்க்கி" இனமக்கள் பிரெஞ்சு அரசுடன் சேர்ந்து சொந்த இனத்திற்குத் துரோகம் செய்ததால் அல்ஜீரிய அரசும், மக்களும் கைவிட்டது மட்டுமல்ல பிரெஞ்சு அரசே அவர்களைக் கைவிட்டுள்ளது

ஆனாலும் அல்ஜீரிய மக்களும், போராளிகளும் கார்க்கிகளை வேண்டாம் வெளியேறுங்கள் என்று ஓயாது கத்திக் கூப்பாடு போட்டார்கள். ஆனால் கார்க்கிகள் கேட்டபாடில்லை. சொந்த மக்களையே பிரெஞ்சு படைகளுடன் சேர்ந்து கொத்துக் கொத் தாகக் கொன்றொழித்தார்கள்.

கார்கிகளைக் கொண்டே அல்ஜீரிய விடுதலை பெரும் தேக்கத் தைச் சந்தித்தது. ஆனால் வரலாறு ஒரு போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை . அது எப்போதும் நேர்கோட்டில் பயணிப்பதும் இல்லை.

அல்ஜீரியா சுதந்திர தேசம்:

இறுதியாக 1962 இல் பிரான்ஸ் அல்ஜீரியாவை விட்டு வெளி யேற வேண்டிய சூழல் உருவானது. 1962 யூலை ஐந்தாம் திகதி சுதந்திர தேசமாகியது அல்ஜீரியா. பிரான்ஸ் அரசுடன் ஆயிரத்தெட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர் அல்ஜீரியா போராளிகள். ஆனால் கார்க்கிகள் விடயத்தில் மட்டும் எந்த விட்டுக்கொடுப்பு இல்லாமல் கடுமையாக எதிர்த்து வந்தனர்.

ஒப்பந்தப்படி ஒரு பக்கம் பிரெஞ்சுப் படைகள் வெளியேறிக் கொண்டிருக்க மறுபக்கம் போராளிகளும் அல்ஜீரிய மக்களும் கார்க்கிகளைத் தேடித் தேடி வேட்டையாடினார்கள். பெண்கள், குழந்தைகளைக் கூட விட்டு வைக்காமல் குடும்பம் குடும்ப மாகக் கார்க்கிகளை வேட்டையாடினர். கார்க்கிகளே கொன்று குவித்து வீதி முழுவதும் பிணக்காடாகியது.

ஏனெனில் தமது விடுதலையைத் தாமதப்படுத்தி தமக்குத் துரோகம் இழைத்த கார்க்கிகளை மன்னிக்க அல்ஜீரிய தேசம் தயாராக இல்லை என்பது தான் உண்மையான காரணம் ஆகும். பிரான்ஸ் அரசும் கார்க்கிகளைக் கைவிட்டு வாயை மூடிக் கொண்டது. தம்மைக் காப்பாற்றுமாறு வெளியேறிக் கொண்டிருந்த பிரெஞ்சு படைகளின் கால்களில் விழுந்து கத றினார்கள் கார்க்கிகள்.

அப்போது வெளியேறும் லொறிகளின், விமானங்களின், கப்பல் களின் பின்னால் கார்கிகள் ஏற முயன்ற போது பிரெஞ்சுப் படைகள் அவர்களை அடித்தும் சுட்டும் விரட்டினார்கள். ஏனென் றால் பிரான்ஸ் அரசு ஒரு கார்க்கியைக் கூட பிரான்சுப் படைகள் பிரான்சுக்கு அழைத்து வரக் கூடாதென்று கடுமையாக உத்தர விட்டிருந்தது.

ஒட்டுக்குழுவான கார்க்கிகள் கனவில் கூடத் தமக்கு இப்படி ஒரு நிலை வரும் என்று எதிர்பார்த்திருக்கவே மாட்டார்கள். பிரான் சுப் படைகள் கண் முன்னேயே கார்க்கிகள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டனர். இது ஒரு கட்டத்தில் பிரான்ஸ் அரசுக்கு பெரும் நெருக்கடியாக மாறியது.

பிரான்ஸ் அரசும் கார்கிகளை வெறுத்தது:

அல்ஜீரிய விடுதலைப் போருக்குப் பிறகு பிரான்சால் கார்க்கிகள் கைவிடப்பட்டனர். இவர்கள் பாரபட்சம், வறுமை, சித்திரவதை மற்றும் கொடூரமான முகாம்களில் அடைக்கப்பட்டனர். இன்றும் பிரான்சில் ஒரு மறக்கப்பட்ட சமூகமாக உள்ளனர். அவர்களுக் கான நீதிக்காகவும் அங்கீகாரத்திற்காகவும் இன்னும் போராடி வருகின்றனர். ஆனால் வேண்டா வெறுப்பாக கொல்லப்பட்ட வர்கள் போக எஞ்சிய கார்க்கிகளை பிரான்ஸ் தனது நாட்டுக்குக் கொண்டு வந்தது.

ஆனால் இதற்கு பிறகு நடந்து தான் பெரும் கொடுமை. கார்க் கிகள் எந்த வசதியுமின்றி காடுகளுக்குள்ளும், நிலக்கரி சுரங் கங்களுக்குள்ளும் பிரான்சில் தனித்து விடப்பட்டார்கள். எந்த வதிவிடப் பத்திரமும் கிடையாது. பணி செய்ய எவ்வித அனு மதியில்லை.

கிட்டத்தட்ட திறந்தவெளிச் சிறைச்சாலையில் அவர்கள் தங்கி யிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அல்ஜீரிய மக்களுக்கு நிகராக பிரான்ஸ் அரசும் பிரெஞ்சு மக்களும் கார்க்கிகளை வெறுத்தார்கள். அப்போது தான் துரோகத்தின் பரிசை ஒட்டு மொத்தமாக அறுவடை செய்தார்கள் கார்கிகள். ஆனால் இந்தக் கணம் வரை அவர்கள் நாடற்றவர்கள் தான் என்ற உண்மை பலருக்கும் தெரியாது.

இரண்டு வருடங்களுக்கு முன்புதான் இவர்களுக்கு வதிவிட உரிமை கொடுக்க வேண்டும் என்று பிரான்ஸ் அரசு முடி வெடுத்தது. தாம் கார்கிகளைக் கைவிட்டது தவறு என்றும் அதிபர் மக்ரோன் இறுதியாக அறிவித்தார். இந்தக் கணம் வரை அவர்கள் நாடற்றவர்கள் தான். கிட்டத்தட்ட அறுபத்தைந்து வருடங்களாக ஒரு சமூகம் அனாதையாக இந்த பூமிப் பந்தில் வாழ்கிறது என்றால் அது கார்க்கிகள் தான்.

ஆனால் அல்ஜீரியாவிற்குள் இவர்கள் கால் வைக்கவே முடி யாது. ஆனால் தற்போது போரிட்ட அல்ஜீரியர்களும், பிரான்ஸ் காரர்களும் இரு நாடுகளிலும் குடியேறி குடியுரிமை பெற்று நன்றாக வாழ்கிறார்கள். ஆனால் கார்கிகள் செய்த பச்சைத் துரோகத்தால் இந்தக் கணம் வரை அவர்கள் நாடற்றவர்களே வாழ்கின்றனர்.

போருக்குப் பிந்தைய நிலை:

அல்ஜீரியா சுதந்திரம் அடைந்தபோது, பிரான்சு அரசு இவர் களைக் கைவிட்டதை பல மேற்குலக அரசுகள் எதிர்த்தன. இத னால் அல்ஜீரிய தேசியவாதிகளால் பலர் படுகொலை செய்யப்பட் டனர். இதன் காரணமாக 88,000 ஹர்க்கிகள் பிரான்சுக்குத் தப்பிச் சென்றனர். ஆனால் அவர்கள் தற்காலிக முகாம்கள் மற்றும் மோசமான சூழ்நிலைகளில் அடைக்கப்பட்டனர்.

போரின் பின்னரும் இவர்கள் அல்ஜீரியாவில் துரொகிகளா கவும், பிரான்சில் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களாகவும் கருதப்பட்டனர். தற்போது பிரான்ஸ் அரசு, கார்க்கிகளின் உத வியையும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியையும் ஏற்றுக் கொண்டுள்ளது. முகாம்களில் வாழ்ந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க தற்போது சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

பிரான்சுக்காகப் போரிட்டு, போருக்குப் பின்னால் பிரான்சாலும், அல்ஜீரியாவாலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் வரலாறு இன்னும் பல நாடுகளில் தொடர்கிறது. இவர்களின் வரலாறு பிரான்சின் காலனித்துவ வரலாற்றின் ஒரு முக்கியமானதும், ஆனால் மக் வேதனையான வரலாறாக மாறியுள்ளது.

ஈழத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தின் பின்னால் இஸ்ரேலின் கோர நிழல்கள்:

– நவீனன் –

16.12.2025

1980களில் சிங்களப் பிரதேசங்களை மையப்படுத்திய மகாவலி அபிவிருத்தித் திட்டம் தமிழர் தாயகப் பகுதிகளைக் கூறுபோடும் நோக்கில் வடக்குக் கிழக்குப் பிரதேசத்துக்கும் கொண்டு வரப் பட்டது.

தமிழர் தாயகம்தின் இதய பூமியான முல்லைத்தீவு மாவட்டத் தில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் அமைக்கப் பட்ட எல் வலையத்தில் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன. 1980களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் செய்யும் நோக்கம் இல்லையென்று அரசு கூறியிருந்தாலும், பல்லாயிரம் சிங்கள மக்கள் தமிழர் மண்ணில் அடாவடியாக குடியேற்றப்பட்டனர் என்பதே வர லாற்று உண்மையாகும்.

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையின் சிங்கள குடியேற்றக் கொள்கைகளுக்குப் பின்னால் உள்ள இஸ்ரேலிய செல்வாக்கு குறித்து இலங்கையின் பேராசியர் ஒருவர் ஆய்வு செய்துள்ளதாக அண்மையில் சர்வதேச ஊடகம் ஒன்று தெரி வித்துள்ளது.

மேலும் சிங்கள குடியேற்ற கொள்கையின் பின்னால் இஸ்ரே லின் நிழல்கள் குறித்த தகவல்கள் இந்த ஆய்வில் அதிர்ச்சிகர மான தகவல்களை வெளிப்படுத்தி உள்ளன.

மகாவலியில் இஸ்ரேலின் நிழல்கள்?

குறிப்பாக மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இந்த திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

போருக்கு முந்திய காலத்தில் அதாவது ஐக்கிய தேசியக் கட்சி யின் ஆட்சிக்காலத்தில் 1980களில் ஜே.ஆர் ஜயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் இந்த மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம் பிக்கப்பட்டிருந்தது. இன்று வரை கொழும்பில் பதவிக்கு வரும் ஒவ்வொரு சிங்கள ஆட்சியாளர்களும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை விரிவுபடுத்தி அங்கு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

1983 ஆம் ஆண்டு ஈழ விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட் டமாக மாற்றமடைந்த பின்னர் தமிழர் தாயகப் பிரதேசங்களில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மகாவலி அபிவிருத் தித் திட்டம் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பிரதேசங் களை மையமாகக் கொண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் பாரம்பரியக் காணிகள் அபகரிக்கப்பட்டு வந்த நிலையில் அன்றைய சிங்கள ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ச சிங்களக் குடியேற்றங்கள் எதுவுமே இடம்பெறாதென நாடாளுமன்றத்தில் உறுதி யளித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மகாவலி எல் வலயத்தில் தமிழ் மக் களின் எந்தவொரு காணியும் சிங்கள மக்களுக்கு மாற்றிக் கொடுக்கப்படவில்லை. இப்பகுதி காணிப் பிரச்சனைகளை தீர்ப் பதற்காக காணிக் கச்சேரியை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோதும் அதற்கான ஒரு விண்ணப்பம் கூடக் கிடைக்க வில்லையென அப்போது அப்பட்டமான பொய் பிரச்சாரத்தை மஹிந்த ராஜபக்ச மேற்கொண்டார்.

தமிழர் நிலங்கள் அபகரிப்பு:



Source: Department of Geography, 2010. Accelerated Mahaweli Development project Area. GIS Lab, University of Peradeniya, Sri Lanka

மகாவலி வலயத்தில் உள்ள தமிழர் நிலங்களை அபகரித்து அவற்றை சிங்கள மக்களுக்கு நீண்ட காலமாக வழங்கியுள் ளனர். இவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகளை பிரதேச செயல கத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என தமிழ் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அது குறித்து எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்பட வில்லை என்றும், தற்போதைய ஆளும் அரசு கவனம் செலுத்தி தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க முடியுமா என்பது கேள்விக்குறியே ஆகும்.

சிறீலங்கா அரசால் மகாவலி வலயம் விசேட பகுதியாக வர்த்த மானி மூலம் அறிவிக்கப்பட்டதுடன், இந்த பகுதியில் 648 ஏக்கர் நிலத்தில் 260 தமிழ் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர்.

1980 முன்னர் இந்த பகுதியில் சிங்கள மக்களுக்கு நிலங்கள் பங்கிடப்படவோ அல்லது சிங்கள விவசாயிகளை விவசாயம் செய்யவோ இடமளிக்கவில்லை. தமிழ் மக்களால் விவசாயம் செய்யப்பட்ட நிலங்கள் மகாவலி எல் வலயத்தில் இருந்தாலும் கூட அவை சிங்கள மக்களுக்கு சொந்தமானது அல்ல.

அதேவேளை மகாவலி வலயத்தில் தமிழ் மக்களின் நிலங்கள் சுவீகரிக்கப்பட்ட நிலையில் அதற்கு பதிலாக மாற்று இடங்களை கொடுப்பது குறித்து அரச தரப்பில் ஆலோசனை செய்யப்பட்டது.

இது குறித்து தமிழ் அரசியல் தரப்பினால் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் அது குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக தெரியவில்லை என்றே அறிவிக்கப்படு கின்றது.

இஸ்ரேலின் கோர நிழல்கள்:

மாகவலியில் இஷ்ரேலிய ஊடுருவல் முயற்சி பற்றி புன்சர அமர



சிங்க என்ற பேராசியரின் "இலங்கையில் குடியேறியவர்களின் கொள்கையின் பின்னால் இஸ்ரேலின் நிழல்கள்" என்ற தலைப் பிலான நூலில் இது குறித்த பல விடயங்கள் ஆராயப்பட் டுள்ளன.

இஸ்ரேலிய விவசாய மற்றும் இராணுவ மாதிரிகள், இலங்கை யின் மீள்குடியேற்ற உத்திகளுக்கு குறிப்பாக தமிழர் தாயகத் தில், இராணுவ மயமாக்கப்பட்ட இனப்பரம்பலை மாற்றும் செயற்பாட்டை உட்பொதித்து, இன்றுவரை தொடர்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய குடியேற்ற விரிவாக்கத்திற்கும், இலங்கையின் வடக்கு கிழக்கின் சிங்களக் குடியேற்றத்திற்கும் இடையிலான ஒற்றுமைகளை கோடிட்டு, தேசத்தைக் கட்டியெழுப்பும் போர்- வையில் அபிவிருத்தி, இடப்பெயர்வு மற்றும் இராணுவமய மாக்கல் எவ்வாறு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன என் பதையும் இந்த ஆய்வை பேராசிரியர் புன்சர அமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

1980களின் பிற்பகுதியில் இலங்கையின் ஆற்றல் மற்றும் மீள் குடியேற்ற இலக்குகள் Amy Yar என்ற இஸ்ரேலிய முகவரால் உருவாக்கப்பட்டது என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது. ஜே. ஆர்.ஜயவர்தனவின் நிர்வாகத்துடனான அவரது நெருங் கிய உறவுகளின் விளைவாக, விவசாய நிபுணர் என்ற போர்- வையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டதாகவும் பேராசிரியர் புன்சர அமரசிங்கவின் ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய கட்டிடக்கலை நிபுணர் உல்ரிக் பிளெஸ்னர் 1981 ஆம் ஆண்டு மலைநாட்டில் உள்ள மகாவலி குடியிருப்புகளில் புதிய நகரங்களைத் திட்டமிடுவதற்காக இலங்கைக்கு வந்தார் என்றும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய குடியேற்ற விரிவாக்கத்திற்கும், இலங்கையில் தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றத்திற்கும் பல முக்கிய ஒற்றுமைகள் உள்ளன.

1983 ஆம் ஆண்டு ஈழ விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்த பின்னர் தமிழர் தாயகப் பிரதேசங்களில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மகாவலி அபிவிருத்தித் திட்டம் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் முல்லைத்தீவு, திருகோண மலை ஆகிய பிரதேசங்களை மையமாகக் கொண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது

பாலஸ்தீனத்தில் யூத குடியேற்றங்கள்:

பாலஸ்தீனத்தில் யூத குடியேற்றங்களை நினைவூட்டும் அடிப்படை திட்டமிடல் கொள்கைகளை பிளெஸ்னர் இந்த இலங்கை திட்டத்துக்குள் கொண்டுவர முயற்சி செய்து வந்தார்.

சர்வதேச அளவில் நசுக்கப்பட்ட யூதர்கள் தங்களுக்கென தனி நாடு கோரிக்கையை பல ஆண்டுகளாக முன்வைத்து வந்தனர். இந்த நிலையில், மத்திய கிழக்கு நாடான பாலஸ்தீனத்தில் அரேபியர்கள், கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாகவும், யூதர்கள் சிறுபான்மையாகவும் வாழ்ந்து வந்தனர்.

முதல் உலகப்போரில் பாலஸ்தீனத்தை தன் கையில் வைத்திருந்த ஓட்டோமான் பேரரசு தோல்வியை தழுவிய நிலையில், பாலஸ்தீன பகுதியை பிரித்தானியா தன் கைக்குள் எடுத்துக் கொண்டது.

நெடுங்காலமாக யூதர்கள் தனி நாடு கேட்ட நிலையில், பாலஸ்தீன மண்ணில் யூதர்களுக்கென தனி நாட்டை உருவாக்கும் பால்ஃபர் ஒப்பந்தைத்தையும் முன்மொழிந்தது பிரிட்டன். இதனால் கொதித்தெழுந்த பாலஸ்தீன மக்களுக்கும், யூதர்களுக்கும் இடையே போர் தொடர ஆரம்பித்த காலத்தில், பாலஸ்தீன மண்ணில் யூதர்களின் குடியேற்றம் அதிகரிக்கத் தொடங்கியது.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து 1920 - 1946ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மட்டும் 3 இலட்சத்து 76 ஆயிரம் யூதர்கள் இஸ்ரேலில் குடியேறினர். மக்கள் தொகை கணக்கில் 6 சதவீதம் மட்டுமே இருந்த யூதர்கள், பாலஸ்தீனத்தின் 33 சதவீத பரப்பளவை தங்கள் வசமாக்கியிருந்தனர்.

1947 காலகட்டத்தில் 94 சதவீதமான பாலஸ்தீனம் அரேபியர்களின் கைவசம் இருந்த நிலையில், அதிலிருந்து 56 சதவீத நிலப்பரப்பை எடுத்து இஸ்ரேல் எனும் நாட்டை உருவாக்கி அந்த நாட்டிற்கு கொடுக்க திட்டம் வகுத்தது ஐ.நா சபை.

பாலஸ்தீன மக்களுக்கும் - யூதர்களுக்கும் இடையே மோதல்கள் அதிகரித்த நிலையில், ஒட்டுமொத்தமாக பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறியது பிரிட்டன் அரசு. இதனைத் தொடர்ந்து, மே 15, 1948இல் இஸ்ரேல் எனும் தனி நாடு உருவாகிவிட்டதாக தன்னிச்சையாக அறிவித்துக்கொண்டது இஸ்ரேல்.

இந்த அறிவிப்புக்குப் பிறகு இஸ்ரேலில் யூதர்களின் குடியேற்றம் அசுர வேகத்தில் நடந்தேறியது. நடப்பு ஆண்டில் வெளியான புள்ளி விவரத்தின் படி உலகம் முழுவதும் ஒரு கோடியே ஏழு இலட்சம் யூதர்கள் இருக்கின்றனர்.

இதில் இஸ்ரேலில் மட்டும் சுமார் 70 இலட்சம் யூதர்கள் இருக்கின்றனர். மற்றவர்கள் அயல்நாடுகளில் இருக்கின்றனர். இஸ்ரேலை தவிர்த்து அயல்நாட்டில் அதிகபட்சமாக பிரான்ஸில் 4 இலட்சத்து நாற்பது ஆயிரம் பேர் இருக்கின்றனர். கடந்த ஆண்டை ஒப்பிடும் போது, உலக அளவில் யூதர்களின் மக்கள் தொகை எண்ணிக்கை சுமார் 1 இலட்சம் உயர்ந்துள்ளதாகவும் ஒரு புள்ளி விவரம் சொல்கிறது.









பாலஸ்தீன – தமிழர் மண் அபகரிப்பு:

பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய குடியேற்ற விரிவாக்கத்திற்கும், இலங்கையில் தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றத்திற்கும் பல முக்கிய ஒற்றுமைகள் உள்ளன. இஸ்ரேலிய விவசாய மற்றும் இராணுவ மாதிரிகள், இலங்கையின் மீள்குடியேற்ற உத்திகளுக்கு குறிப்பாக தமிழர் தாயகத்தில், இராணுவ மயமாக்கப்பட்ட இனப்பரம்பலை மாற்றும் செயற்பாட்டை உட்பொதித்து, இன்றுவரை தொடர்கின்றன என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய குடியேற்ற விரிவாக்கத்திற்கும், இலங்கையின் வடக்கு கிழக்கின் சிங்களக் குடியேற்றத்திற்கும் இடையிலான ஒற்றுமைகளை கோடிட்டு, தேசத்தைக் கட்டியெழுப்பும் போர்–வையில் அபிவிருத்தி, இடப்பெயர்வு மற்றும் இராணுவமயமாக்கல் எவ்வாறு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன என்பதை பேராசிரியர் புன்சர அமரசிங்க ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழர் தாயகமான வட் கிழக்கை சிதைக்க ஜே ஆர்.ஜயவர்தனவின் நிர்வாகத்துடனான அவரது நெருங்கிய உறவுகளின் விளைவாக, விவசாய நிபுணர் என்ற போர்வையில் இந்த குடியேற்ற திட்டம் உருவாக்கப்பட்டதாகவும் பேராசிரியர் புன்சர அமரசிங்கவின் ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

மேலும் இஸ்ரேலிய கட்டிடக்கலை நிபுணர் உல்ரிக் பிளெஸ்னர் 1981 ஆம் ஆண்டு மலைநாட்டில் உள்ள மகாவலி குடியிருப்புகளில் புதிய நகரங்களைத் திட்டமிடுவதற்காக இலங்கைக்கு வந்தார் என்றும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தில் யூத குடியேற்றங்களை நினைவூட்டும் அடிப்படை திட்டமிடல் கொள்கைகளை பிளெஸ்னர் இந்த திட்டத்துக்குள் இணைத்தார் என்றும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். இரு தேசங்களிலும் குடியேற்றங்கள் மூலம், வளங்களை அழிக்கும் வகையில் இஸ்ரேலிய மூலோபயம் இருப்பதாக அறியப்படுகிறது.

இழப்புகளுக்கு அஞ்சினால் யுத்தம் நடாத்த முடியாது;
இழப்புகளை வளர்ச்சியின் ஊன்றுகோலாகக் கருத வேண்டும்.
–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

தமிழீழ விடுதலை வரலாற்றில் சனவரி

சிங்களச் சிறீ தமிழர்களின் வாகனங்களில் பொருத்தப்பட்டது:

சிங்களப் பேரினவாதத்தின் ஆசியோடு ஆட்சிபீடமேறிய சிறீலங்காவின் பிரமர் எஸ்.டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழீழப் பகுதிகளில் அமுல்ப்படுத்தப்பட்டது. அதன் ஒரு கட்டமாக 01.01.1958 அன்று தமிழர் பகுதிகளில் அனைத்து வாகனங்களிலும் சிங்கள சிறீ எழுத்தை பொறிக்க வேண்டும் என்ற அநாகரிக இனவாத விதி அமுல்படுத்தப்பட்டது.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை:

10.01.1974 அன்று சிறீலங்கா அரசின் பல்வேறு தடைகளையும் மீறி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட உலகத் தமிழாராட்சி மாநட்டு நிகழ்வின் போது சிறிமா அரசின் சிங்களக் காவல் படைகளால் 9 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

10.01.1974
தமிழ்மீது காதல்கொண்டனர்
கொலை வெறிக்காளாகி மாண்டனர்.

கப்டன் பண்டிதர் அர்வளின் வீரவணக்க நாள் 09.01.1985

மூத்த உறுப்பினர் கப்டன் பண்டிதர் (இளங்கோ) (சின்னத்துரை இரவீந்திரன், கம்பர்மலை-வல்வெட்டித்துறை, பிறப்பு: 25.12.1959) தொய்வு நோயால் பீடிக்கப்பட்டிருந்த தனது உடல் நிலையை பொருட்படுத்தாமல் கடமை உணர்வுடன் செயற்பட்ட புரட்சி வீரன். ஆவரங்காலில் புலிகளின் முகாமொன்றை சிங்களப்படைகள் முற்றுகையிட்டு தாக்கியபோது ரவி (சோமசுந்தரம் பிரதாபன். நல்லூர் - யாழ்.,பிறப்பு: 03.1.1964), சாமி (ஆறுமுகம் தவரத்தினம், ஆவரங்கால் - யாழ்., பிறப்பு: 06.12.1962), சிவா (சிவகுரு சிவேந்திரன். அச்சுவேலி தெற்கு - யாழ்., பிறப்பு: 01.01.1961), தவம் (நடேசு தவராசா, அச்சுவேலி தெற்கு - யாழ்., பிறப்பு: 24.03.1962), நேரு (செல்லையா தில்லைச்சந்திரன், கச்சேரி - யாழ். பிறப்பு: 01.10.1964) ஆகிய விரர்களோடு வீரச்சாவடைந்தார்.

கொக்கட்டிச்சோலைக் கிராமப்படுகொலை:

1987இல் 28,29,30 ஆகிய நாட்களில் மகிழடித்தீவு, இறால் கொம்பனி, முனைக்காட்டுப் பகுதிகளில் சிறீலங்கா விசேட அதிரப்படையினரால் பெண்கள், குழந்தைகள் உட்பட 200 தமிழ் மக்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்.



கப்டன் அருள் மாஸ்டர் வீரவணக்க நாள் 04.01.1988

தாயகத்து விடுதலைக்காக 1986இல் தனனை விடுதலைப்புலிகளோடு இணைத்துக் கொண்டவர். கப்டன் அருள் (மாணிக்கம் இரவீந்திரராஜா, யாழ்ப்பாணம், அரியாலை - யாழ்.,பிறப்பு: 13.04.1962) விடுதலைப் புலிகளின் இராணுவ தொழிநுட்பப் பிரிவைச் சேர்ந்தவர். தமிழீழ விடுதலைப் புலிகளால் பாவிக்கப்படும் துப்பாக்கி எறிகணையான அருள்-89 இவரால் வடிவமைக்கப்பட்டதாகும். 04.01.1988 அன்று அச்செழுப் பகுதியில் ஏற்பட்ட இந்திய இராணுவத் துடனான மோதலின்போது விரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

லெப். கேணல் பாண்டியன் அவர்களின் வீரவணக்க நாள் 09.01.1988

விடுதலைப் புலிகளின் முதன்தைத் தளபதிகளுள் ஒரவரான லெப். கேணல் பாண்டியன் -(குட்டி) (செல்லத்துரை சிறிதரன், யாழ். கொக்குவில், பிறப்பு: 29.03.1960) யாழ் மாவட்டத் தளபதியாகக் பணியாற்றியவர். காரை நகரில் இந்தியப் படைகள் முற்றுகையிட்ட போது தன்னைத் தானே சுட்டு வீரச்சாவடைந்தார்.

மேஜர் சோதியா அவர்களின் வீரவணக்க நாள் 11.01.1990

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் மூத்த போராளிகளுள் ஒருவரும், முதலாவது தளபதியுமான மேஜர் சோதியா (மைக்கல்பிள்ளை அமலலோற்பவ வசந்தி, நெல்லயடி, கரவெட்டி மேற்கு - யாழ்., பிறப்பு: 26.09.1963) உடற் பலவீனத்தையும் பொருட்படுத்தாது பணிசெய்த போது வல்வெட்டித்துறை ஊறணிப் பகுதியில் மூளைக்காச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு சாவடைந்தார்.

கிளாலி நீரேரிப் பயணிகள் படுகொலை:

2.01.1993 அன்று யாழ் மாவட்டத்தில் கிளாலி நீரேரியில்வைத்து குழந்தைகள் பெண்கள் உட்பட 50ற்கும் மேற்பட்ட பயணிகள் சிறீலங்கா சிங்களக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

லெப். கேணல் வேணு அவர்களின் வீரவணக்க நாள் 06.01.1992

விடுதலைப் புலிகளின் முதன்தைத் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் வேணு (பிரான்சிஸ் றோபேட் சேவியர், மன்னார், பிறப்பு: 16.10.1964) 1984இல் இயக்கத்தில் இணைந்தவர். மன்னார் மாவட்டத் தளபதியான இவர் மன்னார் மாவட்டம் நறுவிலிக்குளம் பகுதியில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் மேஜர் குகன் (இராமலிங்கம் சிவஞானம், புதுக்குடியிருப்பு - உயிலங்குளம், பிறப்பு: 06.10.1967), மேஜர் சயந்தன் (துங்கராசா ராஜ்மோகன், உப்புக்குளம் - மன்னார், பிறப்பு: 09.03.1969), கப்டன் குட்டிமணி (அருளானந்தம் றேமன், பேசாலை - மன்னார், பிறப்பு: 27.10.1970) ஆகிய 3 வீரர்களோடு 06.01.1992 அன்று வீரச்சாவடைந்தார்.

வங்கக்கடலில் காவியம் படைத்த கேணல் கிட்டு, லெப். கேணல் குட்டிசிறி உட்பட 9 போராளிகளின் நினைவு நாள் 16.01.1993:

விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும் முதுபெரும் தளபதியுமான கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஸ்ணகுமார் - யாழ். வல்வெட்டித்துறை. பிறப்பு: 02.01.1960) அவர்கள் போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒரு அத்தியாயம். யாழ். மக்களால் அன்புடன் நேசிக்கப்பட்ட இவர் சிங்களப்படைக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர்.

விடுதலைப் புலிகளின் முது நிலை உறுப்பினர்களில் ஒருவரான லெப். கேணல் குடடிசிறி (இராசையா சிறிகணேசன் - யாழ். சுதமலை வடக்கு, பிறப்பு: 23.08.1967) இயக்கத்தின் இராணுவ தொழில் நுட்பபிரிவில் கடமை யாற்றியவர். இவரது பெயரில் உருவாக்கம் பெற்ற குட்டிசிறி மோட்டார் படையணி பல சமர்களில் பெரு வெற்றிகளைத் தந்திருக்கின்றது.

16.01.1993 அன்று வெளிநாட்டிலிருந்து குவேக்கர்ஸஜன் சமாதானச் செய்தியுடன் வந்து கொண்டிருந்தபோது பன்னாட்டுக் கடற்பரப்பினூடாக தாயகம் நோக்கி வந்தவேளை இந்தியக் கடற்படையினர் வழிமறித்து சென்னை துறைமுகம் நோக்கி கொண்டு சென்று கைது செய்ய முயன்றபோது தாம் பயணித்த கப்பலை வெடிக்க வைத்து மேஜர் மலரவன் (சுந்தரலிங்கம் சுந்தரவேல், வியாபாரிமூலை - பருத்தித்துறை, பிறப்பு: 11.03.1969), கப்டன் றொசான் (இரத்தினசிங்கம் அருணராசா, நல்லூர் - யாழ்., பிறப்பு: 02.02.1975), கப்டன் குணசீலன் (சேகரன்குரூஸ் மைக்கல்ஜீவா, உதயபுரம்- மணியந்தோட்டம், பிறப்பு: 25.01.1971), கப்டன் ஜீவா (நடராசா மார்ஜெயராஜ், பாசையூர் - யாழ்., பிறப்பு: 23.08.1969), லெப். தூயவன் (கண்டி வீதி - யாழ்., பிறப்பு: 02.08.1974), லெப். நல்லவன் (சிவஞானசுந்தரம் ரமேஸ், மணியந்தோட்டம், கொழும்புத்துறை, பிறப்பு: 27.03.1975), லெப். அமுதன் (அலோசியஸ் ஜான்சன், நாவாந்துறை வடக்கு - யாழ்., பிறப்பு: 04.07.1972) ஆகிய 09 போராளிகளுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

லெப். கேணல் மணிவண்ணன் (குமார்) அவர்களின் வீரவணக்க நாள் 12.01.1998

லெப். கேணல் மணிவண்ணன் (சிங்கராசா செல்வகுமார், நல்லூர் - யாழ்,, பிறப்பு 08.05.1968), ஆண்டாங்குளம் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாதைத் தழுவிக்கொண்டாரர்.

லெப். கேணல் எரிமலை மற்றும் லெப் கேணல் ஒஸ்கார் உட்பட 14 கடற் புலிகளின் வீரவணக்க நாள் 12.01.1999

12.01.1999 அன்று குச்சவெளிக் கடற்பரப்பில் சிறீலங்கா கடல்படையினருடனான மோதலில் லெப். கேணல் எரிமலை (துங்கராசா கிரபாகரன், அம்பன், குடத்தனை - யாழ், பிறப்பு: 29.03.1971), லெப். கேணல் ஒஸ்கார் (இமானுவேல் இமாறல்ட், பனங்கட்டிக்கொட்டு - மன்னார், பிறப்பு:02.05.1975) உட்பட மேஜர் சுகி (அல்பிரட் மரியலீனா ராகினி, மாதகல் - யாழ், பிறப்பு: 29.02.1972), கப்டன் சுடர் (இராசாதுரை சிசிக்குமார், வேம்படி வீதி - யாழ், பிறப்பு: 12.05.1980), கப்டன் அன்புவடிலே (நடேசபிள்ளை, கிருஸ்ணராஜ், புலொலி மேற்கு - பருத்தித்துறை, பிறப்பு: 26.11.1980), கப்டன் கடலன்பன் (யோகேஸ்வரன் நகுலேஸ்வரன், அரியாலை - யாழ்,, பிறப்பு: 16.11.1974), கப்டன் இளந்தேவன் (மரியதாஸ் பொன்ராசா யூரிநெல்சன் தேவராஜ், பிறப்பு: 06.05.1968), கப்டன் ரட்ணா (பாலசுப்பரமணியம் உதயதாரகை, காரைநகர் - யாழ்., பிறப்பு: 22.01.1978), கப்டன் சகாரா (தர்மராசா சாந்தக்கிளி, பொலிகண்டி - யாழ்., பிறப்பு: 05.09.1978), கப்டன் ஆத்மராஜ் (வீரக்குட்டி இரவீந்திரகுமார், நாகமுனை - அம்பிலாந்துறை - மட்டு, பிறப்பு: 07.01.1965), கப்டன் நவசுகி (ஆறுமுகம் செல்வராணி, வல்வெட்டித்துறை - யாழ்., பிறப்பு: 14.05.1974), லெப். பெரியண்ணன் (இந்திரன் சிவானந்தன், காரைநகர் - யாழ்., பிறப்பு: 25.01.1981), 2ஆம் லெப். காவலன் (சத்தியாம்பிள்ளை விஜயமனோகரன், கிளாலி - எழுதுமட்டுவாள், பிறப்பு: 07.07.1981), வீரவேங்கை வேனிதன் (சின்னத்தம்பி ஜீவரட்ணம், தேற்றாத்தீவு - மட்டு, பிறப்பு: 10.09.1972 ஆகிய 12 கடற்புலிகளும் வீரச்சாவடைந்தனர்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவு நாள்:

சந்திரிகா அரசின் தமிழின அழிப்புக் கொள்கையை அம் பலப்படுத்தியவரும், மனித உரிமை வாதியும், சட்டத் தரணியுமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் சந்திரிகா அரசின் கொலையாளிகளால் 05.01. 2000 அன்று சுட்டுக்கொல்லப் பட்டார்.

சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால் விடுத்து, ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள். இவரின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து. அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் இவருக்கு மாமனிதர் விருது வழங்கப்பட்டது.

கினீகிர-9 என்ற குறியீட்டுப் பெயருடன் படைநடவடிக்கை: சிங்களப் படைத்தரப்பு சந்தித்த பேரிழப்பு:

16.01.2001 அன்று கினீகிர 09- என்ற குறியீட்டுப் பெயருடன் சிங்களப்படை தென்மராட்சியில் பெருமெடுப்பில் தரைநகர்வு நடவடிக்கையொன்றினை மேற்கொண்டது. விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியுள்ள ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி சிங்களப் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையானது விடுதுலைப் புலிகள் தொடுத்த பதில் நடவடிக்கையில் முறியடிக்கப்பட்டது. இதன் போது நூறிற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஐநூறிற்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர். இவ். முறியடிப்புச்சமரில் வெற்றிக்கு வித்தான 70 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

பொங்குதமிழ்:

யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் எழுச்சி கொண்ட பொங்கு தமிழ் நிகழ்வு முதன் முதலில் 17.01.2001 அன்று உணர்வு பூர்வமாக இடம்பெற்றது. பேராசிரியர்கள் மாணவர்கள் உட்பட பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வானது அன்றைய சூழலில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட இடையூறுகள், தடைகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றைத் தாண்டி எழுச்சிகரமாக இடம்பெற்றது.

கேணல் அருள்வேந்தன் அல்லது சாள்ஸ் வீரவணக்க நாள் 05.01.2008

1988 இல் போராட்டத்தில் இணைந்துகொண்ட கேணல் சாள்ஸ் - செந்தூரன் - அருள்வேந்தன் (சண்முகநாதன் ரவிசாங்கர், யாழ் மாவட்டம்) விடுதலைப் புலிகளின் இராணுவ புலனாய்வுப் பொறுப்பாளராகவும் வெளிக்களப் புலனாய்வின் பகுதிப் பொறுப்பாளராகவும் செயற்பட்டவர். கொழும்பில் இடம்பெற்ற பல வெற்றித் தாக்குதலுக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர். 05.01.2008 அன்று மன்னாரில் ஆழ ஊடுருவும் சிறீலங்காப் படையினரின் தாக்குதலில் லெப். சுகந்தன் (சிறீபாலன் கிரிதரன், செட்டியகுறிச்சி - பூநகரி) , லெப். காவலன் (சின்னத்தம்பி கங்கா, யாழ் மாவட்டம்), லெப். வீரமாறன் (பரராசசிங்கம் சுதன், யோகபுரம் - மல்லாவி) ஆகியோரோடு வீரச்சாவடைந்தார்.

ஈகையர் முத்துக்குமார் அவர்களின் வீரவணக்க நாள் 29.01.2009

ஈழத் தமிழருக்காக தீக்குளித்து இன்னுயிர் எய்திய ஈகையர் முத்துக்குமார் (குமரேசன் முத்துக்குமார், தூத்துக்குடி – புலியநல்லூர்)

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...

எமது சுயநிர்ணயப் போராட்டப் பயணத்தில் நாம் இன்று ஒரு தீர்க்கமான வரலாற்றுத் திருப்புமுனையை அடைந்துள்ளோம். தென்னிலங்கை அரசியல் அதிகார வர்க்கம் தமிழரின் சுயநிர்ணய உரிமையை என்றுமே அங்கீகரிக்கப் போவதில்லை. சிங்களப் பௌத்தப் பெரும்பான்மை மக்களின் நலன்களைப் பேணிப்பாதுகாக்கும் அரசமைப்புச்சட்டத்திலும், அந்தச் சட்டத்தின் அத்திவாரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆட்சியமைப்பிலும் தமிழினத்தின் சுயநிர்ணயத்திற்கு என்றுமே இடமிருக்கப் போவதில்லை. நாமாகவே போராடி, எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்பதை எமது மக்கள் இன்று உணர்ந்து விட்டார்கள். சுயநிர்ணயம் என்பதே சுயமாக, சுதந்திரமாக, மற்றவர்களின் தலையீடின்றி, எமது அரசியல் வாழ்வை நாமாகத் தீர்மானிப்பதுதான். அந்தக் காலமும் சூழலும் இப்போது கனிந்து விட்டது.

தமிழீழத் தேசியத் தலைவர
மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்
2005 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர்நாள் உரையிலிருந்து...

33ஆம் ஆண்டு
வீரவணக்கம்
மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை
கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை
கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்
கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்
கடற்புலி குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தொரு,
உதயபுரம், மணியம்தோட்டம்
கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதமலை வடக்கு, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் றொசான்
(அரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி,
நலலூர், யாழ்ப்பாணம்
கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்
இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி
தமிழர் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
வேங்கைகளின் முப்பத்தி இரண்டாம் ஆண்டு
நினைவு வணக்க நாள் – 16.01.2026